# Prasanga Ratnávali.

## FOUR SERIES OF SERMONS

### ON SCRIPTURE SUBJECTS,

WITH AN INTRODUCTION ON THE CHARACTER AND OFFICE OF THE CHRISTIAN PREACHER.

BY

H. BOWER, D. D.,

*Missionary, S. P. G.*

"Go ye into all the world, and preach the Gospel to every creature." Mark. 16. 15.

" Take heed how ye hear." Luke. 8. 18.

MADRAS:

PRINTED FOR THE MADRAS DIOCESAN COMMITTEE OF THE SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE AT THEIR PRESS, NO. 18, CHURCH STREET, VEPERY.

1875.

# பிரசங்க ரத்நாவளி.

இதில்

வேதியர் ஒழுக்கத்தையும் தொழிலையும்பற்றிச் சொல்லிய

பிரகரணமும்,

வேதவிஷயங்களைப்பற்றிச் சொல்லிய

முப்பத்தைந்து பிரசங்கங்களும்

அடங்கியிருக்கின்றன.

---

இவை

வேதசாஸ்திரியாகிய

என்றி பவுரையரால்

இயற்றப்பட்டது.

'நீங்கள் செவிகொடுத்துக் கேட்கிற விதத்தைக்குறித்துக் கவனமாய் (எச்சரிக்கையாய்) இருங்கள்; உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவன் தனக்கு உண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.'' லூ. 8. 18.

''செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.''.................. (குறள்.)

சென்னபட்டணம்:

கிறிஸ்துமார்க்கப் பரிபாலன சங்கத்தாரின் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

௲௮௱௫.

# PREFACE.

The following Sermons, viz, Ten Sermons on the Lord's Prayer, Seven Sermons on the Seven Sayings of our Lord on the Cross, Eight Sermons on the Beatitudes, and Ten Sermons on Miscellaneous Subjects, such as the Scriptures, Truth, The Gospel, Christ, (as Saviour and Teacher), The Christian, Salvation, Godliness, Almsgiving, and Spiritual Healing,—which were preached from notes at different places and at different times,—are now written out, and published in compliance with the repeated request of those who have heard them.

*Prasanga Ratnávali*, the name given to the Volume, means a Series of Sermons on choice texts, *ávali* being a Sanskrit word signifying a row, a range, garland, &c.,

I have prefixed an Introduction on the Character and Office of the Christian Preacher, in which I have endeavoured to give Students and Catechists the benefit of my reading and experience on these subjects.

As authority and illustrations have greater weight with Hindus than elaborate arguments, and as they are adapted to fix the attention and benefit the minds of the hearers, I have freely quoted from Hindu writers, and adduced illustrations, in the shape of anecdotes and stories, from all sources.

I have added a Prayer at the end of each of the Sermons on the Lord's Prayer.

These Sermons, which are published to supply a felt need, will I trust receive the Divine Blessing, and be of some use to the Native Church.

MADRAS:
*February*, 9*th* 1875.

H. B.

# முகவுரை.

இந்தப் புஸ்தகத்தில் அடங்கிய பிரசங்கங்கள் பல காலங்களிலும் பல இடங்களிலும் செய்யப்பட்டு, அநேகருடைய கேட்டுக்கொள்ளுதலினால் அச்சிடப் பட்டிருக்கிறது. வேதியர் ஒழுக்கத்தையும் தொழிலையும்பற்றிச் சொல்லிய பிரகாரணம் வேதசாஸ்திர மாணாக்கருக்கும் உபதேசிமார்களுக்கும் உபயோகமாக எழுதி இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது; இந்தப் பிரகாரணத்தைக் கவனமாய் வாசிப்பதினால் பிரசங்கவிஷயத்தைப்பற்றி அறிய வேண்டிய சில நுட்பங்களை அறிந்துகொள்ளலாம்.

பிரசங்க ரத்நாவளி என்பது பிரசங்க ரத்நங்களாகிய வரிசை என்று அர்த்தங்கொள்ளும். ஆவளி என்பது ஒழுங்கு, கோவை, இனம், மாலை என்று பொருள் கொள்ளும் சமஸ்கிர்தபதம். இந்தப் புஸ்தகத்தில் கர்த்தர் கற்பித்த ஜெபத்தைப்பற்றியும், கர்த்தர் சிலுவையின்மேல் சொன்ன ஏழு வாக்கியங்களைப்பற்றியும், கர்த்தர் மலையின்மேல் செய்த பிரசங்கத்தில் பாக்கியவான்கள் இன்னாரென்று சொன்ன வாக்கியங்களைப் பற்றியும், இன்னும் சில விஷயங்களைப்பற்றியும் வரிசைவரிசையாய்ப் பிரசங்கங்கள் செய்யப்பட்டிருக்கிறபடியால் இந்தப் புஸ்தகத்துக்குப் பிரசங்க ரத்நாவளி என்னும் பெயரிடப்பட்டது.

இந்தப் பிரசங்கங்களை உபதேசிமார்கள் கிராமங்களிலுள்ள சபையாருக்கு வாசிக்கும்போது, இடத்துக்கும் சமயத்துக்குந்தக்கதாய் சிலவற்றைக் கழித்தும் சிலவற்றைக் கூட்டியும் வாசிக்கலாம். இந்தப் பிரசங்கங்களில் எடுத்துரைத்திருக்கிற பாடல்களையும், திருஷ்டாந்தங்களையும், கதைகளையும் வேண்டாத விஷயத்தில் விட்டுவிடலாம்.

இந்தப் பிரசங்கங்களை வாசிக்கிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் அவைகளிலுள்ள பொருள்கள் பயன்படும்படி, தேவ ஆசீர்வாதம் உண்டாவதாக.

சென்னபட்டணம்:
௲௮௱௭௫-௵
பெப்ருவரி ௴ ௰௨.

இப்படிக்கு,
எ. ப.

# அட்டவணை.

பக்கம்.

வேதியர் ஒழுக்கத்தையும் தொழிலையும்பற்றிய பிரகரணம். .... xi

## கர்த்தருடைய ஜெபத்தை விளக்கும் பிரசங்கங்கள்.

1. மத். 6. 9—13. லூ. 11. 1—4. ஜெபத்தின் இயல்பு ........ 1
2. ,, பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! ........ 15
3. ,, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக ............ 22
4. ,, உம்முடைய ராஜ்யம் வருவதாக.... ............... 29
5. ,, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக ........... 37
6. ,, அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்குத் தாரும். 43
7. ,, எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்குமு. 51
8. ,, எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணுதிரும். 60
9. ,, தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் ...... 65
10. ,, ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் உம்முடையதே. 71

## சிலுவையின்மேல் இயேசுநாதர் சொன்ன ஏழு வசனங்களைப்பற்றிய பிரசங்கங்கள்.

11. லூ. 23. 34. பிதாவே, இவர்களுக்கு மன்னியும் .......... 83
12. லூ. 23. 43. இன்றைக்கு நீ என்னுடனே கூட மு......... 90
13. யோ. 19. 26, 27 . அதோ உன் மகன், உன் தாய் ........ 97
14. மத். 27. 46. ஏலி! ஏலி! மு. ...................... 104
15. யோ. 19. 28. தாகமாயிருக்கிறேன் .... ............... 110
16. யோ. 19. 30. முடிந்தது .... ... .................. 116
17. லூ. 23. 46. என் ஆவியை ஒப்புவிக்கிறேன் ............ 122

## குணசாலிகளும் பாக்கியவான்களும் இன்னார் என்று விளக்கும் பிரசங்கங்கள்.

பக்கம்.

18. மத். 5. 1—3. ஆவியில் எளிமையுள்ளவர்கள் .......... 131
19. „ 4. துயரப்படுகிறவர்கள் .......................... 337
20. „ 5. சாந்தகுணமுள்ளவர்கள் .................. 141
21. „ 6. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் ....... 144
22. „ 7. இரக்கமுள்ளவர்கள் ........................ 152
23. „ 8. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் ......... 155
24. „ 9. சமாதானம்பண்ணுகிறவர்கள் ............ 161
25. 10—12. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் .... 166

## பொதுவான விஷயங்களைக்குறித்துச் சொல்லிய பிரசங்கங்கள்.

26. சங். 119. 142. உம்முடைய வேதம் சத்தியம் ........... 173
27. நீதி. 23. 23. சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே .... 181
28. ரோ. 1. 16, 17. சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன் ................................ 190
29. மத். 22. 42. கிறிஸ்துவைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள்? 196
30. „ „ 201
31. அப். 26. 28, 29. நான் கிறிஸ்தவனாகச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் .......................... 206
32. 1 திமோ. 4. 8. தேவபக்தி பிரயோஜனமுள்ளது .......... 212
33. அப். 10. 35. வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் .............................. 200
34 அப். 4. 12. கிறிஸ்துவினாலே அன்றி இரட்சிப்பில்லை.... 230
35. மத். 9. 12. பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டும்.... 242

# INTRODUCTION

## SHOWING THE CHARACTER AND OFFICE OF THE CHRISTIAN PREACHER.

கிறிஸ்துமார்க்க

வேதியர் ஒழுக்கத்தையும் தொழிலையும் பற்றிச்சொல்லிய

# பிரகரணம்.

1 Tim. 4. 13—16. quoted. Nature of the Christian Ministry.

"வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு; இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்வாய்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு வேதியர் ஒழுக்கத்தையும் தொழிலையும் பற்றி வெகு தெளிவாய் உபதேசித்திருக்கிறார்.*

மன்னுயிர்க்குரிய இகபரநன்மையை நாடி, தேவமகிமையை நோக்கி, சத்தியவேத உபதேசங்களைப் போதித்து, தன்னைக் காத்து, பிறரை உணர்த்தி, தானும் பிறரும் கரையேற முயற்சிசெய்வதே வேதியர் கடமையாம்.

---

* 1 தீமோ. 4. 13—16.

Names given in Scripture to Christian Ministers.

வேதத்தை ஓதுகிறவர்கள் வேதியராகையால், வேதியர் என்பது தேவஊழியக்காரராகிய குருக்கள்மாரைக் குறிக்கும். வேதியர் தொழில் எல்லாத் தொழில்களிலும் சிறந்தது. தேவசுதன் தாமே இந்தத் தொழிலைச்செய்ய பரத்தினின்று புவியில் உதித்து ஜகத்குருவாய் அருள்அவதாரம் செய்தார். வேதத்தில் இத்தொழிலுக்குப் பற்பல காரணப்பெயர்கள் இடப்பட்டிருக்கிறது. விதைவிதைக்கிறவர்கள், பயிர்செய்கிறவர்கள், அறுப்பறுக்கிறவர்கள், காவல்காரர், மேய்ப்பர்கள், [பசுபாலகர்] போர்ச்சேவகர், மீன்பிடிக்கிறவர்கள், வீடுகட்டுகிறவர்கள் முதலான பெயர்கள் வேதியர் தொழிலுக்குரிய பிரயாசத்தைக் குறிக்கும். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், தேசிகர், போதகர்,* கண்காணிகள், அதிகாரிகள், தூதர்கள், உக்கிராணக்காரர், ஸ்தானாபதிகள்முதலான பெயர்கள் வேதியர் தொழிலுக்குரிய மேன்மையைக் குறிக்கும். இங்கிலாந்து திருச்சபையில் கண்காணிகள் என்னும் அத்தியட்சரும், போதகர் என்னும் குருக்கள்மாரும், டீக்கன் என்னும் உதவி குருக்கள்மாரும் ஆகிய மூன்று அந்தஸ்துகள் நேமிக்கப்பட்டிருக்கிறது.

The Commission, the Promise, and the Encouragement, given by Christ to His Ministers.

"நீங்கள் உலகமெங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" என்பது வேதியர் தங்கள் தொழிலை நடத்தும்பொருட்டு பரம குருவானவர் இட்ட கட்டளை. "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான்

* எபே. 4. 13. சுவிசேஷத்தைப் போதிக்கிற மிஷனெரிமார்கள் Missionaries என்னு பெயர் அனுப்பப்பட்டவர்கள் என்று அர்த்தங்கொள்ளும், ரோ. 10. 15. காண்க.

உங்களுடனேகூட இருக்கிறேன்" என்பது பரமகுருவான வர் வேதியருக்கு விளம்பின வாக்குத்தத்தம். "என் கிருபை உங்களுக்குப் போதும்" என்று பரமகுருவானவர் வேதிய ருக்குத் திருவுளம்பற்றினது வேதியர் தங்கள் தொழிலை நடத் தும் முயற்சிக்கு வேண்டிய ஆதாரம்.*

## I. வேதியரொழுக்கம்.

Conduct of Ministers.

வேதியருக்குத் தன்னை அறியும் அறிவே விசேஷித்த அறிவு. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக் காரராகையால் தங்கள் நடக்கையினாலும் உபதேசத்தினாலும் "தங்கள் ஊழியத்தை மேன்மைப்படுத்தவேண்டும்." "கட்டாயமாய் அல்ல, மனப் பூர்வமாயும், அவலட்சண ஆதாயத்துக்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்திரத்தை இறுமாப்பாக ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும்" வேதியர் தங்கள் ஊழி யத்தை நடத்துவார்களானால், மகிமையுள்ள வாடாத கிரீடத் தைப் பெறுவார்கள்.† இதன்பொருட்டு வேதியர் மனத்தாழ் மையை அணிந்துகொண்டு, விழித்திருந்து ஜெபம்பண்ணி, பரிசுத்தஆவியின் வரப்பிரசாதங்களாகிய தேவ அருளை நாடி, சத்தியத்திற்காகச் சாட்சியிட்டுப் போராடி நிற்கவேண்டும்.

"ஓதலினன்றே வேதியர்க்கொழுக்கம்." இருதயத்தின் பரி பூரணத்திலிருந்து வாய் பேசுகிறபடியால், சத்தியத்தை உப தேசிக்கிறவர்களுடைய இருதயத்திலே சத்தியம் குடிகொண்டு பலன்செய்யவேண்டும். தாங்களே தங்கள் பாவத்தையும் பாவநாசருடைய புண்ணியத்தையும் உணராதவர்கள் பிறரை உணர்த்துவது எப்படி? "உக்கிராணக்காரன் உண்மையுள்ள வன் என்று காணப்படுவது அவசியம்" என்று வேதம் சொல் லுகிறது.‡

---

* மத். 28. 18—20. மாற். 16. 15.

† பேதுரு. 11. 14. 1 பே. 5. 2, 4. ‡ 1 கொரி. 4. 2.

Object of the Ministry.

"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்; அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவரு டைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் வேதியர் தொழிலுக்குரிய நோக் கத்தைக் குறித்துச் சொல்லியிருக்கிறதுமன்றி; "இப்படிப் பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை; வெட்கமான அந்த ரங்கக் கிரியைகளை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாம லும், தேவவசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப் படுத்துகிறதினால் தேவனுக்குமுன்பாக எல்லா மனுஷரு டைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்" என்றும் சொல்லியிருக்கிறார்.* இந்த அப் போஸ்தலனையே வேதியர் தங்களுக்கு மாதிரியாக வைத்துக் கொண்டு, அப்போஸ்தலர் நடபடிகளிலுள்ள அவருடைய சரித்திரத்தையும், அவர் தீமோத்தேயு தீத்து என்னும் தேவ ஊழியக்காரருக்கு எழுதின நிருபங்களையும் வாசித்து, தங்கள் தொழிலுக்குரிய காரியங்களை அறிந்துகொள்ளவேண்டும்.

Teaching, the principal work of the Ministry.

உபதேசிப்பதே வேதியருக்கு முக்கியமான தொழில். வேத வாக்கியங்களையும் வேதவிஷயங்களையும் வியாக்கியானம்பண்ணிப் போதிப்பதே பிரசங்கிப்பதாம். இது விசேஷித்த காரி யமாகையால், இதைப்பற்றின விஷயங் களை வேதியர் விவரமாய்க் கவனித்து அறிந்துகொள்ளவே ண்டும்.

---

* கொலோ. 1. 28. 2 கொ. 4. 1, 2.

பூர்வகாலத்தில் ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், மோசே, எலியா முதலான மகாத்துமாக்களும், தீர்க்கதரிசிகளும் பிரசங்கிகளாயிருந்தார்கள்.

Origin of Preaching: Patriarchs, Prophets.

"யூதர்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து விடுதலையாகி எருசலேமுக்குத் திரும்பிவந்தபோது ஆசாரியனாகிய எஸ்றா என்பவன் ஸ்திரீ புருஷராகிய சமஸ்த ஜனங்களையும் கூடிவரச்செய்து, பிரசங்கபீடத்தின்மேல் நின்று நியாயப்பிரமாண வேதாகமத்தை அவர்கள் காதுகள்கேட்க தீர்க்கமாய் வாசித்து, அதற்கு அர்த்தஞ்சொல்லி, வாசித்தபொருளை அவர்களுக்கு விளங்கப் பண்ணினான்" என்று நெகேமியாவின் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது.* இந்த வழக்கம் யூதர்களுடைய ஜெபஆலயங்களில் வழங்கிவந்தது; பிற்பாடு ஏற்பட்ட கிறிஸ்துசபையின் பிரசங்கிகளுக்கும் இதுவே மாதிரியாயிற்று.

Preaching of Ezra.

கிறிஸ்துநாதருக்கு முன்தூதனான யோவான்ஸ்நானன் குணப்படுதலைக்குறித்தும் கிறிஸ்துவின் ராஜ்யத்தைக்குறித்தும் மகா வைராக்கியமாய்ப் பிரசங்கித்தார். அவர் கொண்டிருந்த வைராக்கியத்தை இக்காலத்து வேதியரும் கொண்டிருக்கவேண்டும்.

John the Baptist.

பிரசங்கிகள் எல்லாரிலும் சற்குருவாகிய கிறிஸ்துநாதரே சிறந்த பிரசங்கி; அவரைப்போல மனுஷரில் ஒருவரும் ஒருக்காலும் பேசினதில்லை. †

Christ, who spake as never man spake.

பாவிகள் மனந்திரும்பிக் குணப்பட்டு விசுவாசித்து இரட்சிக்கப்படுவதற்கு தேவஆவியின் அருளினால் செய்யப்படும் சத்திய சுவிசேஷப் பிரசங்கமே முக்கியமான கருவியாயிருக்கிறது. இந்தக் கருவியையே அப்போஸ்தலமார் கையாடி அநேகரைக் குணப்படுத்தி திருச்சபையில்

Apostles: their Preaching the chief instrument in conversion.

---

* நெகே. 8. 8. † யோ. 7. 46.

சேர்த்தார்கள். அப்போஸ்தலர்களுக்குள் பவுல் என்பவர் முக்கியமான பிரசங்கியாயிருந்தார். பெந்தெகோஸ்தே திருநாளில் மூவாயிரம்பேரைக் குணப்படுத்தின பேதுரு அப்போஸ்தலன் செய்த பிரசங்கத்தையும், அத்தேனே பட்டணத்தில் மார்ஸ்மேடையின்மேல் நின்று பவுல் அப்போஸ்தலன் கிரேக்கு ஞானிகளுக்குச் செய்த பிரசங்கத்தையும் வேதியர் யாவரும் நன்றாய்க் கவனித்தறியவேண்டியது. இயேசுநாதருடைய திருநாமத்தையும் அவருடைய உத்தரவாத புண்ணியத்தையும் விளக்கும் சுவிசேஷத்தை மனுமக்கள் உணரும்படி பிரசங்கிப்பதே உத்தம பிரசங்கமாம்.

Qualifications of the Preacher. Ex: S. Chrysostom, and S. Augustine.

பிரசங்கிகளாகிய வேதியர் பகுத்தறிவுள்ளவர்களும், நியாயஞ்சொல்லத்தக்கவர்களும், போதகசமர்த்தரும், பட்சபாதமின்றி நயமும் பயமுமாய் ஜனங்களைக் கண்டித்து புத்திசொல்லுகிறவர்களுமாயிருக்கவேண்டும். பூர்வ கிரேக்குசபையில் சுவர்ணவாசகராகிய கிரிசொஸ்தமுமுதலான பிரசங்கிகளும், பூர்வ ரோமசபையில் மாணிக்கவாசகராகிய அகுஸ்தீன் முதலான பிரசங்கிகளும் மகாப் பிரபலமான பிரசங்கிகளாயிருந்தார்கள்.

Knowledge: Reading and Study of Scripture, Theology, &c.

"பரலோக ராஜ்யத்துக்கு அடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானுக்கு ஒப்பாயிருக்கிறான்" என்று இயேசு ரட்சகரும்;* "வாசிக்கிறதில் ஜாக்கிரதையாயிரு," "நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கவேண்டும்" என்று பவுல் அப்போஸ்தலனும் வேதியருக்குப் புத்திசொல்லியிருக்கிறார்கள். "ஓதுவதொழியேல்," "ஓதாம

---

* மத். 13. 52.

லொருநாளுமிருக்கவேண்டாம்'' என்று உலக ஞானிகளும் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் வேதியர் விடாமுயற்சியோடு வேதாகமத்தையும் வேதசாஸ்திரத்தையும் ஞானநூல்களையும் வாசித்து நாளுக்குநாள் தேறுதலடையவேண்டும். வாசிப்பு பூரண புருஷராக்கும், சம்பாஷணை கசடறுக்கும், எழுத்து பிழைகளைத் திருத்தும், பிரசங்கம் நிறைமொழிமாந்தராக்கும். *

> "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத்தூறு மறிவு."

## II. வேதியர் தொழில்.

Office of Ministers Preaching, the principal work.

வேதியர்க்குரிய பற்பல தொழில்களில் பிரசங்கிப்பது முக்கியமான தொழிலாகையால், அதனைப்பற்றிச் சில விசேஷங்களை விபரமாய் எடுத்துரைப்போம்.

Method of Preaching: Divisions of the Subject.

பிரசங்கவிஷயத்தில் வாக்கியம், முகவுரை, வகுப்பு, பொருள்விஸ்தரிப்பு, நியாயம், உதாரணம், முடிவுரை ஆகிய இவ்வேழு காரியங்களும் முக்கியமாய் அறியவேண்டியவைகள்.

Choice of Texts: apt, simple, complete.

I. வாக்கியம். பூர்வத்தில் எஸ்றா செய்ததுபோலவும், நாசரேத்தூர் ஜெபஆலயத்தில் கிறிஸ்துநாதர் செய்ததுபோலவும், † யாதொரு வேதவாக்கியத்தையாவது, வேதவிஷயத்தையாவது தெரிந்துகொண்டு, அதை வியாக்கியானம்பண்ணி, அதனால் விளங்குகிற புத்திமதிகளை ஜனங்களுக்கு உணர்த்துவதே

* "Reading maketh a full man, conference a ready man, and writing an exact man.'' *Bacon*.

விசுவாசப்பிரமாணவிளக்கம், மோட்சப்பட்டணத்துக்கதை, இரணமாலிகை முதலான நூல்கள் பிரசங்கத்துக்கு உதவும்.

† லூ. 4. 21. மு.

திருச்சபையில் தொன்றுதொட்டு வழங்கிவருகிற பிரசங்க இயல்பு. திருச்சபையில் திருநாட்களுக்கும் பெருநாட்களுக்கும் குறிக்கப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களை அந்தந்த நாட்களில் பிரசங்கிப்பதுமன்றி, பூரணபொருள் அடங்கிய தகுதியான விசேஷித்த வாக்கியங்களையும் தெரிந்துகொண்டு பிரசங்கிக்கலாம். இடம் பொருள் ஏவல் காலம் அறிந்து வாக்கியங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். சிலவேளைகளில் ஜனங்கள் வியப்புற்றுக் கவனிக்கத்தக்கதாய்ச் சமயத்திற்கேற்ற வாக்கியங்களைத் தெரிந்துகொள்வது உத்தமம்: திருஷ்டாந்தமாக, திருநெல்வேலியிலிருக்கிற நாசரேத் என்னும் ஊருக்கு ஒரு ஐயர் முதல்விசைபோய்க் கோவிலில் பிரசங்கம் செய்தபோது, யோவான் சுவிசேஷம் முதல் அதிகாரம் நாற்பத்தாறும் வசனத்தைத் தெரிந்துகொண்டு: "நாத்தாறுவேல், நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையுண்டாகக்கூடுமோ என்றான்; அதற்குப் பிலிப்பு, வந்துபார் என்றான்" என்னும் வாக்கியத்தை வாசித்து அதின்பேரில் பிரசங்கித்தார். அந்த வாக்கியத்தையும் பிரசங்கத்தையும் பிரசங்கியையும் நாசரேத்தூர் சபையார் எளிதில் மறக்கமாட்டார்கள்.

Surprise.

பாலகருக்குப் பாலையும், விரகறிந்தவர்களுக்கு அந்தப் பாலில் கடைந்தெடுத்த நவநீதத்தையும் கொடுக்கவேண்டியிருக்கிறபடியால்,* இடம் பொருள் ஏவல் காலம் அறிந்து வேதவாக்கியங்களைத் தெரிந்துகொண்டு பிரசங்கிக்கவேண்டும்.

II. முகவுரை.—வாக்கியத்தின் முன்னும் பின்னும் உள்ள கருத்தைப்பற்றியாவது (context) பிரசங்கிக்கப்போகிற பொருளைப்பற்றியாவது (subject) முகவுரையாக எடுத்துச்சொல்லலாம். முகவுரையானது இயல்பாயும், சுருக்கமாயும், இதமா

Preface = Exordium: Simple, pertinent, delicate, moderate.

* 1 கொ. 3. 2. எபி. 5. 12, 13. காண்க.

யும் இருக்கவேண்டும். அப்போஸ்தலர் நடபடி இருபத்து நான்காம் அதிகாரத்தில் கண்டிருக்கிறபடி, நியாயசாஸ்திரியாகிய தெர்த்துல்லு என்பவனும், அப்போஸ்தலனாகிய பவுல் என்பவரும், பேலிக்ஸ் என்னும் தேசாதிபதிக்குமுன்பாகப் பேச ஆரம்பித்தபோது சொன்னதைக் கவனித்துப்பார்த்தால் முகவுரையின் இலட்சணம் இன்னதென்று விளங்கும்.

மத்தேயு 7. 7. வாக்கியத்தின்பேரில் ஜெபத்தினால் உண்டாகும் பிரயோசனத்தைப்பற்றிப் பிரசங்கிக்கவேண்டுமானால், தகப்பனானவன் ஒருவன் மரிக்கும்போது தன் பிள்ளைகளை நோக்கி: தோட்டத்தை நன்றாய் வெட்டிப்பார்த்தால் அதில் புதையல் அகப்படும் என்று சொல்ல, அப்படியே பிள்ளைகள் வெட்டிப்பார்த்தபோது, புதையல் ஒன்றும் அகப்படாமற்போனாலும், வெட்டப்பட்ட நிலத்தில் அவர்களால் விதைக்கப்பட்ட வித்து நன்றாய் வேரூன்றி விளைந்து அதிகக் கனிகொடுத்துப் பயன்பட்ட கதையை முகவுரையாக எடுத்துச்சொல்லி, ஜெபத்தின்பேரில் பிரசங்கிக்கலாம்.

III. வாக்கியவகுப்பு. பிரசங்கம் ஒழுங்காயிருக்கும்படி, பிரசங்கவாக்கியமானது தெளிவாயும் சுருக்கமாயும் வகுக்கப்படவேண்டும். ஒருஜாதியான மணிகளை வரிசையாய்ச் சேர்த்து கோவைபடுத்துகிறதுபோல, ஒரு ஜாதியான பொருள்களை ஒரு வழிபடச்சேர்த்து கோவைபடுத்துகிறதே வகுப்பாம். பெரிதான பொருளின் சாயலைத் தனக்குள்ளே செவ்வையாக அடக்கிக்காட்டுகிற சிறிய கண்ணாடியைப்போல; பிரசங்க வகுப்பும் சுருக்கமான சொற்களில் பலவகைப்பட்ட பொருள்களை ஒழுங்காய் அடக்கிக்காட்டவேண்டும். "சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கவேண்டும்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.* "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" என்னும் அழகு பிரசங்க

Division of the Text.

* 2 தீமோ. 2. 15.

வகுப்பில் விசேஷமாய் விளங்கவேண்டும்.* இயல்பான வகுப்புகள் எளிதாய் ஞாபகத்தில் நிற்குமாகையால், விபரீதமான அநேக வகுப்புகளைச் செய்யாமல், தகுந்த சில போதுமான இரண்டுமூன்று வகுப்புகளைமாத்திரம் செய்வது உத்தமம். இவ்வித வகுப்புகள் பிரசங்கிக்குக் குறிப்புகளாகையால் சில சமயங்களில் முதலாம் இரண்டாம் மூன்றாம் காரியம் என்று வகுப்புகளை எடுத்துத் தொகையாய்ச் சொல்லியும், சில சமயங்களில் அவைகளைச் சொல்லாமலும் பிரசங்கிக்கலாம்.

Textual Division. (Doctrine and use.)

சில வாக்கியங்கள் இயல்பாயும் நேராயும் வகுக்கப்பட்டிருக்கும். உ—ம்: 2 பே. 1. 5—7. விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும் ம். இந்த வாக்கியத்திலுள்ள பதங்களையும் விஷயங்களையும் அதில் கண்டிருக்கிற முறைமையின்படியே விஸ்தரிக்கலாம்.

ரோ. 1. 17. "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்னும் வாக்கியத்தை மூன்றுகாரியங்களாக வகுக்கலாம். உ—ம்:

I. விசுவாசமாவதென்ன?

II. அதினால் உண்டாகும் நீதியாவதென்ன?

III. அந்த நீதியினால் உண்டாகும் பிழைப்பு [ஜீவன்] ஆவதென்ன என்பதே. இது பதவியாக்கியானம் என்னப்படும். இந்த வாக்கியத்தின்பேரில் இந்தப் புஸ்தகத்திலுள்ள 28-ம் பிரசங்கத்தைக் காண்க.

சில வாக்கியங்கள் பதத்தின்படியல்ல, பொருளின்படி வகுக்கப்படவேண்டியதாகும். உ—ம்:

மத். 16. 26. "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் [சம்பாதித்துக்கொண்டாலும்], தன் ஜீவனை

---

* "Brevity is the soul of wit."

[ஆத்துமாவை] நஷ்டப்படுத்தினால் [இழந்துபோனால்] அவனுக்கு லாபம் [பிரயோசனம்] என்ன," என்னும் வாக்கியத்தை நான்குகாரியங்களாக வகுக்கலாம். உ–ம்:

I. உலகமோ ஆத்துமாவோ? எது முக்கியம்.
II. இகமோ பரமோ? எது விசேஷம்.
III. இதனாலுண்டாகும் உபதேசமாவதென்ன?
IV. இதனாலுண்டாகும் படிப்பினையாவதென்ன என்பதே.

சிலவாக்கியங்களைப் பலவிதமாய் வகுக்கலாம். உ–ம்: இந்த புஸ்தகத்தில் "கிறிஸ்துவைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள்." என்னும் ஒரே வாக்கியத்தைப்பற்றி செய்திருக்கிற இரண்டு பிரசங்கங்களையும் கண்டுகொள்க.

இந்தப் புஸ்தகத்தில் ஞானவைத்தியத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிற பிரசங்கம் நன்றாய் வகுப்புகளாக வகுக்கப்பட்டிருக்கிறது; அந்தப் பிரசங்கத்தை விஸ்தரித்தால் பெரிய பிரபந்தமாகும்.

**Explication of the Subject.**

IV. பொருள் விஸ்தரிப்பு. பிரசங்க வாக்கியத்தை வகுப்பின்படி பதப்பொருளையும் கருத்துப்பொருளையும் வியாக்கியானப்படுத்தி விருத்திசெய்வதே விஸ்தரிப்பாம்; இதற்கு விவரணம் என்றும் பெயர். இலக்கண இலக்கிய வழக்கையும்,

**Idiom**: *usus loquendi*, **analogy of faith.**

பாஷை நடையையும், மதசம்பிரதாயத்தையும், இயற்கை செயற்கை வாசனையையும், பொருள்நோக்கையும், முன்பின் சம்பந்தத்தையும் தழுவி வாக்கியத்தை விஸ்தரிக்கவேண்டும்.* தெளிவாய் விளங்குகிற வாக்கியத்துக்கு விபரீத அர்த்தஞ்சொல்லி மலைவுண்டாக்கலாகாது. பதார்த்தம் ஒன்றும் கெர்ப்

* பிரசங்கவிஷயத்தில் நன்றாய்த் தேறவிரும்புகிறவர்கள் நன்னூல் பொதுப்பாயிரத்தில் கண்டிருக்கிற 12, 13-ம் சூத்திரங்களை வாசித்து, பத்துக் குற்றங்களும் பத்து அழகுகளும் இன்னவையென்றும், 35-ம் சூத்திரத்தை வாசித்துப் பிரசங்கம்பண்ணவேண்டிய லட்சணம் இன்னதென்றும் அறிந்துகொள்ளவேண்டியதுமன்றி, தொன்னூலில் பனிரெண்டு அகத்திணைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறதை வாசித்துப் பிரசங்கத்துக்குவேண்டிய விசேஷங்களை அறிந்துகொள்ளவும்வேண்டும்.

பார்த்தம் வேறுமாயிருக்கிற வாக்கியங்களைப் பகுத்துரைசெய்வது அவசியமே.

Verbal interpretation. Names are primitive and derivative; causal and arbitrary, common and proper, abstract and concrete, simple and tropical, specific and metaphorical.

பதங்கள் பகாப்பதங்கள் என்றும், பகுபதங்கள் என்றும்; பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் என்றும், காரணப்பெயர்கள் என்றும், பொதுப்பெயர்கள் என்றும், சிறப்புப்பெயர்கள் என்றும், குணப்பெயர்கள் என்றும், குணிப்பெயர்கள் என்றும்; சொற்கள் இயற்சொற்கள் என்றும், திரிசொற்கள் என்றும், மரபுச்சொற்கள் என்றும், குறிப்புச் சொற்கள் என்றும் பலவிதப்படும். இவைகளின் பேதங்களையும், பதங்களுக்குரிய பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் ஆகிய இந்த ஆறு பொதுவிஷயங்களையும் அறிந்துகொள்ளவேண்டும்.

Biblical and Theological Terms: Phraseology of Scripture to be understood.

வேதாகமத்திலுள்ள உபதேசங்களுக்கடுத்த விசேஷசம்பிரதாயப் பதங்களைப் பிரசங்கிகள் நன்றாய்க் கற்றறிந்திருக்கவேண்டும், அவையாவன:

Veda. Revelation, Scriptures, Testament, Covenant, διαθηκη, Law, νομος.

(1.) வேதம். திருவுளத்தை வெளிப்படுத்துவதே வேதம். ஆத்துமரட்சிப்புக்குரிய பேரறிவை உணர்த்தும்நூலே வேதாகமம். வேதாட்சரமானது சத்திய எழுத்து என்றும், வேதவாக்கியம் என்றும், பிரமாணம் என்றும் சொல்லப்படும். வேதாகமமானது ஏற்பாடு என்றும், உடன்படிக்கை என்றும் சொல்லப்படும்.

Gospel: good news. ευαγγελιον.

(2.) சுவிசேஷம். நற்செய்தி, இரட்சணியமார்க்கம். இதற்கு கிரேக்கு மூலத்தில் ஐயங்கிலியம் என்று பெயர்; துலுக்கர் இதை இஞ்சில் என்பார்கள். வேதத்தையும் சுவிசேஷத்தையும் குறித்து இந்தப் புஸ்தகத்திலுள்ள இரண்டு பிரசங்கங்

களையும் விசுவாசப்பிரமாண விளக்கத்தையும் வாசித்தால் இவ்விஷயங்களைப்பற்றி அறியவேண்டியவைகளை அறிந்துகொள்ளலாம்.

Names of God: *θεος, Jehovah,* &c. Unity, Trinity, Attributes.

(3.) **தேவன்.** வேதத்தில் ஆதிகாரண கடவுளாகிய தேவனுக்கு இடப்பட்டிருக்கிற நாமங்களைப்பற்றியும், அவருடைய ஏகத்துவம் திரித்துவம் என்னும் அவருடைய தத்துவங்களைப்பற்றியும், அவருடைய இலட்சணாங்களைப்பற்றியும் விசுவாசப்பிரமாணத்திலுள்ள முதலாம் உபதேசத்தைக் காண்க.

God=good.

*πατηρ*, Father.

தேவன் [கடவுள்] ஒருவர், அவர் நல்லவர் [நன்மை] என்றும், (லூ. 18. 19.) அவர் தம்முடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷருடைய இருதயத்தில் வாசம்பண்ணுகிறார் என்றும், (யோ. 17. 20–23.) பிதா என்பதே அவருக்குச் சிறந்த நாமதேயம் என்றும், (மத். 6. 9.) இரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார்.

Jesus Christ, *Ἰησοῦς χριστος*: Word, *λογος*. Saviour, *σωτηρ*: Messiah, Anointed· *ο μεσσιας*. Redeemer, *λυτρωτης*. The son of God. *ὁ υἱος του θεου.* The only Begotten, *ο μονογενης*. The Lamb of God, *ο αμνός του θεοῦ.* Propitiation, *Ἱλασμός*. Sacrifice, *θυσια*.

(4.) **இயேசுகிறிஸ்து.** இவருக்கு வார்த்தை, இரட்சகர், மேசியா, மீட்பர், தேவசுதன், ஒரேபேறானவர் (அத்வைதீய ஏகபுத்திரன்), உலகத்தின் பாவங்களைச் சமந்துதீர்க்கிற தேவஆட்டுக்குட்டியான கிருபாதாரபலி என்னும் பேர்கள் வேதத்தில் இவருக்கு இடப்பட்டிருக்கிறது. இந்தப் பேர்களின் அர்த்தங்களையும், இவருடைய முத்தொழில்களையும், இவருடைய குணாதிசயங்களையும் விசுவாசப்பிரமாண விளக்கத்திலும் இந்தப் புஸ்தகத்தில் சொல்லிய 28, 29–ம் பிரசங்கங்களில் சொல்லியவைகளையும் வாசித்து அறிந்துகொள்ளலாம்.

(5.) திருச்சபை. கிறிஸ்துவின் அங்கம், கிறிஸ்தவர்களின் சங்கம், விசுவாசிகளின் கூட்டம். ஜீவனுள்ள மெய்த்தேவனை ஆராதிக்கிற ஆலயத்துக்கும் இந்தப்பெயர் வழங்கும். ஒரே பொதுவான அப்போஸ்தல திருச்சபையானது பரலோகராஜ்யம் என்றும் சொல்லப்படும். கர்த்தருடைய ஜெபத்தின்பேரில் சொல்லிய நான்காம் பிரசங்கத்தையும், விசுவாசப்பிரமாண விளக்கம் ஒன்பதாம் உபதேசத்தையும் காண்க.

The Church. *Kirk*, Congregation, Society. *εκκλησια, κυριακος.*

The Kingdom of Heaven, *ἡ βασιλεια τῶν οὐρανων.*

(6.) கிருபை. அருள். கிறிஸ்துவின் உத்தரவாத புண்ணியத்தினிமித்தம் விசுவாசிகளுக்குப்பலிக்கும் தேவப்பிரசாதம். இது தேவனுடையஇலவசமான ஈவையும், கைம்மாறில்லாத தயவையும், இயல்பான இரக்கத்தையும் காருணியத்தையும் குறிக்கும். ஞானஸ்நானம்பெற்ற விசுவாசிகள் பெற்றுக்கொள்ளும் கர்த்தருடைய இராப்போசனமாகிய ஞான ஐக்கிய நன்மைக்கு நற்கருணை என்று பேர்.

Grace, favour, mercy, love, *χαρις χαρισμα.*

Eucharist, *ευκαριστια.* Communion, *Κοινωνια*

(7.) விசுவாசம். இது நம்பிக்கை, பற்றுதல், பக்தி, சிரத்தை என்பவற்றைக் குறிக்கும். "பரமசற்குருநூல் அன்புபற்றலே சிரத்தையாகும்." மனுஷன் கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினால் ரட்சிக்கப்படுகிறான். விசுவாசமுள்ளவனிடத்தில் நற்கிரியைகள் இயல்பாய் விளங்கும். விசுவாசப்பிரமாண விளக்கம் 28-ம் பக்கத்தையும், இந்தப் புஸ்தகத்தில் பக்தியைப்பற்றிச் சொல்லியிருக்கிற பிரசங்கத்தையும் காண்க.

Faith.=Belief of the Truth, assent, trust. *Πίστις*(piety.)

Works, *εργα.*

(8.) நீதி. புண்ணிய நிலைமை. இது கிறிஸ்துமார்க்கத்துக்குரிய விசேஷித்த சம்பிரதாயப்பதம்.

Righteousness, δικαιοσύνη. Justification, acquittal, or acceptance with God.

தேவகிருபையினால் விசுவாசத்தின் வழியாய்க் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு குணப்படுகிற பாவி தேவசமுகத்தில் அவருடைய புண்ணியத்தினிமித்தம் நீதிமானாக எண்ணப்படுகிறான். இது வேதத்தில் ஒப்புரவாகுதல் என்றும் சொல்லப்படும். பாவி இந்தப் புண்ணியநிலைமையில் வரும்போது பரமஞானத்திலும் பரிசுத்தத்திலும் வளர்ந்து தேறுதலடைந்து மீட்கப்படுகிறான். (1 கொ.1. 31.) இந்த விஷயத்தைப்பற்றி விசுவாசப்பிரமாண விளக்கம் 25—ம் பக்கத்தையும், இந்தப் புஸ்தகத்தில் சுவிசேஷத்தைப்பற்றிச் சொல்லிய பிரசங்கத்தையும் காண்க.

Reconciliation= Atonement, Καταλλαγή, restoration to favour. Wisdom, σοφια. Sanctification, ἁγιασμος. Redemption, ἀπολύτρωσις.

(9.) மாம்சம். இது மனுஷீகத்துக்குரிய ஜந்மசுபாவத்தையும் பாவநிலைமையையும் குறிக்கிற சம்பிரதாயப்பதம். மனுஷன் ஜந்மத்தினாலும் கர்மத்தினாலும் மனோவாக்குக்காயத்தில் பாவியாயிருக்கிறான்.

Flesh, σαρξ.

ஜந்மபாவத்தின் பயனையே இந்துக்கள் புநர்ஜந்மமாகிய பிராரத்துவ வினைப்பயன் என்பார்கள். மனுஷீகத்தால் வந்த பாவம் மனுஷீகத்தில் பட்டுத்தீரவேண்டும். பாவியான ஆதாமினால் பாவம் வந்தது, புண்ணியநாதராகிய கிறிஸ்துவினால் புண்ணியம் வந்தது. புண்ணியநாதர் பாவநிவிர்த்தி செய்யும்படியே இரட்சகராக மனுஷஅவதாரஞ்செய்தார். (யோ. 1. 14.)

Sin, ἁμαρτία. Original, actual.

Transmigration.

Incarnation. ἐνσαρκώσ.

(10.) ஆவி, ஆத்துமா. இது மேற்சொல்லிய மாம்சம் என்னும் பதத்துக்கு எதிரிடையான பதம். இது ஞானஜந்மத்தையும், புண்ணிய

Spirit, Πνευμα.

Spirit, soul, and body, το πνεῦμα καὶ ἡ ψυχή καὶ τὸ σωμα, the threefold nature of man.

நிலைமையையும் குறிக்கும். (ரோ. 8. 4.) தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான். தேவன் மனுஷனைத் தம்முடைய சாயலாக உண்டாக்கினபடியால் தேவனுக்கும் மனுஷனுக்கும் சம்பந்தமுண்டு. அண்டத்திலுள்ளபடி பிண்டத்திலும் என்னும் பழமொழியின்படி, புத்திசித்தமுள்ள மனுஷன் ஆவி ஆத்துமா சரீரமாகிய திரித்துவமாயிருக்கிறான். (1 தெச. 5. 23.) வெளிப்படாத காரணப்பொருளாகிய பரமபிதாவும், வெளிப்பட்ட காட்சிப்பொருளாகிய தேவசுதனும், வெளிப்படுத்தும் சாட்சிப்பொருளாகிய பரிசுத்தஆவியும் உண்டென்கிற பரமரகசியத்தை, தன்னை அறிந்து பாவத்தை உணர்ந்து புண்ணியநிலைமையில் நிற்கிறவன் அறிந்துகொள்ளுவான்.

Holy Spirit, το αγιον Πνευμα.

ஆத்துமாவைச் சுத்திசெய்கிற அசரீரிவஸ்துவாகிய பரம்பொருளுக்குப் பரிசுத்தஆவி [பரமாத்துமா] என்பது சம்பிரதாயப்பெயர்.

Regeneration, ’αναγεννησις, The incipient principle of new spiritual life.

(11.) மறுபிறப்பு. இது தேவ அருளின் மூலமாய், கிறிஸ்துவின் புண்ணியபலத்தின் வழியாய், பரிசுத்தஆவியின் ஏவுதலால் ஞானஸ்நான தீட்சையில் ஆத்துமாவுக்கு உண்டாகும் இரட்சண்யநிலைமை. (யோ. 3. 5. தீத். 3. 5.) உலகமும் மறுபிறப்பு அடையும், அது வேதத்தில் மறுஜந்மம் என்னப்படும். (மத். 19. 28.)

Παλιγγενεσια. (renovation, restoration)

Repentance, μετανοια. a change of mind, reformation.

(12.) மனந்திரும்புதல், மனமாறுதல், அநுதாபம், சத்திய உபதேசத்தைக் கேட்டு, துர்க்குணத்தைவிட்டுப் புதிய நற்குணத்தைப்பற்றி நடப்பது. பாவத்தைக்குறித்து உத்தம மனஸ்தாபப்படுகிறதும் மனந்திரும்புதலுக்கு அடுத்தது. மனந்திரும்பி மனஸ்தாபப்பட்டு, சீரடைந்து

μεταμέλομαι, Sorrow, regret.

துணைப்படுகிறது உத்தம விசுவாசிகளின் லட்சணம். மனந்திரும்பி குணப்படுங்கள் என்று பேதுரு அப்போஸ்தலன் சொன்ன ஒரு பிரசங்கத்தில் இரண்டு பதமும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது.* இந்தப் புஸ்தகத்தின் 133–பக்கம் காண்க.

Conversion, επιστροφη.

(13.) உயிர்த்தெழுதல், மாம்ச உத்தானம். இது புநர்ஜந்மமுமல்ல, எழுபிறப்புமல்ல. இது கிறிஸ்துமார்க்கத்துக்கே உரிய சிறந்த உபதேசம். மரித்து விகாரப்பட்டுப்போன விசுவாசியின் சரீரம் மறுபடியும் உருவாக்கப்பட்டுஉயிர்த்து நியாயத்தீர்ப்பு அடைந்து, பரகதியாகிய நித்தியஜீவனில் பிரவேசிக்கும்.

Resurrection, ἀναστάσις.

Judgment, Κρίσις.

Eternal life, ἡ αἰώνος ζωή.

(14.) இந்துமத சித்தாந்தத்தில் குருவும் தீட்சையும், யாகமும் பூஜையும், தபசும் பிராயச்சித்தமும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குபாதமும் இருந்தாலும், இரட்சகரின்வழியாய் இரட்சணியம் உண்டென்பது கிறிஸ்துமார்க்கச் சித்தாந்தத்திற்கே சிறந்த உபதேசம். தேவன் ஒருவர், இரட்சகரும் ஒருவரே, மனுஷப்பிறவியும் ஒன்றே; மனுஷர் யாவரும் ஏகசகோதரர், ஜாதிபேதமில்லை; மனுஷர் ஒருவரோடொருவர் ஐக்கியப்படாமல் தேவனோடு ஐக்கியப்படக்கூடாது; ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்குமுள்ள இந்த ஐக்கியமே பரமபுருஷார்த்தம் என்னப்படும்.

Salvation through a Saviour peculiar to Christianity.

The chief good [end] of man.

வேதவாக்கியங்களுக்குச் சுயத்தோற்றமான விபரீத அர்த்தங்களைச் சொல்லக்கூடாது. "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்

Scripture its own interpreter: Spiritual things must be compared with Spiritual.

---

* அப். 3. 19.

படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" என்று பவுல் அப்போஸ்தலன் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்.*

Design, scope.

பொருளின் நோக்கமும் சம்பந்தமும் அறிந்து வியாக்கியானம்பண்ணவேண்டும். "மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இல்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" என்று பவுல் அப்போஸ்தலனும், "மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரம் அல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான்" என்று யாக்கோபு அப்போஸ்தலனும் சொல்லுகிறார்கள்.† இதைச் சமரசப்படுத்தி அறியும்படி எபேசியர் நிருபம் 2. அதி. 8—10 வசனங்களையும், பிலிப்பியர் நிருபம் 2. அதி. 12, 13 வசனங்களையும் ஒத்திட்டுக் கவனித்துப்பார்க்கவேண்டும். அப்படியே பார்வோனுடைய இருதயத்தைக் கர்த்தர் கடினப்படுத்தினார் என்கிற வாக்கியத்தை யாக்கோபு 1. 13, 14 வசனங்களோடே ஒத்திட்டுப்பார்த்தால் பொருள் விளங்கும்.

Figurative expressions.

வாக்கியத்தில் ஆகுபெயர்களும் குறிப்புச்சொற்களும் வரும்போது சம்பந்தம் அறிந்து வியாக்கியானம்பண்ணவேண்டும். "லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்பது அவனுடைய மரணத்தைக் குறிக்கும். "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று நம்முடைய ரட்சகர் தம்முடைய சரீரம் உயிர்த்தெழுந்திருப்பதைக்குறித்துச் சொன்னார். தம்முடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் குறித்து இரட்சகர் சொன்ன பரமரக

---

* 1கொ. 2. 12, 13. † ரோ. 3. 28. யாக். 2. 24.

சியமான ஞான உபதேசத்தின் ஆழ்ந்தபொருளை யூதர்கள் அறிந்துகொள்ளாமல் அதைப்பற்றி விகற்பமான எண்ணங்கொண்டபோது, "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வார்த்தைகள் ஆவியும் ஜீவனுமாயிருக்கிறது" என்று திருவுளம்பற்றினதினால் தம்முடைய உபதேசத்தின் கெர்ப்பார்த்தம் இன்னதென்று விளங்கப்பண்ணினார்.

Ex: False interpretation.

தஞ்சாவூரிலிருந்த ஒரு உபதேசி பத்துக்கன்னிகைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிற உவமையில் ஐந்துகன்னிகைகள் புத்தியுள்ளவர்களும், ஐந்து கன்னிகைகள் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்களென்று சொல்லியிருக்கிறபடியால், உலகத்திலுள்ள ஜனங்களில் பாதிபேர் மோட்சத்துக்கும், பாதிபேர் நரகத்துக்கும் போவார்கள் என்று வியாக்கியானம்பண்ணினான். இதுதான் குயுக்தியான அதிகப்பிரசங்கம் என்னப்படும்.

Argument=authority, proof, evidence.

**V. நியாயம்.** நியாயமே பிரசங்கத்துக்கு உயிர், வேத உதாரணம் அதற்கு ஆதாரம்; இவ்விரண்டும் இல்லாமல் பிரசங்கம் பயன்படாது. பிரசங்கத்தில் வேதப்பொருளைமாத்திரமல்ல, வேதமொழிகளையும் பொன்னைப்போல் போற்றிப் பிரயோகிக்கவேண்டும். வேதவாக்கியங்களை நன்றாய்ப் பாடம்பண்ணி திட்டமாய் எடுத்துரைப்பது உத்தம வேதியரின் லட்சணம். ஆகமப்பிரமாணம்தவிர அநுமான உபமான அநுபோகப் பிரமாணங்களும் பிரசங்கத்துக்கு உதவி, அதைப் பரிமளிக்கப்பண்ணும்.

Illustrations=Stories, Anecdotes.

**VI. திருஷ்டாந்தம்.** சத்தியத்துக்குச் சாட்சியாக அதற்கடுத்த திருஷ்டாந்தங்களை எடுத்துச்சொல்லவேண்டும். இந்தப் புஸ்தகத்திலுள்ள பிரசங்கங்களில் அநேக திருஷ்டாந்தங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷமாய் 21-ம் பிர

சங்கத்தில் கண்டிருக்கிற கள்ளனுடைய கதை கிறிஸ்துவினுடைய புண்ணியபலத்தையும், 27ம்—பிரசங்கத்தில் கண்டிருக்கிற கள்ளனுடைய கதை சத்தியத்தின் பயனையும் விளங்கப்பண்ணும்.

S. Paul quotes from heathen authors.

சித்தாதிகளுடைய பாடல்களிலும், நீதிசாஸ்திரங்களிலும், ஞானநூல்களிலுமுள்ள நல்ல வாக்கியங்களை உதாரணமாக எடுத்துரைக்கலாம். பவுல் அப்போஸ்தலன் அப்படியே செய்திருக்கிறார். அப்போஸ்தலர் நடபடி 17. 28—லே, "நாம் அவருடைய சந்ததியார்" என்று அரதஸ் என்னும் புலவனுடைய பாடலிலிருந்தும், தீத்து. 1. 12லே, "கிரேத்தர் ஓயாப் பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள்" என்று எபிமெனிடெஸ் என்னும் புலவனுடைய பாடலிலிருந்தும், 1 கொ. 15. 33லே, "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் என்று மிநாந்தர் என்னும் புலவனுடைய பாடலிலிருந்தும்; 2 தீமோ. 4. 7லே, "நல்ல போராட்டத்தைப் போராடுங்கள்" என்று அல்செஸ்திஸ் என்னும் புலவனுடைய பாடலிலிருந்தும் எடுத்து எழுதியிருக்கிறார் என்று வித்துவான்கள் சொல்லுகிறார்கள்.

தேவமகிமைக்கும், வேதமாட்சிமைக்கும் ஆத்துமரட்சிப்புக்கும் எதுவாயிருக்கும் இலக்கண இலக்கிய விதிகளையும், நியாய அலங்காரவிஷயங்களையும் தகுந்தபடி பிரசங்கத்தில் பிரயோகிக்கலாம்.

Conclusion, Peroration.

VII. முடிவுரை. பிரசங்கமுடிவிலே முன் சொன்ன நியாயங்களின் தொகுப்பையாவது, அந்த நியாயங்களினால் இயல்பாய்த் தோன்றும் புத்திமதிகளையாவது, கேட்கிறவர்களுக்கு ஊக்கமும் எழுப்புதலும் உண்டாகச் சொல்லிப் பிரசங்கத்தை முடிக்கவேண்டும்.

**How to prepare Sermons.**

பிரசங்கத்துக்கடுத்த தகுதியான வாக்கியத்தை ஏற்கனவே தெரிந்துகொண்டு, தேவஉதவியை முன்னிட்டு, தன்னால் இயன்றமட்டும் அதைக் கவனித்து, வகுத்து, இன்னின்ன காரியங்களையும் உதாரணங்களையும் திருஷ்டாந்தங்களையும் சொல்லலாம் என்று தீர்மானித்துக்கொண்டு, அவ்விஷயங்களைக்குறித்து மற்றவர்கள் எழுதியிருக்கிற நூல்களையும் வியாக்கியானங்களையும் ஆராய்ச்சிசெய்து, வண்டானது பல புஷ்பங்களிலுமுள்ள தேனைப் பருகி கூட்டைக் கட்டுவதுபோலப் பிரசங்கத்தை இயற்றி முடிக்கவேண்டும்.

**Style of writing Sermons.**

பிரசங்கத்தின் பாஷை நடை இயல்பாயும் தெளிவாயும் இசைவாயும் இருக்கவேண்டும். "இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க பிரசங்கி வகைதேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள். ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள்போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள்போலவும் இருக்கிறது" என்றும், "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" என்றும், இவ்விஷயத்தில் அநுபவசாலியான சாலொமோன் சொல்லியிருக்கிறார்.*

**Extempore Preaching.**

எழுதாமல் பிரசங்கிக்கிறதே உத்தமம். சிலருக்குப் பேசுகிற வரம் இருந்தாலும் அடிக்கடி பிரசங்கங்களை எழுதுகிறது நல்லது. வரப்பிரசாதிகள் எழுதாமல் பண்ணுகிற பிரசங்கம் அத்தருணத்தில் பலன்செய்து ஒழிந்துபோம்; எழுதிபண்ணுகிற பிரசங்கம் அக்காலத்திலும் பிற்காலத்திலும் நமக்கும் பிறருக்கும் உதவும்படி நிலைக்கும். அப்போஸ்தலமார் வரப்பிரசாதிகளா

---

* பிர. 12. 10, 11. நீதி. 25. 11.

டபோது, ஐயா, நான் அநேகருடைய சாதுரிய பிரசங்கத்தைக் கேட்டு அவர்களைப் புகழ்ந்தேன்; உம்முடைய பிரசங்கத்தைக் கேட்டபோதோ உண்மையை அறிந்து என்னை இகழ்ந்தேன் என்றான்.

Preaching to Hindus, Mahomedans, &c.

புறமதஸ்தருக்குப் பிரசங்கிக்கும்போது வீண்தர்க்கத்துக்கும் வம்புக்கும் இடங்கொடாமலும், அவர்களுடைய மார்க்கங்களை இகழ்ந்துபேசாமலும், சத்தியத்தைச் சாந்தத்தோடும் அன்போடும் பிரசங்கிக்கவேண்டும். தஞ்சாவூரிலிருந்த சுவார்ச்சு ஐயர் திப்பு சுல்தானிடத்தில் துரைத்தனத்தாருடைய வேலையாய்ப்போயிருந்தபோது, திப்புசுல்தான் தன்னுடைய மௌலவிமார்களையும், வித்துவான்களையும், சுவார்ச்சு ஐயரையும் கொலுவில் வரவழைத்து, அவரை நோக்கி: எங்கள் மகமது நபி பெரியவரோ, உங்கள் ஈசாநபி பெரியவரோ என்று கேட்டான். அவர் விவேகமுள்ள வேதியராகையால், இன்னார் பெரியவர் என்று பதறி துணிந்து சொல்லாமல், இருவருடைய சரித்திரத்தையும் எல்லாரும் ஒத்துக்கொள்ளத்தக்கதாக விபரமாய் எடுத்துரைத்து, இன்னார் பெரியவர் என்று பகுத்தறிவுள்ள விவேகிகள் நிதானித்து அறிந்துகொள்ளுங்கள் என்று சொன்னார். கேட்ட யாவரும் அவருடைய ஞானத்தையும் விவேகத்தையும் புகழ்ந்து அவருக்கு மரியாதை செய்தார்கள்.

Example of Schwartz.

Conclusion, Consistency of character.

கடைசியாக நம்முடைய உபதேசத்துக்கும் நடக்கைக்கும் சம்பந்தமிருக்கவேண்டும். "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ; நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு." "மற்ற

வர்களுக்குப் பிரசங்கிக்கிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.'' "ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு, எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு; தீங்கு அநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'' என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறதை வேதியர் யாவரும் எப்பொழுதும் நினைவில் வைக்கவேண்டும்.*



* 1 கொ. 9. 16, 17, 27. 2 தீமோ. 4. 2, 5.

# கர்த்தருடைய ஜெபத்தை விளக்கும்

# பிரசங்கங்கள்.

## முதலாம் பிரசங்கம்.

மத்தேயு, 6. 9—13. லூக்கா, 11. 1—4.

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்."

கிறிஸ்துநாதர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான். அதற்கு அவர், நீங்கள் ஜெபம்பண்ணும்போது: "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, ஃ" என்று சொல்லுங்கள் என்றார். மத்தேயு சுவிசேஷத்தில் பரிசேயர் புறமதஸ்தர் முதலான மாய்மாலக்காரர் பண்ணும் ஜெபத்தை நம்முடைய கர்த்தர் கண்டித்து, தம்முடைய சீஷர்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதம் இன்னதென்று சொல்லி, இந்த

ஜெபத்தைக் கற்பித்திருக்கிறார். மனுஷர் காணும்படியாக பரி சேயர் ஜெபஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ணி, தங்கள் பலனை அடைகிறார்களென்றும், உத் தமபக்தர் ஜெபம்பண்ணும்போது தங்கள் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற பிதா வை நோக்கி ஜெபம்பண்ணி, அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா வினால் வெளியரங்கமாய்ப் பலன் அடைவார்களென்றும்; அஞ்ஞானிகள் வீண்வார்த்தைகளை அலப்பி, அதிகமாய் வச னிக்கிறதினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக் கிறார்களென்றும், உத்தமபக்தர் அப்படிச்செய்யாமல், பிதாவா னவர் தங்கள் குறைவுகளை அறிந்திருக்கிறார் என்று உணர் ந்து, பயபக்தியோடு அவர் திருவுளத்துக்கு ஏற்றபடி ஜெபம் பண்ணுவார்களென்றும் திருவுளம்பற்றியிருக்கிறார். ஜெபத் தைக் கேட்கும் கர்த்தரே இந்த ஜெபத்தைக் கற்பித்தார்.

யூதர்களுக்குள் பரிசேயர் செய்தபடியே, அந்நிய மதஸ்தர்க ளான வீண்பக்தரும் ஜெபத்தின் தன்மையை அறியாமல், மற்ற மனிதர் காணவும் கேட்கவும் மாய்மாலமாய் நீண்ட ஜெபம்பண்ணுகிறதுண்டு. தேவனைத் தங்களுக்குச் சமான மாக எண்ணி, கெஞ்சி, கூவி, கத்தி, கூறியதைக் கூறி, தேவ நாமங்களையும் லட்சணங்களையும் மூச்சுவிடாமல் சொல்லி ஜெபமாலையைக் கையில் வைத்துக்கொண்டு எண்ணி எண்ணி ஜெபம்பண்ணுவதினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக்கிறார்கள். எலியா தீர்க்கதரிசியின் காலத்திலே பாகால் விக்கிரகத்தைத் தொழுத பூசாசாரிகள், காலைதொட ங்கி மாலைவரைக்கும் தங்கள் விக்கிரகத்தை நோக்கி ஓலமிட் டும், அவர்கள் விண்ணப்பத்துக்கு அந்தச் செவிட்டு விக்கிர கம் செவிகொடுக்கவில்லை, அப்படியே இக்காலத்திலும் நடந் துவருகிறது.

ஜெபம் தேவபக்திக்குப் பிரதான லட்சணம்; பரமாத்து மாவுக்கும் ஜீவாத்துமாவுக்கும் உண்டாயிருக்கிற புற்று ஜெபத் தினால் விளங்கும்.

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங் கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென் ருல், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிருன்; தேடு கிறவன் கண்டடைகிருன்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்ப டும்," என்று மத்தேயு சுவிசேஷம் ஏழாம் அதிகாரம் ஏழாம் வசனமுதல் கர்த்தர் சொல்லியிருக்கிருர்.

1. ஜெபத்தைப்பற்றிக் கர்த்தர்: "கேளுங்கள், கொடுக்கப் படும்" என்ருர். இதனுல் ஆவலோடு விரும்பிக் கேட்கப்ப டுவதே ஜெபமாம். குறைவுள்ளவர்களே கேட்பார்கள்; அத ஞல் அவர்களுடைய குறைவு நீங்கி நிறைவு உண்டாகும். உலகிலுள்ள எந்தச் சமயத்தாருக்குள்ளும் ஜெபமும், பிரார்த்த னையும், விண்ணப்பமும், துதியும், தோத்திரமும் வழங்கி வரும். ஜெபமாவது தேவனேடு பேசுதல், சஞ்சரித்தல், பழ குதல், போராடுதல் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கி றது (ஆதி. 5. 24; 6. 9.). "தான் அசையாமல் அணுவும் அசையாது" என்னும் உண்மைப்படியே, நாம் ஜெபத்தினுல் அசையாமலிருந்தால் தேவஅருளும் நம்பொருட்டு அசையா து. புத்தியுள்ள சிருஷ்டிக்கும் ஞானமுள்ள சிருஷ்டிகர்த்தா வுக்கும் உரிய சம்பந்தம் ஜெபத்தினுல் விளங்கும். ஜெபம் மனதைப் பரவசமாக்கும்.

2. "தேடுங்கள், கண்டடைவீர்கள்" என்ருர். நாம் இழந்து போனதையே தேடுகிருேம். நூறு ஆடுள்ள ஒருவன் ஒரு ஆட்டை இழந்தபோது, அந்த ஒரு ஆட்டைத் தேடிக்கொண்டு போனுன். பத்து வெள்ளிப்பணமுள்ள ஒரு ஸ்திரீ ஒரு பணம் காணுமற்போனபோது, வீடெல்லாம் ஆராய்ந்து அதைத் தேடினுள். நல்ல முத்தைத் தேடுகிற வியாபாரி விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, தனக்கு உண்டான எல் லாவற்றையும் விற்று, அதைக் கொண்டான் என்று வாசிக்கி ருேம் (மத். 13. 45, 46.). ஆகையால் ஜெபத்தில் கேட்கிறது மாத்திரம் போதாது, தேடவும் வேண்டும். ஏனென்ருல் ஒரு

வன் கேட்டுவிட்டுப் போய்விடுவான்; கேட்ட காரியத்தைக் கண்டு அடையுமட்டும் அதைத் தேடவும்வேண்டும்.

3. "தட்டுங்கள், திறக்கப்படும்" என்றார். புத்தியற்ற ஐந்து கன்னிகைகள் கதவு சாத்தப்பட்டபின்பு வந்து தட்டியும் கதவு திறக்கப்படவில்லை என்று வாசிக்கிறோம். ஆகையால் ஜெபத்தில் கேட்கிறதும் தேடுகிறதும் போதாது, சமயமிருக்கையில் தட்டவும்வேண்டும். இதனால் ஜெபத்திற்கு ஆவலும் ஊக்கமும் விடாமுயற்சியும் வேண்டும் என்று விளங்குகிறது.

மனிதர் தங்களுக்கு உள்ளதைக் கேட்காமல் இல்லாததையும், சுயமாய்ச் சம்பாதிக்கக்கூடாததையுமே கேட்பார்கள். பாவமன்னிப்பு, கேட்காமல் நமக்குக் கிடைக்கமாட்டாது. ஆதிமுதல் தேவபூஜையும் பலியும் காணிக்கையும் ஜெபமும் வழங்கிவந்திருக்கிறது (ஆதி. 4. 4. ரோ. 12. 1.). "ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருங்கள் (ரோ. 12. 12.). "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" (1 தெச. 5. 17.) என்று வேதம் கற்பிக்கிறது. இது குருக்கள்மார், சன்னியாசிகள், துறவறத்தார்மாத்திரம் அல்ல, இல்லறத்தார் யாவரும் செய்ய வேண்டிய கடமையே. ஜெபம் மனதினாலும் வாக்கினாலும் புத்தியினாலும் சித்தத்தினாலும் செய்யப்படுகிறதும் அல்லாமல், சரீரவணக்கத்தினாலும் செய்யப்படவேண்டியது. ஜெபமானது ஊக்கமும் முயற்சியுமுடைய போராட்டமாகிய பலவந்தம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி. 32. 24. மத். 11. 12.). இருதயத்தின் பரிபூரணத்திலிருந்து வாய் பேசும் (மத். 12. 34.). உண்மையாய் ஜெபம்பண்ணுகிறவன் தேவனை நோக்கி: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை விடமாட்டேன் என்று யாக்கோபு சொன்னது போல் துணிந்துசொல்லுவான் (ஆதி. 32. 26.).

பேரறிவுள்ள சிருஷ்டிகள் தங்கள் குறைவுகளை உணர்ந்து, சர்வநன்மைச்சொரூபியும் நரஜீவதயாபரருமான சிருஷ்டிகர்த்தாவை நோக்கி, அவர் திருச்சித்தத்துக்கு இணங்கி, ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் வேண்டிய தகுந்த நன்மைகளுக்

காகப் பரமகுருவை முன்னிட்டு அவர் வழியாய் வேண்டிக் கொள்வதே உத்தம ஜெபமாம். பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றியறிந்து துதிசெலுத்துவதே ஸ்தோத்திரமாம். ஜெபம்பண்ணி ஸ்தோத்திரம் செய்வது சிருஷ்டிகளாகிய மன்னுயிர்க்குரிய கடமையும் சிலாக்கியமுமாம்.

இந்த ஜெபத்தை கர்த்தர் தாமே ஜெபித்தபடியினால் அல்ல, தம்முடைய சீஷர்கள் ஜெபிக்கும்படி அவர்களுக்குக் கற்பித்தபடியினால், இது கர்த்தருடைய ஜெபம் என்னப்படும். பிள்ளைகள் முதியோர்கள் யாவரும் இந்த ஜெபம் செய்யவேண்டியது அவசியம். இந்த ஜெபம் காலையிலும் மாலையிலும், வீட்டிலும் கோவிலிலும், எப்பொழுதும் எல்லாவிடங்களிலும், கிறிஸ்தவர்கள் செய்யும் எல்லா ஆராதனைகளிலும் வழங்கிவருவதுண்டு. இதை விசுவாசசங்கிரகம், உபதேசகட்டளை, நன்னெறிவிளக்கம் என்றும் சொல்லலாம்.

நம்பவேண்டியது விசுவாசப்பிரமாணத்திலும், செய்யவேண்டியது பத்துக்கற்பனைகளிலும், நாடவேண்டியது கர்த்தருடைய ஜெபத்திலும் அடங்கியிருக்கிறது. நம்மை உண்டாக்கின சத்தியவாசகரே நமக்கு இந்த ஜெபத்தைக் கற்பித்திருக்கிறார். இது சுருக்கமும் அடக்கமுமான ஜெபமாயினும், இதன் கருத்தும் பொருளும் விஸ்தாரமாயிருக்கும். மன்னுயிர்க்கு வேண்டியதெல்லாம் இதில் அடங்கியிருக்கிறது. இந்த ஜெபத்தை ஜெபிக்கிறவர்கள் தேவனைப் பிதாவாகப் பாவித்து, அன்புபாராட்டி, அவரைப் பரிசுத்தமாய் நமஸ்கரித்து, அவருடைய ராஜ்யத்துக்குரிய அடியார் என்று அறிக்கையிட்டு, அவருடைய சித்தமே பிரமாணம் என்று ஒத்துக்கொண்டு, சரீரத்தின் பசிக்கும் ருசிக்கும், உடலின் போர்வைக்கும் அலங்காரத்துக்கும் வேண்டியவைகளை அளிக்கவும், பாவக்கடனை மன்னிக்கவும், சோதனையினின்று விலக்கி, தீமையினின்று காக்கவும், இந்த ஜெபத்தில் வேண்டிக்கொள்ளுகிறார்கள். தேவனை வணங்குகிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் வணங்கவேண்டும். மனதினால் உணராமல் வாயினால்மாத்திரம் உச்சரிக்கப்படுகிற ஜெபம்

தேவனுக்கு ஏற்காது. பொருளை உணராமல் கிளிப்பிள்ளையைப்போல் சொற்களைமாத்திரம் உச்சரிக்கிறது அறிவுள்ள மனிதருக்கு அடுத்ததல்ல; சொற்களைமாத்திரம் உச்சரிக்கிறதினால் பயனில்லை. அதன் பொருளை அறிந்து உணர்ந்து உச்சரிப்பதே புத்திமான்களுக்கு அடுத்தது. "ஆவியோடும் கருத்தோடும் விண்ணப்பம்பண்ணவேண்டும்" (1 கொரி. 14. 15.). இதுதான் ஜீவபலி, புத்தியுள்ள ஆராதனை என்னப்படும் (ரோ. 12. 1.).

இந்த ஜெபத்தினாலே நீ தேவனிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறது என்ன? என்கிற கேள்விக்கு, திருச்சபைப் ஞான உபதேசத்தில் சொல்லியிருக்கிற உத்தரவு என்னவென்றால்:

"எல்லா நன்மைகளையும் கொடுக்கிற நம்முடைய பரம பிதாவும் ஆண்டவருமாகிய தேவனை நாம் தகுந்தபடி வணங்கி, அவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியஞ்செய்கிறதற்கு அவர் எனக்கும் மற்ற யாவருக்கும் தமது கிருபையைத் தந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். அல்லாமலும் நம்முடைய ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கவும், நமக்கு இரங்கி நமது பாவங்களை மன்னிக்கவும், ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் நேரிடும் எல்லா மோசங்களினின்றும் தயவாய் நம்மை ரட்சிக்கவும், எல்லாப் பாவத்துக்கும் துன்மார்க்கத்துக்கும் நமது ஆத்தும சத்துருவுக்கும் நித்திய மரணத்துக்கும் நம்மை விலக்கிக் காக்கவும் வேண்டுமென்று தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தமது இரக்கத்தினாலும் தயவினாலும் இப்படிச் செய்வார் என்று நான் நம்பி அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தங்கொள்ளுகிற ஆமென் என்று சொல்லுகிறேன்" என்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

ஒருவரும் ஒருக்காலும் பேசாதவிதமாய்ப் பேசினவருடைய திருவாசகம் இந்த ஜெபத்தில் அடங்கியிருக்கிறது. குமாரன் அருளின அமிர்தவாக்கு பிதாவின் செவிக்குப் பிரியமா

யிருப்பதுமன்றி, அவருடைய திருவாக்கை நாம் பிரயோகிப்பது, அவருடைய திருநாமத்தையும் அவருடைய புண்ணியத்தையும் முன்னிட்டு வேண்டிக்கொள்வதுபோலவும் இருக்கும் அல்லவோ? ஆமென் என்னும் கிறிஸ்துவுக்குரிய பெயரால் இந்த ஜெபம் முடிவுபெறுகிறபடியால், இந்த ஜெபம் கேட்கப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு ராஜாவுக்கு நாம் ஒரு பிட்டிசனாகிய விண்ணப்பத்தைக் கொடுப்போமானால், அந்த விண்ணப்பம் ராஜாவினாலே கற்பிக்கப்பட்டு எழுதப்பட்டதாயிருக்கிறபக்ஷத்தில் அவசியம் ஏற்றுக்கொள்ளப்படுமல்லவா? அப்படியிருக்க, பரமபிதாவாகிய ராஜாதிராஜா இந்த விண்ணப்பத்தைத் தம்முடைய நாமத்தின் மகிமைக்காகவும், தம்முடைய பிள்ளைகளின் நன்மைக்காகவும் ஏற்றுக்கொள்வார் என்பதற்குச் சந்தேகம் இல்லையே.

நாம் அனைவரும் நாடோறும் வழங்கும் இந்த ஜெபத்தின் கருத்தையும் பொருளையும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையால், இதில் அடங்கியிருக்கிற ஒவ்வொரு பொருளையும் பங்குபங்காகக் கவனித்து அறியவேண்டும். இந்த ஜெபத்தில் ஒரு முகவுரையும், தேவனைப்பற்றி மூன்று மன்றாட்டுகளும், நம்மைப்பற்றி நான்கு மன்றாட்டுகளும், ஒரு முடிவுரையும் அடங்கியிருக்கிறது.

1. ஜெபமானது மனிதருக்கு இயற்கையான காரியம் என்று தோன்றுகிறது (Instinct). ஆதாமின் மகனாகிய சேத்தின்காலத்தில் மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது (ஆதி. 4. 21.). தன்னை அறிந்தவன் தலைவனையும் அறிவான். அப்படிப்பட்டவன் பரத்தைநோக்கி வேண்டிக்கொள்ளுவான் என்பதற்குச் சந்தேகமில்லை. இம்மையிலுள்ளவனுக்கு மறுமையைப்பற்றிய சிந்தனை பிறக்கும்போதும், பாவஞ்செய்தபின் மனச்சாட்சி தன்னை வாதிக்கும்போதும், திகிலும் பயமும் உண்டாகி: தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையா

யிரும் என்னும் மன்றாட்டு இயல்பாய்ப் பிறக்கும் அல்லவா (லூக். 18. 13.)?

2. ஜெபம் இயற்கையான காரியமாயினும், அது காணுதிருக்கிற வஸ்துக்களாகிய தேவனுக்கும் ஆத்துமாவுக்குமுரிய சம்பந்தத்தைக் குறிக்கிறபடியால், அது பரமரகசியமான காரியம் என்றும் தோன்றுகிறது (Mystery). நம்முடைய பிறப்பும் இறப்பும், விழிப்பும் நித்திரையும், பாவமும் புண்ணியமும், நமக்கு விளங்காத ரகசியப்பொருளாயிருக்கிறது அல்லவா? நம்முடைய மனதிலுள்ளதை ஒலிவடிவாகிய பாஷையினுலும், வரிவடிவாகிய எழுத்தினுலும் மற்றொரு மனதிற்கு வெளிப்படுத்துகிறது ஆச்சரியமானகாரியம் அல்லவா? மின்தபால் வழியாய் வெகுதூரத்திலுள்ளவர்களுக்கு நம்முடைய காரியங்களை வெளிப்படுத்துகிறது இதிலும் ஆச்சரியமான காரியம் அல்லவா? அப்படியே ஜெபமும் நமக்கு முற்றிலும் விளங்காத ஆச்சரியமான காரியமாயிருக்கிறது.

3. இயற்கையான இந்தப் பரமரகசியம் வேதத்தினுல் கட்டளையாக விளங்குகிறது (Revelation). தேவன் பூர்வத்தாரோடு நேருக்குநேராய்ப் பேசினதுண்டு. அவர் நோவா, ஆபிரகாம், எலியா முதலிய மகாத்துமாக்களோடு சம்பாஷித்தார். அவர்களுக்குள்ளும் நமக்குள்ளும் இருக்கும் இந்த ஜெபத்திற்கு ஆதாரம் விசுவாசமே. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்ருல், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபி. 11. 6.).

அறிவில்லாத பக்தியிருக்கலாம், ஜெபமில்லாத பக்தியிராது. ஜெபத்தை நமக்குப் படிப்பித்த ரட்சகர்தாமே ஜெபத்தை உருக்கமாய்ச் செய்தவராயிருந்து, இந்த விஷயத்தில் நமக்கு நல்மாதிரியைக் காண்பித்திருக்கிறூர்.

விண்ணப்பத்தினுல் தேவ அநுக்கிரகம் கிடைக்கும் (எசே. 36. 37.). ஜெபம்பண்ணுகிறவர்கள் தேவன் உண்டெ

ன்று அறிந்து விசுவாசிக்கவேண்டும். அவரை விசுவாசியாத வர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்வார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள் (ரோ. 10. 14.). யோபு: "நான் என்னை அருவருத்து, தூளி லும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" என்றான். கர்த்தர் யோபோடே பேசினபின் தேமானியனான எலிப்பா சை நோக்கி: "உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர்மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசி னதுபோல, நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேச வில்லை. ஆதலால் நீங்கள் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக் கடாக்களையும் தெரிந்துகொண்டு, என் தாசனாகிய யோபி னிடத்தில் போய், உங்களுக்காகச் சர்வாங்க தகனபலியிடுங் கள். என் தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான்; நான் அவன் முகத்தைப்பார்த்து, உங்களை உங் கள் புத்தியீனத்துக்குத்தக்கதாக நடத்தாதிருப்பேன்; என் தாசனாகிய யோபு பேசினதுபோல, நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை" என்றார் (யோபு. 42. 6—8.).

4. ஜெபம்பண்ணுகிறவர்கள் தேவன் செய்திருக்கும் வாக் குத்தத்தங்களை முன்னிட்டு அதற்கு ஏற்றபடி ஜெபம்பண்ண வேண்டும்.

தேவன் மாறாதவராயிருக்கிறபடியால், அவரை வேண்டிக் கொண்டால் அவர் மனம்மாறி வேண்டிக்கொண்ட நமக்கு வேண்டியதை அளிப்பாரோ என்று சிலர் ஆட்சேபிப்பார் கள். அவர் மாறாதவராகையினால்தானே நாம் அவரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம்: "கேளுங்கள், கொடுக்கப்படும்; நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" என்று (மத். 21. 22.) சொன்ன அவருடைய வாக்கு மாறாத சத்திய வாக்கு; அவர் சொல்லியிருக்கச் செய்யாமலிருக்கமாட்டார்.

ஜெபத்தின் பயன் என்ன? அதனால் உண்டாகும் பிரயோ சனம் என்ன? என்று சிலர் கேட்பார்கள். ஜெபம்பண்ணு

கிறவர்களுக்கு அதனால் பயனும் பிரயோசனமும் உண்டு. அதனால் தேவ அருள் கிடைக்கும். ஜெபம் மனிதனைச் சீர்ப் படுத்திக் குணத்தைத் திருத்தும். படிப்பில்லாதவர்களிடத்திலும் ஜெபம் இருந்தால் பரமஞானம் விளங்கும். அது தைரிய மில்லாதவர்களுக்குத் தைரியத்தையும், சோம்பேறிகளுக்குச் சுறுசுறுப்பையும், கோபிகளுக்குப் பொறுமையையும் கொடுத்து, சிந்தையைப் பரவசமாக்கி, மனதைத் தேற்றும். அது துஷ்டர்களை நல்லவர்களாக்கும். ஜெபம்பண்ணுகிறவர்களுடைய முகத்தில் தெய்வகளை உண்டாகும், அவர்கள் குணம் மாறும், அவர்கள் நடக்கை வேறுபடும். கரையிலிருந்து எறிந்த கயிற்றைப் படவிலிருக்கிறவன் பிடித்துக்கொண்டு இழுக்கும்போது, கரை அசையாமலிருந்தாலும் இழுக்கிறவன் கரை சேருவதுபோல, ஜெபம் தேவனை அசைக்காமற்போனாலும், ஜெபம்பண்ணுகிறவர்களுடைய உள்ளத்தை அசைத்து நடத்தும் என்பதற்குச் சந்தேகமில்லை.

தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்கப்போகிறாரா என்று சிலர் ஆட்சேபிப்பார்கள். அப்படி ஆட்சேபிக்கிறவர்கள் தேவன் உயிரோடிருக்கிறாரா என்று கேட்பதுபோலாகும். அவர் கண்ணில்லாத செவிட்டு விக்கிரகம் அல்ல. அவர் இருக்கிறார், அவர் பார்க்கிறார், அவர் கேட்கிறார். "காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ" (சங். 94. 9.)? உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பம் கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானோ? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானோ? அல்லது முட்டையைக்கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பானோ? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்று ரட்சகர் சொல்லியிருக்கிறார் (லூக். 11. 11—13.).

பரமாத்துமாவானது ஜீவாத்துமாவின் காரியத்தை அறியாமலும் உணராமலும் இருக்கக்கூடுமோ? சகல நல்ல ஈவுகளுக்கும் காரணராகிய பரமாத்துமாவை நோக்கி ஜீவாத்துமாவானது தனக்குவேண்டிய எல்லாவற்றிற்காகவும் ஜெபம்பண்ண வேண்டியது கடமையாம். "ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சதேகிகள் யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்" என்று வேதம் சொல்லுகிறது (சங். 65. 2.).

வேறு சிலர்: தேவன் உலகத்தை உண்டாக்கி எல்லாவற்றையும் ஒரு பிரமாணமாகிய கட்டுப்பாட்டுக்குள் அடக்கியிருக்கிறபடியால், கிரமமாய்க் காலபேதங்கள் தோன்றி, பெய்யவேண்டியகாலத்தில் மழை பெய்யுமே ஒழிய, நாம் வேண்டிக்கொள்வதினால் மழை பெய்யுமா என்று ஆட்சேபிப்பார்கள். அப்படி ஆட்சேபிக்கிறவர்கள் தேவன் சுயாதீனராயிராமல், தம்முடைய சுயசித்தத்தின்படியும் சுயவல்லமையின்படியும் ஒரு காரியத்தைச் செய்யாமல், தாம் ஏற்படுத்தின பிரமாணமாகிய கட்டுப்பாடுகளுக்குத் தாமே அசையக்கூடாமல் அடங்கி ஒடுங்கி இருக்கிறார் என்று சொல்லலாகுமே.

வேறு சிலர்: தேவன் உலகத்தில் நடக்கவேண்டிய காரியங்களையெல்லாம் நிர்மானித்துத் திட்டம்பண்ணியிருக்கிறபடியால், அவர் விதித்தபடி எல்லாம் நடக்குமே ஒழிய, நாம் வேண்டிக்கொள்ளுகிறதினால் பிரயோசனம் என்ன என்று சொல்வார்கள். மெய்தான், அவர் சர்வவல்லவர், அவர் சித்தத்தின்படி எல்லாம் நடந்தேறுகிறது. ஆனாலும் மனுஷனை அவர் சுயாதீனனாய் உண்டாக்கியிருக்கிறார்; அவனும் அவன் சித்தத்தின்படியே நடந்து தன் செய்கைக்கு உத்தரவாதியாயிருக்கிறான். இவ்விரண்டும் உண்மையான காரியங்களே. இம்மையில் நம்முடைய மனோவாக்குக்கெட்டாத காரியங்கள் அநேகம் உண்டு. எல்லாவற்றையும் ஆதிமுதல் அந்தம் வரைக்கும் அறிந்திருக்கிற அவருடைய தவறாத சித்தத்தின்படி யாவும் நடந்தேறிவந்தாலும், நாம் ஜெபம்பண்ணுவது நமக்கு இயற்கையாயிருக்கிறபடியினாலும், ஜெபம்பண்ண

வேண்டுமென்று அவர் கட்டளையிட்டிருக்கிறபடியினாலும், நம்முடைய கடமையை நாம் செலுத்தவேண்டியதே நமக்கு அவசியம்.

வேறு சிலர்: தேவன் எங்கும் நிறைந்து சர்வத்தையும் ஆளுகிற மகத்துவமுள்ள ஏகசக்ராதிபதியாகையால், நம் ஒவ்வொருவருடைய அற்பக்காரியங்களைக் கவனித்து நம்முடைய சொற்பவிண்ணப்பங்களுக்குச் செவிகொடுக்கப்போகிறாரா என்று சொல்லுவார்கள். அவர் அண்டத்தை அணுவாகவும், அணுவை அண்டமாகவும் பாவிப்பார். அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட மனம்-புத்தி-சித்தமுள்ள மனுஷனுடைய காரியம் அற்பகாரியம் அல்லவே. முயற்சியோடு திருவுளத்துக்கு ஏற்றபடி ஜெபம்பண்ணுகிறவர்களுக்குத் தேவன் சகாயராயிருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை.

வேறு சிலர்: சர்வதயாபரராகிய தேவன் நம்முடைய வறுமைகளை அறிந்திருக்க, நாம் மனதினாலாவது வார்த்தையினாலாவது வேண்டிக்கொள்ளவேண்டியது என்ன? தமது பிள்ளைகள் கேட்காமல் பிதா அவர்களுக்கு வேண்டியதைக் கொடாரோ என்று சொல்வார்கள். தேவன் கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமுள்ளவராயிருக்கிறார், நாமோ பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறதில்லை. தேவஅருளைப் பெற்றுக்கொள்ள நாம் ஜெபத்தினால் நமது உள்ளத்தை ஆயத்தப்படுத்தி விசாலமாக்கவேண்டும். ஜெபத்தினால் ஞானக்கண்ணாகிய ஆத்துமக்கண் தெளிவாகி, இருளும் மருளும் நீங்கி, அருளும் பொருளும் உள்ளத்துக்கு விளங்கி, ஒளியும் இன்பமும் பிறக்கும். நாம் கேளாமலும் தேடாமலுமிருக்கிற காரியம் நமக்கு வரும்போது, அதைப்பற்றி நன்றியறிதலாவது ஸ்தோத்திரமாவது உள்ளத்தில் பிறப்பது அரிது. கேட்டுத் தேடிப் பெற்றுக்கொள்ளுகிற காரியத்தை மதித்து அதற்காக நன்றியறிந்து ஸ்தோத்திரமும் செலுத்துவது இயல்பு.

நாம் ஜெபத்தின் வழியாய்க் கேட்டும் தேடியும் தட்டியும் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறோமே, இதற்குக் காரணம் என்னவென்று சிலர் கேட்பார்கள். ஆம், பவுல் அப்போஸ்தலன் கேட்டுக்கொண்ட காரியத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. கடுமையான வியாதிக்குக் கடுமையான வைத்தியம் பண்ணவேண்டும். அவர் நம்முடைய மனக்கூறும் உடற்கூறும் ஆகிய இரண்டையும் அறிந்திருக்கிறபடியால் நமக்குத் தகுந்த நன்மைகளைமாத்திரம் கட்டளையிடுவார். ஜுரமுள்ள பிள்ளை வாழைப்பழத்துக்கு அழுதால் அதை அதற்குக் கொடுக்கலாமா? சில வேளைகளில் நாம் நினையாததும் கேளாததுமான காரியம் நமக்கு நேரிடுகிறதுண்டு. நாம் கேட்கும் காரியங்களை எல்லாம் நமது பரமபிதா கொடுப்பாரானால், அது நமக்குக் கேடாய் முடியும். இஸ்ரவேலர் இச்சித்ததை தேவன் அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் போஜனம் அவர்களுக்கு நஞ்சாய் முடிந்ததே (சங். 78. 29—31.). ஆகையால் அவருடைய சித்தத்துக்கு ஏற்றவைகளை மாத்திரம் நாம் கேட்கவேண்டும்.

## ஜெபம்.

பரமபிதாவே, ஜெபத்தைக் கேட்கிறவரே! உமது அருளினால் எங்களை ஏவி, ஜெபத்தின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் எங்களுக்கு அநுக்கிரகம்பண்ணும். எங்கள் சிந்தைகளைப் பரவசமாக்கும். எங்கள் வாயின் வார்த்தைகளும், எங்கள் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. பரலோகத்தில் உம்மை அல்லாமல் எங்களுக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எங்களுக்கு வேறே விருப்பம் இல்லை. உமது பற்றொழிய வேறொரு பற்றும் எங்களுக்கு இல்லை. நீர் உண்டென்றும், உம்மைப் பற்றிக்கொள்ளுகிறவர்களுக்கு நீர் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கிறோம். உம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு நீர் ஆயத்தம்பண்ணியிருக்கிற மனோ

வாக்குக்கெட்டாத நன்மைகளை எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும். ஆண்டவரே, உமது அடியாராகிய நாங்கள் செய்யும் விண்ணப்பங்களுக்கு இரக்கமாய்ச் செவிகொடுத்து, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறவைகளைப் பெற்றுக்கொள்ளும்படி, தேவரீருக்குச் சித்தமானவைகளையே கேட்டுக்கொள்ள, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபை செய்தருளும். ஆமென்.

# இரண்டாம் பிரசங்கம்.

---

*"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே!"*

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்பது கர்த்தருடைய ஜெபத்துக்கு முகவுரை. இதை முதலாவது கவனிப்போம். இதில் நம்மால் தொழுதுகொள்ளப்படுகிற வரின் நாமதேயம் விளங்குகிறது. இங்கே பரமண்டலம் என்பது விசேஷமாய் இடத்தை அல்ல, ஸ்திதியையும், தேவனுக்குரிய விசேஷித்த லட்சணத்தையும், அவருக்கும் நமக்குமுரிய சம்பந்தத்தையும் குறிக்கும். பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்பதற்கும், பரமபிதாவே என்பதற்கும் பொருள் ஒன்றே (மத். ௬. 14.). நாம் வழிபடுந்தேவன் உயர்ந்தவர், உன்னதமானவர், எங்கும் நிறைந்தவர் என்னும் பொருள் இதனால் விளங்குகிறதுமன்றி, சிருஷ்டிகர்த்தாவுக்கும் சிருஷ்டிகளுக்குமுள்ள தாரதம்மியமும் வித்தியாசமும் விளங்குகிறது. பிதாவே என்பதில் உரிமையும் அன்பும், பரத்தில் என்பதில் வேண்டிக்கொள்ளுகிறவரிடத்தில் வணக்கமும் அடக்கமும், வேண்டிக்கொள்ளப்படுகிறவருடைய மேன்மையும் மாட்சிமையும் விளங்குகிறது.

காணக்கூடாத தேவனை அவருடைய கிரியைகளினாலும், அந்தக் கிரியைகளினால் விளங்கும் அவருடைய லட்சணங்களினாலும், அந்த லட்சணங்களுக்குரிய நாமதேயங்களினாலும் அறிந்துகொள்ளுகிறோம். ஆகையால் அவருக்கு இங்கே பிதா என்கிற இந்த நாமம் இடப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் தேவனுக்குப் பற்பல நாமங்கள் இடப்பட்டிருக்கிறது. "கர்த்தர், சர்வவல்லவர், நித்தியர், தேவாதி தேவன், யெகோவா முதலிய நாமங்கள் அவருடைய தத்துவத்தையும் மகிமையையும் குறிக்கும். பிதா என்கிற பெயர்

அவருடைய அன்பாகிய குணவிசேஷத்தைக் குறிக்கும். பிதா வை வெளிப்படுத்த உலகத்தில் வந்த அவருடைய ஏகசுத ஞல் அன்புக்குரிய இந்த அருமையான் பெயர் நாம் ஆராதிக் கும் தேவனுக்குச் சாதாரணமாய் வழங்கப்பட்டுவருகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் சில இடங்களில் இந்தப் பெயர் அபூர்வமாய் வழங்கினதுண்டு. மோசே ஒரு இடத் தில்: "விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்களே, இப்படியா கர்த்தருக்குப் பதில் அளிக்கிறீர்கள்; உன்னை ஆட்கொண்ட பிதா அவர் அல்லவா? உன்னை உண்டாக்கி நிலைப்படுத்தின வர் அவர் அல்லவா?" என்று இந்தப் பதத்தைப் பிரயோகம் பண்ணியிருக்கிறூர் (உபா. 32. 6.). மல்கியா தீர்க்கதரிசி: நம் மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம் மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம்பண்ணுவானேன் என்று சொல்லியிருக்கிறூர் (2. 10, 11.). ஆனாலும் இந்தப் பெயரை இஸ்ரவேலர் எல்லாரும் பொதுவாய் வழங்கினதில்லை. அபாத் திரமான பாவிகளாகிய நாம் தேவனைப் பிதாவே என்று அழைக்கும் சிலாக்கியம் கிறிஸ்துவினால் நமக்கு வந்தது. அவர் கற்பிக்காவிட்டால் நாம் இந்தப் பெயரைச் சொல்லும் படி துணியக்கூடுமோ? புத்திரசுவிகாரத்தினால் தேவனுக்குப் பிள்ளைகளானவர்கள்மாத்திரம் இந்தப் பெயரை அச்சமில் லாமல் சொல்லக்கூடும். இதைப்பற்றிப் பவுல் அப்போஸ் தலன் சொல்லுகிறதைக் கேளுங்கள்:" திரும்பவும் பயப்படு கிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெருமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" என்று ஆவியானவர் தாமே நம் முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறூர் (ரோ. 8. 15, 16.). "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பி

ஞர்" என்று சொல்லுகிறர் (கலா. 4. 6.). ஆகையால் தேவனைப் பிதா என்று அழைக்கும் சிலாக்கியம் நூதனமாய் விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவின்மூலமாய் உண்டானது. இந்தச் சிலாக்கியம் ஞானஸ்நானத்தில் நமக்கு அருளப்படுகிறது. அதில் நாம் கிறிஸ்துவின் அவயவமும், தேவனுடைய பிள்ளைகளும், பரலோக ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகளுமாகிறோம்.

1 தேவன் நம்மைத் தம்முடைய சாயலில் உண்டாக்கினபடியால் இயல்பாய் அவர் நமக்குப் பிதாவாகவேண்டும். அவர் ஜீவகாருணியர், அவருக்குள் நாம் பிழைக்கிறோம் அசைகிறோம் . இருக்கிறோம்; அப்படியே பூர்வ வித்வான்களிலும் சிலர்: "நாம் அவருடைய சந்ததியார்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் நம்முடைய ஜீவனைப் பிழைப்பூட்டிப் பராமரிக்கும்பொருட்டு நமக்குப் படியளந்து நம்மைக் காப்பாற்றுகிறபடியால், நியாயமாய் அவர் நமக்குப் பிதாவாகவேண்டும். நம்மைப் பிறப்பித்தவரே நம்மை ஜநிப்பித்தவர். அவர் பாவிகளாகிய நம்மைத் தமது அருளினுல் ஏற்றுக்கொண்டு, நாம் இழந்துபோன சாயலை மறுபடியும் நமக்குள்ளே உண்டுபண்ணி, புத்திரசுவிகார நன்மையை அளிக்கிறபடியால் அவர் நமக்குப் பிதாவாகவேண்டும். ஆகையினுல் "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்று நம்முடைய இரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறர். "நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா" என்று எபிரேயர் நிருபத்தில் சொல்லியிருக்கிறது (எபி. 12. 9.). ஞானஸ்நானத்தில் கிறிஸ்தவர்கள் இந்தச் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறபடியால், "நீ இதுமுதல் என்னை நோக்கி: என் பிதாவே, தேவரீர் என் இளவய

தின் அதிபதி. மேலும், நீ என்னை நோக்கி: என் பிதாவே என்று அழைப்பாய். நீ என்னை விட்டு விலகுவதில்லை என்று திரும்பவும் சொன்னேன்" என்று கர்த்தர் திருவுளம்பற்றி யிருக்கிறார் (எரே. 3. 4, 19.).

இந்த ஜெபத்தை நமக்குப் படிப்பித்தவர் பரமண்டலத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் நமக்காக வேண்டுதல் செய்கிறபடியால், பிதாவின் கிருபாசனமாகிய பரமண்டலத்தை நோக்கி இந்த ஜெபத்தை நாம் சொல்லுகிறோம். பிதாவின் சந்நிதானத்தில் அவருடைய திருக்குமாரனும் அவருடைய உத்தரவாத புண்ணியமும் இருக்கிறபடியால் நாம் செய்யும் ஜெபம் அந்தப் புண்ணியத்தினால் அங்கீகரிக்கப்படும்.

சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (எபி. 10. 19, 22.).

நம்முடைய பிதாவும் மத்தியஸ்தரும் பரத்திலிருக்கிறபடியால், நாம் தேவனுடைய பாதபடியாகிய பூமியிலிருந்தாலும், நம்முடைய பொக்கிஷம் எங்கேயோ அங்கே நம்முடைய இருதயமும் இருக்கத்தக்கதாக, அவருள்ள இடத்திற்கு நம்முடைய ஆத்துமா உயர்த்தப்படவேண்டும்.

பிதாவே என்று இந்த ஜெபத்தை நாம் தொடங்குகிறபடியால் நம்முடைய இரட்சகர் அன்பையே இந்த ஜெபத்துக்கு ஆதாரமாக வைத்தார் என்று விளங்குகிறது. இதற்கு இசைவாகவே கெட்ட குமாரனுடைய உவமையிலும் "நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோத

மாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்" என்று சொன்னதாக இரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார் (லூக். 15. 18, 19.).

பூமியிலே நாம் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம்: பரலோகம் நம்முடைய பிதாவின் வாசஸ்தலம். அது ஒளியும் மகிமையும் பொருந்திய நம்முடைய பேரின்ப வீடு.

இந்த முகவுரையில் இன்னும் ஒரு சிறிய வார்த்தை கவனிக்கவேண்டியிருக்கிறது. அதென்னவென்றால், நாம் என் பிதாவே என்று ஒருமையாய்ச் சொல்லாமல், எங்கள் பிதாவே என்று பன்மையாய்ச் சொல்லுகிறோம். இதனால்தான் என்கிற ஆணவத்தையும், சகல வித்தியாசங்களையும் பேதங்களையும் நீக்கி, எல்லாரையும் சமமாக எண்ணி, மனுமக்கள் எல்லாரும் எந்த வர்ணத்தாராயினும் அவர்கள் நம்முடைய பரமபிதாவின் மக்கள் என்றும், நம்முடைய சகோதரர் என்றும் பாவித்து, நமக்காகமாத்திரம் அல்ல, மற்ற எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். அவர் மனுஷஜாதியார் யாவருக்கும் பிதா. அவர் மனுஷஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினால் தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார் (அப்.17. 26.). தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் (சங். 103. 13.). "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை." (ஏசா. 49. 15.). "நீங்கள் அவர்கள் (புறமதஸ்தர்) நடுவிலிருந்து பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2 கொ. 6. 17, 18.).

இந்த ஜெபம் உலகமெங்கும் கிமிஷந்தோறும் கோடா கோடி ஜனங்களால் பற்பல பாஷைகளில் செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஜெபத்துக்குரிய முகவுரை நமக்குள் பரம வாஞ்சையையும் பரம சிந்தையையும் உண்டாக்குகிறது. ஆகையால் "நாம் நம்முடைய கைகளோடேகூட நம்முடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக்கடவோம்". (புலம்பல். 3. 41.).

சகோதரரே, இதனால் நாம் என்ன படிப்பிக்கப்படுகிறோம் என்றால், பிதாவைப்போல் பிள்ளையும் இருக்கவேண்டும் என்கிற சத்தியத்தைப் படிப்பிக்கப்படுகிறதுமன்றி, பரலோகம் பரிசுத்த ஸ்தலமாயிருக்கிறபடியால், அதில் வாசம்பண்ணப்போகிற நாமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்னும் சத்தியத்தையும் படிப்பிக்கப்படுகிறோம். ஆகையால், "குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம்பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற உங்களைக் கேட்கிறார்" (மல்கி. 1. 6.). உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்களுடைய இருதயமும் இருக்கும். நீங்கள் பரமபிதாவின் புத்திரரும் புத்திரிகளுமாயிருக்கிறதே உங்களுக்குரிய மேன்மை. ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் (மத். 5. 48.). ஆமென்.

## ஜெபம்.

நித்தியஜீவதயாபரராகிய பிதாவே, மனிதனை உமது சாயலாக சிருஷ்டித்து, அவர்களுக்கு உமது அருளை அளித்து, உமது தயவையும் இரக்கத்தையும் பாராட்டி, உம்மை நோக்கி, அப்பா பிதாவே என்று அழைக்கும் சிலாக்கியத்தை அநுக்கிரகித்திருக்கிறீர். உமது தற்சொரூபம் எங்களுக்குள் அமைந்து விளங்க,

வும்; உமது திருவுளத்தை நாங்கள் அறிந்து உணரவும், பிதா வுக்கு ஏற்ற உத்தம பிள்ளைகளாயிருக்கவும் கிருபைசெய்யும். உம்முடைய ஏகசுதனாகிய இயேசுநாதருடைய திருமுகத் தைப்பார்த்து, அவருடைய உத்தரவாத புண்ணியத்தினிமித் தம், எங்கள் பாவங்களைப் பொறுத்து: மகனே, மகளே, திடன் கொள், உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று திருவுளம் பற்றியருளும். பிள்ளைகளுக்கேற்ற பக்தியை எங்களுக்கு உண்டுபண்ணும். உமது அருட்கண்ணால் எங்களை நோக்கிப் பாரும். எங்கள் ஆத்துமாக்களுக்கும் சரீரங்களுக்கும் வேண் டிய நன்மைகளைக் கட்டளையிடும். இம்மையிலும் மறுமை யிலும் உம்மை நாங்கள் சேவித்து, உமது சந்நிதியில் பேரின்ப வீடடைந்து என்றும் வாழ, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறி ஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

# மூன்றாம் பிரசங்கம்.

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக."

இது கர்த்தருடைய ஜெபத்தின் முதல் மன்றாட்டு. இதில் நம்முடைய பரமபிதாவை நோக்கி, நமது உள்ளத்தின் முதலாம் பிரதான வாஞ்சை இன்னதென்று அறிவிக்கிறோம். அவருடைய மகிமையே நம்முடைய முதல்நோக்கமும் விருப்பமுமாயிருக்கவேண்டியதாகையால், அவரைச் சேவிக்கும்போது "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று மன்றாடுகிறோம். நமக்காக யாதொரு காரியத்தைப்பற்றி வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னே, அவருக்குரிய விசேஷித்த காரியங்களைப்பற்றியே வேண்டிக்கொள்ளுகிறோம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுவோமானால், நமக்கு வேண்டியவைகள் எல்லாம் கொடுக்கப்படும் என்று ரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 6. 33.). தேவன் நமக்குப் பிதாவானால், நாம் அவருடைய மகிமை விளங்க வைராக்கியமுள்ளவர்களாயிருப்போம். அவருடைய நாமத்துக்கு யாதொரு குறைவும் வராமல், அது யாவராலும் பரிசுத்தமாய்த் தொழுதுகொள்ளப்பட விரும்புவோம். இதனால் நம்முடைய தேவன் பரிசுத்தர் என்றும், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் பரிசுத்தமாய்த்தொழுதுகொள்ளவேண்டும் என்றும் விளங்குகிறது. "அவர் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (யோ. 4. 24.).

காணப்படாத தேவனை காணப்படுகிற அவருடைய கிரியைகளினால் விளங்குகிற லட்சணங்களைக் குறிக்கும் நாமதேயங்களினாலே அவரை அறிந்துகொள்ளுகிறோம். சூரியனை

அதனுடைய வெளிச்சத்தினுல் அறிகிறதுபோல், தேவனை அவர் அருளிய வேதத்தினுல் அறிகிருேம். வேதத்தில் அவருடைய தத்துவத்தையும் லட்சணங்களையும் விளக்குகிற பற்பல காரணப்பெயர்களும் இடுகுறிப்பெயர்களும் அவருக்கு இடப்பட்டிருக்கிறது. தனக்குவமையில்லாத தேவன் மோசேக்கு வெளிப்பட்டபோது, இருக்கிறவராக இருக்கிறேன் என்பது தமக்குரிய நாமம் என்று வெளிப்படுத்திஞர் (யாத். 3. 13, 14.). தேவன் மோசேயை நோக்கி: நான் யெகோவா, சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினுல் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனுலும் யெகோவா என்னும் என் நாமத்தினுல் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை என்ருர் (யாத். 6. 2, 3.). கர்த்தர் தம்முடைய மகிமையை காண்பிக்கவேண்டுமென்று மோசே கேட்டுக்கொண்டதின்பேரில், கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, "அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும் கிருபையும், நீடியசாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்" என்னும் அவருடைய நாமம் கூறப்பட்டது (யாத். 34.6.). கர்த்தர், ஆண்டவர், சர்வவல்லவர், நித்தியர் என்கிற நாமங்கள் சாதாரணமாய்த் தேவனுக்கு இடப்பட்டிருக்கிற நாமங்கள். கர்த்தருடைய நாமம் என்னவென்று மனேவா கேட்டபோது, அது அதிசயம் என்று சொல்லப்பட்டது (நியா. 13. 17, 18.). இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர், நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றியிருக்கிருர் (வெளி. 1. 8.). அவருக்குப் பரிசுத்தர் என்னும் சிறந்த நாமமும் உண்டு. "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிருர்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" என்று சொல்லுகிருர் (ஏசா. 57. 15.). அவர் நித்தி

யானந்தமுள்ள ஏக சக்ராதிபதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தரும், தேவாதி தேவனுமானவர். அவருடைய நாமம் எல்லாவற்றிலும் சிறந்தது; பிதா என்பது "இந்தக் கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்" என்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிறார் (1 பேது. 3. 15.).

சூரியன் எப்பொழுதும் பிரகாசிக்கிறதுபோல, கர்த்தருடைய நாமமும் எப்பொழுதும் பரிசுத்தமாயிருக்கிறது. என்றாலும் சிலவேளைகளில் சூரியப்பிரகாசம் நம்முடைய கண்களுக்குத் தோன்றாமலும், சிலவேளைகளில் மறைந்தும் இருக்கிறதுபோல, தேவனுடைய நாமமும் தன்னிலே எப்பொழுதும் பரிசுத்தமுள்ளதாயினும், நம்முடைய குணவிபரீதத்தினால் சிலவேளைகளில் அந்தப் பரிசுத்தம் நமக்குத் தோன்றாமலும் மறைந்தும் இருக்கிறது உண்டு. எப்பொழுதும் கர்த்தருடைய நாமம் நமக்குள் பரிசுத்தமாய்த் தோன்றி, நம்மைப் பரிசுத்தப்படுத்தும்படி நாம் வேண்டிக்கொள்ளுகிறோம். இப்படி நாம் வேண்டிக்கொள்ளாமற்போனால் பரிசுத்தம் நமக்குள் அமையாது; மனது எதைப் பற்றிக்கொள்ளுகிறதோ அதைப் போலவே ஆகும். பரிசுத்தம் என்கிற அவருடைய திருநாமத்தைத் தியானம்பண்ணி, கர்த்தரைச் சேவிக்கிறவர்களே அவரைப்போல பரிசுத்தவான்களாவார்கள். பரிசுத்தரான அவர் பாவிசெய்யும் பாவத்தை வெறுத்து அருவருக்கிறவராயினும், பாவியினிடத்தில் அவன் குணப்பட்டு சீர்ப்படும்படி விருப்பமுள்ளவராயிருக்கிறார்.

குணப்படாத கல்நெஞ்சுள்ள பாவி பாவத்தைப் பகைக்கிறவருடைய தேவநாமத்தைப் பரிசுத்தகுலைச்சலாக்குகிறான். அவருடைய நாமம் பரிசுத்தப்படும்படி நாம் வேண்டிக்கொள்ளும்போது, நாம் நமக்குள் குடிகொண்டிருக்கிற பாவத்தை அருவருத்துத் தள்ளி, நீதியும் இரக்கமுமுள்ள தேவன் பரிசுத்தர் என்று உணர்ந்து, அவர் நம்முடைய இருதயத்தில் வந்து குடிகொண்டு நம்மைப் பரிசுத்தப்படுத்தும்படி வேண்

டிக்கொள்ளுகிறோம். ஆவியோடும் சரீரத்தோடும் அவரை நாம் வணங்கி, அவருடைய திருநாமம் நமக்குள்ளும் மற்றவர்களுக்குள்ளும் பரிசுத்தப்பட்டு அவருடைய மகிமை விளங்கும்படி முயற்சிசெய்வோம்.

நம்முடைய மனோவாக்குக் காயங்களினால் அவருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். மனதினால் அவர் பரிசுத்தர் என்றும், மங்காத் திருவிளக்கு என்றும், சர்வசாட்சி என்றும், நீதியும் இரக்கமுமுள்ள தேவன் என்றும் உணர்ந்து; வாக்கினால் அவருடைய திருநாமத்தையும் அவருடைய திருவசனத்தையும் உச்சரித்து, அவருடைய நாமத்தைப் போற்றிப் புகழ்ந்து, அவருடைய குணாதிசயங்களையும் சத்திய மொழிகளையும் பலருக்கும் உரைத்து; காயத்திற்குரிய ஐம்புலன்களையும் அடக்கி, சரீரத்தை அவருடைய ஆலயமாக நிறுத்தி, பரிசுத்த அலங்காரத்தோடே அவரைச் சேவிக்க வேண்டும்.

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே; உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று நாம் மனதார உணர்ந்து சுசீலம் உள்ளவர்களாய்ச் சொல்லவேண்டும். "குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம்பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிறவர்களாகிய உங்களைக் கேட்கிறார்" (மல். 1. 6.).

பத்துக்கற்பனைகளில் முதல் நான்குகற்பனைகளையும் மீறி நடக்கிறவர்கள் கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கிச் சத்தியத்தை விரோதிக்கிறார்கள். பலதேவர்கள் உண்டென்பவர்கள் அவர் ஒருவரே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார் என்கிற சத்தியத்தை விரோதிக்கிறார்கள். ஞானக்கண்ணுக்குத் தோன்றுகிற அவர், ஊனக்கண்ணுக்குத் தோன்றாத அரூபியாயிருக்க, பலவிக்கிரகங்களை உண்டுபண்ணி வணங்குகிறவர்கள் அவர் எங்கும் வியாபித்திருக்கிற அரூபி என்கிற சத்தியத்தை விரோதிக்கிறார்கள். கர்த்தருடைய நாமத்

தை வீணிலே வழங்குகிறவர்கள் அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது என்கிற சத்தியத்தை விரோதிக்கிறார்கள். அவர் தம்மை ஆராதித்துப் பரிசுத்தமாக்கும்படி நியமித்திருக்கிற நாளைக் கைக்கொள்ளாமலும் அவரைச் சேவியாமலும் இருக்கிறவர்கள் அவர் கட்டளைகளையும் நியமங்களையும் விரோதித்து, அவருடைய திருநாமத்துக்குக் குறைச்சல் உண்டுபண்ணுகிறார்கள்.

இந்த விண்ணப்பத்தினால் எல்லா அவமார்க்கமும் அவபக்தியும், எல்லா அறியாமையும் தப்புரையும், எல்லா இருளும் மருளும் நீங்கி, சத்தியம் விளங்கி, தேவநாமம் மகிமைப்பட வேண்டிக்கொள்ளுகிறோம். "கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக்கொண்டு, அவருடைய சந்நிதியில் வாருங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்" என்று வேதம் சொல்லுகிறது (1 நாளா. 16. 29.).

தேவதூதர்களும் பரிசுத்தவான்களுமாகிய வானவர்களின் தொழில் என்ன? அவர்கள்: "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும்பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் (வெளி. 4. 8.). சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள். கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும் உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லாஜாதிகளும் வந்து உமக்குமுன்பாகத் தொழுதுகொள்ளுவார்கள். உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின" என்று வானவர்கள் சொல்லுகிறார்கள் (வெளி. 15. 34.). புவியிலுள்ள நாமும அந்த தொனிக்கு இசைவாக உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று சொல்லி ஆராதிக்கிறோம்.

நாம் கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்துகிறது எப்படியென்றால், அவரை நம்பி, அவரை நாடி, அவரைப்

பற்றிக்கொண்டிருக்கிறதினாலும், வழுவாமல் நன்னெறியில் நடக்கிறதினாலும், அவருடைய சாயலை உடையவர்களாயிருந்து குணசாலிகளாயிருப்பதினாலும், அவரை மகிமைப்படுத்தி, அவருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்துகிறோம்.

"நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள். அவர்களை எனக்குத் தந்தீர்; அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்" என்று கர்த்தர் திருவுளம்பற்றியிருக்கிறார். நம்மில் ஒவ்வொருவரும் தாவீது சொல்லுகிறபடி: "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்" என்று சொல்லக்கடவோம் (சங். 22. 22.). "சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம்பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக; அவர் உங்களுக்குப் பரிசுத்தஸ்தலமாயிருப்பார்" (ஏசா. 8. 13, 14.).

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவா. 17. 17). என்று கர்த்தர் சொல்லியிருக்கிறபடியினாலும், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்கக்கூடாதபடியினாலும், இந்த விண்ணப்பத்தை நாம் கருத்தோடும் உணர்வோடும் சொல்லவேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத். 5. 8.). உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் (1 பேது. 1. 15.). பரிசுத்தராலே அபிஷேகம்பெற்றவர்களே! இந்த மன்றாட்டின்படியே நடந்துகொள்வீர்களாக. ஆமென்.

## ஜெபம்.

பரிசுத்தமுள்ள நித்தியானந்த தேவனே, தேவரீரை நாங்கள் பரிசுத்த அலங்காரத்தோடே வணங்கும்படி கிருபை செய்யும். பரத்திலுள்ள தூதரோடும் மகாத்துமாக்களோடும்,

புவியிலுள்ள நாங்களும் உம்முடைய மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி, உன்னதமான கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கிறது என்று இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் உலக ரட்சகராக அனுப்பின உம்முடைய ஏகசுதனையும் அறிவதே நித்தியஜீவன். வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற அந்த ரட்சகர்நிமித்தம் எங்களுக்கு இரங்கி, உம்முடைய சத்தியத்தினால் எங்களை உள்ளும் புறம்பும் சுத்திகரித்து, எங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுதும் பரிசுத்தமாயிருக்கும்படி கிருபைசெய்யும். உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும் உமது திருவசனத்தின் சத்தியத்தைக்குறித்து ஒருமைப்பட்டிருந்து, ஏகஐக்கியத்திலும் தேவபக்தியுள்ள அன்பிலும் வாழ்ந்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

# நான்காம் பிரசங்கம்.

"உம்முடைய ராஜ்யம் வருவதாக."

இது கர்த்தருடைய ஜெபத்தின் இரண்டாம் மன்றாட்டு. இந்த மன்றாட்டு ஒவ்வொரு யூதனுடைய வாயிலும் எப்பொழுதும் இருக்கும். என்றாலும் அவர்கள் இந்த ராஜ்யத்தின் தன்மையை அறியாமல், இந்த மன்றாட்டை உச்சரிப்பார்கள். "யேகோவாவாகிய கர்த்தரே இஸ்ரவேலின் ராஜா." "கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்" (சகரி. 14. 9.). "அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும்" என்று சொல்லியிருக்கிறது (தானி. 6. 25, 26.).

கர்த்தருடைய நாமம் பரிசுத்தப்படும்படி விரும்புகிறவர்கள் அவருடைய ராஜ்யம் வரவேண்டுமென்று விரும்பி உருக்கமாய் மன்றாடுவார்கள். இந்த மன்றாட்டைப்பற்றி, முதலாவது, இந்த ராஜ்யமாவது என்னவென்றும்; இரண்டாவது, இந்த ராஜ்யம் வருவது எப்படியென்றும்; மூன்றாவது, இந்த ராஜ்யம் வரும்படி மன்றாடுகிறவர்கள் செய்யவேண்டியது என்னவென்றும் கவனிப்போமாக:—

I. இந்த ராஜ்யமாவது என்ன?

இந்த ராஜ்யம் பொதுவான ராஜ்யமென்றும் சிறப்பான ராஜ்யம் என்றும் இருவகைப்படும். பொதுவான ராஜ்யத்தில் தேவன் ஏகசக்கராதிபதியாய் எவ்விடங்களிலுமுள்ள சகல வஸ்துக்களையும் ஆளுகிறார், இது அவருடைய வல்லமையின் ராஜ்யம். சிறப்பான ராஜ்யமானது, ஆத்துமவிஷயத்தையும் ஞானசம்பந்தத்தையும் பற்றிய இம்மை மறுமைக்குரிய ராஜ்யம்

இம்மையில் இது திருச்சபையாகிய கிருபையின் ராஜ்யம், மறுமையில் இது மோட்சவாசிகளுக்குரிய மகிமையின் ராஜ்யம். இந்த ராஜ்யத்தில் தேவன் எழுந்தருளியிருந்து, தம்முடைய சித்தமே இதற்குப் பிரமாணமாக விதித்து, பரிசுத்தவான்களுடைய உள்ளத்தில் ஆளுகைசெய்கிறார். உலகமாகிய பொன்னாழியில் பதிந்திருக்கும் இரத்தினமே திருச்சபையாகிய தேவனுடைய ராஜ்யம். விக்தோரியா ராஜாத்திக்கு உலகத்தில் அநேக ராஜ்யங்கள் இருந்தாலும், இங்கிலாந்துதேசம் அந்த அம்மாளுடைய வாசஸ்தலமாயிருக்கிறது போல, வையகமும் வானகமும், சர்வலோகங்களும், சராசரம் அனைத்தும் தேவனுடைய ஆதிக்கத்துக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டிருந்தாலும், திருச்சபையே அவர் எழுந்தருளி பிரசன்னமாகி அருள் அளிக்கும் அவருடைய விசேஷித்த ராஜ்யமாயிருக்கிறது. திருச்சபையாகிய இந்த ராஜ்யம் அசையாத கன்மலையாகிய சத்தியத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. திருவுளப்பாங்கு அதில் விளங்குகிறது. தேவனே மனுஉருவாய் அவதரித்து எழுந்தருளிப் பிராணத்தியாகஞ்செய்து திருச்சபைக்குப் பரமநாயகரும் புண்ணிய நாதருமாயிருக்கிறார். அது புவியில் உதித்ததாயினும் பரத்தைத்தழுவி, மண்ணுலகத்தை விண்ணுலகத்தோடு சம்பந்தப்படுத்தி, நீதியும் சமாதானமும் ஆநந்தகளிப்புமுண்டாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ராஜ்யத்தில் விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றும் நிலைத்திருந்து உலகத்துக்குரிய சகல சம்பந்தங்களும் பேதங்களும் இதில் அற்றுப்போக எல்லாரும் ஒருமைப்பட்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய சரீரமாகிய சபையில் ஏகஐக்கியப்பட்ட அவயவங்களாயிருக்கிறார்கள். சத்தியபரராகிய கிறிஸ்துவின் உத்தரவாதபுண்ணியம் இந்த ராஜ்யத்திற்கு அஸ்திவாரம். அவருடைய ஆவியே இதற்கு ஞானஉயிர். அவருடைய வசனமே இதற்கு விளக்கு, ஞான நன்மைகளே இதன் ஆத்தும ஆகாரம். இது தேவநகரம், வடிப்பமான ஸ்தானம், சர்வபூமியின் மகிழ்ச்சி. "இது சந்திரனைப் போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள்

பறக்கும் படையைப்போல் கொடியுமுள்ளது." (சங். 48.2. உன். 6. 10.). இது உன்னதமானவருடைய கருணாலயம். இது அழியாமல் பெருகிக்கொண்டு வருகிற நித்தியராஜ்யம். மோசே முட்செடியில் கண்ட காட்சிபோல் இது பற்றியெரிந்தாலும் அழியாது. இது உலகமாகிய கொந்தளிக்கும் கடலில் மிதந்து தத்தளித்தாலும் ரட்சகர் இதிலிருக்கிறபடியால் இதற்குச் சேதமில்லை. இது கரைசேரும். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று ரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார் (லூக். 12. 32.).

II. இந்த ராஜ்யம் வருவது எப்படி?

சூரியன் உதிக்கும்போது நாள்வருகிறதுபோல, நீதியின் சூரியனாகிய கிறிஸ்து மனதில் உதித்து எழுந்தருளும்போது இந்த ராஜ்யம் வருகிறது. "தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று பரிசேயர் ரட்சகரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" என்றார். (லூக். 17. 20, 1.). நம்முடைய உள்ளத்தைக் கவனித்துப் பார்ப்போமானால் இந்த ராஜ்யம் வந்ததும் வாராததும் நமக்கு விளங்கும். இயேசுநாதர் நம்முடைய இருதயகமலத்தில் எழுந்தருளி பரம ஒளிஉண்டாகி ஆநந்தகளிப்பு பிறக்குமானால், இந்த ராஜ்யம் நமக்குள் வந்துவிட்டது.

இந்த ராஜ்யத்தில் நான்குபதவிகள் உண்டு: இயேசுவின் மாம்சமாகிய திரையின் வழியாய் ஞானஸ்நானத்தினால் விசுவாசிப்பவர்கள் இந்த ராஜ்யத்தில் பிரவேசிப்பது சாலோக பதவி என்னப்படும். தேவசந்நிதியில் திருவசனம் வாசித்துத் தியானித்து ஜெபித்து ஸ்தோத்திரிப்பது சாமீபபதவி என்னப்படும். திருச்சபையின் சகல ஞானநன்மைகளையும் அநுபவித்து அவருடைய சாயலை அடைவது சாரூபபதவி என்னப்படும். அவருடைய பூரணமகிமையைத் தரிசித்து நித்

தியானந்த களிப்படைவது சாயுச்சியபதவி என்னப்படும். "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" என்று வேதம் சொல்லுகிறது (2 பேது. 1. 3, 4.).

பாவிகளாகிய உலகத்தார் குணப்பட்டு இந்த ராஜ்யத்தில் வந்துசேர்ந்து பாவமன்னிப்பு அடையவும், கிறிஸ்துவாகிய பரமகுருவின் வழியாய் தேவமகிமை விளங்கவும், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று சொல்லி, உத்தமவிசுவாசிகள் மரணமடைந்து நித்தியபரகதியடையவும் இந்த மன்றாட்டினால் வேண்டிக்கொள்ளுகிறோம்.

III. இந்த ராஜ்யம் வரும்படி மன்றாடுகிறவர்கள் செய்ய வேண்டியது என்ன?

இந்த ராஜ்யம் பூமியில் நிலைபெற்றோங்கும்படி திருச்சபையானது செய்யவேண்டிய பிரயத்தனங்களையெல்லாம் செய்யவேண்டும். உம்முடைய ராஜ்யம் வருவதாக என்கிற இந்த மன்றாட்டு திருச்சபை நிலைபெற்றோங்கும்படி பிரயத்தனம்பண்ணுகிற மிசியோன்களின் சிறந்த மன்றாட்டு. உலகமெங்கும் போய் சகலஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்பது இயேசுநாதர் திருச்சபைக்கு இட்ட கட்டளை. உலகமுடிவு பரியந்தம் உங்களோடே இருப்பேன் என்பது அவர் அருளின வாக்குத்தத்தம். உம்முடைய ராஜ்யம் வருவதாக என்பது திருச்சபையார் இதற்காகச் செய்யும் ஜெபம். இயேசுநாதர் இட்ட கட்டளையைத் திருச்சபையார் கைக்கொள்ள வேண்டியது அவசியம். தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மையை மற்றவர்களும் பெற்றுக்கொள்ளப் பிரயாசப்படுவது

அவர்கள் கடமை. இலவசமாய்ப் பெற்றவர்கள் இலவசமாய்க் கொடுக்கவேண்டும். ஜீவவசனத்தைப்பற்றிக்கொண்டு ஒளியில் நடக்கிறவர்களுடைய வெளிச்சம் மற்றவர்களுக்கும் பிரகாசிக்கவேண்டும். விசுவாசிகளெல்லாரும் சத்தியத்துக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள். அந்த சத்தியம் நிலைபெற்று வளர்ந்தோங்கும்படி பிரயாசப்படக் கடமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இதைப்பற்றி பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறதைக் கேளுங்கள்: "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" என்று சொல்லுகிறார் (ரோ. 1. 16, 17.).

விசுவாசம் கேள்வியினாலும் கேள்வி தேவவசனத்தினாலும் வருகிறது. ஆதலால் அந்நியமதஸ்தர் குணப்பட்டுத் திருச்சபையில் சேரவும், அஞ்ஞானம் அழிந்து விக்கிரகாராதனை நிர்மூலமாகி சத்தியம் பரிமளிக்கவும் பிரசங்கிக்கும்படி குருக்கள்மாரைத் திருச்சபை அனுப்புகிறதுமல்லாமல், "வேதவசனத்தை அந்தந்த பாஷையில் திருப்பி ஜனங்களுக்குக் கொடுத்து, பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, ஞானஉபதேசங்களைப் படிப்பித்து, நம்மால் இயன்றமட்டும் பொருளுதவி செய்து, தானதர்மம்பண்ணி, நல்வழியில் நடந்து, மற்றவர்களுக்கு மாதிரிகளாயிருக்கிறதுமல்லாமல், யாவரும் வாக்கு சகாயஞ்செய்து இடைவிடாமல் உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும்.

உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று மன்றாடுகிறபடியே அந்த ராஜ்யம் உங்கள் உள்ளத்தில் வரும்படி ஆயத்தமாயிருக்கவேண்டும். அந்த ராஜ்யம் வந்தால் அதின் ராஜாவுக்கு நீங்கள் அடியாரும், அவருடைய சித்தத்துக்கு இணங்கினவர்களும், அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளு

கிறவர்களுமாயிருப்பீர்களா? இந்த ஜெபத்தைக்கூறி, தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற யாவரும் சத்தியமார்க்கத்திலே நடக்கவும் ஆவியின் ஒருமையிலும் சமாதானகட்டிலும் நீதியுள்ளநடக்கையிலும் நிலைத்து விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருக்கவும்வேண்டும். இந்த மன்றாட்டை நாம் உருக்கமாய்ச் செய்வோமானல் சீக்கிரமாய் உலகமெல்லாம் ஒரே மேய்ப்பனுக்குள் ஒரே மந்தையாகும், சீரும் சவுக்கியமும் உண்டாகும். ஆமென்.

## ஜெபம்.

சர்வஜீவ தயாபரராகிய பரமபிதாவே, ஜெபத்தைக் கேட்கிறவரே, ஏழை அடியார் செய்யும் விண்ணப்பத்துக்குச் செவிகொடுத்தருளும். உமது ஏகசுதனுகிய இயேசுகிறிஸ்துவின் திருரத்தத்தினுலே விலைக்கிரயமாய்க் கொண்டிருக்கிற உம்முடைய திருச்சபையைக் கண்ணேக்கிப்பாரும். எங்களை உமது திருச்சபையின் அவயவங்களாக்கினதற்காக உம்முடைய திருநாமத்திற்கு ஸ்தோத்திரம். தேவரீர் உலகத்தில் ஏற்றின இந்தத் திருவிளக்கு மங்காமல் எரியும்படி கிருபைசெய்யும். உம்முடைய திருக்குமாரன் பட்டபாடுகளைக் கண்ணேக்கி, அவர் அடைந்த மரணத்தை நினைவுகூர்ந்து, அவருடைய உத்தரவாத புண்ணியத்தினிமித்தம், பாவிகள் குணப்பட்டு, உத்தமவிசுவாசிகளாகி, பரமதீட்சைபெற்று, உம்முடைய சபையில் சேர்ந்து, ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்படி அநுக்கிரகம்செய்யும்.

தேவமைந்தனே, ரட்சணியநாதனே, ஆத்துமாக்கள் மோட்சகரையேறுகிறதினுல், நீர் சிலுவையில் பாடுபட்டு மரணமடைந்த பலன் விளங்கி உம்முடைய மனம் மகிழ்வதாக. பாவிகளை இரட்சிக்கவே தேவரீர் உலகத்தில் மனிதனுக அவதரித்தீர். உம்முடைய திருமேனியிலிருந்து பூமியில் சிந்தின ஞானமிர்தமாகிய உமது திருஉதிரம் வீண்போகாதிருப்பதாக. அன்பின் சொரூபரே, புண்ணியநாதரே, உமது அங்கமா

ிய சங்கத்தைக் கடாட்சித்து, அதை நிலைபெற்றோங்கும்படி செய்யும். உமது அப்போஸ்தலராகிய பேதுரு அந்திரேயா என்பவர்களை நோக்கி: "உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று திருவுளம்பற்றி அழைத்தபோது, உடனே அவர்கள் உம்மைப் பின்பற்றி உமக்கு உத்தமசீஷர்களாகும்படி செய்தீரே. ஆயத்துறையிலிருந்த மத்தேயுவை அழைத்தபோது, அவர் எல்லாவற்றையும் விட்டு உமக்குப் பின்செல்லும்படி செய்தீரே. உமது அடியானாகிய தோமாவின் சந்தேகத்தை நிவிர்த்திசெய்து, அவருடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தி, உமக்கு உத்தமசீஷனாகும்படி செய்தீரே. உமது சபையைத் துன்பப்படுத்தின சவுலைக் குணப்படுத்தி, அவனைக்கொண்டு சபைபெருகும்படி செய்தீரே. உலகமுடிவுபரியந்தம் உத்தமசீஷர்களோடிருப்போம் என்று வாக்குத்தத்தம்பண்ணி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் செலுத்தி, மன்னுயிர் பிழைக்கும்படி வேண்டிய பிரயத்தனங்களையெல்லாம் செய்துகொண்டுவருகிறீரே. உம்மையல்லாமல் உமது அடியார் ஒன்றும் செய்யக்கூடாதே. ஆருயிர்காக்கும் வேந்தனே, உம்முடைய ராஜ்யம் வரவும், உம்முடைய சித்தம் செய்யப்படவும் கிருபைகூரும்.

பரம ஆவியே, வரம் அளிக்கும் தேவனே, உலக இருளும் மருளும் நீங்கி, அருளும் பொருளும் விளங்கும்படி கிருபை செய்யும்.

திரியேகரே, பரமநாயகரே, கருணாலயமே, திருச்சபையிலுள்ள குருக்கள்மார்களாகிய உமது அடியார்களை ஆசீர்வதித்து, உமது சத்தியத்தை உணரும் மெய்யறிவை அவர்களுக்குத் தந்து, அவர்கள் போதகத்திலும் நடக்கையிலும் அந்தச் சத்தியத்தைப் பரிமளிக்கச் செய்யும்படி கட்டளையிடும். அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், அறுப்புக்கு எஜமானே, உமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்புவீராக. உமது சபையில் தேவஊழியக்காரர் குன்றுமற் பெருகிக்கொண்டு வரும்படி அநேகரை உமக்குச் சீஷராக்கி, அவர்களுடைய உள்ளத்தை ஏவி, அவர்களுக்கு உம்முடைய

வரப்பிரசாதங்களை அளித்து, அவர்கள் விசுவாசமும் அன்பும் வைராக்கியமும் உள்ளவர்களாய்த் தங்கள் ரட்சகருக்காக எல்லாவற்றையும் வெறுத்து, தங்களை அவருக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும் உத்தமஊழியக்காரராயிருக்க தேவரீர் அநுக்கிரகம்செய்யும். இவ்விதமாகத் தங்களைக் காத்துப் பிறரை உணர்த்த வல்லவர்களாய், அழுவாரோடு அழுது, மகிழ்வாரோடு மகிழ்ந்து, லௌகிகவிஷயங்களை நாடாமல், ஞானவிஷயங்களையே நாடி, உலகப்பொருளை அல்ல, பரமபொருளையே தேடி, வீண்பற்றுகளை அகற்றி, உம்மையே பற்றிக்கொண்டிருந்து, பாவிகள்மேல் இரக்கமுற்று, விடாமுயற்சியாய் மங்காத் திருவிளக்கைப்போல் பிரகாசிக்கத்தக்க அநேக ஊழியக்காரரைத் திருச்சபையில் எழுப்பியருளும். வழுவிப்போன பாவிகள் உமது ஊழியக்காரருடைய பிரயாசத்தினால் புண்ணியநெறியில் திரும்பும்படி கிருபைசெய்யும். உமது திருவசனத்தைப் பிரசங்கிக்கவும், உமது ஞானநன்மைகளைப் பரிமாறவும்வேண்டிய உத்தமஊழியக்காரரை ஏற்படுத்தும். இந்த உத்தியோகத்தைச் செய்ய "இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்புங்கள்" என்று அநேகர் வைராக்கியத்துடன் சொல்லும்படி அவர்கள் உள்ளத்தை உமது கிருபையினால் ஏவியருளும்.

அடியார் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளும் இந்த விண்ணப்பத்தைக் கிருபையாய்க் கேட்டருளும். சுவாமி, ஆமென்.

# ஐந்தாம் பிரசங்கம்.

*"உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக."*

இது கர்த்தருடைய ஜெபத்தின் மூன்றும் மன்றாட்டு. இது மிகவும் விஸ்தாரமான ஆழ்ந்தபொருளுள்ள விசேஷித்த மன்றாட்டு. நம்முடைய சித்தத்தின்படியல்ல, தேவசித்தத்தின் படி நடப்பதே நம்முடைய கடமையும் நம்முடைய பாக்கியமுமாம். அவருடைய சித்தம் செய்யப்படாமற்போகுமானால் அவருடைய ராஜ்யம் வரப்போகிறதுமில்லை, அவருடைய நாமம் பரிசுத்தப்படப்போகிறதுமில்லை. பிதாவின் சித்தத்துக்கு இணங்கினாலொழிய அவருடைய கட்டளைகளை நாம் கைக்கொள்ளக்கூடாது. அவருடைய சித்தத்துக்கு அடங்கி நடக்காதவர்கள் துரோகிகளாவார்கள். தேவகற்பனைகளும் பிரமாணங்களும் செய்யப்படுவதாக என்று கர்த்தர் இந்த ஜெபத்தில் நமக்குப் படிப்பியாமல், அவருடைய சித்தம் செய்யப்படுவதாக என்று படிப்பிக்கிறார். அவருடைய சித்தத்தின்படி செய்கிறவர்கள் அவருடைய கட்டளைகளையும் பிரமாணங்களையும் கைக்கொண்டு, அவருக்கு அடங்கி நடந்து, வணக்கமும் பொறுமையும் உள்ளவர்களாயிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

தேவசித்தம் நிறைவேறவேண்டுமென்று நம்முடைய ரட்சகர் சொன்னதினால், நம்முடைய ஆதி வியாதியாகிய பாவத்தன்மையுள்ள அகங்காரம் அடங்கவேண்டுமென்று விளங்குகிறது. பாவத்தினாலே தேவசித்தத்துக்கும் மனுஷசித்தத்துக்கும் விகற்பமும் விரோதமும் உண்டாயிருக்கிறது. பாவத்தினால் மனமானது விகாரப்பட்டு தேவசித்தத்துக்கு இணங்காமல் சுயசித்தத்தையே பின்பற்றி சுயஇஷ்டப்படி நடக்கு

நாடுகிறது. சித்தவிகாரமே பாவத்தின் பயனும் மனுஷஜன்மத்துக்குரிய மூலவியாதியுமாயிருந்து பலவித தீமைகளை உண்டுபண்ணுகிறது. சிறுபிள்ளையினிடத்திலும் இந்த சித்தவிகாரம் தோன்றும். பிள்ளையானது வளரவளர அதின் சித்தமானது முற்றி கொடிய பழிபாவத்தை உண்டுபண்ணும்.

நினையாமலும் உணராமலும் அநேகர் நடந்து, நஷ்டம் வருகிறதாயிருந்தாலும்: எங்கள் சித்தத்தின்படியே செய்வோம், எங்கள் இஷ்டத்தின்படியே நடப்போம் என்று சொல்லி பாவத்துக்குட்படுகிறார்கள் அல்லவா? இது ஏறக்குறைய எல்லாருக்குமுள்ள இயல்பான குணம். நம்மை நாம் சோதித்துப்பார்த்தால் இதன் உண்மை நன்றாய் விளங்கும்.*

---

* இதைப்பற்றி வாசிஷ்டத்தில் சொல்லியிருக்கிறதாவது:

கருத்தெனுமான் மருண்டோடி விஷயமெனுங் குழியில் வீழக் காயமென்னு
மருத்தலத்தி லெவ்வனமாங் கடுங்கானல் எழுந்துமிக வளராநிற்கும்
பெருத்த துயரினமை நலமெவ்வளவுண் டவ்வளவும் பெருகாநிற்கு
மருத்திகளு மெவ்வுள மவ்வளவும் விரைந்தெழுந்து மிகவனர்த்தஞ்செய்யும்.

அதாவது, மனது என்னும் மானானது மயங்கி விஷயங்கள் என்கிற படுகுழியில் வீழும்பொருட்டு, தேகம் என்கிற பாலைநிலத்தில் எவ்வனம் என்கிற கொடிய பேய்த்தேரானது உண்டாகி மிகவும் வளரும், மிகுந்த துன்பமானது எவ்வனத்தின் இன்பம் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவும் வளரும். ஆசைகளும் இன்னம் எம்மட்டுமிருக்கிறதோ அம்மட்டும் வேகமுற்று எழுந்து மிகவும் அநர்த்தஞ்செய்யும். மேலும்,

கடுமனமென்பேய் கனலிற்கொடிதாகு மலைகளிலுங் கடத்தற்கொண்ணு
நெடு வயிரத்திலும் வலிது கடல்பருகி மேருவினை வேரேபேர்த்துச்
சுடுகனலை விழுங்குகினு மிறுத்தரிது புலன் முழுதுந் தோன்றுமூலங்
கெடுமுலகி துண்டெனி லுண்டிலதாகி லில திதனைக் கெடுத்தல் வேண்டும்.

அதாவது, விஷம்போன்ற மனம் என்னும் கொடிய பேயானது அக்கினியிலும் கொடியதாகும். மலைகளைக் கடந்துபோவதைப் பார்க்கிலும் அரியதாகும். பெரிய வைரத்திலும் வலியதாகும். கடல் நீர் முழுமையுங் குடித்தாலும் குடிக்கலாம், மகா மேருமலையை அடியோடே பெயர்த்தாலும் பெயர்க்கலாம். சுடுகிற அக்கினியை விழுங்கினாலும் விழுங்கலாம். இந்த மனதையோ நிறுத்தக்கூடாது. புலன்களெல்லாம் விகாரப்பட காரணமாகும். இந்தக் கெட்ட உலகமானது இது உளதெனில் உண்டு, இலதெனில் இல்லை. இந்தக் கொடிய மனதைக் கெடுக்கவேண்டும் என்பதே.

"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" என்று எரேமியா தீர்க்கதரிசி சொல்லுகிறார் (17. 9.). அப்போஸ்தலனாகிய பேதுருவும், "ஆத்துமாக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகுங்கள் என்கிறார்" (2 பேது. 2. 11.).

இந்தக் கொடிய சித்தத்துக்கு ஆதாரமாகிய மனதை எப்படி ஜெயிக்கிறது? தான் என்கிற ஆணவத்தை வேரோடே பிடுங்க வேண்டும். சுயசித்தத்தை அடக்கி, ஜெபதியானத்தினால் அதை வென்று தேவசித்தத்துக்கு இணங்கவேண்டும். இந்த பித்து பிடித்த பேயான மனமானது மாறிக் குணப்படுமானால் நமக்குள் மறுஜெந்மமும் சீரும் சுகமும் உண்டாகும். சித்தம் சீர்ப்பட்டால் எல்லாம் சீர்ப்படும்.

தேவன் நம்மை சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறவராகையால், அவர் நம்மை ஆளவும் நாம் அவருக்கு அடங்கிநடக்கவும் வேண்டும். அவர் நம்மை ஆளுகிறபக்ஷத்தில் ஏதேனும் ஒரு பிரமாணத்தைக்கொண்டே ஆளவேண்டும். அவர் திருவுளமாகிய சித்தமே அந்தப் பிரமாணம். அவருடைய சித்தத்தை விளக்கும் பிரமாணம் எங்கே இருக்கிறதென்றால், நம்முடைய உள்ளத்தில் இருக்கிறது. சித்தத்தை ஆண்டு நடத்தவே மனச்சாட்சியாகிய பிரமாணம் நமக்குள் இயல்பாய் அமைந்திருக்கிறது. இது அகத்துப்பிரமாணம் என்னப்படும். பாவத்தினால் மனம் விகாரப்பட்டிருக்கிறபடியால் இந்த அகத்துப்பிரமாணத்தோடு புறத்துப்பிரமாணமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் புறத்துப்பிரமாணம் வேதப்பிரமாணம் என்னப்படும். மனதை நிலையில் நிறுத்த அகத்துப்பிரமாணம் புறத்துப்பிரமாணம் இவ்விரண்டும் வேண்டும்.

தேவசித்தம் இருவகைப்படும்: அவருடைய திருவுளத்தில் அமைந்திருக்கிற அவருடைய இரகசியமான சித்தமும், வேதத்தில் நமக்கு அருளப்பட்டு கட்டளைகளில் விளங்குகிற அவருடைய பிரசித்தமான சித்தமுமே. "மறைவானவைகள் நம்

முடைய தேவனுகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப் படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த் தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்மு டைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா. 29. 29.). அவர் வெளிப்படுத்தியிருக்கிற நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தத்தை (ரோ. 12. 2.), நாம் கைக்கொண்டு நடக்கவே கர்த்தருடைய ஜெபத்தில் இந்த மன்றாட்டைச் செய்கிறோம்.

நம்முடைய பரமபிதாவின் சித்தம் இன்னதென்று படித்து அறிந்து உணர்ந்துகொள்ளவே நாம் இந்த உலகத்தில் பள் ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளைகளைப்போல் இருக்கிறோம். "அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனே அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனே என்று அறிந்துகொள்ளு வான்" என்றும் (யோ. 7. 17.); "தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவன் எவனே அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாயிருக்கிறான்" என் றும் (மாற். 3. 35.) கர்த்தர் சொல்லியிருக்கிறார். நம்முடைய சித்தம் கோணலும் திருக்கும் மாறுபாடுமுள்ளது. தேவசித்த மோ செம்மையும் நேர்மையும் நன்மையுமானது.

நம்முடைய பரமபிதாவானவர் நம்மைப்பற்றி வெளிப்ப டுத்தியிருக்கிற அவருடைய சித்தம் என்னவென்றால்:

1. நாம் மனந்திரும்பிக் குணப்படவேண்டுமென்பதே (அப். 17. 30.). தன்னை அறிவதே மெய்யான குணப்படுதல்; தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்.

2. தாம் அனுப்பின அவருடைய குமாரனுகிய இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசமும் பற்றுதலுமாயிருப்பதும் அவ ருடைய சித்தமாம் (1 யோ. 3. 23.). இந்த விசுவாசம் அன் பினுல் கிரியைசெய்து, உலகத்தை ஜெயித்து, இருதயத்தைச் சுத்திசெய்யும்.

3. நாம் பரிசுத்தப்படுவதும் அவருடைய சித்தமாம் (1 தெச. 4. 3.). இந்த அவருடைய சித்தம் பரமண்டலத்தில்

செய்யப்படுகிறதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று வேண்டிக்கொள்ளுகிறோம். பரமண்டலத்திலுள்ள தேவதூதர்களும் பரகதியடைந்த மகாத்துமாக்களும், விகற்பமில்லாமலும் வழுவில்லாமலும், அவருடைய சித்தத்தின்படியே உற்சாகமாய்ச் செய்துவருகிறார்கள். அவர்கள் செய்வதுபோல நாமும் செய்யவேண்டும். வானவர்களுக்கு ஒத்தபடி பூமியிலுள்ள நாமும் செய்யக் கடனாளிகளாயிருக்கிறோம். இப்படிச் செய்கிறவர்களுக்குப் பூரணபலன் உண்டு. "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்களின் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும், அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று சொல்லியிருக்கிறது. (வெளி. 22. 14.).

இந்த மன்றாட்டை நாம் இருதயத்தின் பரிபூரணத்திலிருந்து சொல்லி, இதின்படியே நாம் எல்லாரும் நடக்கப் பிரயாசப்படுவோமானால், இந்தப் பூலோகமே பரலோகம் ஆகும். தேவசித்தம் பூரணமாய் விளங்கும் இடமே மோட்சம்.

உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று நமக்குப் படிப்பித்த ரட்சகர்தாமே தேவசித்தத்தைப் பூரணமாய்க் கைக்கொண்டு, அதின்படி செய்து, அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு இந்த விஷயத்தில் நல்மாதிரியைக் காண்பித்திருக்கிறார். "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்" என்று அவர் சொல்லி (எபி. 10. 9.), உலகத்தில் அவதரித்து, "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியைகளை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்று திருவுளம்பற்றி (யோ. 4. 34.), பிதாவே, என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று சொல்லி, பாடுபட்டு பிராணத்தியாகஞ்செய்தார் (லூக். 22. 42.). நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றி: "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று சொல்வோமாக. ஆமென்.

## ஜெபம்.

ஏகசக்கராதிபதியான ராஜாதிராஜாவும், கர்த்தாதிகர்த்தாவுமாகிய பரமபிதாவே, உம்முடைய மகிமைக்காகவே எல்லாவற்றையும் சிருஷ்டித்து ஆண்டு நடத்திவருகிறீர். பரத்திலும் புவியிலும் உமது சித்தமே பிரமாணம். அந்தச் சித்தத்துக்கு எங்களை முற்றிலும் இணங்கும்படி செய்யும். நாங்கள் ஜன்மத்தாலும் கர்மத்தாலும் பாவிகள். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கிநடந்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம். நாங்கள் சுகம் தப்பின பலவீனர். "கல்லாப்பிழையும், கருதாப்பிழையும், மனதுருகி உமது நிலையில் நில்லாப்பிழையும், உம்மை நினையாப்பிழையும், உமது வேதத்தை ஓதாப்பிழையும், துதியாப் பிழையும், தொழாப்பிழையும், எல்லாப் பிழையும் பொறுத்தருளுவீராக." எங்கள் செயலினால் ஆகிறது ஒன்றும் இல்லை, எல்லாம் உமது செயலாலாகவேண்டும். நாங்கள் தேவபக்தியும் நீதியும் தெளிந்தபுத்தியும் உள்ளவர்களாய், அகமகிழ்ந்து, தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூர்ந்து, உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தி, உமது திருச்சித்தத்துக்கு ஏற்றபடி நடக்க, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

# ஆறும் பிரசங்கம்.

"அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும்."

தேவ மகிமைக்காகச் செய்யும் மூன்று மன்றாட்டுகளைப் பற்றிக் கவனித்தோம். மனுஷருக்காகச் செய்யும் மன்றாட்டு களில் முதலாம் மன்றாட்டாகிய கர்த்தருடைய ஜெபத்தின் இந்த நான்காம் மன்றாட்டை இப்பொழுது கவனிப்போம். நம்மைப்பற்றி நாம் மன்றாடும்போது, நம்முடைய பசியை ஆற்றிக்கொள்ளும்பொருட்டு நமக்கு அவசியமாய் வேண்டி யவைகளுக்காக முதல்முதல் வேண்டிக்கொள்ளுகிறோம்.

வானின்றுலகம் வழங்கி வருதலால்
தான் அமிர்த மென்றுணரற் பாற்று.

அதாவது, வானத்திலிருந்து பொழியும் மழையினால் இவ் வுலகமானது விருத்தியாகிவருவதினாலே உலகத்துக்கு அது தான் அமிர்தமென்று உணரவேண்டுமென்று உலகஞானிகள் சொல்லுவார்கள். வானம் மழையைக்கொடுக்க, பூமி தன் பலனைத்தரும். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத் திலிருந்து இறங்கிவருகிறது" (யாக். 1. 17.). ஆகையால் பூமியிலுள்ள நாம் பரத்தைநோக்கி நமக்கு வேண்டிய ஆகாரத் துக்காகப் பிரார்த்திக்கவேண்டும். இந்த மன்றாட்டைச் செய் யாதவர்களும், இதன் பொருளை அறிந்து உணராதவர்களும் ஜாண்வயிற்றுக்காகக் கொண்டிருக்கும் கவலையும் படுகிற சஞ்சலமும் கொஞ்சம் அல்ல.

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழியரிசிக்கே நாம்.

அதாவது, வயிற்றில் உண்டாகின்ற பசியின் கொடுமையால் ஒருபடி அரிசிக்காக நாம் பிறரிடத்தே சேவகஞ்செய்தும், பலரிடத்திலேபோய் யாசித்தும், தெளிந்த நீரையுடைய கடல்மீது கப்பலேறிப்போயும், ஒருவனைக் கனமாகப்பாவித்தும், பூமியை ஆண்டும், செல்வனைப் புகழ்ந்துபாடியும் இந்த உடம்பைப் பாழிலே செலுத்துகிறோம் என்றும்,

உண்பதுநாழி உடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந்தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர்குடி வாழ்க்கை மண்ணின் கலம்போல
சாந்துணையும் சஞ்சலமேதான்.

அதாவது; அஞ்ஞானத்திலே குருட்டாட்டமுள்ள மனிதர், ஒருநாளைக்கு உண்பது ஒருபடி அரிசியும், அவர்கள் உடுக்கிற சீலை நான்குமுழமுமாகும். அவர்கள் கவலைகொண்டு எண்ணுகிற காரியங்களோ எண்பதுகோடியாகும். ஆகையால் மண்ணினால் உண்டான பாத்திரம்போன்ற சரீரமானது அழியும் அளவும் அவர்கள் குடிவாழ்க்கையால் துன்பமே விளையும் என்றும்,

ஒருநாளுணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக் கேல் என்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோவறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது.

அதாவது, துன்பத்தையே உண்டுபண்ணுகிற என் வயிறே, ஒருநாளைக்கு உண்ணுகிற சாதம் கிடையாதபோது அதை விட்டிரு என்றால் விட்டிராய்; இரண்டு நாளைக்கு உண்ணுகிற சாதம் கிடைத்தபோது அதை ஒரேதரமாய் உண்ணென்றாலும் உண்ணாய். நான் ஒவ்வொரு நாளும் படுகிற வருத்தத்தை நீ அறியாய். ஆகையால் உன்னோடு கூடிவாழ்கிறது எனக்குப் பிரயாசையாயிருக்கிறது என்றும் ஒளவை சொல்லியிருக்கிறாள். இதைப்பற்றி நம்முடைய ரட்சகர் மத். 5. 24—34. வரையிலும் திருவுளம்பற்றியிருக்கிறதை வாசிக்கக் கேளுங்கள்:

இந்த மன்றாட்டின் ஒவ்வொரு பதத்திலும் பொருள் உண்டு:

அப்பத்துக்காக வேண்டிக்கொள்ளும்போது ருசியைப் பேணும் அறுவகைச் சுவையுள்ள பற்பல பதார்த்தங்களுக்காக அல்ல; வயிற்றின் பசியை ஆற்றும்படி நமக்கும் மற்றவர்களுக்கும் அவசியம் வேண்டிய சாதாரண பதார்த்தத்துக்காகவே வேண்டிக்கொள்ளுகிறோம். நமக்கு வேண்டிய ஆகாரம் தேவன் அருளும் ஈவு: அவனை நம்பி நாடியிருக்கிறவர்கள் இந்த ஆகாரத்துக்காக வேண்டிக்கொள்ளும்போது, தேவன் பேரிலுள்ள அவர்களுடைய பக்தியும், தங்களுக்குரிய மிகுந்த அடக்கமும் விளங்கும். எங்கள் அப்பத்துக்காக நாம் வேண்டிக்கொள்ளும்போது, சோம்பலினாலும் வஞ்சகத்தினாலும் கிடைக்கும் ஆகாரத்துக்கு அல்ல, நாம் பிரயாசப்பட்டு உழைத்து நியாயமாய்ச் சம்பாதிக்கும் ஆகாரத்துக்காகவே வேண்டிக்கொள்ளுகிறோம். இதனால் ஊக்கமும் முயற்சியும் விளங்கும். ஒவ்வொரு நாளைக்கும் போதுமான அப்பத்தை இன்றுதாரும் என்று வேண்டிக்கொள்ளும்போது, வீணான விபரீத தொல்லைகளைத் தொலைத்து, நாளைக்காக அல்ல, இன்றைக்காகமாத்திரம் கவலைப்படவேண்டும் என்கிற உண்மை விளங்கும். "எவ்வுயிருங்காக்க ஒரு ஈசனுண்டோ இல்லையோ, அவ்வுயிரில் யாரொருவனல்லவோ" என்று தன்னையும் தலைவனையும் உணர்ந்தவன் சொல்லி, உண்டாக்கினவர் படியளப்பார் என்று உணர்ந்து, அவர் சித்தத்தின்படி ஆகக்கடவது என்பான். நம்முடைய வறுமையையும் அறைகுறைகளையும் அறிந்தவருக்கு நம்மை நாம் கையளிக்க வேண்டும். அவர் பார்ப்பார், அவர் காப்பார்; உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் அவர் கொடுப்பார். நாளைக்கு என்கிற கவலை ஆத்துமாவைப்பற்றினது, இன்றைக்கு என்கிற கவலை சரீரத்தைப்பற்றினது. ஆகூர் என்னும் ஒரு பக்தன் மன்றாடினபடி: "தரித்திரத்தையும் ஐஸ்வரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யாரென்று சொல்லாதபடிக்கும்;

தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்" என்று நாமும் மன்றாடவேண்டும் (நீதி. 30. 8, 9.).

மேலும் இந்த மன்றாட்டில் அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்குத்தாரும் என்று வேண்டிக்கொள்ளும்போது, தனக்குமாத்திரம் அல்ல, மற்றவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறதாகும். இது தன்னயத்தைமாத்திரம் அல்ல, பிறர் நயத்தையும் விரும்புகிற குணம்.

இந்த மன்றாட்டினால் நாம் இந்த உலகத்தில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம் என்றும், நம்மை உண்டாக்கின தேவன் நம்மைப் போஷித்துப் பராமரித்துக் காப்பாற்றுவார் என்றும், அவரை அல்லாமல் நமக்கு வேறே கதியில்லையென்றும், நம்முடைய முயற்சியையும், பிரயாசத்தையும், சம்பாத்தியத்தையும் நம்பாமலும், உடன்பிறந்தார் சுற்றத்தார் முதலானவர்களை நாடாமலும், நம்முடைய முழு நம்பிக்கையையும் கர்த்தர்பேரில் வைக்கவேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள ஏது உண்டு.

இந்த மன்றாட்டைப் பெரியவர்கள் சிறியவர்கள், ஐஸ்வரியவான்கள் ஏழைகள் யாவரும் செய்யவேண்டும். ஐஸ்வரியவானானவன்: எனக்கு வேண்டியதெல்லாம் உண்டு; நான் ஏன் இந்த விண்ணப்பத்தைச் செய்யவேண்டும்? இது ஏழைகளுக்குமாத்திரம் அடுத்த விண்ணப்பம் என்று சொல்வானானால், அவனுக்குக் கிடைத்த ஐஸ்வரியம் யாரால் கிடைத்தது? அதைக் கொடுத்தவர் மறுபடியும் அதை எடுத்துக்கொள்ளக் கூடாதோ? ஐஸ்வரியவான்கள் ஒரு நிமிஷத்தில் ஏழைகளாகக்கூடாதோ? இது பிரத்தியட்சமாய் நாடோறும் நடந்துவருகிற காரியமாமே. வீடு-வாசல், நிலம்-பலம், ஆஸ்தி-பாஸ்தி நம்மை விட்டு எடுபடாமற்போனாலும், நாம் அவைகளைவிட்டு எடுபட்டுப் போகவேண்டியதாகும். இரட்சகர் இதைப் பற்றி ஒரு உவமை சொல்லியிருக்கிறார்: ஒரு ஐஸ்வரியவான்

தானியத்தையும் பொருள்களையும் களஞ்சியத்தில் சேர்த்து வைத்து, ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று சொன்ஞன். தேவனே, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த ராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றுர். தேவனிடத்தில் ஐஸ்வரியவாஞயிராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறுன்" என்றுர் (லூக். 12. 16—21.).

ஐஸ்வரியவான்களே தங்களுக்கு அன்றன்று வேண்டிய ஆகாரத்துக்காக வேண்டிக்கொள்ளவேண்டியதாஞல், ஏழைகள் இந்த விண்ணப்பத்தை உணர்ந்து நாடோறும் செய்ய வேண்டியது அதிக அவசியமல்லவா? ஏழைகள் உழைத்துச் சம்பாதிக்க அவர்களுக்குச் சுகத்தையும் பெலத்தையும் கொடுக்கிறவர் தேவன். அந்தச் சுகத்திஞலும் பெலத்திஞலும் சம்பாதிக்கச்செய்கிறவரும் தேவன். அந்தச் சம்பாத்தியத்திஞல் ஆகாரத்தைக் கொடுக்கிறவரும் தேவன். அந்த ஆகாரத்திஞல் சுகத்தையும் பெலத்தையும் கட்டளையிடுகிறவரும் தேவனே. ஆகையால் நீங்கள் இந்த மன்றுட்டைச் செய்ய கடமையுள்ளவர்களாயிருக்கிறீர்கள். இதைப்பற்றி யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: யாக். 4. 13—17.

அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும் என்கிற மன்றுட்டில், இந்தச் சரீரத்தின்பொருட்டு உண்ணவும் உடுக்கவும் வேண்டிய எல்லாவற்றிற்காகவும் நாம் வேண்டிக்கொள்ளுகிறதும் அல்லாமல், ஆத்துமாவுக்கு வேண்டிய ஞான ஆகாரத்துக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேம். ஆத்துமாவுக்கு இயேசுரட்சகர் ஜீவஅப்பத்தைக் கொடுத்திருக்கிறுர். அதைப் புசிக்கிறவர்களுக்கு நித்தியஜீவன் உண்டு (யோ. 6. 57, 58.).

தேவனை நோக்கித் தங்களுக்கு நாடோறும் வேண்டிய ஆகாரத்துக்காக உண்மையாய் வேண்டிக்கொள்ளுகிறவர்கள், உண்மையாய்ப் பிரயாசப்பட்டுச் சம்பாத்தியம்பண்ணுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" என்னும் வேதவிதியை முயற்சியும் சுறுசுறுப்புமுள்ளவர்கள் அறிவார்கள் (2 தெச. 3, 10.). அன்றியும் ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் (1 தீமோ. 5. 8.) என்பதையும், உத்தம விசுவாசிகள் அறிந்து செய்யவேண்டியதைச் செய்து முடிக்கப் பிரயாசப்படுவார்கள்.

நாம் கேட்டாலும் கேட்காமற்போனாலும், நம்மை உண்டாக்கினவர் நமக்கு வேண்டியது இன்னதென்று அறிந்திருக்கிறபடியால், நாம் அவரைக் கேட்கவேண்டியது என்ன என்று ஆட்சேபனை சொல்லுகிறவர்கள் உண்டு. ஆம், நமக்கு வேண்டியதை அவர் அறிந்திருந்தாலும், நம்முடைய விண்ணப்பத்தையும் விருப்பத்தையும் மன்றாட்டையும் அவர் அறியவேண்டியதல்லவா? இதைப்பற்றி நம்முடைய ரட்சகர் சொல்லியிருக்கிறதை வாசிக்கக்கேளுங்கள்: மத். 7. 7—11.

வேறு சிலர் இந்த விஷயத்தில் உலகத்தாருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வித்தியாசம் என்ன? உழைத்தால் இருதிறத்தாருக்கும் ஆகாரம் உண்டு, இல்லாவிட்டால் இல்லை என்பார்கள். மெய்தான், இருதிறத்தாரும் உழைக்கவேண்டியதுதான்; ஆனாலும் கிறிஸ்தவர்கள் தேவனைத் தங்கள் பிதாவாக எண்ணி, அவர் படியளப்பார் என்று நம்பி, அவர் விசாரிக்கிறவரானபடியால், தங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் சுமத்திவிடுகிறார்கள் (1 பேது. 5. 7.). இதனால் அவர்கள் மனதிற்கு ஆறுதல் உண்டு. உத்தம விசுவாசிகள் செல்வத்துக்கும் செருக்குக்கும் வேண்டிக்கொள்ளாமல், தேவசித்தத்துக்கு ஏற்றவைகளுக்காகமாத்திரம் வேண்டிக்கொள்வார்கள். கல்வியுள்ள தேனீயைக் காத்து, எறும்புமுதலான ஜீவன்களைப்

பிழைப்பூட்டி, எலியாதீர்க்கதரிசியைக் காகங்களால் போஷித்தவர், தம்மை நம்பின உத்தமர்களை இப்பொழுதும் போஷித்துக் காப்பாற்றுவார் என்பதற்குச் சந்தேகமில்லை.

கிறிஸ்து ஐந்து அப்பங்களினால் ஐயாயிரம்பேரைப் போஷித்து எல்லாரும் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்று சொன்னதை நினைவில் வைத்து (யோ. 6. 12.), வீண்செலவு செய்யாமல், கடன்பட்டுச் சஞ்சலப்படாமல், உள்ளதைக் கொண்டு ஜீவனம்பண்ணி, ஏழைகளுக்கு உங்களால் இயன்ற மட்டும் அன்னவஸ்திரங்கொடுத்து, கிரமமாய் நடந்துகொள்ளுங்கள். இப்படிச் செய்வதினால் தேவனுக்கு உகந்த பிள்ளைகளாயிருப்பீர்கள்.

நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றியறிந்திருங்கள். "போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லையென்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐஸ்வரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்று வேதம் சொல்லுகிறது (1 தீமோ. 6. 6—10.).

சகோதரரே, "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத். 4. 4.). இந்த ஞானபோஜனத்தை நாடுங்கள். "நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரி. 10. 31.). ஆமென்.

# ஜெபம்.

சர்வவல்லமையுள்ள நரஜீவதயாபரராகிய பரமபிதாவே, எல்லாரையும் படைத்துக் காத்து ரட்சிக்கிறவரே, நாங்கள் ஜெபம்பண்ணும்முன்னே எங்கள் ஜெபத்தைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறீர். நாங்கள் விரும்புகிறதிலும் பெறத்தக்கதிலும் அதிகமாய்க் கொடுக்க வல்லமையும் கிருபையும் உள்ளவராயிருக்கிறீர். தேவரீர் உமது கையைத் திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர். ஏழை அடியார்களுக்கு வேண்டிய அன்னவஸ்திரம், சரீரசுகம் ஆத்மசுகம், இகபரநன்மை யாவையும் கட்டளையிட்டருளும். எங்கள் சரீரத்துக்கு நாடோறும் படி அளந்து போஷித்து, எங்கள் ஆத்துமாவுக்கு உமது ஏகசுதனுகிய எங்கள் அன்புள்ள ரட்சகருடைய திருமேனியும் திருஉதிரமும் ஆகாரமும் ஞானபானமுமாயிருக்கும்படி கிருபைசெய்யும். நாங்கள் உண்டு, பிறரையும் உண்பித்து, பெற்றுக்கொள்ளுகிற நன்மைகளுக்காக நன்றியறிந்தவர்களாயிருக்கும்படி செய்தருளும். இந்த நன்மைகளையெல்லாம் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தை முன்னிட்டுக் கெஞ்சிக் கேட்கிறோம், சுவாமி. ஆமென்.

# ஏழாம் பிரசங்கம்.

"எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்." *

இது ஐந்தாம் மன்றாட்டு. அன்றன்றுள்ள அப்பத்துக்காக வேண்டிக்கொண்டபின்பு, பாவமன்னிப்புக்காக வேண்டிக் கொள்ளுகிறோம். செய்யவேண்டிய கடமையைச் செய்யாமலிருப்பதும், செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தாமலிருப்பதும் பாவமாம். பிரமாண விரோதமே பாவம். பாவத்தைக் கடனாகச் சொல்லியிருக்கிறது. அது மனுஷன் சுமப்பதற்கு அரிதான சுமையும், சகிப்பதற்கு அரிதான துன்பமுமாயிருக்கிறது. இராவணன் முதல்நாள் யுத்தத்தில் சேனைமுழுவதையும் தோற்று வெறுங்கையோடு நின்றபோது, அவன் விசனப்பட்டதைக் குறிக்கும்படி: "கடன்கொண்டார் நெஞ்சம்போல் கலங்கினன் இலங்கைவேந்தன்" என்று ஒரு பாட்டில் சொல்லியிருக்கிறது. பாவக்கடன் எல்லாக் கடனிலும் கொடிது. அது சுமக்கக்கூடாதபாரம். இந்தக் கடன்தான் மனிதனைக் கெடுக்கிறது. பாவக்கடன் தீராவிட்டால் ஆக்கினை உண்டு. நாம் மனோவாக்குக் காயங்களினால் நாடோறும் பாவஞ்செய்கிறோம், ஆகையால் அதிக கடனாளிகளாயிருக்கிறோம். இந்தக் கடன் தீருவது எப்படி? தீர்க்கிறதற்குக் கடன்பட்டவனிடத்தில் நிர்வாகமில்லை; கடன்கொடுத்தவன் மன்னித்தால் விடுதலை உண்டு. இதைப்பற்றி ரட்சகர் இரண்டு உவமைகளைச் சொல்லியிருக்கிறார். அவைகளை வாசிக்கக் கேளுங்கள்: மத். 18. 21—35. லூக். 7. 41—43.

---

* எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். மத். 6. 12.

எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்திலே கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே. லூக். 11. 4.

கடன்படுகிறதினால் உண்டாகிற துன்பம் இன்னதென்று உங்களில் அநேகருக்குத் தெரியும். கடன்பட்டவன் கடன் கொடுத்தவனைப் பகைப்பான்; அவனுக்குக் கண் மறைவாயிருப்பான். அப்படியே பாவியும் தேவனைப் பகைத்து, ஆதாம் செய்ததுபோல் தன்னை மறைத்துக்கொள்ளுவான். கடன்காரன் தன் கணக்குகளைப் பார்க்கமாட்டான்; பாவியும் தன் பாவத்தை கவனிக்கமாட்டான். என்றாலும் கடன்பட்டவனுடைய கணக்கு எப்பொழுதும் அவன் மனதிலிருக்கிறதுபோல பாவியின் கணக்கையும் அவன் மனச்சாட்சியே எடுத்துச் சொல்லும்.

பாவக்கடன் சுமப்பதற்கு அரிதான பாரமாயினும் அநேகர் இந்த பாரத்தை அறிந்து உணருகிறதில்லை. ஏன் அதை உணராதிருக்கிறார்கள் என்று கேட்டால், பாவிகள் பாவத்தில் நித்திரைகொண்டிருக்கிறார்கள், மரித்தவர்கள்போலிருக்கிறார்கள். மரித்து அடக்கம்பண்ணப்பட்டவர்கள் தங்கள்மேல் கட்டப்பட்டிருக்கிற கல்லறைகளின் பாரத்தை உணராதிருக்கிறதுபோல, பாவிகளும் தங்கள்மேல் சுமந்திருக்கிற பாவக்கடனின் பாரத்தை உணராதிருக்கிறார்கள். நித்திரை செய்கிறவர்கள் கனவுகாண்கிறதுபோல பாவிகளும் பற்பல கனவுகளையும், உருவெளித் தோற்றங்களையும் கண்டு, கானலை நீரென்றெண்ணி, மோசம்போகிறார்கள். இந்தப் பாவமயக்கமாகிய நித்திரை தெளிந்தவர்கள் பாவப்பாரத்தை உணர்ந்து பாவக்கடன்தீர கவலைப்படுவார்கள். இந்த உணர்வு உண்டாகும்போது நித்திரை தெளியும், ஜாக்கிரதையும் விழிப்பும் உண்டாகும், மனங்கலங்கும், கவலைபிறக்கும். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் உண்டு: ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீர் மொள்ளும்போது, பானையானது நிறைந்து ஜலத்திற்குள் இருக்கையில் அதின் பளுவு கயிற்றைப் பிடித்திருக்கிற கைக்குத் தோன்றாது. அதைச் சேந்தும்போது, பானையானது ஜலத்துக்குமேலே கண்டவுடனே பளுவு தோன்றும். அப்படியே ஒரு குளத்திலுள்ள ஜலத்தில் மூழ்குகிறவன் அந்த ஜலமெல்லாம் அவன்மேல் இருந்தாலும் அதின் பாரத்

தை உணரான். அவன் வெளியே வந்து அந்த குளத்திலுள்ள ஜலத்தில் ஒரு பானை நிறைய மொண்டு தன் தலையின்மேல் வைப்பானானால் உடனே பாரம் தோன்றும். அப்படியே பாவத்தில் மூழ்கியிருக்கிறவன் பாவத்தின் பாரத்தை உணரான்; அந்த பாவத்தைவிட்டு நீங்கும்போது பாவத்தின் பாரம் தோன்றும். பாவமானது சித்தத்தைப் பற்றினதாயிருக்கும் போது அதன் கொடுமை விளங்காது. பைத்தியகாரன் கொள்ளிக்கட்டையை எடுத்து கூரைவீட்டின்மேல் விளையாடுகிறதுபோல, பாவியும் பாவத்தோடு பழகி, தனக்கும் பிறருக்கும் தீமைசெய்கிறான். பாவத்தைப்பற்றி மனதிற்குக் கவலையும் சஞ்சலமும் உண்டாகும்போது மனதில் விழிப்பு உண்டாகி, பாவி குணப்பட ஏதுஉண்டாகும். உணர்வும் அசைவும் உண்டாயிருக்கிற இடத்தில் ஜீவனும் சுகமும் உண்டு. மாம்ச தேகிகளாகிய நமக்குரிய பலவீனத்தினாலும், மண்ணாசை-பெண்ணாசை-பொன்னாசையினாலும், பிசாசின் தந்திரங்களினாலும், உலகமயக்கங்களினாலும், நாடோறும் நாம் பாவஞ் செய்ய ஏதுவுள்ளவர்களாயிருக்கிறபடியால், நாடோறும் பாவமன்னிப்புக்காக வேண்டிக்கொள்ள கடனாளிகளாயிருக்கிறோம்.

பாவத்தை உணர்ந்து தன்னை அறிந்தவர்கள்தான் தேவனை நோக்கி: "சகல மனிதருக்கும் நியாயாதிபதியே, தேவரீருடைய நீதியுள்ள உக்கிரகோபாக்கினை எங்கள்மேல் வரத்தக்கதாக, நாங்கள் அடிக்கடி நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும் உம்முடைய திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் அகங்காரித்துச் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்புகிறோம்; எங்களுக்கு இரங்கும் என்று வேண்டிக்கொள்வார்கள்." "நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்

கிறார்" (1 யோ. 1. 8, 9.). "ஆண்டவர் நல்லவரும் மன்னிக்கிறவரும், அவரை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபையிருந்தவருமாயிருக்கிறார்." "அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம்பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு எங்களுக்குமுன்பாக வைத்த அவருடைய நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம். ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு" என்று வேதத்தில் கண்டிருக்கிறது (தானி. 9. 9, 10.).

நம்முடைய பாவத்தை உணர்த்தும் வேதமே நமக்கு பாவமன்னிப்பு வரும் வழியையும் அறிவிக்கிறது. மனுஷனுடைய பாவத்தினால் துக்கமும் மரணமும் வந்தது. கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினால் பாவமன்னிப்பும் நித்தியஜீவனும் வந்தது. "பிதாவினுடைய கிருபையின் ஐஸ்வரியத்தின்படியே குமாரனுடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு குமாரனுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1. 7.). இவ்விதமாய்ப் பாவமன்னிப்பைப் பெறுகிறவனுடைய பாக்கியத்தைப்பற்றி தாவீது சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள், "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்" என்று சொல்லுகிறார் (சங். 32. 1, 2.).

நம்முடைய அன்புள்ள பரமபிதா, அவருடைய சிருஷ்டிகளாகிய நாம் கெட்டுப்போகவிரும்பாமல், நாம் குணப்பட்டுச் சுகப்படவே விரும்புகிறார். தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நமக்குப் பாராட்டவே அன்பின் சொரூபியான சற்குருவாய் உலகத்தில் அவதரித்தார்; நமக்காகப் பாடுபட்டு மரணமடைந்தார். நமக்காக நீதியை நிறைவேற்றிப் புண்ணியத்தை உண்டுபண்ணினார். இந்த சத்தியத்தை உறுதியாய் நம்பி, தங்கள் பாவங்களுக்காக உத்தம மனஸ்தா

பப்பட்டு, தங்கள் அக்கிரமங்களை வெறுத்துத்தள்ளி மெய்யாய் மனந்திரும்பிக் குணப்படுகிறவர்களுக்குப் பாவமன்னிப்பு உண்டு. இதற்காக நாம் தாவீது வேண்டிக்கொண்டதுபோல, "தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்தியவழியிலே என்னை நடத்தும்" (சங். 109. 20, 21.) என்று வேண்டிக்கொள்வோமாக.

எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்று இந்த மன்றாட்டை நமக்குப் படிப்பித்தவர் இதில் ஒரு பொடிவைத்திருக்கிறார். மற்றவர்கள் தங்களுக்கு விரோதமாய்ச் செய்யும் குற்றங்களை மன்னியாதவர்கள் இந்த மன்றாட்டைச் செய்யக்கூடாது. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம்பெறுவார்கள். இந்த மன்றாட்டுக்குரிய ஒரு கட்டளையும் உண்டு. "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின்முன் 'உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்றும் (மத். 5. 23, 24.), "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறைஉண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" (மாற்.11. 25.). என்றும் ரட்சகர் விளம்பியிருக்கிறார். ஏழுதரம்மாத்திரமல்ல எழுபதுதரம் பிறர் நமக்குச்செய்த குற்றங்களை நாம் மன்னிக்கவேண்டும்; அப்படிச் செய்யாமற்போனால் நிமிஷந்தோறும் நாம் செய்யும் குற்றங்களைக் கர்த்தர் நமக்கு எப்படி மன்னிப்பார். பிறர் நமக்குச் செய்த குற்றத்தை மன்னிப்போம், அதை மறக்கமாட்டோம் என்று சிலர் சொல்லுவார்

கள். "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே. 31.34.) என்று கர்த்தர் சொல்லும்போது, நீசப்பாவிகளாகிய நாம் மன்னித்தாலும் மறக்கமாட்டோம் என்று சொல்லத்தகுமோ? பிறர் நமக்குச் செய்த பாவத்தை நினையாமலும் அதைப்பற்றிப் பேசாமலும் இருப்போமானால் அதை மறந்துவிடுவோம் அல்லவா. நம்முடைய உள்ளத்திலிருந்து கோபமும் குரோதமும் வர்மமும் நீங்கினுலொழிய நமக்கு மன்னிப்புக்கிடைப்பது அரிது.

இந்த மன்ருட்டில் மன்னிப்போருக்கு மன்னிப்புண்டு என்று கண்டிருக்கிறபடியால், பிறர் நமக்கு விரோதமாய்ச் செய்யும் எல்லாக் குற்றங்களையும் நாம் மன்னிக்கவேண்டுமோ? ஆம் மன்னிக்கவேண்டியதுதான். ஆனாலும் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தண்டனைக்கு அவர்களை ஒப்புக்கொடுப்பதும் நியாயமாயிருக்கும். குற்றத்தை விசாரித்துத் தண்டிக்க நியாயாதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே. குற்றஞ்செய்வது மனிதருக்கு இயல்பு, குற்றத்தைத் தண்டிப்பது நியாயம், குற்றத்தைப் பொறுப்பது காருண்யம், இது பரமபிதாவுக்கும் அவர் பிள்ளைகளுக்குமுரியது, "குற்றத்தை மன்னிப்பது மனுஷனுக்கு மகிமை" (நீதி. 19, 11.). "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனே அல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள். பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" (ரோம. 13. 8.). இப்படியிருக்க பிறர் நமக்குச் செய்யும் அற்பக் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளாமல், மனோவாக்குக்காயங்களினால் நாம் தேவனுக்கு விரோதமாய்ச் செய்திருக்கும் கோடாகோடி பாவங்களை அவர் மன்னிக்கவேண்டும் என்று துணிந்து கேட்கலாமா? நாம் மற்றவர்களுக்கு இரங்காதிருக்கும்போது அவர் நமக்கு இரங்குவது எப்படி? விண்ணும் மண்ணும் இந்த விண்ணப்பத்தில் கலந்து நிற்கிறபடியால், இது வேதகட்டளையென்றும், இது அன்பின் செயல் என்றும் தோன்றுகிறது. இதை நாம்

நன்றாய்க் கவனித்துப் பார்க்கும்போது, ஆண்டவர் இந்த மன்றாட்டில் வைத்த பொடியாகிய பொருத்தம் தகுந்த தென்று விளங்கும்.

நமக்கு நன்மைசெய்தவர்களுக்கு நாம் நன்மைசெய்ய வேண்டியதும் அல்லாமல், நமக்குத் தீமைசெய்தவர்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும். இப்படிச் செய்கிறவர்கள் நல்லோருக்கும் பொல்லோருக்கும் மழையைப் பெய்யப் பண்ணுகிற பரமபிதாவின் பிள்ளைகளாயிருப்பார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு கதை உண்டு. ஆபிரிக்காகண்டத்தானாகிய ஒருவன் சிறுவயதில் அடிமையாக ஒரு துரையினிடத்தில் விற்கப்பட்டான். அவனை விலைக்கு வாங்கின எஜமான் அவனைத் தன் காப்பித்தோட்டத்தில் வேலைசெய்யும்படி வைத்தான். அவன் உண்மையும் ஜாக்கிரதையும் உள்ளவனாயிருந்து மற்ற வேலையாட்களுக்கு மேஸ்திரியாக நியமிக்கப்பட்டான். இப்படி இருக்கும்போது ஒரு குரு அவனுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினால் அவன் குணப்பட்டு கிறிஸ்தவனாகி, படிக்கவும் கற்றான். சில வருஷங்களுக்குப் பின்பு அவனுடைய எஜமான் இன்னும் சில வேலையாட்களை விலைக்கு வாங்கித் தோட்டத்தில் வேலைக்கு விட்டான். அப்படிப் புதிதாய் வந்தவர்களுக்குள் ஒரு முதிர் வயதுள்ள மனிதன் இருந்தான். அவன்பேரில் மேஸ்திரியானவன் மிகவும் பட்சமாயிருந்து அவனுக்குத் தகுந்த அன்னவஸ்திரம் கொடுத்து லேசான வேலையிட்டு அவனை நன்றாய்ப் பராமரித்து வந்தான். எஜமான் அதைக்கண்டு, ஒரு நாள் மேஸ்திரியை நோக்கி: நீ இந்த மனிதனிடத்தில் இவ்வளவு பட்சமாயிருப்பதற்குக் காரணம் என்ன? இவன் உன் தகப்பனா, என்று கேட்டான். அதற்கு மேஸ்திரி, இவன் என் தகப்பன் அல்ல என்றான். அப்பொழுது எஜமான் இவன் உன் மாமனோ, சகோதரனோ, பந்துவோ? இவன் உனக்கு என்னவேண்டும் என்றான். அதற்கு மேஸ்திரி, இவன் மாமனுமல்ல, சகோதரனுமல்ல, பந்துவுமல்ல என்றான். அதற்கு எஜமான் ஆச்சரியத்தோடு, நீ இவனை இவ்வளவு கரிசனமாய்

நடத்துகிறதற்குக் காரணம் என்ன, இவன் யார் என்று கேட்டான். அதற்கு மேஸ்திரி, உண்மையைச் சொல்லவேண்டியிருந்தபடியால், ஐயா, இவன் என் சத்துரு, இவன்தான் என்னை உம்மிடத்தில் அடிமையாக விற்றவன் என்றான். அதற்கு எஜமான், அப்படியானால் நீ இவனுக்கு இவ்வளவு நன்மை செய்யவேண்டியது என்ன? பகைஞனுக்கு இப்படிச் செய்யலாமா என்று கேட்டான். அதற்கு அந்த மேஸ்திரி, தன் சுவிசேஷத்தை எடுத்து, ரோமர், 12 அதிகாரம் 19 வசனமுதல், "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்கு உரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும் உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனம் கொடு. அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு. நீ இப்படிச் செய்கிறதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினால் வெல்லப்படாமல், தீமையை நன்மையினால் வெல்லு" என்று எழுதியிருப்பதை வாசித்தான். இதை அந்த எஜமான்கேட்டு ஆச்சரியப்பட்டு, அவனும் உத்தம கிறிஸ்தவனானான். அந்த மேஸ்திரி செய்ததும் சொன்னதும் இந்த மன்றாட்டுக்குத் தகுந்த வியாக்கியானம். அவன் செய்தபடி நாமும் செய்வோமாக. ஆமென்.

## ஜெபம்.

சர்வவல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, நாங்கள் தப்பிப்போன ஆடுகளைப்போல் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்துபோனோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தோம். நாங்கள் அடிக்கடி நினைவினாலும் வார்த்தையினாலும் கிரியையினாலும் உம்முடைய திவ்யமகத்துவத்துக்கு விரோதமாய் அகங்காரித்துச் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்புகிறோம்; இந்தக் குற்றங்களைக்குறித்து நாங்கள் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு முழுமனதோடே

துக்கப்படுகிறோம்; அவைகள் எங்களாலே சுமக்கப்படாத பாரம். குற்றவாளிகளாயிருக்கிற எங்களுக்கு இரங்கும், தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். எங்கள் மனச்சாட்சிக்குப் பயமுண்டாக்குகிற குற்றங்களைப் பொறுத்தருளும். சொல்லினால் வரும் குற்றம், சிந்தையினால் வரும் குற்றம், பார்வையினால் வரும் குற்றம், கேள்வியினால் வரும் குற்றம், ஆகிய எல்லாக் குற்றமும், பாவநாசராகிய எங்கள் அருமைரட்சகர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பொறுத்தருளும், சுவாமி. ஆமென்.

# எட்டாம் பிரசங்கம்.

"எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாதிரும்."

இந்த ஜெபத்தில் நமக்காகச் செய்கிற மூன்று மன்றாட்டுகளும் திரிகால மன்றாட்டுகள் என்னப்படும். அன்றன்றுள்ள அப்பத்துக்காக வேண்டிக்கொள்ளுதல் நிகழ்கால மன்றாட்டு, பாவமன்னிப்புக்காக வேண்டிக்கொள்ளுதல் இறந்தகால மன்றாட்டு, சோதனையில் பிரவேசியாமல் தீமையினின்று இரட்சிக்கப்படவேண்டிக்கொள்ளுதல் எதிர்கால மன்றாட்டு.

சோதனையில் பிரவேசிப்பதைப்பற்றிக் கவனிப்போம்:—

மனிதருக்கு இயல்பாய் இரண்டுவித குணங்களுண்டு. ஒன்று தீமையை நாடும் மாம்சகுணம் என்றும், மற்றொன்று நன்மையை நாடும் ஆத்துமகுணம் என்றும் பெயர்பெறும். இந்த குணங்கள் ஒன்றை ஒன்று விரோதிக்கிறது. இவ்விரண்டிற்கும் எப்பொழுதும் போராட்டம் உண்டு. "நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்." "நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமை உண்டென்கிற பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்திற்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது" என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் (ரோ. 7. 15, 21—23.). மனுஷனுக்கு அகச்சத்துரு புறச்சத்துரு என்று இரண்டு சத்துருக்கள் உண்டு.

அகச்சத்துரு சோதனை, புறச்சத்துரு தீமை. இவ்விரண்டும் பாவத்தையும் துன்பத்தையும் பிறப்பிக்கும். இம்மையிலுள்ளளவும் நாம் சோதனைக்கும் தீமைக்கும் ஏதுவாயிருக்கிறோம். இவ்வுலகம் நமக்குச் சோதனையின் நிலைமை, நாம் புரீட்சிக்கப்படும் இடம்.

ஒருகாரியத்தைச் செய்ய ஏவுவதே சோதனை என்னப்படும். சோதனையினால் நன்மை தீமை விளங்கும். நமக்குள் குடிகொண்டிருக்கும் பாவமாகிய ஜன்மசுபாவமே தீமையை விளைவிக்கிறது. புறத்திலிருந்து உலகமயக்கங்களினால் நமது உள்ளத்தைத் தீமைக்கு ஏவிவிடுகிற பிசாசுக்குச் சோதனைக்காரன் என்று பெயர். அவன் மகா தந்திரவாதி, பொய்க்கும் மாயைக்கும் தீமைக்கும் தகப்பன். சிலர் அவனைச் சனியன் என்று சொல்வார்கள் (யோபு. 1. 12: 2. 6. காண்க.).

தேவன் நம்மை நன்மைக்கென்று பரீட்சிக்கும்படி சோதிக்கிறார்; பிசாசு நம்மை தீமைக்கென்று சோதிக்கிறான். ஆபிரகாம் தன் குமாரனைப் பலியிடும்படி தேவன் சொல்லி அவனைச் சோதித்தார் (ஆதி. 22.). அவர் நம்மைப் பாவத்துக்கு ஏவுகிறதில்லை. இதைக்குறித்து யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிறதைக் கேளுங்கள்: "சோதிக்கப்படுகிறவன் எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக, தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறதுமில்லை. அவனவன் தன் இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்கும்" (யாக். 1. 13—15.).

இதற்கிசைவாய்ச் சிந்தாமணியில் ஒரு பாட்டு உண்டு:

"பேதைமை யென்னும் வித்தில் பிறந்துபின் வினைகளென்னும்
வேதனை மரங்கள்நாறி வேட்கைவேர் வீழ்த்துமுற்றி
காதலுங் களிப்புமென்னுங் கவடுவிட் டவலம்பூத்து
மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனிந்துநிற்கும்."

அதாவது, மடமை என்னும் வித்தில் பிறந்து தீவினை என்னும் மரங்கள் வளர்ந்து, ஆசாபாசம் என்னும் வேரூன்றி, முதிர்ந்து, விரகமும் செருக்கும் என்னும் கிளைகள் விட்டு,

துன்பமாகிய மாயை பூத்து, மகாதுயரத்தை உண்டுபண்ணும், தீமை காய்த்து மரணமே பழுத்துநிற்கும் என்பதே.

நமக்குரிய ஜந்மசுபாவமும் கெட்டஇச்சையும் ஆசாபாசங்களுமே நம்மைச் சோதித்து, தீமைக்கு உட்படுத்துகிறது. மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை, இம்மூன்று ஆசைகளும் நம்மை விடாமல் நிற்கும் நிழல்போல் நம்மைப் பற்றியிருக்கும். செல்வமும்-செருக்கும், காமமும்-கோபமும், பெருமையும்-பெத்தரிக்கமும் மனிதனை ஆளுகிறது. "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினுல் உண்டானவைகளல்ல; அவைகள் உலகத்தினுல் உண்டானவைகள்" (1 யோ. 2. 16.). அவனவன் சரீரக்கூறுக்குத்தக்க வியாதி உண்டாயிருக்கிறதுபோல, அவனவன் குணத்துக்குத்தக்க சோதனையும் உண்டு. லோத்து மண்ணுசையினுல் கெட்டான். சாலொமோன் பெண்ணுசையினுல் கெட்டான். பாலாம் பொன்னுசையினுல் கெட்டான். தீமை எல்லாருக்குள்ளும் குடிகொண்டிருக்கிறது. இடம்-பொருள்-ஏவலுக்குத் தக்கதான சோதனைகள் அதை வெளிப்படுத்தும். நமக்குள்ளிருக்கும் இச்சையானது நம்முடைய ஆசைகளிலும் விருப்பங்களிலும் தோற்றங்களிலும் கனவுகளிலும் விளங்குகிறது அல்லவா? தேவன் நம்மைத் தீமைக்கென்று ஏவி சோதிக்காமற்போனுலும் நாம் சோதிக்கப்பட இடங்கொடுக்கிருர். ஆதாம் சோதிக்கப்பட்டு பாவத்தில் விழுந்தான். யோபு சோதிக்கப்பட்டு உத்தமன் என்று விளங்கினுன். பேதுரு சோதிக்கப்பட்டு மறுதலித்தான். நம்முடைய ரட்சகர் சோதிக்கப்பட்டு பாவமில்லாத பரிசுத்தராய் விளங்கினுர் (மத். 4.). நம்முடைய விசுவாசம் விளங்கவும், நம்முடைய துர்க்குணம் அடங்கவும், நம்முடைய உள்ளம் சுத்திகரிக்கப்படவும் தேவன் நம்மை நன்மைக்கென்று சோதிக்கிருர்.

நன்மைக்கென்று சோதனைசெய்யும் பரீட்சை நமக்கு இருக்கவேண்டியது அவசியம். பரீட்சையில்லாமல் தேர்ச்சியுமில்லை, மகிழ்ச்சியுமில்லை, புகழ்ச்சியுமில்லை. போர்மு

கத்தில் நின்று யுத்தஞ்செய்து ஜெயித்தவன்தான் புகழ்பெற்றவன். சோதனைகளினால் அநுபவசக்தியுண்டாகிறது. சோதிக்கப்பட்டவர்களே மற்றவர்களுக்கு இரங்கத்தக்கவர்கள். சோதனை நமக்கு அவசியமானால் அதில் பிரவேசிக்காதபடி வேண்டிக்கொள்ளவேண்டியது என்ன என்று கேட்பீர்கள். தேவன் நமக்குச் சகாயராயிருந்தால் அவருடைய கிருபை நம்மைக் காக்கும். நாம் சோதிக்கப்பட அவர் இடங்கொடுத்தாலும், சோதனையோடு விடுதலையையும் உண்டாக்குவார். "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." மேலும் சோதிக்கப்படுகிறவர்கள் தேறுதல் அடைகிறது உண்டு. பேதுரு அப்போஸ்தலன் சோதிக்கப்பட்டு விழுந்ததினால் தன் பலவீனத்தை உணர்ந்து, தேவனிடத்திலிருந்து தனக்கு உண்டாகும் பலத்தை அறிந்துகொள்ள ஏதுவானதுமன்றி பிறரையும் தேற்றத்தக்கவரானார். பவுல் அப்போஸ்தலனுக்கு ஒரு சோதனை உண்டாயிருந்தது; அது நீங்கும்படி அவர் வேண்டிக்கொண்டாலும் அது நீங்காமற்போயிற்று; ஆனாலும் கர்த்தர் "என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றார் (2 கொ. 12. 10.). அதுவே போதும். நமக்கு நேரிடும் சோதனைகளை நன்மையாகமுடியும்படி கிருபையுள்ள கர்த்தர் செய்கிறார். நம்மை நெருங்கி நிற்கிற இந்தச் சோதனைகளைவிட்டு நாம் எங்கே ஓடக்கூடும். வீடுவாசல்விட்டு சமுசாரத்தை ஒழித்து, சன்னியாசவேஷம்பூண்டு, வனவாசஞ்செய்தால் சோதனை அணுகாதோ? அகத்துப்பேயாகிய சோதனை நம்மோடேகூட இருக்கும்போது அதற்குத் தப்ப நாம் எங்கே ஓடக்கூடும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்று ரட்சகர் சொன்

ஞரே. (யோ. 17. 15.). "யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும்" என்று வேண்டிக்கொண்டான் (1 நாளா. 4. 10.). அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார். இப்படியிருக்கிறபடியால், சகோதரரே, நீங்கள் பாவத்துக்கும் பழிக்கும் அஞ்சி, தீமையை விட்டு விலகி, சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக். 1.12.). ஆமென்.

## ஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே! பாவிகளுடைய அடங்காத சித்தத்தையும், ஆசாபாசங்களையும் அடக்கி ஆளுகிறவரே! உம்மாலேயன்றி யாதொன்றும் பெலனும் யாதொன்றும் பரிசுத்தமாயுமிராது. வழிதப்பிப்போனவர்கள் நீதிமார்க்கத்தில் திரும்பும்படி உமது சத்தியத்தின் ஒளியைக் காட்டுகிறீர். கிறிஸ்துமார்க்கத்தில் சேர்க்கப்பட்ட யாவரும் தங்கள் மார்க்கத்துக்கு ஏற்காதவைகளை விலக்கிப்போடவும், அதற்கு ஏற்றவைகளைப் பின்பற்றிநடக்கவும், உலகத்தினாலும், மாம்சத்தினாலும், பிசாசினாலும் நேரிடும் சோதனைகளுக்கு எதிர்த்துநிற்கவும் கிருபைசெய்யும். நாங்கள் அநித்தியமானவைகளை நாடி நித்தியமானவைகளை இழந்துபோகாதபடி எங்கள் சிந்தைகளைப் பரவசமாக்கும். எங்கள் பலவீனத்தை உணர்ந்து தேவரீருடைய பலத்தையும் சகாயத்தையும் நாடுகிறோம். பாவந் தவிர மற்றெல்லாவற்றிலும் எங்களைப்போல சோதிக்கப்பட்டு எங்களுக்கு இரக்கஞ்செய்யத்தக்கவராயிருக்கிற எங்கள் ரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் இந்த நன்மைகளைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

# ஒன்பதாம் பிரசங்கம்.

"தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்."

இது ஏழாம் மன்றாட்டு. தீமை என்பது பலஅர்த்தங்கொள்ளும். சரீரத்தைப்பற்றின தீமைகள் அபாயம், விக்கினம், துக்கம், விசனம், பிணி, பழுது என்னப்படும். மனதைப் பற்றின தீமைகள் இடையூறு, தோஷம், கெடுதி, பொல்லாங்கு, துஷ்டத்தனம், கல்மஷம் என்னப்படும். ஆத்துமாவைப் பற்றின தீமைகள் பாவம், பழி, அதர்மம், துரோகம், பாதகம் என்னப்படும்.

தேவசித்தத்துக்கு விரோதமாய்ச் செய்யப்படுகிறதே தீமை. தேவனுக்குப் பிரியமில்லாதது எதுவோ அது தீமை என்னப் படும். தீக்குணத்துக்கும் தீவினைக்கும் நீங்கி விடுதலையாகும் படி நாம் மன்றாடுகிறதுமல்லாமல், தீமையை உண்டாக்குகிற மாம்சம், உலகம், பிசாசு ஆகிய இம்மூன்று சத்துருக்களுக்கும் நீங்கி விடுதலையாகவேண்டுமென்றும் மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டில் தீமை என்பது ஆத்துமகொலைபாதகனாகிய உலகத்தம்பிரான் என்னப்படுகிற தீயோனையும் குறிக்கும். நமக்கு இயல்பாய் நேரிடுகிற துக்கம், வறுமை, வியாதி, மரணம்முதலிய சரீரதீமைகள் நீங்கவும், மனச்சாட்சிக்கு விரோதமாய்ச் செய்யப்படும் துர்க்குணங்களும் அக்கிரமங்களும் நிவிர்த்தியாகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். வறுமையும் வியாதியும் துன்பமும் ஆத்துமாவைக் கெடுக்கிற தீமைகள் அல்ல, அவைகள் ஆத்துமாவைப் பரீட்சிக்கிற தீமைகள். இவ்வித தீமை சிட்சை என்னப்படும். "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மனிதனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்

லுகிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக் கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையா திருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப் பீர்களே. அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார் கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர் கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோசனத் துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்" என்று வேதம் சொல்லு கிறது (எபி.12. 6—10).

ஆத்துமாவுக்குக் கேட்டையும் மரணத்தையும் உண்டாக்கு கிற தீமைக்கே அஞ்சவேண்டும். ஆகையினுல் "சகல தீமை யிலும் ஆபத்திலும் நின்றும், பாவத்திலும் பிசாசின் தந்திரங்க ளிலும் விரோதங்களிலும் நின்றும், தேவகோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும் ரட்சிக்கப்படும்படி" வித்தானியா ஜெபத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம்.

"அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னுக விளங் குவேன்" என்று யோபு சொன்னுர் (யோபு. 23. 10.). "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று ரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப் புநாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" (2 பேது. 2. 9.).

நம்மைக் கெடுக்கும் தீமையைத்தேட நாம் தூரம்போக வேண்டியதில்லை, அது நமக்குள்ளேயே இருக்கிறது. புறத்தி லும் உலகமயக்கத்தினுல் நம்மைக் கெடுக்கும்படி கெர்ச்சிக் கிற சிங்கம்போல் பிசாசானவன் திரிந்து அலைகிறுன். ஏவாளை வஞ்சித்தவன் அவனே. யூதாசைக் கெடுத்தவனும் அவனே. நெருப்பான அம்புகளை எய்து மனுமக்களின் ஆத்துமசேதத் தை நோக்கிக்கொண்டிருக்கிறவனும் அவனே. அவன் தே

வனுக்கும் மனுஷருக்கும் சத்துருவும், கொலைபாதகனுமா யிருக்கிறான். அந்தக் கொடியன் செய்யும் தந்திரங்கள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது. அவனை விரோதித்து எதிர்த்து நின்றாலொழிய அவன் நம்மை விட்டு நீங்கான். "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் என்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான். பொல்லாங்கன் அவனைத் தொடான்" என்று வேதம் சொல்லுகிறது. (1 யோ. 5. 18.) பிசாசின் மாயங்களுக்கும் தந்திரங்களுக்கும், உலகவழக்கங்களுக்கும் வழிபாடுகளுக்கும், மாம்சசிந்தைகளுக்கும் இச்சைகளுக்கும் விலகும்படி இந்த மன்றாட்டில் வேண்டிக்கொள்ளுகிறோம். தீமையான சிந்தை மனதில் அணுகாதபடி பரமசிந்தை அதற்குள் அமையவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலான தேவசமாதானம், நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதையும் காக்கவேண்டும். நரகத்தின் வேதனையினின்று ரட்சிக்கப்படவும் இந்த மன்றாட்டில் வேண்டிக்கொள்ளுகிறோம். "தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்" (1 தெச. 5. 9.). அதற்குத் தப்பிக்கொள்ள விரும்புகிறவர்கள் உருக்கமாய் இந்த மன்றாட்டைச் செய்யவேண்டும்.

நன்மைக்கு விக்கினமாயிருப்பதே தீமை. இது ஆதாம் செய்த தீவினையினால் விளைந்த கர்மவியாதி. இது பரமாத்துவுக்கும் ஜீவாத்துமாவுக்கும் உள்ள சம்பந்தத்தை நீக்கிப் பிரிவினையை உண்டுபண்ணுகிறது. தன்வினை தன்னையே சுடும். ஆகையால் தீமை உண்டென்று யாவரும் ஒப்புக்கொள்வார்கள். தன்னை அறிந்தவனெனும் தனக்குள்ள பாவத்தின் கொடுமையை உணர்ந்து பாவஅறிக்கை செய்வான். சித்தத்திலிருந்து பிறக்கும் இச்சையே தீமைக்கு ஆதாரம். ஐம்புலன்களும் அதற்குக் கருவிகள். ஒரு பொறிநெருப்பு ஒரு பெரிய காட்டைக் கொளுத்திவிடுவதுபோல நமக்குள் குடிகொண்டிருக்கிற ஒரு சின்னபாவம் பெரிய கெடுதியை உண்டாக்கும்.

தீமை வந்த வழி என்ன? தேவன் அதற்கு ஏன் இடங் கொடுத்தார் என்கிற கேள்விக்கு உத்தரவுசொல்ல ஒருவரா லும் கூடாது. இருள் இருக்கிறதுபோல தீமையும் இருக் கிறது. வெளிச்சம் இருளை நீக்குவதுபோல பரமநன்மை உலகதீமையை நீக்கும். பாவத்துக்கு இடங்கொடுத்த விமல நாதன் புண்ணியத்துக்கும் இடங்கொடுத்திருக்கிறார். பாவ மற்ற சற்குருவாகிய இயேசுநாதர் உலகத்தில் அவதரித்து பிராணத்தியாகஞ்செய்து, புண்ணியதத்தம்பண்ணி, ரட்சண் யத்தை உண்டாக்கினார். "ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிரு பையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத் தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவரா லே ஜீவனை அடைந்து ஆளுவார்கள் என்பது அதிக நிச்சயமா மே. ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவானதீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரேமனுஷனு டைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட் டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதி மான்களாக்கப்படுவார்கள். மேலும் மீறுதல் பெருகும்ப டிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்திலே கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது போல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏது வாக ஆண்டுகொண்டது" (ரோ. 5. 17—21).

சிலுவையின்மேல் இயேசுநாதர் உலகத்தின் பாவத்தை அறைந்து, தம்முடைய கல்லறையில் அதை அடக்கம்பண்ணி னார். "நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்க ளுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபர ராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை

நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களைமாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார் (1 யோ. 2. 1, 2.).

தீமைக்கு நிலையும் விடுதலையும் இன்னதென்று மாற்கு சுவிசேஷம் 7-ம் அதி. 21 வசனமுதல் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: "மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்தில் இருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்." பரிசுத்தஆவியினால் உண்டாக்கப்பட்ட புதியஆவிதான் இந்தத் தீட்டை நீக்கி, தான் என்கிற ஆணவத்தை அடக்கி, காயசுத்தி ஆத்மசுத்தி இரண்டையும் உண்டாக்கும். "சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்" (தீத். 1. 15.). ஆகையால் "நாம் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவர்களாயிருக்கப் பிரயாசப்பட்டு" (அப். 24. 16.), "நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணக்கடவோம்" (தீத். 2. 12.).

தீமையினின்று விடுதலைபெற்று சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரத்தைப் பெற்றுக்கொள்ள சர்வசிருஷ்டியும் தவிக்கிறது. "அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப்பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" (ரோ. 8. 23.).

நாம் சர்ப்பத்துக்குப் பயந்து அதை அணுகாதிருக்கிறது போல, பாவத்துக்குப் பயந்து அதை அணுகாதிருக்கவேண்டும். பாவத்தை உணர்ந்து, உத்தமமனஸ்தாபமுற்று, பாவ அறிக்கைசெய்து, அதை வெறுத்துத்தள்ளி, சோதனையில் பிரவேசியாதிருக்கவும் தீமையிலிருந்து ரட்சிக்கப்படவும், விழித்திருந்து ஜெபம்பண்ணக்கடவோம். ஆமென்.

## ஜெபம்.

ஆண்டவரே, இரக்கமுள்ள பரமபிதாவே, ஜீவனுள்ள எவனும் உமக்குமுன்பாக நீதிமான் அல்லாததினால், பாவிகளாகிய அடியாரை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். நியாயமாய் எங்களுக்கு வரவேண்டிய தீங்குகள் எல்லாவற்றையும் எங்களைவிட்டு விலக்கும். பலவிதமான கொடிய மோசங்களினால் சூழப்பட்டிருக்கிற நாங்கள் எங்கள் சுபாவ பலவீனத்தினால் நன்னெறியில் நிற்கத் திராணியற்றவர்களாயிருக்கிறோம். துன்பங்களும் இடுக்கண்களும் எங்களை வருத்தும்போதெல்லாம் எங்களைக் காத்து ரட்சித்து, பிசாசும் மனிதரும் எங்களுக்கு விரோதமாய் நடப்பிக்கும் உபாயதந்திரங்கள் யாவும் அவமாய்ப்போகும்படி செய்யும். சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும், பாவத்திலும் பிசாசின் தந்திரங்களிலும் விரோதங்களிலும் நின்றும், உம்முடைய கோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும் எங்களை ரட்சித்துக்கொள்ளும். எங்கள் அவசரம் தீரவும், உம்முடைய மகிமை விளங்கவும், நாங்கள் கேட்டுக்கொள்ளுகிற காரியங்களை எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கட்டளையிட்டருளும். ஆமென்.

# பத்தாம் பிரசங்கம்.

"ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்."

இது கர்த்தருடைய ஜெபத்தின் முடிவுரை. "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடியே (பிலி. 4. 6.), நாம் இந்த ஜெபத்தில் நம்முடைய பரமபிதாவை நோக்கி நம்முடைய விண்ணப்பங்களையெல்லாம் சொல்லி ஸ்தோத்திரத்தோடே முடிக்கிறோம்.

இந்த முடிவுரையில் வியர்த்தமான பதங்கள் ஒன்றுமில்லை. ஒவ்வொரு பதமும் பொருளுள்ளது. இதில் நாம் வேண்டிக் கொள்ளும் முகாந்தரங்களும் நியாயங்களும் இன்னதென்று விளங்குகிறது. சர்வலோகத்துக்கும் தேவன் ராஜாவும் அதிபதியுமாயிருக்கிறபடியால், ராஜ்யம் உம்முடையது என்று சொல்லுகிறோம். அவர் நம்முடைய மன்றாட்டுகளைக் கேட்டு, நமக்கு வேண்டிய நன்மைகளை அளிக்கத்தக்கவராகையால், வல்லமை உம்முடையது என்று சொல்லுகிறோம். நம்மைப் பாவத்தினின்று விடுதலையாக்கி இரட்சிப்பது அவருடைய மகத்துவத்தை விளக்குவிக்குமாகையால், மகிமை உம்முடையது என்று சொல்லுகிறோம். இந்த ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் அழியாமல் என்றென்றைக்கும் இருக்கும். இவை எல்லாவற்றையும் விசுவாசிக்கிறோம் என்பதற்கு முத்திரையாக இப்படியிருப்பதாக என்று அர்த்தங் கொள்ளும் *ஆமென் என்கிற எபிரேயு மொழியைச்சொல்லி இந்த ஜெபத்தை முடிக்கிறோம்.

---

* ததாஸ்து.

இந்த முடிவுரையிலுள்ள பதங்களில் தேவனுக்குரிய நான்கு லட்சணங்கள் விளங்குகிறது. ராஜ்யம் என்பதினுல் அவருடைய ஏகசக்ராதிபத்தியமும், வல்லமை என்பதினுல் அவருடைய சர்வசக்தியும், மகிமை என்பதினுல் அவருடைய மாட்சிமையும், என்றென்றைக்கும் என்பதினுல் அவருடைய நித்தியத்துவமும் விளங்குகிறது. அவருடைய ராஜ்யத்தில் அவர் சர்வத்தையும் ஆளுகிருர். அவருடைய வல்லமையினுல் அவர் சர்வத்தையும் ஆக்கவும்-காக்கவும், மீட்கவும்-ரட்சிக்கவும் கூடும். உலகத்திலுள்ள மகிமையெல்லாம் அவருடைய மகிமையின் நிழல். தேவமகிமைதான் எல்லாவற்றின் முடிவு. மனுஷர் இரட்சிக்கப்படுகிறதினுல் தேவன் மகிமைப்படுகிருர். இதுதான் பரமபுருஷார்த்தம் என்னப்படும். ராஜ்யம், வல்லமை, மகிமை இம்மூன்றும் என்றும் அழியாமல் நிற்கும். ஆதலால் பவுல் அப்போஸ்தலன் "கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" என்று சொல்லுகிருர் (2 தீமோ. 4. 18.).

ஆமென் என்கிற பதம் அறிவையும் உணர்வையும் நிச்சயத்தையும் உறுதியையும் பிறப்பிக்கும். நாம் கேட்கும் மன்ருட்டுகளை அறியாமலும் உணராமலும் கேட்போமானுல், ஆமென் என்று சொல்லுகிறது உண்மையைக் குறிக்காமல் அபத்தத்தைக்குறிக்கும். வார்த்தைக்கும் நடக்கைக்கும் சம்பந்தமிருக்குமானுல், ஆமென் என்பது ஒவ்வொரு மன்ருட்டுக்கும் ஏற்கும். "துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" (நீதி. 15. 8.). நாம் ஆமென் என்று சொல்லும்போது, இன்னும் இரட்சிக்கப்படத்தவிக்கிற சர்வசிருஷ்டியும் நம்மோடே ஆமென் என்று சொல்லும். நம்முடைய மன்ருட்டுகள் எல்லாம் ஆமென் என்கிற வாகனத்தின்பேரில் பரத்துக்குச் செல்லும். "சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு பரம ஜீவன்கள்,

மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும் போது, இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்குமுன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து: கர்த்தாவே, தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்" (வெளி. 4. 9—11.). அப்பொழுது "வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழும் இருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுள் அடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். அதற்கு நான்குஜீவன்களும் ஆமென் என்று சொல்லின. இருபத்துநான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள்" (வெளி. 5. 13, 14.). "இருபத்துநான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுதுகொண்டார்கள்" (வெளி. 19. 4.).

கர்த்தருடைய ஜெபத்தின் ஆதியில் பிதா என்கிற பெயரும் அந்தத்தில் ஆமென் என்கிற பெயரும் வழங்குகிறது. "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென்" என்பது இயேசுநாட்சகரின் திருநாமங்களில் ஒன்று (வெளி. 3. 14.).

பனித்துளிபோன்ற கர்த்தருடைய ஜெபத்தில் தேவனுடைய மகிமைக்கும் நம்முடைய நன்மைக்கும் வேண்டியவைகள் எல்லாம் அடங்கியிருக்கிறது. இந்த ஜெபத்தைப் பரமண்டலமந்திரம் என்றும், ஜெபமாலை என்றும், சுவிசே

ஷரத்தினச்சுருக்கம் என்றும், சுவிசேஷ சங்கிரகம் என்றும், விசுவாசசாரம் என்றும் சொல்லலாம்.

ஏகத்துவ தேவன் வேதத்தில் பிதா-குமாரன்-பரிசுத்தஆவி என்னும் திரித்துவமாய் விளங்கியிருக்கிறார். மனுஷருக்குள்ளும் ஆவி-ஆத்துமா-சரீரம் என்னும் திரித்துவம் உண்டு (1 தெச. 5. 23.). கர்த்தருடைய ஜெபத்தில் திரித்துவத்தைப் பற்றிய உபதேசம் விளங்குகிறது. எப்படியெனில், தேவ விஷயத்தில் உமது நாமம் பரிசுத்தப்படுவதாக என்பது பிதாவைப்பற்றிய மன்றாட்டு. உம்முடைய ராஜ்யம் வருவதாக என்பது குமாரனைப்பற்றிய மன்றாட்டு. உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்பது பரிசுத்தஆவியைப்பற்றிய மன்றாட்டு. மனுஷவிஷயத்தில் அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்குத் தாரும் என்பது படியளக்கும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிதாவைப்பற்றிய மன்றாட்டு. எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்பது தன்னுயிர்தந்து மன்னுயிரைமீட்ட உலகரட்சகராகிய தேவகுமாரனைப்பற்றிய மன்றாட்டு. சோதனையில் பிரவேசிக்கச் செய்யாமல் தீமையினின்று ரட்சித்துக்கொள்ளும் என்பது கிறிஸ்துவின் உத்தரவாத புண்ணியத்தை நமக்குப் பலிக்கச்செய்யும் பரிசுத்தஆவியைப்பற்றிய மன்றாட்டு. கிறிஸ்துநாதர் மனுஷஅவதாரம் செய்தபோது தேவநாமம் பரிசுத்தப்படத் தொடங்கினது. அதுமுதல் அவருடைய ராஜ்யம் வர ஆரம்பமாயிற்று. அவருடைய இரண்டாம் வருகையில் அவருடைய சித்தம் பூரணமாய்ப் பரமண்டலத்தில் செய்யப்படுகிறதுபோல பூலோகத்திலும் செய்யப்படும். இம்மை மறுமைக்கடுத்த இவைகள் நித்தியமன்றாட்டுகள். மற்ற மன்றாட்டுகள் இவ்வுலகத்துக்கும் இக்காலத்துக்கும் அடுத்தவைகள்.

I. முதலாவது இந்த ஜெபத்தின் முகவுரையிலுள்ள தெய்வ வணக்கத்திலே, கிறிஸ்து இயேசுவுக்குள் கிருபையினாலும் புத்திரசுவிகாரத்தினாலும் பிள்ளைகளான நாம் தேவனை நோக்கி: பிதாவே என்று சொல்லி, அன்புக்குரிய பயபக்தியோடே நம்முடைய மன்றாட்டுகளை அறிக்கையிடுகிறோம்.

II. (1.) உமது நாமம் பரிசுத்தப்படுவதாக என்பதினால், நாம் மனோவாக்குக்காயத்தினால் தேவனைப் பரிசுத்தமாய்த் தொழுது ஸ்தோத்திரித்து அவருடைய பரிசுத்த சொரூபமாகிய சாயலைத் தரித்துக்கொண்டு, அவரைப்போலப் பரிசுத்தராகும்படி மன்றாடுகிறோம்.

(2.) உமது ராஜ்யம் வருவதாக என்பதினால், சர்வத்தையும் ஆளும் அவருடைய வல்லமையின் ராஜ்யம் நிலைத்திருக்க, சத்திய சுவிசேஷப் பிரபலத்தினால் அவருடைய திருச்சபையாகிய கிருபையின் ராஜ்யம் எங்கும் வரும்படி மன்றாடுகிறோம்.

(3.) உமது சித்தம் செய்யப்படுவதாக என்பதினால், அந்தச் சித்தமே நமக்குரிய வேதப்பிரமாணமும், அதற்குக் கீழ்ப்படிவதே நமக்கடுத்த பாக்கியமும் என்று உணர்ந்து, நமக்குள்ளும் நம்மாலும் அந்தச் சித்தம் செய்யப்பட மன்றாடுகிறோம்.

(4.) அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும் என்பதினால், நமது ஜீவன் காப்பாற்றப்படும்பொருட்டு நம்முடைய சரீரத்துக்கு வேண்டிய ஆகாரத்துக்காகவும், நமது ஆத்துமா ரட்சிக்கப்படும்பொருட்டு அதற்கு வேண்டிய ஆகாரத்துக்காகவும் மன்றாடுகிறோம்.

(5.) எங்கள் குற்றங்களை மன்னியும் என்பதினால், பாவமன்னிப்பினால் சமாதானமும், சமாதானத்தினால் பேரின்பமும் ஆத்துமாவுக்கு உண்டாகும்படி மன்றாடுகிறோம்.

(6.) சோதனையில் பிரவேசிக்கச் செய்யாதிரும் என்பதினால், நாம் சோதிக்கப்படும்போது அவர்பேரிலுள்ள பற்றுதலினால் நமக்கு நேரிடும் சோதனைகள் சூரியனைக்கண்ட பனிபோல் நம்மைவிட்டு நீங்கி நன்மையாய் முடியும்படி மன்றாடுகிறோம்.

(7.) தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும் என்பதினால், ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும், இம்மைக்கும் மறுமைக்குமுரிய பாவம் பிசாசு உலகம் மரணம் என்னும் தீமைகளினின்று ரட்சிக்கப்பட மன்றாடுகிறோம்.

III. முடிவுரையினுல், தேவலட்சணங்களை முன்னிட்டு அவர் நமது மன்ருட்டுகளை எல்லாம் கேட்கத்தக்கவரென்று தகுந்த முகாந்தரங்கள்சொல்லி அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, ஆமென் என்னும் முத்திரையிட்டு ஜெபத்தைமுடிக்கிருேம்.

நமக்கு அவசியம் வேண்டியவைகள் எல்லாம் தேவனுக்குத் தெரிந்திருக்க, நாம் ஜெபம்பண்ணுகிறது அறியாதவருக்கு நம்முடைய காரியங்களை அறிவிக்கிறதுபோல இருக்கிறது என்று சொல்லலாகாது; நம்முடைய சுயமுயற்சிக்கும் சுய பிரயோசனத்துக்குமாகவே சர்வஞ்ஞருக்கு நம்முடைய வறுமைகளை வெளிப்படுத்துகிருேம். பிள்ளைகளின் மழலைச் சொல் பிதாவுக்குப் பிரியம்; அழுதபிள்ளை பால்குடிக்கும்.

இரண்டாவது: கர்த்தருடைய ஜெபத்திலுள்ள ஏழு மன்ருட்டுகளும் ஒவ்வொரு மனுஷனுடைய ஜீவகாலத்துக்குரிய சரித்திரத்தை விளக்கும். எப்படியெனில்,

(1.) பிள்ளையானது பிறந்தவுடனே பிதாவினுடைய நாமத்தையும் ஸ்தானத்தையும் அறிந்துகொண்டு, அப்பா பிதாவே, என்று சொல்லும்போது தகப்பனைப்போல பிள்ளை இருக்க வேண்டும் என்கிற உணர்வு பிறக்கும்.

(2.) பின்பு ஞானஸ்நானத்தின்வழியாய் திருச்சபைக்குட்படும்போது சாலோகபதவி அடைந்து ராஜ்யத்தில் பிரவேசிக்கும் சலாக்கியம் கிடைக்கும்.

(3.) பின்பு படிப்பினுலும் சிட்சையினுலும் தேவசித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளும் விவேகம் பிறக்கும்.

(4.) பின்பு வாலிபத்தில் வேலைசெய்து ஜீவனம்பண்ணி சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டிய ஆகாரத்தைச் சம்பாதிக்கவேண்டும் என்கிற கவலை உண்டாகும்.

(5.) பின்பு தப்பிதவறி பாவத்தில் விழுந்து வேதனை உண்டாகி கவலையுடன் மன்னிப்பைத் தேடுகிற குணம் உண்டாகும்.

(6.) பின்பு சமுசாரியாகி பற்பல சோதனைகளில் அடிபட்டு விழுந்து எழுந்து தன் பலவீனத்தை உணர்ந்து தேவ பலத்தை நாடுகிற குணம் உண்டாகும்.

(7.) பின்பு முதிர்வயதில் மரணம்வரைக்கும் நேரிடுகிற தீமைகளிலிருந்து தேவகிருபையினால் ரட்சிக்கப்படவேண்டும் என்கிற அபேட்சை உண்டாகும்.

(8.) இப்படி மன்றாடி மரித்தபின்பு வானவரோடுகூடி கிருபாசனத்தை நோக்கி: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் உமக்கே என்றென்றைக்குமுள்ளது என்று பாடி ஸ்தோத்திரிக்கும் சலாக்கியம் உண்டாகும்.

மூன்றாவது: இந்த ஜெபம் ஒவ்வொரு மனுஷனுடைய சரித்திரத்தைமாத்திரமல்ல, மனுஷஜாதியார் யாவருடைய சரித்திரத்தையும் விளக்கும். எப்படியெனில்,

(1.) மனுஷஜாதியின் ஆதிசரித்திரத்தின்படி ஆதாமின் குமாரனாகிய சேத்தின்காலத்தில் உத்தமர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் (ஆதி. 4. 26.).

(2.) பின்பு திருச்சபையாகிய ராஜ்யம் ஆபிரகாமுக்குள் ஆரம்பமாயிற்று.

(3.) பின்பு தேவதிருவுளமாகிய வேதம் மோசேயின் வழியாய்க் கொடுக்கப்பட்டது.

(4.) பின்பு கிறிஸ்துநாதர்மூலமாய் பரத்தின் மன்னாவாகிய ஜீவஅப்பம் மனுமக்களுக்குக் கிடைத்தது.

(5.) பின்பு கிறிஸ்துநாதருடைய கட்டளையின்படி அப்போஸ்தலர் உலகம் எங்கும் போய்க் கிறிஸ்துவின் நாமத்தில் பாவமன்னிப்பு உண்டு என்று பிரசங்கித்தார்கள்.

(6.) பின்பு பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேல் எங்கும் சோதனைகாலம் வரும் என்று கண்டிருக்கிறது (வெளி. 3. 10.).

(7.) கடைசியில் தீமையும் துன்பமும் ஒழிந்து விடுதலை உண்டாகி, எல்லாம் ஒரேமேய்ப்பனுக்குள் ஒரேமந்தையாகும்.

(8.) அப்பொழுது பரிசுத்தவான்கள் கர்த்தரை நோக்கி: என்றென்றைக்கும் ஆமென் அல்லேலூயா என்று பாடித் துதிப்பார்கள்.

நான்காவது: கர்த்தருடைய ஜெபத்திலுள்ள ஏழு மன்றாட்டுகளையும், கர்த்தர் மலையின்மேல்பண்ணின பிரசங்கத்தின்

முதல் ஏழு வசனங்களிலுள்ள ஏழு பாக்கியங்களுக்கும் ஒப்பிடலாம். எப்படியெனில்,

(1.) "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்பதினால், தேவ அருளினால் ஆவியில் எளிமை உள்ளவர்கள் பிதாவின் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துகிறார்கள்.

(2.) "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்" என்பதினால், உலகத்தில் அல்ல, திருச்சபையாகிய ராஜ்யத்தில் பாவத்தினால் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் உண்டு (மத். 11. 28—30.).

(3.) "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" என்பதினால், தேவசித்தம் சாந்தகுணமுள்ளவர்களுக்கே விளங்கும்; சுதந்தரமும் அவர்களுடையதே (சங். 25. 9: யோ. 7. 17.).

(4.) "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தி அடைவார்கள்" என்பதினால், தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறவர்களுக்குச் சரீரஆகாரமும் ஞானஆகாரமும் பூரணமாய்க் கிடைக்கும்.

(5.) "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என்பதினால், மன்னிக்கிறவர்களுக்கே மன்னிப்புக்கிடைக்கும் (மத். 6. 14, 15.).

(6.) "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்பதினால், பரிசுத்த இருதயமுள்ளவர்களே சோதனையினின்று தப்புவார்கள்; சோதனையினால் களிம்புநீங்கி ஆத்துமசுத்தி உண்டாகும்.

(7.) "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்பதினால், தீமை ஒழியும்போது சமாதானம்பெற்றிருக்கும் உள்ளம் தேவாலயமாகும்.

இவைமுதலான வேதசம்பந்தங்களினாலே கர்த்தருடைய ஜெபத்தின்மாட்சிமை விளங்கும். இந்த ஜெபம் சப்தரத்

தினங்களுள்ள பொற்பாத்திரம். அதிலுள்ள பொருளைக் கவனிக்கும்போது சர்வஞானமுள்ள இயேசுநாதர் ஒருவரே இந்த ஜெபத்தை மனிதர்களுக்குப் படிப்பிக்கத்தகும் என்று விளங்கும்.

சகோதரரே, என்னால் இயன்றமட்டும் இந்த ஜெபத்தின் பொருளை உங்களுக்கு எடுத்துக் காண்பித்தேன். இந்த ஜெபத்தைச் சொல்லுகிறவர்கள் அதின்படி நடப்பார்களானால் எவ்வளவு பாக்கியவான்களாயிருப்பார்கள்.

பரமபிதாவை நோக்கி இந்த ஜெபத்தைச் சொல்லுகிறவர்களே, நீங்கள் பிதாவுக்குப் பிள்ளைகளானால், உங்களுக்கு நீடித்த வாழ்வுண்டாக அவரில் அன்புகூர்ந்து அவரைக் கனம் பண்ணுங்கள். அவருடைய நாமத்தைச் சொல்லி ஜெபம் பண்ணுகிற அவருடைய மற்றெல்லாப் பிள்ளைகளையும் சகோதரராக எண்ணி, அவர்களிலும் அன்புகூர்ந்து பிதாவினிமித்தம் அவர்களையும் கனம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் பத்துக்கற்பனைகளையும் கைக்கொள்ளுவீர்கள்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்புகூர்வாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூர்வதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளில் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்று ரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார்" (மத். 22. 37—40.).

தாய்தகப்பன்மார்களே, இந்த அருமையான ஜெபத்தின் பொருளை அறிந்துணர்ந்து இதைப் பிரார்த்திப்பதுமன்றி, உங்கள் பிள்ளைகளுக்கும் படிப்பித்து உணர்த்துங்கள்; இது உங்கள் கடமை. இந்த ஜெபத்தைப் படிப்பித்தவர்தாமே நமக்கு ஜெபத்தின் ஆவியை அளித்து, இந்த ஜெபத்தில் விளங்கிய சத்தியத்தின்படியே நடக்க அநுக்கிரகஞ்செய்வாராக. ஆமென்.

# ஜெபம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, ஒன்றான மெய்த்தேவனே, சர்வவல்லமையுள்ள தந்தையே, ஒன்றான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற ஒன்றான பரிசுத்தஆவியே, உம்முடைய பிள்ளைகளாகிய எங்கள்மேல் இரங்கி, உமக்குள் எங்கள் எல்லாரையும் ஒருமைப்படுத்தியருளும்.

உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, நீர் ஒன்றான கர்த்தராயிருக்கிறீர், உம்முடைய நாமமும் ஒன்று, உம்முடைய நாமத்தினால் அழைக்கப்பட்டிருக்கிற எங்கள் எல்லார்மேலும் இரங்கி முற்றுமுழுதும் உம்மில் எங்களை ஒருமைப்படுத்தியருளும்.

உம்முடைய ராஜ்யம் வருவதாக, நீதிக்கும் சமாதானத்துக்கும் ராஜாவே, உம்முடைய ராஜ்யத்தில் எங்களைச் சேர்த்து வெளிப்படையாகவும் அந்தரங்கமாகவும் உம்மில் எங்களை ஒருமைப்படுத்தியருளும்.

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக, காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று உமக்குள்ளே தீர்மானித்திருந்த உம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்த கர்த்தாவே, அந்த உமது திருச்சித்தத்துக்கு எங்களை இணங்கப்பண்ணி உம்மில் எங்களை ஒருமைப்படுத்தியருளும்.

அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும், அநேகராயிருக்கிற நாங்கள் உமக்குள் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறபடியால், ஒரே அப்பத்தில் புசிக்கிற எங்களை நாளுக்குநாள் உமக்குள் ஒருமைப்படுத்தியருளும்.

எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும், உம்முடைய திருச்சரீரத்தைச் சின்னபின்னப் படுத்தினவர்களுக்காக "பிதாவே அவர்களுக்கு மன்னியும்" என்று சொன்னவரே, உம்முடைய ஞானசரீரத்தின் ஒருமையைச் சின்னபின்னப்படுத்த நாங்கள் செய்த பற்பல குற்றங்களையும் எங்களுக்கு மன்னித்து, நாங்கள் ஒருவரையொருவர் மன்னித்து, ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து உம்மில் ஒருமைப்படக் கிருபைசெய்தருளும்.

எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாதிரும், உமக்கு நேரிட்ட சோதனைகளில் உம்முடைய அப்போஸ்தலர்களை உம்மிடத்தில் தங்கித் தரிக்கும்படி அவர்களைக் காத்தவண்ணம், எங்களுக்கு நேரிடுகிற எல்லாச் சோதனைகளிலும் எங்களைக் காத்து உம்மிடத்தில் தங்கித் தரித்து உமக்குள் எப்பொழுதும் ஒருமைப்படக் கிருபைசெய்தருளும்.

தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், குற்றஞ்சாற்றுகிற சத்துருவினின்றும், பகையிலும் பொறாமையிலும் நின்றும், அகங்காரத்திலும் அடங்காமையிலும் நின்றும், உபதேச தப்பறையிலும் சபைப்பிரிவினையிலும் நின்றும், சண்டையிலும் போரிலும் நின்றும், உம்முடைய சபையை வருத்தப்படுத்தும் மற்றெல்லா அக்கிரமத்திலும் நின்றும் எங்களைக் காத்து ரட்சித்து உம்மிலே எங்களை ஒருமைப்படுத்தியருளும், ஸ்வாமி. ஆமென். (யோ. 17. 20, 23.).

## கர்த்தருடைய ஜெபம்.

கர்த்தாவே, உமதன்புக்கு
துதிஉண்டாவதாக,
அடியார்விசுவாசித்து
பிழைக்கும்படியாக
இங்கும்முடைய உன்னத
பேர்நாமம்மகிமைப்பட
இராச்சியமும்வர.

ஆ, உம்முடைய சித்தமே
செய்யப்படுவதாக,
படியைத்தாரும், கர்த்தரே,
கடன்களை அன்பாக
மன்னித்துச்சோதனைகளை
விலக்கிப்போட்டுத்தீமையை
நிவிர்த்திபண்ணும், ஆமென்.

(பெப்ரீசியுஸ் ஐயர்.)

---

பரமண்டலங்க ளிருக்குமெங்கள்
பிதாஉன்னாமம் * அர்ச்சிக்கப்
படஉன்றனின்ராச் சியம்வருகப்
பரத்துன்சித்தஞ் செய்வதுபோல்

தரைமண்டலத்துஞ் செய்யநித்தந்
தரும்எம்அப்பம் இன்றெமக்குந்
தாருமெங்கள் கடன்காரர்
தமக்குநாங்கள் பொறுப்பதுபோல்

நிறைகொண்டெமக்கும் பொறுத்துவிடும்
நெடுஞ்சோதனைக்குட் படப்புரியாய்
நீக்கித்தீங்கை இரட்சைசெயும்
நிலைராச்சியம்வல் லபமகிமை

உரைகொண்டுமக்கென் றென்றைக்குமே
உண்டாயிருக்கு தாமெனன
ஓதச்செபத்தின் முறைமையெமக்
குரைத்தாய்வேதத் தொருமுதலே.

(வேதநாயக சாஸ்திரி.)

---

* அர்ச்சித்தல்=பூசித்தல்.

சிலுவையின்மேல் இயேசுநாதர் சொன்ன

ஏழு வசனங்களைப்பற்றிய

# பிரசங்கங்கள்.

## பதினோராம் பிரசங்கம்.

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்களே" என்றார். லூக். 23. 34.

இது இயேசுநாதர் சிலுவையின்மேல் தொங்கும்பொழுது சொன்ன முதல்வசனம். அவரைச் சிலுவையில் அறைந்து, அவர் கைகளிலும் கால்களிலும் ஆணிகளைக் கடாவினபோது இதைச் சொன்னார். இதை விண்ணப்பத்தின் சத்தம் என்று சொல்லலாம்.

இயேசுநாதர் சிலுவையின்மேல் ஏழு வசனங்களைச் சொன்னார். இந்த வசனங்கள் முறையே, தம்முடைய சத்துருக்களையும், குணப்பட்ட ஒரு பாவியையும், தம்முடைய தாயாரையும், தாம் சிநேகித்த சீஷனாகிய யோவானையும், தம்மையும், தம்முடைய பரமபிதாவையும் குறித்துச் சொல்லப்பட்டது.

ஒருவர் மரணநேரத்தில் சொல்லும் சொற்களை இனத்தார் பந்துக்கள் முதலானவர்கள் விசேஷமாய்க் கவனிப்பதுண்டு. மனுஷரில் ஒருவனும் ஒருக்காலும் பேசாதவர்போல் பேசின நம்முடைய அருமை ரட்சகர் சிலுவையின்மேல் மரணநேரத்தில் சொன்ன சொற்களைத் தமது அடியார் கவனித்து, அவற்றின் அரும்பொருளை அறிந்துகொள்வது அவசியமான காரியம் அல்லவா?

அவர் சொன்ன வசனங்கள் ஏழு, அவையாவன:—

1. "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்களே" என்பது சத்துருக்களைக் குறித்துச்சொன்ன முதல் வசனம்.

2. "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று குணப்பட்ட கள்ளனுக்குச் சொன்னது இரண்டாம் வசனம்.

3. "தம்முடைய தாயாரை நோக்கி: ஸ்திரீயே, அதோ உன் மகன் என்றும், தமக்கு அன்பான சீஷனை நோக்கி: அதோ உன் தாய்" என்றும் சொன்னது மூன்றாம் வசனம்.

4. "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்னும் அர்த்தமுள்ள, ஏலீ, ஏலீ, லாமா சபக்தானி" என்று தம்முடைய ஆத்துமபாடுகளைக்குறித்துச் சொன்னது நான்காம் வசனம்.

5. "தாகமாயிருக்கிறேன்" என்று தம்முடைய சரீரப்பாடுகளைக்குறித்துச் சொன்னது ஐந்தாம் வசனம்.

6. "முடிந்தது" என்று அவருடைய மரணத்தைக்குறித்துச் சொன்னது ஆறும் வசனம்.

7. "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று ஜீவனையும் அழியாமையையுங்குறித்துச் சொன்னது ஏழாம் வசனம்.

இவ்வேழு வசனங்களில் (1) பாவமன்னிப்பையும், (2) குணப்படுதலையும், (3) பெற்றோர் உற்றாருக்குச் செய்யவேண்டிய கடமைகளையும், (4) தேவபற்றையும், (5) வேதமொழி உண்மையையும், (6) திருவருளின் பூரணத்தையும், (7) அடக்க ஒடுக்கத்தையும் குறிப்பாய்ச் சொல்லியிருக்கிறது.

பரம ரகசியமான ஞானஉபதேசங்கள் சிலுவையின்மேல் மொழிந்த இவ்வேழு வசனங்களில் விளங்கும், (1) இதிலே கிறிஸ்துவினால் உண்டாகும் பாவவிமோசனமும், (2) பக்தருக்குக்கிடைக்கும் சாலோக பதவியும், (3) திருச்சபைக்கு உண்டாகும் இன்பதுன்பங்களில் சபையாருக்குரிய ஆறுத

லும், (4) கிறிஸ்துவின் பாடுகளினாலும் மரணத்தினாலும் விளங்கும் நீதியும் இரக்கமும், (5) மறைமொழியினால் நிறைமொழிமாந்தர் வாக்கு உண்மைபெறுதலும், (6) கிறிஸ்துவின் ரட்சிப்பு பாவிகளுக்குப் போதுமான ரட்சிப்பு என்பதை விளக்கும் ரட்சிப்பின் பரிபூரணமும், (7) உயிர்த்தெழுதலினால் மறுமைக்குரிய ஜீவனையும் அழியாமையும் குறிக்கும் பேரின்ப பதவியும் அடங்கியிருக்கிறது.

வேதம் ஏழுகாரியங்களைக் குறிக்கும்போது பூரணத்தொகையைக் குறிக்கும். சிலுவையின்மேல் சொன்ன இவ்வேழு வசனங்களையும், கர்த்தருடைய ஜெபத்தில் அடங்கிய ஏழு விண்ணப்பங்களுக்கும், தேவாலயத்தில் எரிந்த ஏழு குத்து விளக்குகளுக்கும் ஒப்பிடலாம். இவ்வேழு வசனங்களினால் சிலுவையானது, (1) நமது ராஜனுடைய சிம்மாசனமும், (2) நமது பிரதான ஆசாரியருடைய பலிபீடமும், (3) நமது பரம குருவினுடைய கிருபாசனமும், (4) நமது புண்ணிய நாதருடைய நியாயாசனமும், (5) நமது வெற்றிவேந்தருடைய ஜெயஸ்தம்பமும், (6) நமது ரட்சகருடைய விருதுக்கொடியும், (7) நமது தேவனுடைய செங்கோலுமாயிருக்கிறது.

"பிதாவே இவர்களுக்கு மன்னியும் [பொறுத்தருளும்], தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார்.

ஆத்துமஞானத்தை நாடுகிறவர்கள் சிலுவையின் அடியில் வந்து அந்த ஞானத்தைக் கற்கவேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதையும், கிறிஸ்துவின் மரணத்தினால் பாவம் நாசமாகி, புண்ணியம் விளங்கினது என்பதையும் சிலுவையினாலேயே கற்றுக்கொள்ளவேண்டும். "மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; கோதுமைமணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" என்று ரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிற வசனம் (யோ. 12. 23, 24.) சிலுவையினால் உண்மைபெறும்.

பலியிடுதல், விண்ணப்பம்பண்ணுதல், ஆசீர்வதித்தல் ஆகிய இம்மூன்றும் பிரதானஆசாரியனுக்குரிய முத்தொழில். இந்த முத்தொழிலையும் இரட்சகர் சிலுவையில் நடத்தியிருக்கிறார். "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி [தத்தம்பண்ணி] அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம், அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஏசா. 53. 12.). "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று யூதஜனங்கள் இரட்சகரைக்குறித்துச் சொல்லி, தாங்கள் செய்கிறது இன்னதென்று உணராமல், தங்கள்மேல் சாபத்தைக் கூறிக்கொண்டார்கள். இந்த பயங்கரமான சாபத்தை நிவிர்த்திசெய்யும்பொருட்டு, இந்த வசனத்தை இரட்சகர் சொன்னார். அதை எப்பொழுது சொன்னார் என்று கவனித்துப்பாருங்கள். அவர் சொல்லிமுடியாத ஆத்துமவேதனைபட்டு, படுபாவிகளால் குற்றவாளி என்று தீர்க்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, பாரமான சிலுவையைச் சுமந்து, அந்தச் சிலுவையின்மேல் ஆணிகளால் கடாவப்பட்டு, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும்போதே இந்த வசனத்தைச் சொன்னார். அவர் முறையிடவில்லை, ஒருவரையும் நிந்திக்கவில்லை, ஒருவரையும் சபிக்கவில்லை; தமக்காக அல்ல, தமது சத்துருக்களுக்காக வேண்டிக்கொண்டார். அந்தப் பாவிகள் செய்த கொடுமையைப்பற்றி என்னசொல்லலாம். உலகமுடிவுபரியந்தம் தங்களைவிட்டு எடுபடாத பழிபாவத்துக்குள்ளாகி, தங்கள்மேலும், தங்கள் ராஜ்யத்தின்மேலும் தேவகோபாக்கினை வரும்படி, நீதிபரனுக்குச் செய்யத்தகாத காரியத்தைச் செய்யத் துணிந்தார்கள். அவர்கள் அவரை இன்னாரென்று அறிய இடம்இருந்தும் அறிந்துகொள்ளவில்லை. அவரைச் சிலுவையில் அறையும் பாதகத்தினால் வினையும் தண்டனையையும் அறிந்துகொள்ளவில்லை. ஆகையால் அவர்கள்

தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளுகிற தீமைகள் இன்னதென்று அறியார்களே என்று அன்புள்ள ரட்சகர் அவர்கள் பாவத்தையும் துரோகத்தையும் பாராமல் சொல்லுகிறார். அவர் சத்தியத்தைச் சொல்லி, நன்மையைச்செய்து, நீதியைக் கைக்கொண்டு, இரக்கத்தைப் பாராட்டி அன்பை விளங்கப் பண்ணினபடியால், யூதஜனங்கள் அவரைப் பகைத்தார்கள். இப்படிப்பட்ட பகைஞரைக்குறித்தே கர்த்தர்: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று வேண்டிக்கொண்டார். அவர் பாவமற்றவர் என்பதற்கும், பாவநாசர் என்பதற்கும், புண்ணியநாதர் என்பதற்கும், அன்பின் சொரூபி என்பதற்கும் இந்த விண்ணப்பமே போதந்த திருஷ்டாந்தம். அந்தக் கொடிய யூதர்களை சத்துருக்கள் என்றும், கொலைபாதகர் என்றும் சொல்லாமல், இரக்கமுள்ள ரட்சகர் "இவர்களுக்கு மன்னியும்" என்றுமாத்திரம் சொல்லுகிறார். அவரைக் கொலைசெய்த பாதகராகிய எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறார். அவரைக் கொலைசெய்தவர்கள் யார்? யூதர்கள், உலகத்தார் என்பவர்கள்மாத்திரமோ? நாம் எல்லாரும் அவரைக் கொலைசெய்தோம். நம்முடைய பாவமே அவரைக் கொலைசெய்தது. பாவமில்லாத அவர் நமக்காகப் பாவமாகி, அவருடைய மரணத்தினால் நமக்கு நித்தியஜீவன் உண்டாகும்படி சிலுவையின் பாடுகளைச் சகித்தார். எப்படிப்பட்ட கொடிய நெஞ்சினராயினும், கொடுந்துரோகிகளாயினும், அப்படிப்பட்டவர்களுக்காகவே அன்பைப் பெருக்கி நமது ஆருயிரைக் காக்கவந்தவர், தமது ஜீவனைப் பாவம்போக்கும் பலியாகக் கொடுத்து, தாமே அவர்களை முந்தி மன்னித்து, பின்பு பிதாவை நோக்கி: பிதாவே, அவர்களுக்கு மன்னியும் என்று அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார். "தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று அவர்களுடைய குற்றத்தை அடக்கிச் சொல்லுகிறார். மெய்தான், ஒருபட்சத்தில் அறியாதிருந்தார்கள். அவருடைய தத்துவம் இன்னதென்றும், அவருடைய ராஜ்யம் இன்னதென்

றும், அவர் வந்த நோக்கம் இன்னதென்றும் அறியாதிருந்தார்கள். முன் அறியாதிருந்த அவர்கள் இப்போதாவது அறிந்து குணப்பட்டு விசுவாசித்து ரட்சிக்கப்படும்படி இப்படி வேண்டிக்கொண்டார். இப்படி அவர் வேண்டிக்கொள்ளாதிருப்பாரானால், அவர்களும் நாமும் உலகமும் கெட்டழிந்துபோம்படி நேரிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படியிருக்க, "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடு எதிர்பார்க்குதலும் விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் என்று அறிந்துகொள்ளுங்கள்" (எபி. 10. 26, 27.).

இரட்சகர் சிலுவையின்மேல் பிரதான ஆசாரியருக்குரிய முத்தொழிலையும் நிறைவேற்றினாரென்று சொன்னோம். அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கினார். நமது பலவீனங்களுக்காகப் பரிதபித்தார். நமக்காக தம்மைத்தாமே பலியிட்டார். நமக்காக விண்ணப்பம்பண்ணினார். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" என்று அவர் திருவுளம்பற்றின உபதேசத்தை விளங்கப்பண்ணும்படி (மத். 5. 44, 45.) சிலுவையின்மேல் இந்த வசனத்தைச் சொன்னார். இப்பொழுது அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் நமக்காக வேண்டிக்கொள்ளுகிறார். சகோதரரே, நீங்கள் செய்யவேண்டியது என்ன? "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்க

ளைவிட்டு நீங்கக்கடவது, ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4. 31. 32.). இப்படிச் செய்தால் இரட்சகருக்குச் சிநேகராயிருப்பீர்கள்.

நம்முடைய மரணநேரத்தில் இந்த விண்ணப்பத்தை நாம் நினைவுகூர்ந்து, நாம் கர்த்தருக்கு விரோதமாகச் செய்த பாவத்திற்குமாத்திரமல்ல, நமக்கு விரோதமாக மற்றவர்கள் செய்த பாவத்திற்காகவும் வேண்டிக்கொள்ளவேண்டும். நம்முடைய மரணநேரத்தில் இரட்சகர் சிலுவையில் பட்ட பாடுகளையும் அடைந்த மரணத்தையும் நினைத்து, மனதில் பகையை வைத்துக்கொண்டு மரணமடையாமல், உத்தமமனச்சாட்சியினால் உண்டாகும் சமாதானத்தோடே மரணமடையும்படிக்குக் கிறிஸ்துவின் அன்பும் அவருடைய நல்மாதிரியும் நம்மை ஏவவேண்டும். அந்த வேளையில் நீதியும் இரக்கமும் கலந்து நின்று, இரக்கம் மேற்கொள்ளவேண்டும். பாவிகளின் பாவத்தைப் பொறுத்தருளி, அவர்களை இரட்சிக்கவே கிறிஸ்துநாதர் உலகத்தில் அவதரித்தார். முன்பு அவர்கள் பாவத்தை அவர் பொறுத்துக்கொண்டு, பின்பு பிதாவை நோக்கி அவர்களுக்காக மன்றாடினார். அப்படியே நாமும் பாவிகள் நமக்கு விரோதமாய்ச் செய்த பாவத்தை முன்பு பொறுத்துக்கொண்டு, பின்பு பிதாவை நோக்கி, கிறிஸ்துஇயேசுவின் உத்தரவாத புண்ணியத்தை முன்னிட்டு, "அவருடைய மனவேதனை இரத்தவேர்வையினிமித்தமும், அவருடைய சிலுவைப்பாடுகளினிமித்தமும், அவருடைய அருமையான மரணத்தினிமித்தமும்" அவர்களுக்காக மன்றாடவேண்டும்.

# பன்னிரண்டாம் பிரசங்கம்.

"இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். லூக். 23. 43.

இது சிலுவையின்மேல் கர்த்தர் சொன்ன இரண்டாம் வசனம். முதலாம் வசனம் விண்ணப்ப வசனம், இரண்டாம் வசனம் வாக்குத்தத்த வசனம்; சிலுவையில் பிறந்த முதலாம் சத்தம் ஜெபத்தின் சத்தம், இரண்டாம் சத்தம் இரக்கத்தின் சத்தம்; முதலாவது அருளையும், இரண்டாவது அநுக்கிரகத்தையும் குறிக்கும். முதல் வசனம் கிருபையின் ராஜ்யத்தையும், இரண்டாம் வசனம் மகிமையின் ராஜ்யத்தையும் பற்றும். முந்தின வசனத்தில் இரட்சகர் பிரதான ஆசாரியராய்த் தமது ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணுகிறார்; பிந்தின வசனத்தில் ராஜாவாய் அவர்களை மகிமைப்படுத்துகிறார். சிலுவையில் சத்துருக்களுடைய எண்ணங்கள் மாறினதும் அன்றி, தேவனுடைய நோக்கங்களும் விளங்கியது. சிலுவையின் நிந்தை விந்தையாய் முடிந்தது.

இந்த அதிகாரத்தின் 35-ம் வசனமுதல் 42-ம் வசனம் வரைக்கும் வாசிக்கக் கேளுங்கள்:

இரட்சகரோடு இரண்டு கள்ளர் சிலுவைகளில் அறையப்பட்டார்கள்; ஒருவன் அவிசுவாசத்தினால் இறுகினான், மற்றவன் விசுவாசத்தினால் உருகினான்; ஒருவன் இகழ்ந்தான், மற்றவன் புகழ்ந்தான்; ஒருவன் கெட்டழிந்தான், மற்றவன் இரட்சிக்கப்பட்டான்.

வியாகுலமும் மரணமும் நேரிட்டிருக்கும்போது முகஸ்துதிக்கும் நயவசனத்துக்கும் இடம் இராது. அந்தச் சமயத்தில் இந்தக் கள்ளன் பழித்த தன் தோழனைக் கண்டித்து, இரட்

சகனை நோக்கி: "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான். இதில் அவனுடைய உத்தம குணப்படுதலும், சத்திய அறிக்கையும், உருக்கமான விண்ணப்பமும் விளங்குகிறது. குணப்பட்ட கள்ளன் சொன்னவசனம் ஆச்சரியமான வசனமாயிருந்தாலும், இரட்சகர் சொன்ன வசனம் அதிலும் அதிக ஆச்சரியமாயிருக்கிறது. இரட்சகர் அவனை நோக்கி: "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று திருவுளம்பற்றினார். இதில் இரட்சகருடைய பூரணகிருபையும் சிலுவைக்குரிய விசேஷித்த மேன்மையும் விளங்குகிறது. சிலுவையானது கிருபாதாரப் பலிபீடமும், அருள் அளிக்கும் சிம்மாசனமுமாயிருக்கிறது. சூரியன் இருண்டதும், பூமி அதிர்ந்ததும், மலைகள் பிளந்ததும், கல்லறைகள் திறந்ததும், அப்பொழுது நடந்த பெரிய ஆச்சரியங்களாயினும், இந்தக் கள்ளன் குணப்பட்டது அவைகளிலும் பெரிய ஆச்சரியமல்லவோ?

இடம்-பொருள்-ஏவல்-காலம் எல்லாவற்றையும் கவனிக்கும்போது, இந்தக் கள்ளனுடைய விசுவாசம் பெரிதென்றே சொல்லவேண்டும். அது சத்துருக்கள் மும்மரித்த வேளையும், அந்தகாரம் தன் அதிகாரத்தைச் செலுத்தும் நேரமுமாயிருந்தது. இரட்சகர் பூலோகத்தில் சஞ்சரித்தபோது மறைந்திருந்த அவருடைய மகிமை அடிக்கடி தோன்றினது. அவருடைய வாக்கிலும் செய்கையிலும் கிருபையும் சத்தியமும் இடைவிடாமல் விளங்கினது, அவைகளை அநேகர் கேட்டும் கண்டும் இருந்தார்கள். இந்தக் கள்ளனோ அவைகளைக் கண்டும் கேட்டும் இருக்கமாட்டான். அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றவேளையில் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தபோது, இந்தக் கள்ளன் அங்கேயிருந்து அந்த அசரீரிவாக்கைக் கேட்டதில்லை. அவர் கானாஊர் கலிலேயாவிலே முதலாம் அற்புதத்தைச் செய்து தமது மகிமையை விளங்கப்பண்ணினபோது, இந்தக் கள்ளன் அங்கேயிருந்து அந்த அதிசயத்தைக் கண்டதில்லை.

அவர் இபேரியாக் கடலோரத்தில் ஐந்து அப்பங்களினால் ஐயாயிரம்பேரைப் போஷித்தபோது இந்தக் கள்ளன் அங்கேயிருந்து அந்த ஆச்சரியத்தைக் கண்டதில்லை. அவர் பெத்தானியா ஊரில் மரித்துப்போன லாசருவை எழுப்பினபோது, இந்தக் கள்ளன் அங்கேயிருந்து அந்த அதிசயத்தைக் கண்டதில்லை. அவர் தாபோர் மலையின்மேல் மறுரூபமாகி, அவர் முகம் சூரியனைப்போல் பிரகாசித்து, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல் வெண்மையானபோது, இந்தக் கள்ளன் அங்கேயிருந்து அந்தக் காட்சியைக் கண்டதில்லை. பின்னை எங்கே கண்டான்? "ஒரு சீஷனால் காட்டிக்கொடுக்கப்பட்டு, இன்னொரு சீஷனால் மறுதலிக்கப்பட்டு, யாவராலும் கைவிடப்பட்டு, கொல்கதாமலையில் சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது, இந்தக் கள்ளன் அவரைக் கண்டான். இரட்சகருடைய கடைக்கண்பார்வை அவன்மேல்பட்டு, அருளும் பொருளும் அவன் உள்ளத்தில் உதித்து, இருளும் மருளும் நீங்கி, தன்னை மறந்து பரவசமாகி, தன் இருதயத்தின் பரிபூரணத்திலிருந்து: "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான். பிரதான ஆசாரியர்களும் அதிகாரிகளும் அவரை எத்தன் என்று இகழ்ந்திருக்க, பேதுரு அவரை அறியேன் என்று மறுதலித்திருக்க, "நசரேயனாகிய இயேசு தேவனுக்குமுன்பாகவும் ஜனங்கள் எல்லாருக்குமுன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்" என்றுமாத்திரம் அவருடைய சீஷர்கள் அவரைக்குறித்துச் சொல்லியிருக்க, இந்தக் கள்ளன்: ஆண்டவரே, கர்த்தாவே, ராஜ்யத்தைஉடைய ராஜாவே என்று சொல்லுகிறான். அவரை ஆண்டவரே என்று சொன்னதினால் தன்னை அவருக்கு அடியான் என்று காண்பித்தான். அழியாமல் எரிகிற முட்செடியைக்கண்டு மோசே விசுவாசித்தான்; கர்த்தருடைய மகிமையைக் கண்டு ஏசாயா விசுவாசித்தான்; கர்த்தருடைய அற்புதங்களைக் கண்டு அப்போஸ்தலர்கள் விசுவாசித்தார்கள். இவன் என்னத்தைக்கண்டு விசுவாசித்தான்? இந்த பக்தி இவ

னுக்கு எப்படி வந்தது? அவரை மேசியா என்றும், மகிமையின் ராஜா என்றும் எப்படி அறிந்துகொண்டான்? என்னை மரணத்தினின்று விடுவியும் என்று அவன் வேண்டிக்கொள்ளாமல், என்னை நினைத்தருளும் என்றுமாத்திரம் வேண்டிக்கொண்டான். இது அருமையும் உரிமையுமான விண்ணப்பம். ஆண்டவர் நினைத்தருளாவிட்டால் பாவிகளுக்கு இரட்சிப்பு இல்லை. அவர் பிதாவின் சந்நிதானத்தில் தமது உத்தரவாத புண்ணியத்தை முன்னிட்டு நமக்காகப் பரிந்துபேசி, நம்மை நினைத்தருளுகிறார். இந்தக் கள்ளன் செய்த விண்ணப்பம் நாம் எல்லாரும் செய்யத்தக்க விண்ணப்பம். இதனால் அவனுடைய பக்தியும் விசுவாசமும் அன்பும் விளங்குகிறது. எபிரெயர் நிருபம் பதினோராம் அதிகாரத்தில் கண்டிருக்கிற உத்தமவிசுவாசிகளுடைய கூட்டத்தோடு இந்த உத்தமவிசுவாசியையும் சேர்த்து அவர்களுக்குச் சமமாக இவனை மதிக்கலாம்.

கள்ளன் இந்த விண்ணப்பத்தைச் செய்யும்போது, இரட்சகர் சிலுவையின் நிந்தையையும், அகோரமான பாடுகளையும் சகிக்கிறவராயிருந்தார். அப்படியிருந்தபோதிலும், "என்னை நினைத்தருளும்" என்று அவன் சொன்னபோது, அவர் தம்முடைய பாடுகளின் பலனைக் கண்டு, ஆவியில் களிகூர்ந்து, பாவம் அதிகமாய்ப் பெருகியிருந்தவனிடத்தில் கிருபை அதிலும் அதிகமாய்ப் பெருகியிருக்கும்படி, "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசில் இருப்பாய்" என்று திருவுளம்பற்றினார். இப்படி யாருக்காவது அவர் சொன்னதுஉண்டா? தம்மிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் வந்து தங்கள் காரியத்தை அறிவித்தபோது அவர்களுக்கு இரக்கமும் உருக்கமுமான தகுந்த உத்தரவுகளை அநுக்கிரகித்தார். கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய நாத்தான்வேல் அவரை நோக்கி: "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், இஸ்ரவேலின் ராஜா" என்று சொன்னபோது, கர்த்தர் அவனை நோக்கி: "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் காண்பாய்" என்று திருவுளம்பற்றி

ஞர். "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து" என்று சீமோன்பேதுரு அறிக்கைசெய்தபோது, அவர் "யோன ஞவின் குமாரனுகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோ கத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினூர். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிருய்; இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டு வேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தரு வேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பர லோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட் டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்" என்று திருவுளம்பற்றினூர். கானூனிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: "ஆண்டவரே, எனக்கு இரங் கும்" என்று தன் மகளுக்காக வேண்டிக்கொண்டாள். அவ ளுடைய விசுவாசத்தைச் சோதிக்கும்பொருட்டு "பிள்ளைக ளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குக் கொடுக்கிறது நல்லதல்ல" என்று சொன்னூர். அதற்கு அவள்: "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்க ளின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" என்று சொன்னபோது, அவர்: "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறது உனக்கு ஆகக்கடவது" என்று திரு வுளம்பற்றினூர். நூற்றுக்கதிபதியாகிய ரோமதேசத்தான் ஒரு வன் அவரிடத்தில் வந்து, வியாதிப்பட்ட தன் வேலைக்கா ரனுக்காக வேண்டிக்கொண்டதின்பேரில், அவர்: "நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன்" என்று சொல்ல, அவன்: "ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று சொன்னபோது, அவர் அவனைக்குறித்து: "இஸ்ரவேலருக் குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவி ல்லை" என்று சொல்லி, அவனை நோக்கி: "நீ போகலாம்,

நீ விசுவாசித்தபடி உனக்காகக்கடவது" என்று திருவுளம் பற்றினார். அவர் நற்கருணையாகிய ராப்போஜனத்தை ஏற்படுத்தும்போது தமது சீஷர்களை நோக்கி: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லை" என்று திருவுளம்பற்றினார். இவைகள் எல்லாம் விசேஷித்த காரியங்கள்தான். என்றாலும், "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று இந்தக் கள்ளன் ஒருவனுக்குமாத்திரம் திருவுளம்பற்றினார். அவர் வேதனைப்படும்போது இவன் குணப்பட்டு அவரைப் பற்றிக்கொண்டபடியால் உடனே அவருடைய புண்ணியத்துக்குரியவனானான்.

இந்தக் கள்ளன் குணப்பட்டதினால் பேயின் வயிரமும் சத்துருக்களின் பகைமையும் நிர்மூலமாயிற்று; பாவமும் புண்ணியமும் சிலுவையில் விளங்கினது. கர்த்தர் திருவுளம் பற்றின அமிர்தவாக்கு கள்ளனுடைய காதில்பட்டு அவன் உள்ளத்தில் பதிந்தபடியால், அவனுடைய ஆவி ஆபிரகாமின் மடியென்னப்படும் பரதீசாகிய பேரின்பவாழ்வை அடைந்தது.

இந்தக் காரியத்தைக் கவனிக்கும்போது சில நல்ல படிப்பினைகள் தோன்றும்.

1. கடைசிநேரமாகிய மரணத்தறுவாயில் குணப்படுவது அரிது. இந்தக் கள்ளன் உண்மையாய்க் குணப்பட்டு மெய் விசுவாசமுள்ளவனாயிருந்தபடியால் இவனுக்கு இந்தக் கிருபை கிடைத்தது; கடைசிநேரத்திலும் பாவி குணப்படலாம் என்பதற்கு இந்த ஒரு திருஷ்டாந்தம் வேதத்தில் உண்டு; இதுவே போதுமான திருஷ்டாந்தம். *

2. கிறிஸ்துவின் சிலுவை பூமியில் நாட்டப்பட்டபோது, கெருபீன் காவல் நீங்கி பரதீஸ் திறக்கப்பட்டு ஜீவவிருட்சம் வெளிப்பட்டது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாத

---

* "One was saved upon the cross that none might despair; and only one that none might presume."

ருடைய சுவிசேஷம் பாவிகளுக்குப் பிரசங்கிக்கப்படும் போது இந்த இரண்டு கள்ளருடைய திருஷ்டாந்தத்தின்படி சிலருக்கு அது ஜீவவாசனையாகவும், சிலருக்கு அது மரணவாசனையாகவும் பலிக்கிறதுண்டு. கிறிஸ்துவின் சிலுவைக்குக் கவர்ச்சிசக்தி உண்டு: "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" என்று இரட்சகர் தாம் அடையப்போகிற சிலுவையின் மரணத்தைக்குறித்துச் சொல்லியிருந்தார். கல்விப் பெருமையை நாடி, உலகஞானத்தைப் பற்றிக்கொண்டு, சுயபுண்ணியத்தை நம்பினவர்களாகிய பரிசேயர் முதலானவர்கள் அகங்காரமாய் வெறுத்த சிலுவையானது விசுவாசமும் அன்புமுள்ள கள்ளனுக்குப் பரகதியளித்தது. மண்ணோடு கலந்திருக்கும் இரும்புப் பொடிகளைக் காந்தமானது இழுத்துக்கொள்வதுபோல், சிலுவையும் தனக்குரியவர்களைத் தன்னிடமாக இழுத்துக்கொள்ளும்.

"பொய் வளரும் நெஞ்சினர்கள் காணுத காட்சிதனை
மெய் வளரும் நெஞ்சினர்கள் கண்டு களித்திடுவர்."

3. "ஆண்டவரே, என்னை நினைத்தருளும்" என்கிற இந்த விண்ணப்பத்தை எப்போதும் நினைவில் வையுங்கள். அவர் உங்களை மறக்கிறவர் அல்ல. "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை" என்று இரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார் (ஏசா. 49. 15.).

4. சகோதரரே, "இதுவே அநுக்கிரககாலம், இதுவே இரட்சணியநாள்" என்று உணர்ந்து, "ஆண்டவரே, என்னை நினைத்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணி, "என்னை நினைக்கிறதற்காக இதைச் செய்யுங்கள்" என்று இரட்சகர் திருவுளம் பற்றினதையும் நினைவுகூருங்கள்.

"என்னை அற்ப நேரமும் மறக்கிலாத நாதனே,
ஏகனே, இறைவனே, ராஜ ராஜ ராஜனே!
உன்னை அற்ப நேரமும் ஒழிந்திருக்க லாகுமோ?
உனது நாட்டம் எனது நாவில் உதவிசெய்யும் ஈசனே."

# பதின்மூன்றும் பிரசங்கம்.

"இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார்; சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்." யோ. 19. 26, 27.

இது சிலுவையின்மேல் கர்த்தர் சொன்ன மூன்றும் வசனம்.

யோவான் அப்போஸ்தலன் சிலுவையினிடத்திலே நடந்த சங்கதிகளில் ஒன்றையும் விடாமல் அவைகளையெல்லாம் எழுதியிருக்கிறார்.

"இயேசுவின் சிலுவையின் அருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும் மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்."

"இயேசுவின் சிலுவையின் அருகே" என்பது அருமையான சொற்கள். சிலுவையின் அருகே மன்னுயிர்க்கு வேண்டிய நன்மைகளெல்லாம் இருக்கிறது. சிலுவையில் கிறிஸ்து நாதர் பாடுபடும்போது சராசரம் எல்லாம் ஒடுங்கி நடுங்கிநின்றது. இரட்சகரைப் பற்றியிருந்த சீஷர்முதலானவர்கள் தலைகாட்டாமல் அகன்றுபோனார்கள். அத்தருணத்தில் மகதலா மரியாளும், கிலெயோப்பா மரியாளும், கன்னிமரியாளும், யோவான் அப்போஸ்தலனும் துணிந்துவந்து சிலுவையின் அருகே நின்றார்கள். "அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்?" ஸ்திரீகளுக்குரிய அனுதாபம் இதனால் விளங்குகிறது; துன்பகாலத்தில் புருஷர்கள் பாராட்டாத உருக்கத்தை ஸ்திரீகள் பாராட்டுவார்கள். ஸ்திரீகளுக்குரிய பாசமும் பற்றும் அதிகம். சிலுவையின் அருள்நிழலில் அவர்கள் வந்துநின்றபடியால் பலவீன பாண்டங்களாகிய அவர்களிடத்திலும் தெய்வபலம் விளங்கினது.

அன்பென்னும் பாசத்தினுல் யோவான் கட்டப்பட்டிருந்தபடியால், அந்த அன்பே அவனைச் சிலுவையின் அருகே கொண்டுவந்தது. மகதலாமரியாள் உணர்ந்த நன்றியே அவளிடத்தில் உறுதிபெற்று சிலுவையின்அருகே அவளைக்கொண்டு வந்தது. கிலெயோப்பா மரியாளிடத்தில் குடிகொண்டிருந்த பொறுமையும் உரிமையும் அவளைச் சிலுவையின் அருகே கொண்டுவந்தது. பாக்கியவதியான கன்னிமரியாளிடத்தில் விளங்கின அன்பும் அருளும் அவளைச் சிலுவையின் அருகே கொண்டுவந்தது. சிலுவையினிடத்தில்மாத்திரம் அல்ல, கல்லறையினிடத்திலும் முந்தி துணிந்துவந்து கர்த்தரை முதல் முதல் தரிசித்தவர்கள் ஸ்திரீகளே. கன்னிமரியாள் விமலநாதனைப் பத்துமாதம் சுமந்து அங்கமெல்லாம் நொந்துபெற்ற தாயானபடியாலும்; அவரை நோக்கி, என் மகனே என்று சொல்லும் சிலாக்கியத்தைப்பெற்று, "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது" என்று சொல்லத்தக்க பாக்கியவதியாயிருந்தபடியாலும், தாயாகிய அந்த அம்மாளுக்குரிய அன்பும் அருளும் சிலுவையின் அருகே விளங்கினது.

"உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" என்று தேவாலயத்தில் முப்பத்துமூன்று வருஷத்துக்குமுன்னே சிமியோன் சொன்ன வசனத்தைத் தன் உள்ளத்தில் அடக்கிக்கொண்டிருந்த தாய்க்கு இப்பொழுது அதின் பொருள் பூரணமாய் விளங்கினது. வியாகுலமாதா தன் மகன் படும் பாடுகளைப் பார்த்துநின்று, அவளுடைய இருதயத்தில் அவருடைய ஜீவசுரூபம் உருவாகும்படி வேதனைப்பட்டாள் என்பதற்குச் சந்தேகமில்லை. அந்த அம்மாள் வெகுநேரம் சிலுவையின் அருகேநின்று மனவேதனைப்பட்டது கொஞ்சநஞ்சமல்ல; உள்ளமெல்லாம் பொங்கினுலும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை, களைத்து சோர்ந்து விழவுமில்லை; தன் கையை முறுக்கி, தன் மார்பில் அடித்துக்கொண்டு, தன் மயிரைப் பிய்த்து, தன் வஸ்திரத்தைக் கிழித்து, அலங்கோலமாய் மண்ணைவாரி இறைத்து, பகைஞரை வைது சபிக்கவுமில்லை.

பேசாமல் அமர்ந்திருந்து, தன் சஞ்சலத்தை வெளியிடாமல் பொறுமையுடன் உள்ளமெல்லாம் உருகிப் பற்றியெரிய அசையாத விளக்குபோல் அமைந்திருந்தாள். வியாகுலம் அந்தக் குணசாலியைப் பட்சித்துப்போடத்தக்கதாயிருந்தா லும், அன்பு அந்த வியாகுலத்தை அடக்கிநின்றது.

பழைய ஏற்பாட்டின்காலத்தில் தேவசன்னதம் விளங்கின உடன்படிக்கைப் பெட்டியை பெலிஸ்தர் கொண்டுபோய் விட்டபோது, பூரணகர்ப்பிணியாயிருந்த பினேகாசின் மனை வி அதைக் கேள்விப்பட்டு, துக்கத்தால் பிள்ளைபெற்று மரண மடைந்தாள்; ஏலி விழுந்து கழுத்துமுறிந்து செத்தான். தன் குமாரனும் இரட்சகருமாகிய கிருபையும் சத்தியமும் நிறைந்த மெய்யான உன்னத உடன்படிக்கைப் பெட்டியானவர் சத்து ருக்களால் பிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்ட போதும், அதைக் கண்டுநின்ற தேவமாதா, இயேசு பாலகன் பிறந்தபோது தான் சொன்னபடியே, "இதோ நான் ஆண்ட வருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்று தன் மனதில் சொல்லியிருப்பாள்.

"இயேசு தம்முடைய தாயையும், அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தமது தாயை நோக்கி, ஸ்திரீயே, அதோ உன் மகன்" என்றார். சிலுவையில் சொல் லப்பட்ட இரண்டாம் சத்தம் தெய்வசத்தம், இது மனுஷ சத்தம், "இது உன்னத சிநேகந்தான், இது அன்பின் ஆழங் கள்."

தாயே என்கிற மதுரமொழி சொன்னால் தன்னைச் சுமந்த கெர்ப்பம் பொங்கி வியாகுலம் அதிகமாகுமென்று, அந்த ஜனங்களுக்குள்ளே அம்மாள் என்று அர்த்தங்கொண்டு மரி யாதையாய் வழங்கின பொதுப்பதத்தை வழங்கி, "ஸ்திரீயே" என்று சொன்னார். கானாவூரிலே கலியாணம் நடந்தபோது இயேசுவின் தாயார், அவரால் அற்புதஞ் செய்யப்படும் என்று அறிந்து, திராட்சரசம் இல்லை என்று சொன்னபோது, "ஸ்திரீ யே எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னம் வர வில்லை" என்று சொல்லி, அற்புதத்தைச் செய்து, தன் மகிமை

யை விளங்கப்பண்ணினுர். அப்பொழுது தன் தெய்வீகத்தை முன்னிட்டுப்பேசினுர். "என் வேளை" அதாவது, உன்னிடத்திலிருந்து எடுத்த இந்தச் சரீரத்துக்குரிய பலவீனத்தின் நேரம், உன்னை யாவருக்குமுன்னும் அங்கீகரித்து அறிக்கையிடும் காலம் இன்னும் வரவில்லை என்ருர். சிலுவையின்மேல் அவர் தம்முடைய தாயாரிடத்தில் பேசும்போது, உனக்கும் எனக்கும் என்ன என்று சொல்லவில்லை. என் வேளை இன்னும் வரவில்லையென்றும் சொல்லவில்லை. அந்த வேளை அப்பொழுது வந்துவிட்டது. பாடுபட்டு மரணமடையப்போகிற அவருடைய சரீரத்துக்கும் அதனைச் சுமந்துபெற்று வளர்த்த தாயாருக்கும் இருக்கும் சம்பந்தம் விளங்குகிற சமயம் வந்து நேரிட்டது. அந்தச் சம்பந்தம் விளங்கி அற்றுப்போகிற நேரமும் இதுதான். மேலும் அவர் ஸ்திரீயே என்று சொன்ன வார்த்தையில் ஒரு பரமரகசியமும் உண்டு. "ஸ்திரீயின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார்" என்னும் ஆதி வேதவசனம் நிறைவேறும்படி இந்த வார்த்தையையே சொன்னுர் (ஆதி. 3.15.). அதோ, உன் மகன் என்று சொன்னதால், தன்பேரிலிருந்த மனுஷஜன்மத்துக்குரிய கடமையைக் கழித்துக்கொள்ளுகிருர். அந்த அம்மாளை அவர் கைவிடுவதில்லை. அவருடைய ஜீவசுரூபம் அந்த அம்மாளுடைய உள்ளத்தில் பதிந்திருக்கிறது. ஆனுலும் அவர் சரீரத்தின்படி உலகத்தைவிட்டுப் போகிறவரானபடியால், தம்முடைய அன்புள்ள சிஷன்கையில் அந்த அம்மாளைப் பராமரித்துப் பாதுகாக்க ஒப்புவிக்கிருர். அந்த அம்மாள் ஸ்திரீகளுக்குள்ளே என்றைக்கும் பாக்கியவதிதான், பெண்களுக்குள்ளே நாயகிதான் என்று இதனுல் விளங்குகிறது. இரட்சகர் தம்முடைய தாயாரை யோவானிடத்தில் ஒப்புவித்ததினுல், நாம் நம்முடைய தாய்தகப்பன்மாரைக் கனம்பண்ணவேண்டும் என்றும், அவர்கள் பராமரிப்புக்கு வேண்டிய வழிவகைகளைக்குறித்துக் கவலைப்படவேண்டும் என்றும், நமக்கு நல்ல படிப்பினையைக் கற்பித்திருக்கிருர். "இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படி

யான் தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்'' (யோ. 13. 1.).

பின்பு அந்தச் சீஷனைநோக்கி: அதோ, உன் தாய் என்றார். தம்முடைய மார்பில் சாய்ந்து தமக்கு அன்புள்ளவனுயிருந்த சீஷனிடத்தில்தானே தன் தாயை ஒப்புவிக்கவேண்டும்; இது தகுதியான காரியம். தம்மைப்போல யோவானும் அன்பில் சிறந்தவர். பேதுரு அப்போஸ்தலன் கிறிஸ்து என்னும் நாமத்துக்குரியவரின் சிநேகிதன், அவரிடத்தில் கர்த்தர் தமது சபையை ஒப்புவித்தார். யோவான் அப்போஸ்தலன் இயேசு என்னும் நாமத்துக்குரியவரின் சிநேகிதன், அவரிடத்தில் கர்த்தர் தமது தாயாரை ஒப்புவித்தார். சிலுவையின் அருள் நிழலின்கீழ் யோவான் வந்து நின்றதினுல் இந்த சிலாக்கியம் அவருக்குக் கிடைத்தது. ஞானசம்பந்தத்தின்படி இயேசு நாதருக்குச் சீஷனுனவர் சரீரசம்பந்தத்தின்படி இயேசுநாதருக்குத் தோழனுனர். கன்னித்தாய் கன்னிகுமாரனுல் கன்னிசீஷனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டாள். அதுமுதல் அந்தச் சீஷன் அந்த அம்மாளைத் தன்னிடமாக ஏற்றுக்கொண்டான். பின்பு அந்த அம்மாளைப்பற்றி ஒரு காரியமாத்திரம் வேதத்தில் எழுதியிருக்கிறது; அப்போஸ்தலருடைய நடபடி 1. 14ல் கண்டிருக்கிறபடி, "எருசலேமில் சீஷர்கள்கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்த மேல்வீட்டில் மற்ற ஸ்திரீகளோடு இந்த அம்மாளும்கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தாள்'' என்பதே இந்த அம்மாளைக்குறித்து வேதத்தில் கடைசியாய்ச் சொல்லியிருக்கிற விசேஷம். சரித்திரக்காரர் அந்த அம்மாள் பின்பு பதினைந்துவருஷகாலம் உயிரோடிருந்து பரகதியடைந்தாள் என்று சொல்லுகிருர்கள்.

சிலுவையின்மேல் சொன்ன இந்த வசனம் மனுஷீகத்துக்குரிய கர்த்தருடைய மரணசாதகம் என்று சொல்லலாம்.

இந்த வசனத்தினுல் சுகதுக்கங்களுக்குரிய சரீரசம்பந்தத்தைப்பார்க்கிலும், ஆத்துமஆநந்தத்துக்குரிய ஞானசம்பந்தமே

விசேஷித்ததென்று விளங்குகிறது. ஜந்மபிறப்பு அல்ல, மறுபிறப்பே பரத்துக்குரிய விசேஷித்த ஜந்மம். ஆதலால் கர்த்தர் "என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" என்றார் (மத். 12.48—50.).

இந்தச் சங்கதியினால் இரண்டொரு நல்ல படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம்.

1. நாம் அதிகமாய்ப் பற்றிக்கொண்டிருக்கிற இன்பங்கள் துன்பமாய் முடிகிறதுமுண்டு.

முப்பத்துமூன்று வருஷகாலமாய்த் தன் குமாரனைப்பற்றி மரியம்மாள்கொண்டிருந்த நம்பிக்கையும் இன்பமும் சிலுவையிலே வியர்த்தமும் துன்பமுமாய் முடிந்தது. அந்த வியாகுலத்தில் சோதனைக்காரன் அந்த அம்மாளிடத்தில் வந்து: நீ பிள்ளைப்பெறுமுன்னே தேவதூதன் உன்னை நோக்கி: கிருபைபெற்றவளே, வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று மங்களவார்த்தை சொன்னானே, அது மெய்யல்ல, இதோ அது பொய்யாய் முடிந்ததே. கர்த்தர் உனக்கு நன்மைசெய்தார் என்று நீயும் ஆநந்தக்களிப்பு பாடினாயே (லூக். 1. 46—50.), அது எல்லாம் வீணாய்ப் போயிற்றே. உன் பாக்கியம் எங்கே, உன் நம்பிக்கை எங்கே? சிமியோன் உன்னை நோக்கி: "இதோ, அநேகருடைய இருதயசிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார், உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" என்றானே (லூக். 2. 34, 35.). அதுமாத்திரம் உண்மையாய் முடிந்தது என்று பரியாசமும் நிந்தையுமாய்ச் சொல்லியிருப்பான். நம் ஒவ்வொருவு

ருடைய அநுபவத்திலும் இன்பம் துன்பமாய் முடிகிறதைக் காண்கிறோம் அல்லவா?

2. என்றாலும், நமக்கு அதிகமாய் நேரிடுகிற துன்பங்கள் நமக்கு நன்மையாய் முடிகிறதுமுண்டு.

சோதனைகள் துன்பங்கள் வியாகுலங்கள் நமக்கு நேரிட்டால், அவைகள் தீர்ந்து பேரின்பமாய் முடிவதுமுண்டு. சிலுவையின்மேல் தன் மகனை நோக்கிப்பார்த்த மரியம்மாள் இந்தக் காட்சி என்னமாய் முடியுமோ என்று வியாகுலப்பட்டாள். இப்பொழுதோ மகிமையான சிங்காசனத்தில் வீற்றிருக்கிற இரட்சகரைப்பற்றி: "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐஸ்வரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்று வானவரெல்லாரும் போற்றிப் பாடுகிறதைக்கேட்டு, அந்த அம்மாள்: நான் பாக்கியவதிதான், நான் பெற்றமகன் சிலுவையிலறையப்பட்டு மரித்தவரானாலும், இப்பொழுது மகிமைபொருந்திய ஜீவனுள்ள ரட்சகராய் இருக்கிறாரே என்று போற்றிப்புகழ்ந்து ஆநந்தகளிப்படைவாள் அல்லவா? நாமும் நம்முடைய துன்பங்களைப் பொறுமையாய்ச் சகித்து தேவசித்தத்துக்கு உட்பட்டிருப்போமானால், நம்முடைய துன்பங்களெல்லாம் இன்பமாய் முடியும் என்பதற்குச் சந்தேகமில்லை.

# பதிநான்காம் பிரசங்கம்.

"ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி என்றார்: அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அர்த்தமாம். மத். 27. 46.

இது இயேசுநாதர் சிலுவையின்மேல் சொன்ன நாலாம் வசனம். ஏழு வசனங்களில் இது கடினமானது, மனிதனுடைய புத்திக்கு எட்டாதது. இந்த ஒரு வசனமாத்திரம் கல்தேயபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற ஆறு வசனங்களும் அக்காலத்தில் சாதாரணமாய் வழங்கின கிரேக்குபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனம் 22-ம் சங்கீதம் முதல் வசனத்தில் எழுதியிருக்கிறது.

மத். 27. 39—49-ம் வசனம் வரைக்கும் வாசிக்கக் கேளுங்கள்:

பூமியெங்கும் உண்டாயிருந்த அந்தகாரம் பௌர்ணமிகாலத்தில் நடுப்பகலில் சம்பவித்து மூன்று மணிநேரம் இருள் எங்கும் நிறைந்திருந்தது. வெளியே இருந்த அந்தகாரத்துக்கும் இயேசுநாதருடைய உள்ளத்திலிருந்த வியாகுலத்துக்கும் சம்பந்தம் இருந்தது. தேவன் பாடுபடுகிறபடியால் சராசரம் அனைத்தும் அவருடன் பாடுபடுகிறது. சூரியன் இந்தக் காட்சியைப் பார்க்கக்கூடாமல் தன் முகத்தை மூடிக்கொண்டது. காரிருள் எங்கும் நிறையவே, சில உலகஞானிகள் ஆதிசேஷன் சூரியனைத் தீண்டினதினால் சூரியகிரகணம் உண்டானது என்றும், உலகத்தில் ஏதோ ஆபத்து நடக்கிறது, தேவன் தான் பாடுபடுகிறாரோ, அல்லது தேவபக்தரில் யாரேனும் ஒருவர் பாடுபடுகிறாரோ தெரியவில்லை என்றும் சொல்லிக் கொண்டார்களாம்.

இயேசுநாதர் உலகத்தின் பாவத்தையும் பழியையும் சாபத்தையும் நிந்தையையும் சுமந்து சகிக்கும்போது இந்த வசனத்தைச் சொன்னார். பின்பு அந்தகாரம் விட்டது.

மனிதருடைய மனோவாக்குக்கெட்டாத பொருளுள்ள இந்த வாக்கியத்துக்கு வியாக்கியானம் யாரால் சொல்லிமுடியும்! மோசே, அழியாமல் ஜுவாலித்துப் பற்றியெரிகிற முட்செடியைக் கண்டபோது, தன் பாதரட்சைகளைக் கழற்றி, முசாவினயத்துடன் வணங்கிநின்றதுபோல, நாமும் வணங்கிநின்று, தேவஆவியின் உதவியை முன்னிட்டு, நாம் கிரகிக்கக் கூடியமட்டும் இதன் பொருளை கிரகித்துக்கொள்வோமாக.

இந்த வார்த்தையின் பொருளைக் கவனிக்குமுன் உலகத்தில்நடந்த ஆச்சரியமான விசேஷங்களைக் கவனித்துப்பார்ப்போம்:

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபோது மூன்று மணிநேரம் சூரியன் இந்தக் காட்சியின்மேல் பிரகாசித்தது. மனிதர்செய்த ஆக்கினைகள் எல்லாம் பட்டப்பகலில் செய்யப்பட்டது. போர்ச்சேவகர் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். கள்ளர் அவரை நிந்தித்தார்கள். வழிப்போக்கர் தங்கள் தலைகளைத் துலுக்கிப் பழித்தார்கள். வானமும் பூமியும் எப்பொழுதும்போல் தன் நிலையில் தன் இயல்பின்படி நடந்தது. கொலைபாதகர் தாங்கள் செய்யும் காரியம் சரியான காரியமென்று நினைத்து, தங்கள் எண்ணம் நிறைவேறினதென்று களிப்படைந்தார்கள். அவருடைய பாடுகள் பூரணப்படவே, திருவுளம் கலங்கினது, சராசரம் அனைத்தும் அசைந்தது, பூமி நடுங்கினது, மலைகள் பிளந்தது; உச்சியிலிருந்த சூரியன் இதையெல்லாம் பார்க்கக்கூடாமல் தன்னை மறைத்துக்கொண்டது; அந்தகாரப்போர்வை பூமியின்மேல் போடப்பட்டது. அப்பொழுது பாதகர்நெஞ்சு கலங்கி பயந்தது, அவர்கள் ஒடுங்கி நின்றார்கள், ஒருவனும் போய்விடவில்லை, துணிந்து பேசவும் இல்லை. தூஷணமும் நிந்தையும் அடங்கினது; விழுகிற இரத்தத்துளிகளின் சத்தமும் பெருமூச்சின் சத்தமும்மாத்திரம் கேட்கப்பட்டது. சிலர் பிரமித்து ஏதோ ஆச்சரியம் நடக்கப்போகிறது பார்ப்போம் என்று நினைத்து நின்று பார்க்கிறார்கள். பன்னிரண்டு மணிக்குத் தொடங்கின அந்தகாரம் மூன்றுமணிமட்டும் வாங்காமல்

இருந்தது. இரட்சகருடைய பாடுகள் பூரணப்பட்டபடி யால் தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரையில் இரண்டாகக் கிழிந்தது. இந்த அடையாளங்களினால் வானத்துக்கும் பூமிக்கும், பிதாவுக்கும் சுதனுக்கும் இருக்கிற சம்பந்தம் விளங்குகிறது. ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும் அல்லவா? இந்த வெளியரங்கமான அடையாளங்கள் அவருடைய உள்ளத்தின் வேதனைகளுக்கு ஒத்திருந்தது. "நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்றும், "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்னசொல்லுவேன்: பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ, ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன் என்றும் என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம்கொண்டிருக்கிறது." "அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும். இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவதென்றும்" சொன்னகாரியங்கள் இப்பொழுது வந்து நேரிட்டிருக்கிறது. அவர் ஆலையைத் தனியே மிதித்து உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்த்தார்.

ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி என்பதற்கு, என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். இதன் பொருள் என்ன? அவர் நரகவேதனைகளைச் சகித்தார், ஆகையால் இவ்வார்த்தைகளைச் சொன்னார் என்று சிலர் சொல்லுவார்கள். அப்படிச் சொல்வது சரியல்ல; ஏனெனில், குற்றமுள்ள மனச்சாட்சியே நரகவேதனைக்குரியது; அப்படிப்பட்ட வேதனை பாவத்தை அறியாத விமலநாதரைப் பற்றாதே. இந்த வசனத்தைச் சொன்னபோது அவர் பிதாவின் கோபாக்கினையைச் சகித்தார் என்று சிலர் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லவும்கூடாது; ஏனெனில், அவரிடத்தில் பிதாவானவர் எப்பொழுதும் பிரியமாயிருந்தபடியால், அவருடைய கோபாக்கினையைச் சகிப்பதெப்படி?

பிதாவினால் முற்றிலும் அவர் கைவிடப்பட்டபடியால் இந்த வசனத்தைச் சொன்னார் என்று சிலர் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லவும் கூடாது; ஏனெனில், அவரும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள். "இயேசுவானவர் தமது சீஷர்களை நோக்கி: இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங் காலம் வரும். அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆகிலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார் என்றும் (யோ. 16. 32.), நான் என் ஜீவனை அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறதினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்" என்றும் (யோ. 10, 17.) அவர் தாமே திருவுளம் பற்றினாரே. தெய்வீகத்துக்குரிய அந்நியோந்நிய ஐக்கியம் பிதாவையும் சுதனையும் விட்டுப் பிரியவில்லை. தெய்வீகத்துக்கும் மனுஷீகத்துக்குமுரிய பிரத்தியட்சசாட்சிமாத்திரம் மறைந்திருந்தது. பிதா அவருடைய அன்பை கொஞ்சநேரமும் அவரைவிட்டு விலக்காமல் இருந்தாலும், அவருடைய ஆறுதலை அவரை விட்டு விலக்கியிருந்தார்.

இயேசுநாதர் பயத்தினால் இந்த வசனத்தைச் சொன்னார் என்றும் சொல்லலாகாது. ஏனெனில், பயத்துக்குரிய இலட்சணம் அவருக்குள் இருந்ததில்லை. அவர் கெத்சமனே என்கிற தோட்டத்தில் ஆத்துமபாடுபட்டபோது, அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது என்று வாசிக்கிறோம் (லூக். 22. 44.). இதற்குக் காரணம் என்ன? மனோவாக்குக்கெட்டாத வியாகுலத்தினால் இரத்தத்திற்கு ஆதாரமாகிய அவருடைய இருதயம் உடைந்து இரத்தம் வெளிப்பட்டு ஜலத்தோடு கலந்து வடிந்தது. பயம் இரத்தத்தை இருதயத்துக்குள் அடக்கிக்கொள்ளும்; அன்பினால் இருதயம் மலரும்போது இரத்தம் வெளிப்பட்டு முகக்களையில் விளங்கும்.

பின்னை இந்த வசனத்தின் கருத்து என்னவென்று நாம் கவனித்தறியவேண்டும். சொல்லிமுடியாத மூன்று இக்கட்டுகள் இரட்சகருக்கு அப்பொழுது நேரிட்டிருந்தது.

1. அவருக்கிருந்த மனுஷசுபாவத்திற்குரிய பலவீனத்தையும், நமக்குரிய பாவஜந்ம சுபாவத்தின் கொடுமையையும் அவர் சகிக்கவேண்டியிருந்தது.

2. கொடுங்கோல் அரசனாகிய மரணத்துக்கு அதிபதியானவன் அவரை அழித்து அவருடைய ராஜ்யத்தை நாசம் பண்ணும்படி தன் வல்லமையையெல்லாம் அவர்பேரில் செலுத்தியிருந்தபடியால், அந்தக் கொடுமையை அவர் சகிக்கவேண்டியிருந்தது.

3. தமது நேசகுமாரன் படுகிற பாடுகளைச் சகிக்கக்கூடாமல் பிதாவானவருடைய உள்ளம் உருகி, தமது திருமுகத்தைக் கொஞ்சநேரம் அவர் மறைத்தபடியால், அதைச் சகிக்கக்கூடாமல் இந்த வசனத்தைச் சொல்லவேண்டியிருந்தது. நமக்குரிய பாவத்தைத் தாம் சுமந்தபடியால், தமது அகோரமான பாடுகளையும் மரணத்தையும் வெளிப்படுத்தும்படி இந்த வசனத்தைச் சொன்னார்.

அவர் மனுஷருக்கும் தேவனுக்கும் நடுநின்ற மத்தியஸ்தராகையால், அவருடைய மனுஷதன்மையின்படி தங்கள் பாவத்தையும் நிர்ப்பந்தத்தையும் உணரத்தக்க மனுஷர் யாவரும் சொல்லத்தக்க வசனத்தை அவர்தாமே சொல்லிவிட்டார். அவர் பாவிகளுக்காக மரணம் அடைந்ததுமல்லாமல், ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசித்துப்பார்த்தார் என்று சொல்லியிருக்கிறது. மனுஷனுக்கும் தேவனுக்கும் நடுவாக பாவம் வந்துநின்று இருவரையும் பிரித்தது; மத்தியஸ்தராகிய கிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுநின்று அவர்களை ஒப்புரவாக்கினார். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொ. 5. 21.). "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும், பட்ட

பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரண ரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்தியரட்சிப் பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறை மையின்படி பிரதானஆசாரியர் என்று தேவனாலே நாமந்தரிக் கப்பட்டார்" (எபி. 5. 7—10.). "அவர் தம்மைத்தாமே வெ றுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தே வன் எல்லாவற்றிற்குமேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவ னுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள்யா வும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மே லான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"(பிலி. 2. 7—11.).

தேவன் ஆதியிலே உலகத்தைச் சிருஷ்டிக்கும்போது அந்த காரத்திலிருந்து வெளிச்சத்தை உண்டாக்கினார். அப்படியே உலகத்தை இரட்சிக்கும்போதும் அந்தகாரத்திலிருந்து வெ ளிச்சத்தையும் மரணத்தினின்று ஜீவனையும் உண்டாக்கு கிறார். கிறிஸ்து பிறந்தபோது இரவில் வெளிச்சமுண்டா யிருந்தது; அவர் இறந்தபோது பகலில் இருள் உண்டா யிருந்தது.

தேவரீருடைய மனோவேதனை இரத்தவேர்வையினிமித்த மும், எங்கள் மனோவாக்குக்கெட்டாத சிலுவைப்பாடுகளினி மித்தமும், எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.

# பதினைந்தாம் பிரசங்கம்.

"தாகமாயிருக்கிறேன்." யோ. 19. 28.

இது இயேசுநாதர் சிலுவையின்மேல் சொன்ன ஐந்தாம் வசனம். இது மனுஷசத்தம், பலவீனத்தின் குறிப்பு; ஒரு விசை அவர் சமாரியா ஸ்திரீயை நோக்கி, "தாகத்துக்குத் தா" என்றார். இப்பொழுது சத்துருக்களை நோக்கி, "தாகமாயிருக்கிறேன்" என்கிறார். பசியிலும் தாகம் கொடிது. உஷ்ணத்திலும் வேர்வையினாலும் இரத்தசேதத்தினாலும் களையினாலும் உண்டாகும் தாகத்தைச் சகிக்கக்கூடாது. "முறிந்தஆவி எலும்புகளை உலரப்பண்ணும்." தமது சரீரப்பாடுகளைப்பற்றி இந்த ஒரே வார்த்தையைத்தான் இயேசுநாதர் சொன்னார். எல்லாம் முடிந்தது என்று அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகத் "தாகமாயிருக்கிறேன்" என்றார் (யோ. 19. 28.). இதைப்பற்றி 69-சங்கீதம் 21-வசனத்தில் "என் ஆகாரத்தில் கசப்பு கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" என்று சொல்லியிருக்கிறது.

இது ஒரு சிறு வார்த்தையாயிருந்தாலும் ஆழ்ந்தபொருள் உள்ளது. இது மேசியாவுக்கு ஒரு குறிப்பு. இந்த அத்தாக்ஷி நிறைவேறவேண்டியிருந்தது. ஆகையால், தாகமாயிருக்கிறேன் என்றார்.

எல்லாம் முடிந்தது என்று அறிந்தபின்பு இந்த வார்த்தையைச் சொன்னார். பாடுகள் முடிந்து மரணம் கிட்டினது. "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று சொன்னபோது, இருள் நீங்கிப்போகிறதாயிருந்தது. இருள்நிறைந்த மனோவியாகுலம் முடிந்தபடியால், ஒளியும்

தெளிவும் தோன்றிற்று. மூன்று மணிநேரம் இருள் சூழ்ந்திருக்க அவர் அமைந்திருந்தார். மனோவியாகுலத்தினால் மெய்மறந்திருந்தார். போர்க்களத்தில் போர்செய்யும் வீரன், போர் முடிந்து வெற்றிசிறப்பு அடைந்தபின்பு, தன் காயங்களைப் பார்த்துக் களையடைந்து, அன்னபானத்தை நாடுவதுபோல, போராட்டம் முடிந்தபடியால் மெய்மறந்திருந்த அவர் பிரக்கினை உண்டானவர்போல் தாகமாயிருக்கிறேன் என்றார்.

மனுஷீகம் சகிக்கக்கூடியதெல்லாம் அவர் சகித்துத்தீர்த்தார். ஒரு ராப்பகல் முழுவதும் ஆகாரம் இல்லாதிருந்தார். இரத்த வேர்வையுண்டாயிற்று. அடிகளைப்பட்டு நிந்தைகளைச் சகித்தார். பாரமான சிலுவையைச் சுமந்தார். "அவர் பெலன் ஓட்டைப்போல் காய்ந்து, அவர் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது." உள்ளத்தில் வியாகுல அக்கினி பற்றியெரிந்தது. மனுஷீகத்தில் நம்முடைய பலவீனங்களை அவர் சுமந்திருந்தபடியால், "தாகமாயிருக்கிறேன்" என்றார். நமது ரட்சகர் இந்த வார்த்தையைத் தமது சத்துருக்களை நோக்கிச் சொன்னார் என்று கவனிக்கும்போது, அவருடைய குணாதிசயம் விளங்குகிறது. கொலைபாதகனை நோக்கித் தாகமாயிருக்கிறேன் என்றாரே. தம்மை அடுத்தவர்கள் சமீபத்தில் இருந்தாலும் அவருடைய தாகத்தைத் தீர்க்க அவர்களுக்குச் சக்தியிராது. ஒரு துளி தண்ணீரானாலும், அவருடைய சத்துருக்களே அதை அவருக்குக் கொடுக்கவேண்டும். இப்படிப்பட்டவர்களை நோக்கி: அவர் தாகமாயிருக்கிறேன் என்று சொன்னபடியால், அவரிடத்தில் பெருமையாவது, வன்மமாவது, அவநம்பிக்கையாவது இருந்ததில்லை என்று விளங்குகிறது. இதற்குமுன்னமே அவர்கள் பரியாசமாகக் காடியில் பிச்சு கலந்து அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அப்பொழுது அவர் குடிக்காமற்போனாலும், இப்பொழுது தாகமாயிருக்கிறேன் என்கிறார். அவர் பெருமையுள்ளவரானால் அப்படிச் சொல்வாரா? ஜனங்கள் அவரை நிந்தித்து: "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று சொன்னவர்களை நோக்கி: தாகமாயிருக்கி

றேன் என்கிறாரே. அவர் அவநம்பிக்கையுள்ளவரானால் அப்படிச் சொல்வாரா? கொடும்பாதகரான துரோகிகளை நோக்கியே, பாடுபடுகிறேன் மரிக்கிறேன் என்று சொல்லாமல், தாகமாயிருக்கிறேன் என்று சொல்லுகிறார். இப்படி அவர் சொன்னதினால் அவருக்கும் பிராணத்தியாகஞ்செய்த மற்ற இரத்தசாட்சிகளுக்கும் இருக்கிற வித்தியாசம் விளங்குகிறது. அநேகர் சத்தியத்துக்குச் சாட்சியிட்டு அதற்காகத் தங்கள் பிராணனையும் துணிந்து கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய துணிவிலும் தைரியத்திலும் வைராக்கியத்திலும், மனுஷீகத்துக்குரிய பெருமையும் வீம்பும் மதமருளும் கலந்திருக்கும். இரட்சகரோ ஒன்றையும் மறைக்காமல் உள்ளதை உள்ளபடி வெளிப்படுத்தினார். இயல்பு தப்பி ஒன்றும் அவர் செய்யவில்லை. அவர் தம்முடைய சத்துருக்களை வெறுக்கவும் இல்லை, பகைக்கவும் இல்லை. யோகநிஷ்டை செய்கிறவர்கள் உணராத கட்டைபோலிருக்கவேண்டுமென்று வீணாய்ச் சொல்லும் பெத்தரிக்கத்தை அவர் பாராட்டினதில்லை. அவர் பாடுபடும்போது விளங்கின குணசீலத்தைக் கண்டவர்கள், "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்றார்களே. அவர் உத்தம புருஷனாகையால் அவர் பாடுகளிலும் மரணத்திலும் அந்த உத்தமம் விளங்குகிறது. பாடுபட்டு இரத்தசாட்சிகளாய் மரணம் அடைந்த மற்ற மனுமக்கள் எல்லாரையும் அவரோடே ஒப்பிடும்போது, அவர்கள் சூரியனுக்குமுன்பாக மறைந்துபோகும் நட்சத்திரங்கள்போலிருக்கிறார்கள். பாடுகளிலும் அவர் தமக்கு உவமையில்லாதவராமே.

தாகமாயிருக்கிறேன் என்று அவர் சொன்னதில் அவருடைய தாட்சிணியமும் பணிவும் பொறுமையும் விளங்குகிறது. சத்துருக்களாகிய கொலைபாதகரை நோக்கி: தாகமாயிருக்கிறேன் என்று யார் சொல்லுவார்கள்? ஜலத்தை இரசமாக்கினவரும், தாகமாயிருக்கிறவர்கள் தம்மிடத்தில் வந்து ஜீவதண்ணீரைப் பெற்றுத் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி திருவுளம்பற்றினவருமாகிய தாமே தாகமாயிருக்கிறேன் என்று சொல்லும்போது, "நானோ ஒரு புழு, மனுஷ

னல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டுமி ருக்கிறேன்" என்று சங்கீதத்தில் சொல்லியிருக்கிற வசனம் அவரில் நிறைவேறுகிறதல்லவா? (சங். 22. 6.) இப்படி அவர் சொல்லவேண்டியது என்ன? கட்டாயமாய்ச் சொன்னாரோ, இல்லை; உற்சாகமாகவே சொன்னார். தம்முடைய சுயசித் தமே தமது பாடுகளுக்கு மூலமாயிருந்தது. ஒரு நோக்கம் நிறைவேறும்படியே இதெல்லாம் நடந்தது. அந்த நோக் கம் என்ன? "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிரு பையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐஸ்வரியமுள்ளவரா யிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐஸ்வரிய வான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தமாகத் தரித்திரரானாரே" என்று வேதம் சொல்லுகிற நோக்கமே (2 கொரி. 8. 9.).

தாகமாயிருக்கிறேன் என்று எப்பொழுது சொன்னார். அவர் இந்த வார்த்தையைச் சொன்ன நேரத்தைக் கவனிக்கும் போது, அவருடைய உறுதியும் தீர்மானமும் விளங்குகிறது. சிலுவையில் அறையப்பட்டவர்கள் மயக்கங்கொண்டு நோ வை உணராதிருக்கும்படி காடியில் மதுகலந்து அவர்களுக் குக் கொடுக்கிற வழக்கத்தின்படியே, நமது ரட்சகருக்கும் போர்ச்சேவகர் அதைக் கொடுக்கத் துணிந்தபோது, அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் மதுமயக்கத்தால் பாடு களை மறக்கிறவர் அல்ல. அவர் மனதார யதார்த்தமாய்ப் பாடு பட்டு மரணமடைய ஏற்பட்டார். அவர் குடிக்கவேண்டிய பாத்திரத்திலுள்ள வியாகுலத்தை முற்றிலும் குடித்துத் தீர வேண்டும். அவர் தமது மனமறியப் பாடுபட்டு மரணமடைய வேண்டும்; இல்லாவிட்டால் நாம் நரகவேதனைகளைச் சகித்து நித்தியமரணத்தை அடையவேண்டியதாகும். அவர் வீணாய்ப் பாடுபடவில்லை. அவர் நம்முடைய பாவநிவாரணத்தின்பொ ருட்டு கிருபாதாரபலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்து, நமது பாவத்தைப் போக்கும்படி தமது திருவுதிரத்தைச் சிந்தினார். "தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்க ளைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்து, தமது நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசு

வினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவரு மாய் விளங்கும்படி, இக்காலத்தில் தமது நீதியைக் காண்பிக் கும்பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத் தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரபலி யாக அவரையே ஏற்படுத்தினார்" (ரோ. 3. 25, 26.).

சகோதரரே, கர்த்தருடைய அகோரமான பாடுகளைக்குறித் தும், அவர் செலுத்தின உத்தரவாத புண்ணியபலியைக் குறித்தும் அற்பமாய் எண்ணாதிருங்கள். "சத்தியத்தை அறி யும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத் தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத் தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டுமூன்று சாட்சி களின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக் கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக் குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங் கள். பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தமது ஜனங் களை நியாயந்தீர்ப்பார்" என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே. தேவன் பட்சிக்கும் அக்கினியா யிருக்கிறாரே" (எபி. 10. 26—31.).

மேலும் சகோதரரே, தாகமாயிருக்கிறேன் என்னும் இந்த வார்த்தை சரீரதாகத்தைமாத்திரமல்ல, ஆத்துமதாகத்தையும் குறிக்கும். அன்பின்தாகம் என்னும் ஒரு தாகமுண்டு. "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல, தே வனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமா யிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில்

வந்து நிற்பேன்" (சங். 42. 1, 2.) "தேவனே, நீர் என் தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீர் அற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது; என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது" என்று சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது (சங். 63. 1.). நமது ரட்சகர் ஆத்துமஇரட்சிப்புக்காகத் தாகம் கொண்டிருக்கிறார். அதற்காக அவருக்கு உண்டாயிருந்த வைராக்கியம் அவரைப் பட்சித்துப்போட்டது.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு."

சகோதரரே, "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என்று சொல்லியிருக்கிறபடியால் (மத். 5. 6.), இயேசுநாதர் அளிக்கும் நீதியின்மேல், அதாவது புண்ணியத்தின்மேல், தாகமாயிருங்கள். தாகமாயிருக்கிறேன் என்று சொன்ன அவரே உங்கள் தாகத்தைத் தீர்க்கக்கூடும். "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று திருவுளம்பற்றியிருக்கிறாரே (யோ. 7. 37, 38.).

தாகந்தீர்ந்த பாக்கியவான்களே, மற்றவர்களுடைய தாகமுந் தீர நாடுங்கள். தண்ணீர்ப்பந்தல் வைத்து சரீரதாகந்தீர தண்ணீர்கொடுக்கிறவர்களுக்கு புண்ணியம் உண்டாகுமானால், ஆத்துமதாகம் தீர்க்கிறவர்களுக்கு அதிக புண்ணியம் உண்டாகும் அல்லவோ? நீங்கள் ஆத்துமாக்களின் தாகத்தைத் தீர்ப்பீர்களானால், இயேசுநாதர் தமது ஆத்துமவருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியாவார் என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்" (வெளி. 22. 17.).

# பதினாரும் பிரசங்கம்.

"முடிந்தது" என்றார். யோ. 19. 30.

இது இயேசுநாதர் சிலுவையின்மேல் சொன்ன ஆரும் வசனம். 28-ம் வசனத்தில் கண்டிருக்கிறபடி, எல்லாம் முடிந்தது என்று தன் உள்ளத்தில் அறிந்து, தாகமாயிருக்கிறேன் என்று சொல்லி, பின்பு வெளிப்படையாய் முடிந்தது என்று தமது வாயினால் சொன்னார். தினையளவுபோன்ற சிறுதுளி நீர் நீண்டபனையையும் தனக்குள் அடக்கிக் காட்டுவதுபோல, எல்லாப் பொருளையும் இந்த வார்த்தையானது தனக்குள் அடக்கிக் காட்டுகின்றது.

நகோமி என்பவள் தன் மருமகளை நோக்கி: "இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு; அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாறமாட்டான்" என்று சொன்ன வசனத்தின்படியே (ரூத். 3. 18.), நாமும் நமது மனதை நோக்கி சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப்பற்றிச் சொல்லலாம். இயேசுநாதர் திருவுளம்பற்றின ஒரு உவமையிலே, "உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற் போனால், பார்க்கிறவர்களெல்லாரும், இந்த மனுஷன் கட்டத் தொடங்கி முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று அவன் உட்கார்ந்து செல்லும் செலவைக் கணக்குப்பாராமலிருப்பானா?" என்று சொன்னார் (லூக். 14. 28—

30.). அப்படியே நம்முடைய ரட்சகரும் தாம் ஏற்பட்டுத் தொடங்கின வேலையை முற்றும் முடிக்கவேண்டியதையெல்லாம் செய்து நிறைவேற்றினார். இந்தச் சிறிய வார்த்தையில் பெரிய பொருள் அடங்கியிருக்கிறது. இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லித் தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

முடிந்தது என்றால், என்ன முடிந்தது? இந்தக் கேள்விக்கு உத்தரவுசொல்ல வேதம் முழுவதையும் ஆராய்ந்துபார்க்க வேண்டும். இந்த வார்த்தையைச் சொன்னவர் ஆதியில் சிருஷ்டிகிரியையை நடத்தும்போது, வெளிச்சமுண்டாகக்கடவது என்றார், வெளிச்சமுண்டாயிற்று; இப்பொழுது ரட்சிப்பின் கிரியை நடத்தும்போது முடிந்தது என்றார். அதில் அவருடைய வல்லமையையும், இதில் அவருடைய அருளையும் காண்கிறோம்.

முடிந்தது என்றார், என்ன முடிந்தது? 28-ம் வசனத்தில் சொல்லியபடி எல்லாம் முடிந்தது. எல்லாம் குறைவற நிறைவாய்ப் பூரணப்பட்டு முடிந்தது. இதன் பொருளை யார் முற்றிலும் விளங்கும்படி சொல்லக்கூடும்? "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங் காலங்கள் வந்திருக்கிறபடியால் முடிந்தது என்று சொன்னார். ஆதிமுதல் இதுவரைக்கும் செய்ததைக் கருதி இப்பொழுது சம்பவிக்கிறதைப்பார்த்து இனி நடப்பதையும் நோக்கி முடிந்தது என்றார். இந்த வார்த்தை திரிகாலத்தையும் குறிக்கிறபடியால் அவருடைய பாடுகளைமாத்திரம் அல்ல, அவருடைய மரணத்தையும் தழுவும். "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்குத் தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். எப்படியெனில், தமக்காகத்தாமே சகலத்தையும் உண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில், அவர்களு

டைய ரட்சிப்பின் அதிப்தியை உபத்திரவங்களினாலே பூர ணப்படுத்துகிறது அவருக்கு ஏற்றதாயிருந்தது."

இயேசுநாதர் சொன்ன இந்தச் சிறு வார்த்தையில் மனுஷ ரட்சிப்பும் தேவ திருவுளமும் அடங்கியிருக்கிறது. யோவான் அப்போஸ்தலனுக்கு பத்மு என்னும் தீவிலே ரட்சகர் காட்சியாகி வேதமுடிவைச் சொன்னபோது, ஆயிற்று என்று சொன்ன ஒரு சிறுவார்த்தையும், இங்கே முடிந்தது என்று சொன்னவார்த்தையும் ஒரே பொருள் உள்ளது. "யோவானை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்று சொன்னவரே (வெளி. 21. 6.) முடிந்தது என்றும் சொன்னார்.

முடிந்தது என்றார், யாரை நோக்கி இந்த வசனத்தைச் சொன்னார். சிலுவையின்மேல் இயேசுநாதர் சொன்ன முதலாம் வசனத்தை மனுஷர்பொருட்டு தேவனை நோக்கிச் சொன்னார். இரண்டாம் வசனத்தை தமது இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் ஆத்துமாவுக்கு ஆறுதலாக, மனுஷனை நோக்கிச் சொன்னார். மூன்றும் வசனத்தைத் தமது அன்புக்குரிய மன்னுயிரை நோக்கிச் சொன்னார். நான்காம் வசனத்தை எல்லாருக்கும் பயன்பட தம்மைக்குறித்தே தேவனை நோக்கிச் சொன்னார். ஐந்தாம் வசனத்தைத் தன்பொருட்டு மனுஷரை நோக்கிச் சொன்னார். முடிந்தது என்னும் இந்த ஆறும் வசனம் எல்லாரையும் பற்றும், எல்லாவற்றையும் தழுவும். இதைத் தன்பொருட்டும், உலகத்தின்பொருட்டும், பிதாவின் பொருட்டும் சொன்னார். அவர் தாகம் தீர்ந்தபடியால் அவர் வந்தகாரியம் முடிந்தது. இது மனிதர் சொல்லும் வார்த்தையா? நல்லவர்கள் முதலாய் "நாம் செய்யத்தகாததைச் செய்து செய்யத்தக்கதைச் செய்யாமல் விட்டோம்" என்றுமாத்திரம் சொல்லக்கூடும். கிறிஸ்துவோ மனோவாக்குக்காயத்தில் பரிசுத்தர், பரிபூரணர்; அவருடைய கிரியை குறைவறப் பூரணப்பட்டு முடிவுபெற்றது.

முடிந்தது என்றார், என்ன முடிந்தது? இன்னகாரியம் முடிந்தது என்று யாதொரு காரியத்தை விசேஷப்படுத்திச்

சொன்னால் பூரணகருத்து வெளியாகாது. வார்த்தை ஒன்றிலும் அது பல பொருள்கொள்ளும்; எல்லாப்பொருளும் இதற்குள் அடங்கும். இதன் பொருளைப் பூரணமாய் விளக்குவிக்க ஒருவராலும் கூடாது. ஆயினும் தேவஉதவியை முன்னிட்டு நம்மால் இயன்றமட்டும் இதில் விளங்கும் பொருளைக் கவனிப்போமாக.

I. தம்மைக்குறித்து வேதத்தில் கண்டிருக்கிற காரியங்கள் எல்லாம் முடிந்தது. வேதம் முழுவதும் அவருக்குச் சாட்சியாயிருக்கிறது. வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களும் குறிப்புகளும் அவரையேபற்றிச் சொல்லப்பட்டது. அவரையின்றி வேதத்திலுள்ள நியமநிஷ்டைகள் சடங்காசாரங்கள் பயன்படாது, அவற்றின் நோக்கமும் பொருளும் விளங்காது. அவரையின்றி தீர்க்கதரிசனமாகிய நிறைமொழிமாந்தர் வாக்கு உயிரில்லாத உடம்புபோலிருக்கும். பலிமுதலான நைவேத்தியங்களுக்கெல்லாம் பொருள் அவரே. "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும், நித்தியநீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபதுவாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது" (தானி. 9. 24.) என்று தானியேல் சொல்லுகிறபடியே, நமது ரட்சகர் தாமும் "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்" (யோ. 17. 4.) என்று சொல்லுகிறார். பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரேபலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் (எபி. 10. 4.), பலியும் அவர், பலிபீடமும் அவர், பலிக்கு எஜமானனும் அவர். வேதத்துக்கு ஆதியும் அவர் அந்தமும் அவர். கனிகள் உண்டாகவே பூக்கள் உதிர்ந்துபோவதுபோலவும், சூரியன் தோன்றவே நட்சத்திரங்கள் மறைந்துபோவதுபோலவும், கிறிஸ்துவுக்குள் எல்லாம் பூரணப்பட்டு முடிவுபெறுகிறது.

II. அவருடைய அகோரமான சொல்லிமுடியாத பாடுகள் எல்லாம் முடிந்தது. இருள்சூழ்ந்த பாவப்பெருங்கடலில் அவர் மூழ்கினார். அக்கினிஸ்நானம் செய்தார். கடலைக் கடந்து கரையை நோக்கிக் களித்து, முடிந்தது என்று திருவுளம்பற்றினார்.

III. அவர் நிறைவேற்றும்படி ஏற்பட்ட வேலை முடிந்தது. அவர் மனுஷஅவதாரம் செய்து பிராணத்தியாகம்பண்ணி புண்ணியதத்தம் செய்யப்போகிறவரானபடியால், முடிந்தது என்றார். உலகத்தார் வாஞ்சித்த பொருள் வந்து கைகூடிற்று. இகபரநன்மை எல்லாம் முற்றுப்பெற்றது.

IV. தெய்வீகத்தை மனுஷீகத்துக்கு வெளிப்படுத்தும்படி வந்த அவருடைய நோக்கம் முடிந்தது. வெளிப்பட்ட தேவன் அவர், அன்பின் சொரூபி அவர். உலகத்தார் தேவனை அறியவும் காணவும்கூடாமல் தங்கள் மனதிற்கேற்றபடி தங்களுக்குத் தெய்வங்களை உண்டுபண்ணிக்கொண்டு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் வைத்துக் கும்பிட்டார்கள். கிறிஸ்துவோ ஜீவசுரூபமாயிருக்கிறார். அவரைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அவரே நமக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

முடிந்தது என்றார், இது ஜெயத்தின் கெம்பீரசத்தம். அவர் தம்முடைய பாடுகளின் பலனை நோக்கி ஆநந்தக்களிப்பு அடைந்து முடிந்தது என்று திருவுளம்பற்றினார். சிருஷ்டிப்பில் எல்லாம் "நன்மையாயிருந்தது," ரட்சிப்பில் எல்லாம் "முடிவு"பெற்றது.

முடிந்தது என்று ரட்சகர் சொன்னபடியால் நம்முடைய நம்பிக்கை உறுதிப்பட்டு, ஆநந்தக்களிப்புக்கு இடமாயிற்று.

முடிந்தது என்று ரட்சகர் சொன்ன வார்த்தையின் பொருள்தான் உலகமெங்கும் சுவிசேஷமாய்ப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது.

முடிந்தது என்று சொன்னவரை முற்றிலும் பற்றிக்கொண்டவர்கள் யாவரும் பவுல் அப்போஸ்தலன் சொன்னபடியே,

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்குமாத்திரம் அல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று சொல்லுவார்கள் (2 தீமோ. 4. 7, 8.).

# பதினேழாம் பிரசங்கம்.

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்." லூக். 23. 46.

இது இயேசுநாதர் சிலுவையின்மேல் சொன்ன ஏழாவதான கடைசி வசனம். அவருடைய அகோரமான மனவியாகுலத்தில் தமது சொல்லிமுடியாத பாடுகளையும், அதனால் உண்டான புண்ணியபலன்களையும் குறிக்கும்படி, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று சொல்லி, தாம் பூலோகத்தில் வந்த நோக்கம் நிறைவேறிற்றென்றும், தம்மைக்குறித்து வேதத்தில் சொல்லப்பட்டவைகளெல்லாம் பூரணப்பட்டதென்றும் கண்டு ஆறுதல் அடைந்து, தாம் அவதரித்து வாசம்பண்ணி இரட்சிக்கவந்த மண்ணுலகை நோக்கி, முடிந்தது என்று சொல்லி, விண்ணுலகை நோக்கி, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார்.

கிறிஸ்துநாதர் மனுமக்கள் யாவருக்கும் முதலாளியாகையால், தமது ஆவியைப் பிதாவினிடத்தில் ஒப்புவிக்கும்போது, தம்மை விசுவாசித்துப் பற்றிக்கொண்டு தம்மோடே ஏக ஐக்கியமாயிருக்கிற யாவருடைய ஆவிகளையும் பிதாவினிடத்தில் ஒப்புவித்தார். "எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்" என்று சொல்லுகிறவரிடத்தில், எல்லா ஆத்துமாக்களையும் சீர்ப்படுத்தி ரட்சித்து ஒப்புவிக்கவே இயேசுநாதர் பாடுபட்டு மரணமடைந்தார். இயேசுநாதர் சொன்ன இந்த ஏழாம் வசனம் 31-ம் சங்கீதம் 5-ம் வசனத்தில்: "உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; சத்தியபரனாகிய கர்த்தாவே,

நீர் என்னை மீட்டுக்கொண்டீர்" என்று எழுதியிருக்கிறது. இயேசுநாதர் இந்த வசனத்தை எடுத்துரைத்தபோது இரண்டாம் பங்கைச் சொல்லாமல் விட்டுவிட்டதுமல்லாமல், முதலாம் பங்கோடு ஒரு வார்த்தையைச் சேர்த்துச்சொன்னார். "சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்" என்னும் வசனத்தை அவர் சொல்லவேண்டியதில்லை. அது பாவிகளுக்கே உரியது. புண்ணியநாதராகிய அவர் தமது இரத்தத்தை மற்றவர்களுக்கு மீட்கும்பொருளாகத் தந்து மற்றவர்களை மீட்கவந்தாரேயொழிய, தமக்கு மீட்புவேண்டி வரவில்லை. மேலும் உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றுமாத்திரம் சொல்லாமல், பிதாவே என்னும் அருமையான அன்புக்குரிய வார்த்தையை முன்வைத்துச் சொல்லுகிறார். தமது சொந்த பிதாவின் கரத்திலே தமது ஆருயிராகிய அரும்பொருளை ஒப்புவிக்கிறார். சிலுவையின்மேல் சொன்ன முதல்வசனத்திலும் கடைசிவசனத்திலும் பிதாவே என்னும் பெயரைச் சொல்லி, பிதாவைச் சிலுவையின் உபதேசத்துக்கு ஆதியும் அந்தமுமாக வைத்தார். அவர் பன்னிரண்டு பிராயத்திலே தேவாலயத்தில் தம்மைத் தேடிக்கொண்டு வந்த தாயாரை நோக்கி: "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியாதிருக்கிறீர்களா" (லூக். 2. 49.) என்று சொன்னது உண்டே. சிலுவையின் பாடுகளையும், நமது மனோவாக்குக்கெட்டாத வியாகுலங்களையும் சகிக்கும்போது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று சொன்னவர், சென்றமுடிவை அறிந்து, வரும் முடிவை நோக்கி, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று சொல்லுகிறார். மரணவேளையில் அகத்திலுள்ள அன்பின் தன்மை புறத்தில் வெளிப்படும் என்பது இதனால் விளங்கும்.

நாம் நாடோறும் சொல்லவேண்டிய ஜெபத்தில் "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உமது நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று சொல்ல நமது ரட்சகரே நமக்குப் படிப்

பித்திருக்கிறார். இயேசுநாதர்மூலமாய் நாம் புத்திரசுவிகாரத்தை அடைந்து, அப்பா பிதாவே என்று சொல்லும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். பிதாவே என்கிற பெயர் இதற்குமுன் யூதர்களுக்குள்ளே சாதாரணமாய்த் தேவனுக்கு வழங்கினதில்லை. ஏசாயா தீர்க்கதரிசனத்தில் "தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர்; ஆபிரகாம் எங்களை அறியான், இஸ்ரவேலுக்கு நாங்கள் அறியப்பட்டவர்களுமல்ல; கர்த்தாவே, நீர் எங்கள் பிதாவும், எங்கள் மீட்பருமாயிருக்கிறீர்; இது பூர்வகாலமுதல் உம்முடைய நாமம்" (63. 16.) என்றும், எரேமியாவிலும் தேவன் தாமே தம்மைக்குறித்து, "நீ இதுமுதல் என்னை நோக்கி: என் பிதாவே, தேவரீர் என் இளவயதின் அதிபதி" (3. 4.) என்றும் சொல்லியிருக்கிறது. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றும், "நானும் பிதாவும் ஒன்று" என்றும் திருவுளம்பற்றினவரே பிதாவை நமக்கு வெளிப்படுத்தி, நாம் பிதாவே என்று சொல்லி அழைக்கும் சிலாக்கியத்தை நமக்கு அநுக்கிரகஞ்செய்தார். தேவனைப் பிதா என்றழைப்பது அன்பான ஒரேபேறான குமாரனுக்கே சிறப்பாய் உரித்தாயினும், அவருடைய கிருபையினால் விசுவாசிகள் யாவருக்கும் பொதுவாய் உரித்தாயிற்று.

1. "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார். அந்தக் கைகள் காருண்ய கைகள், படியளக்கும் கைகள், வரமளிக்கும் கைகள். "சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்" என்று ஏசாயாவில் சொல்லியிருக்கிறது (ஏசா. 49. 11—16.). "உம்முடைய கரத்தின் கிரியைகளை நெகிழாதிருப்பீராக" என்று தாவீது வேண்டிக்கொள்ளுகிறார் (சங். 138. 8.).

2. பிதாவின் சமுகத்தில் பிள்ளைவந்து சேருவது தகுதியும் சந்தோஷமுமான காரியமாயிருக்கிறது அல்லவா? பிதாவின்

சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிற நம்முடைய ஆத்துமா வை மரணத்தின் வழியாய்ப் பிதாவின் கையில் ஒப்புவித்து, வீடுசேர்ந்து சுகம்பெறுவது ஆநந்தக்களிப்புக்கு ஏதுவான காரியம் அல்லவா? ஆத்துமா லயமாகிறதுமில்லே, ஜீவாத்துமா பரமாத்துமாவோடு ஒன்ருய் இரேகித்துப்போகிறதுமில்லே. அது தனியாய் ஏகமாய் தேவசந்நிதியில் சாலோக-சாமீப-சா ரூப பதவி அடைந்து, நித்தியஜீவியாய்ப் பிதாவின் அன்பை அநுபவித்து, ஆநந்தக்களிப்படைந்து வாழ்ந்திருக்கும். "இந் தத் தேகத்தைவிட்டுக் குடிப்போவது கர்த்தரிடத்தில் குடியி ருப்பது" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிருர் (2 கொரி. 5. 8.). உலகத்திலுள்ள எல்லா உயிர்களிலும் மன் னுயிரே சிறந்தது, அந்த மன்னுயிரில் ஆவியே சிறந்தது, அந்த ஆவி அல்லது ஆத்துமா மெய்ப்பொருளாயிருக்கிறது, உலகத்தில் அதற்கு நிகரானது ஒன்றுமில்லே. "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனே நஷ்டப்படுத்தினுல் அவனுக்கு லாபம் என்ன? மனு ஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று சொல்லியிருக்கிறதே (மத். 16. 26.).

3. என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்ருர். "நான் என் ஜீவனே மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினுல் பிதா என்னில் அன்பாயிருக்கிருர். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுக்கமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவி னிடத்தில் பெற்றுக்கொண்டேன்" என்று (யோ. 10. 17, 18.) கர்த்தர் சொல்லியிருக்கிறபடியினுல், மற்றவர்களால் கட்டாய மாயல்ல, தாமே உற்சாகமாய்த் தமது ஆவியை ஒப்புக்கொடுத் தார் என்று விளங்குகிறது. இரட்சகருடைய சரீரம் கல்லறை யிலிருந்த மூன்றுநாளும் அவருடைய ஆவி பிதாவின் கரத்தில் இருந்தது. இயேசுநாதர் பிறந்தபோதும், அவர் ஞானஸ்நா

னம் பெற்றபோதும், அவர் மறுரூபம் அடைந்தபோதும், பிதா
வினிடத்திலிருந்து அசரீரிவாக்கு உண்டாகி: "இவர் என்
நேசகுமாரன்" என்னும் சத்தம் பிறந்தது. அன்புடைய பிதா
வின் கரத்திலே அன்புள்ள குமாரன் தமது ஆவியை ஒப்பு
விக்கிறார். அவர் தமது ஆவியைப் பிதாவுக்கு ஒப்புவிக்கும்
போது தாம் மீட்டு உயிர்ப்பித்த தமது திருச்சபையாகிய சரீ
ரத்தின் அவயவங்களாக்கின எல்லா ஆவிகளையும் பிதாவின்
கைகளில் ஒப்புவிக்கிறார். "என் ஆடுகள் என் சத்தத்திற்குச்
செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்,
அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு
நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும்
கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலி
ருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த
என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை
என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும்
கூடாது" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (யோ. 10. 27,
28, 29.).

இயேசு: "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை
ஒப்புவிக்கிறேன்" என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்;
இப்படிச் சொல்லி ஜீவனைவிட்டார். இந்தக் காரியத்தைப்
பற்றித்தான் "பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன்,
அது இப்பொழுதே பற்றியெரியவேண்டுமென்று விரும்புகி
றேன். ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு,
அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்"
என்று சொன்னதுமன்றி (லூக். 12. 49, 50.), "கோதுமை
மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்
கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" என்றும்
சொல்லியிருக்கிறார் (யோ. 12. 24.).

**தம்முடைய ஆவியை ஒப்புவித்தார்.** இந்தச் சம்பந்தத்தில்
ஜீவனை விட்டார் என்று சுவிசேஷத்தில் மங்களவார்த்தையா
ய்ச் சொல்லியிருக்கிறதேயொழிய, மரித்தார் என்று சொல்லி

யிருக்கவில்லை. சிலுவையில் அறையப்பட்டவர்கள் வெகு சீக்கிரத்தில் மரிக்கிறதில்லை. இவரோ பகைஞரும் ஆச்சரியப்பட வெகுசீக்கிரத்தில் மரணமடைந்தார். அவர் பட்ட அகோரமான சொல்லிமுடியாத வியாகுலத்தால் அவருடைய இருதயகமலம் வெடித்து இரத்தம் வெளிப்பட்டதென்று வைத்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இருதயத்திலிருந்து பிரிந்த இரத்தம் கட்டிப்போய் தண்ணீர்வந்து கோத்துக்கொள்ளும். இதனால்தான் போர்ச்சேவகரில் ஒருவன் அவருடைய விலாவை ஈட்டியினால் குத்தினபோது அவருடைய விலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது என்று சொல்லியிருக்கிறது. தமது உள்ளத்திலிருந்த தமது ஆருயிர்க்கு ஆதாரமான திருரத்தத்தையே நமக்காக ரட்சகர் சிந்தினார். இந்த ரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவநிவாரணமில்லை.

சகோதரரே, கர்த்தர் சிலுவையின்மேல் சொன்ன ஏழு வார்த்தைகளையும் இன்னமும் சற்று விபரமாய்க் கவனிப்போமாகில் அநேககாரியங்கள் விளங்கும். "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று சொன்ன முதல் வசனம் பாவமுள்ள உலகமுழுவதையும் தழுவும். "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று சொன்ன இரண்டாம் வசனம் குணப்பட்டு விசுவாசிக்கும் எல்லாப் பாவிகளுக்கும் ஆறுதல் அளிக்கும். "ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றும்; சீஷனே, அதோ, உன் தாய்" என்றும் சொன்ன மூன்றும் வசனம் இனத்தார் பந்துக்களுக்குச் செய்யவேண்டிய அன்பின் கடமைகளைக் கற்பிக்கும். "என் தேவனே! என் தேவனே! என் என்னைக் கைவிட்டீர்" என்று சொன்ன நான்காம் வசனம் உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கும் உலகநாயகருடைய சொல்லிமுடியாத வியாகுலங்களையும், நமக்குத் தோன்றாத பாடுகளையும் பரமரகசியங்களையும் குறிக்கும். "தாகமாயிருக்கிறேன்" என்று சொன்ன ஐந்தாம் வசனம் நமக்குத் தோன்றிய தாகத்தையும் தோன்றாத தாகத்தையும்

குறிக்கும். "முடிந்தது" என்று சொன்ன ஆறாம் வசனம் மனிதருக்கும் தேவனுக்கும் அநித்த யாவையும் குறிக்கும். "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று சொன்ன இந்தக் கடைசிவசனம் சொன்ன மற்றெல்லா வசனங்களையும் பிதாவினுடைய கைகளில் அடக்கிப் பயன்படும்படி செய்யும். முதல் வசனம் ரட்சிப்பின் நோக்கத்தையும், இரண்டாம் வசனம் ரட்சிப்பின் பலனையும், மூன்றாம் வசனம் ரட்சிப்பின் பயனையும் பிரயோசனத்தையும், நான்காம் வசனம் ரட்சிப்புக்குச் செலுத்தவேண்டிய பெரும்பொருளாகிய கிரயத்தையும், ஐந்தாம் வசனம் ரட்சணிய ஆவலையும், ஆறாம் வசனம் ரட்சிப்பின் முடிவையும், ஏழாம் வசனம் ரட்சிப்பு பிதாவின் திருவுளத்திலிருந்து வெளிப்பட்டு அவருடைய உள்ளத்தின் பரிபூரணத்தினால் முடிவு பெறும் என்பதையும் விளக்குகிறது. சகோதரரே, இந்த வசனம் நமக்கு எதனைப் படிப்பிக்கிறது? மனுஷன் இம்மையில் செத்தாலும் மறுமையில் சாகாமலிருப்பான் என்று படிப்பிக்கிறது. எலியா தீர்க்கதரிசி தான் சாகவேண்டுமென்று கோரி: "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல" என்று தன் வியோகத்தைக்குறித்துச் சொன்னான். சிமியோன்: "ஆண்டவரே, உம்முடைய வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்" (லூக். 2. 29.) என்று தான் பரகதியடைவதைக்குறித்துச் சொன்னான். நமது ரட்சகரோ: "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று சொன்னார், இப்படிச் சொல்லி ஜீவனைவிட்டார். இதற்கு இசைவாய்ப் பேதுரு அப்போஸ்தலன் "தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" (1 பேது. 4. 19.) என்று கிறிஸ்தவர்களுக்குப் புத்திசொல்லியிருக்கிறார்.

சகோதரரே, சரீரத்தைப்பார்க்கிலும் ஆத்துமா விலேயுயர்ந்தது, மிகவும் அருமையானது. கோதுமை மணி பெரிதோ, அதைச் சுற்றியிருக்கும் உமி பெரிதோ? ஆபரணம் பெரிதோ, அதைக் கொண்டிருக்கும் பெட்டி பெரிதோ? ஆறுகள் பற் பல இடங்களில் உழன்று வளைந்து ஓடி கடைசியில் சமுத்திரத்தில் விழுவதுபோல, இவ்வுலகத்தில் அரதேசியும் பரதேசியுமாயிருந்து, களைகாளுமல், வீடடையாமல், திரிந்து அலைந்து அடிக்கடி மண்ணைவெறுத்து, விண்ணைநோக்கி, பிதாவின் கரத்தில் போய்விழுந்து அடைக்கலம் பெறும். ஆகையால் ஆத்துமாவானது பிதாவை நோக்கி: "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலேயும் என் பங்குமாயிருக்கிறார்" என்று சொல்லும் (சங். 73. 25, 26.).

இயேசுநாதருடைய ஆவியைப் பிதாவானவர் ஒப்புக்கொண்டார். விசுவாசிகளுடைய ஆவியை இயேசுநாதர் ஒப்புக்கொள்ளுகிறார். "நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது" (எபி. 10. 19, 20.). நம்முடைய மத்தியஸ்தராகிய இயேசுவின் கிருபைபொருந்திய கரத்தில் ஸ்தேவான் தன் ஆவியை ஒப்புக்கொடுத்ததுபோல, நாமும் ஒப்புக்கொடுத்து: "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று ஜீவிக்கும் அந்தியகாலத்தில் சொல்வோமாக.

நல்மரணமடைய நல்நடக்கையுள்ளவர்களாயிருக்கவேண்டும். "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்னும் இந்த வசனத்தைக் குணப்படாத பாவிகள் சொல்லத் துணியலாகாது. "ஜீவனுள்ள தேவனுடைய

ங்கைகளில் விழுகிறது பாவிகளுக்குப் பயங்கரமாயிருக்குமே" (எபி. 10. 31.). உங்கள் பாவத்தை உணர்ந்து மனஸ்தாபப் பட்டு, கிருபாகரராகிய கிறிஸ்துவின் கரத்தில் விழுங்கள்; அவர் உங்களை ஏற்றுக்கொண்டு, தமது பிதாவின் கைகளில் ஒப்புவிப்பார். நாம் நமது மரணகாலத்தில், "உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்" என்று சொல்லி நல்மரணமடைவோமாக. ஆமென்.



# குணசாலிகளும் பாக்கியவான்களும்

இன்னார் என்று விளக்கும்

# பிரசங்கங்கள்.

## பதினெட்டாம் பிரசங்கம்.

"அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்: ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." மத். 5. 1—3.

"நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது; கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" என்னும் வேதவாக்கியத்தின் உண்மையானது மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட பத்துக் கற்பனைகளையும், இயேசுநாதர் திருவாய்மலர்ந்தருளிய அதின் வியாக்கியானமாகிய பிரசங்கத்தையும் ஒத்திட்டுப்பார்த்தால் விளங்கும்.

மத்தேயு சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரசங்கத்துக்கும், லூக்கா சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரசங்கத்துக்கும் சில வித்தியாசங்களுண்டு.* இரண்டு பிரசங்கங்களின் நோக்கமும் பொருளும் ஒன்றாயிருந்தபோதிலும்,

* மத். 5—7. அதிகாரங்களையும், லூக். 6. 20—49. வாக்கியங்களையும் காண்க.

ஒன்று விரிவாயும் மற்றொன்று சுருக்கமாயும் இருக்கிறது. மத்தேயு சுவிசேஷத்தில் பரமகுருவானவர் மலையின்மேல் பிரசங்கித்தாரென்றும், லூக்கா சுவிசேஷத்தில் மலையடிவாரத்தில் பிரசங்கித்தாரென்றும், ஒன்றில் உட்கார்ந்துகொண்டு உபதேசித்தாரென்றும், மற்றொன்றில் நின்றுகொண்டு உபதேசித்தாரென்றும், ஒன்றில் தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தாரென்றும், மற்றொன்றில் ஜனங்களுக்குப் போதித்தாரென்றும் சொல்லியிருக்கிறது.

பரமகுருவுக்கு வார்த்தை என்னும் காரணச் சிறப்புப்பெயர் உண்டு. அதனால் அவர் சத்தியவாசகராயிருக்கிறார்; பரமஞானம் அவரால் விளங்குகிறது. ஆகையால் அவர் திருவாய்மலர்ந்தருளிய கிருபையுள்ள வார்த்தைகளை* நாம் கவனமாய்க் கேட்கவேண்டியது. பரமஆவியானவர் அவருடைய உபதேசத்தின் அரும்பொருள்களை நமக்கு விளங்கும்படி செய்வாராக.

இந்தப் பிரசங்கத்தின் ஆரம்பத்தில் உத்தம பக்தருக்குரிய அஷ்டகுணங்களையும், அதற்கடுத்த அஷ்டபாக்கியங்களையும் முகவுரையாக இரட்சகர் சொல்லியிருக்கிறார். இதனால் அவர் உபதேசித்த பரமபுருஷார்த்தம் இன்னதென்றும், காரணகுருவின் உபதேசத்துக்கும் காரியகுருக்களின் உபதேசத்துக்கும் உரிய வித்தியாசம் இன்னதென்றும் விளங்குகிறது. அவர் உவமைகளினால் பேசினதுமல்லாமல், ஆழ்ந்த அர்த்தங்கொள்ளும் மறைபொருளாகவும் பேசியிருக்கிறார். 'யதார்த்தவாதி வெகுஜனவிரோதி' என்னும் பழமொழிப்படி, பரமகுருவின் உபதேசத்துக்கும் உலகஞானிகளின் உபதேசத்துக்கும் அனந்த வித்தியாசமுண்டு. அவர் அருளாலே அவர் தாள்வணங்கித் தெளிந்து தேறினவர்களுக்கே அவருடைய உபதேசம் விளங்கும். மற்றவர்களுக்கு விபரீதமாய்த்† தோன்றும்.‡ இவ்வசனத்தில்: "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று சொல்லியிருப்பது, லூக்கா சுவிசேஷத்தில், "தரித்

* லூக். 4. 24. எபி. 1. 1, 2. † Paradox. ‡ மத். 4. 17.

திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்" என்று சொல்லியிருக்கிறது. மனதரித்திரர் பாக்கியவான்கள் என்பதே இதன்பொருள். பரமானந்தமாகிய பரகதிக்குரிய மூலகுணம் சாதுத்துவம். தனவான்கள் கனவான்கள் முதலானவர்களே பாக்கியவான்கள் என்று உலகத்தார் சொல்லுவார்கள். இரட்சகரோ மனதரித்திரர் பாக்கியவான்கள் என்று திருவுளம்பற்றியிருக்கிறார். இந்த மூலகுணம் வெகு தாழ்ந்தநிலையான அஸ்திபாரத்தில் போடப்பட்டிருக்கிறது. இது விசுவாசிகளான உத்தமகிறிஸ்தவர்கள் அடையும் மறுஜநநத்திற்குரிய ஆதார லட்சணம்.

இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்று, அசரீரிவாக்கினால் சாட்சியிடப்பட்டு, அவருடைய முத்தொழிலில் ஒரு தொழிலாகிய குருத்தொழிலை அவர் ஆரம்பித்தபோது: "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கிக்கத்தொடங்கினார். மனந்திரும்புங்கள் என்றாலும் குணப்படுங்கள் என்றாலும் சம்பந்தப்பட்ட ஒரு பொருளையே குறிக்கும். "மனந்திரும்பிக் குணப்படுங்கள்" என்று பேதுரு அப்போஸ்தலன் தம்முடைய இரண்டாம் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்.*

யூதருக்குள் அதிகாரியான நிக்கோதேமு என்னப்பட்ட பரிசேயன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்துவந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்; ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்" என்று சொன்னபோது, இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்"

---

* அப். 3. 20. மனந்திரும்புதல் அல்லது மனம்மாறுதல், நல்வழியைப் பற்றிக்கொள்வது (Repentance, a change of mind); குணப்படுதல், நல்வழியில் சேரய் நடப்பது (Conversion a change of life) இவ்விரண்டும் மறுஜன்மத்தால் உண்டாவது, (Regeneration, the new birth.) நிக். 3. 5.

என்றார். கிறிஸ்துமார்க்கம் ஆத்துமஜீவனைப்பற்றிய மார்க்கமாயிருக்கிறபடியால், ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று சற்குருவானவர் கூறியிருக்கிறார்.

I. ஆவியில் எளிமையுள்ளவர்கள் அடக்கமும்-ஒடுக்கமும், தாழ்மையும்-பொறுமையும், இணக்கமும்-வணக்கமும் உள்ளவர்களாயிருப்பார்கள். பக்தியில்லாத ஐஸ்வரியம் ஆணவத்தையும் கெர்வத்தையும் உண்டாக்கும்; பக்தியில்லாத தரித்திரமும் நிர்ப்பந்தமான நிலைமையாகையால் அதுவும் கேடுண்டாக்கும். "தாழ்ந்துநின்றால் வாழ்ந்துநிற்கலாம்."

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல், அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து."

உபதேசச்செல்வம் செல்வத்துளெல்லாம் செல்வமாயிருப்பதுபோல, பணிதலும் அதனையுடைய செல்வவான்களுக்குச் சிறந்தசெல்வமாயிருக்கிறது.

ஆவியில் எளிமையுள்ளவர்கள் தன்னையும் தலைவனையும் அறிந்து, தங்கள் பாவத்தை உணர்ந்து, உத்தமமனஸ்தாபப்பட்டு, தேவன் இட்டதே சட்டம் என்று அவருடைய திருவுளத்துக்கு இணங்கி, மனரம்மியமுடையவர்களாயிருப்பார்கள்.

உலகசெல்வம் நிலையாது. ஒவ்வொரு பழத்திலும் ஒவ்வொரு புழு இருப்பதுபோல, பழம்போன்ற செல்வத்திலும் புழு இருந்து கெடுக்கும். "ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் சம்பாதித்துக்கொண்டாலும், தன் ஆத்துமாவை இழந்துபோனால், அவனுக்கு லாபமென்ன?" ஒன்றுமில்லையே. இம்மையில் செய்யப்பட்ட நல்வினை தீவினைக்குரிய பயன் மாத்திரம் நம்மோடே மறுமைக்கும் வரும். நான் எனது என்னும் அகங்காரத்தை ஒழித்தவர்களே பாக்கியவான்கள். நிறைகுடம் தளும்பாது, பூரண ஏற்றுமதியுள்ள கப்பல் ஆடாது, பள்ளமுள்ள இடத்தில் தண்ணீர் நிற்கும். நன்றாய்ச் செழித்துப் பழுத்த கதிர் தலைகுனிந்திருக்கும்.

பெருமையினால் ஆதிமனுஷனாகிய முதல் ஆதாம் பாவத்தில் விழுந்து மன்னுயிரைக் கெடுத்தான். தாழ்மையினால்

பரமபுருஷோத்தமராகிய இரண்டாம் ஆதாம் மனுஷனை இரட்சித்தார்.

II. "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது." ஆவியில் எளிமையுள்ளவர்கள் இப்பொழுதே பாக்கியவான்கள்; இம்மையிலேயே அவர்கள் பரலோகராஜ்யத்திற்குச் சுதந்தரவாளிகளாகிறார்கள்; பேரின்பவாழ்வு அவர்களுடையது. "பயப்படாதே; சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று ரட்சகர் சொல்லியிருக்கிறாரே.

ஆபிரகாம் யோபு முதலான மகாத்துமாக்கள் செல்வவான்களாயினும், ஆவியில் எளிமையுள்ளவர்களாயிருந்து; இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவான்களானார்கள். ஐஸ்வரியவானையும் லாசருவையும் குறித்துக் கர்த்தர் சொன்ன உவமையினால் உலகப்பொருளுக்கும் பரம அருளுக்கும் இருக்கிற வித்தியாசம் இன்னதென்று விளங்கும். "தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐஸ்வரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா?"*

தெளிந்து தேறினவர்களிடத்திலே இந்தக் குணம் பழுத்துப் பூரணப்படும். சபையைத் துன்பப்படுத்தின மகா அகங்காரியாகிய சவுல் மனந்திரும்பிக் குணப்பட்டுக் கிறிஸ்தவனானவுடனே சிங்கம்போலிருந்த அவன் ஆட்டுக்குட்டிபோல் மாறி, "நான் அப்போஸ்தலன் என்று பேர்பெறுவதற்குப் பாத்திரன் அல்ல" என்று சொல்லி, சில காலத்துக்குப்பின்பு தாழ்மையில் தேறி: "பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவன் நான்" என்று உரைத்து, தன்னையும் தலைவனையும் முற்றுமுணர்ந்து மறுமைக்கு வித்தாய்ப் பழுத்திருக்கும் போது: "பாவிகளை ரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்

---

* யாக். 2. 5.

குப் பாத்திரமுமானது, அவர்களில் பிரதான பாவிநான்" என்று சொல்லியிருக்கிறார்.*

கிறிஸ்துநாதருக்குள் இந்தக் குணம் பூரணமாய் விளங்கினது. "அவர் ஐஸ்வரியமுள்ளவராயிருந்தும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐஸ்வரியவான்களாகும்படிக்கு நமது நிமித்தம் தரித்திரரானார்." "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமானமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷர் சாயலாகி, சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்து, தம்மைத்தாமே தாழ்த்தினார்." "சகோதரரே, கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த சிந்தையே உங்களுக்குள்ளும் இருக்கக்கடவது."†

---

* 1 கொரி. 15. 9. எபே. 3. 8. 1 தீமோ. 1. 15. † 1 கொரி. 8. 9. பிலி. 2. 5—8.

# பத்தொன்பதாம் பிரசங்கம்.

*"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்." மத். 5. 4.*

லூக்கா சுவிசேஷத்தில்: "இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள், இனி நகைப்பீர்கள்" என்றும்; "இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ! இனித் துக்கப்பட்டு அழுவீர்கள்" என்றும் சொல்லியிருக்கிறது.* இதற்கிசைவாகப் பழைய ஏற்பாட்டின் காலத்தில், இப்பிரபஞ்சத்தின் சுகதுக்கங்களை நன்ருய் அநுபவித்திருந்த சாலொமோனும்: "பரிமளதைலத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியும், ஒருவனுடைய ஜநநநாளைப்பார்க்கிலும் மரணநாளும் நல்லது. விருந்துவீட்டுக்குப் போவதிலும், துக்கவீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான். நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்; முகதுக்கத்திஞலே இருதயம் சீர்ப்படும். ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும்; மூடரின் இருதயம் களிப்புவீட்டிலே இருக்கும்" என்று சொல்லியிருக்கிருர்.†

I. துயரப்படாதவர்கள் உலகத்தில் இல்லை. பசி, பிணி, தரித்திரம், மரணம் முதலான துன்பங்கள் துயரத்தை அடிக்கடி உண்டுபண்ணும். எல்லாத் துயரத்திலும் பாவத்தை உணரும் துயரமே பெருந்துயரம். துயரம் மனதை இளகப்பண்ணி, சிந்தைக்கு இடங்கொடுத்து, கவலையை உண்டுபண்ணும். இரண்டுவிதமான துக்கம் உண்டு: "தேவனுக்கேற்ற துக்கமானது பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்

* லூ. 6. 21—25. † பிர. 7. 2. 1—4.

சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது என்றும், லௌகீக துக்கமானது மரணத்தை உண்டாக்குகிறது" என்றும், பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார். தேவனுக்கேற்ற துக்கம் தேவசித்தத்துக்கும் செயலுக்கும் இணங்கி அடங்கிநிற்கும்; லௌகீக துக்கமோ தேவசித்தத்துக்கும் செயலுக்கும் இணங்கி, அடங்காமல் விபரீத எண்ணங்கொண்டு விரோதித்துநிற்கும்.

ஆவியில் எளிமையுள்ளவர்களே தேவனுக்கேற்ற மனத்துயரமுள்ளவர்கள். பாவத்தை உணராதவர்கள் கல்நெஞ்சுள்ளவர்கள்; அவர்கள் இந்தத் துயரத்தை அறியார்கள். தங்கள் உள்ளத்தை அறிந்தவர்கள் பாவத்துக்காக உத்தமமனஸ்தாபப்பட்டு, கண்ணீர்விட்டு அழுது புலம்புவார்கள். இளகின நெஞ்சுள்ளவர்கள் தங்கள் பாவங்களுக்குமாத்திரம் அல்ல, பிறர் பாவங்களுக்கும் துயரப்படுவார்கள். "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக்கொடுத்தவர்கள்நிமித்தம் நான் இரவும்பகலும் அழுவேன்" என்று எரேமியாவும், "உம்முடைய வேதத்தை மனுஷர் காத்துநடவாதபடியால், என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது" என்று தாவீதும் சொல்லியிருக்கிறார்கள்.*

அன்புடையவர்கள் பிறர் துன்பங்களைக் காணும்போது, அந்த அன்புடையவர்களுடைய கண்பொழியும் நீரே அகத்திலிருக்கும் அன்பைக் காட்டிவிடும்; அதை அடைக்கக் கூடாது.

"பாவியாயிருந்த ஒரு ஸ்திரீ கிறிஸ்துநாதரிடத்தில் வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று, அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள்" என்று வேதத்தில் வாசிக்கிறோம்.†

---

* எரே. 9. 1. சங். 119. 136. † லூ. 7. 38.

"அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூச றரும்."

அன்பைப் பெருக்கி நமது ஆருயிரைக் காக்கவந்தவரும் கண்ணீர்விட்டு அழுதார். அவரைக்குறித்து: "அவர் துக்கம் நிறைந்தவரும் பாடு அநுபவித்தவருமாயிருந்தார்" என்று ஏசாயா சொல்லியிருக்கிறார்.* துயரமுள்ள பாவிகளை இரட்சிக்கவந்தவருக்குத் துயரமே ஒரு குறியாயிருந்தது. அவர் பேரின்பவீடு விட்டுவந்து, இப்புவியில் அந்நியரும் பரதேசியுமாய்த் திரிந்திருந்து, உலகத்தால் இகழப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு, மனுஷர் யாவராலும் கைவிடப்பட்டு, தலைசாய்க்க இடமில்லாதவராயிருந்தார். மனுமக்கள் படும் துன்பங்களைத் தாமே பட்டு, பசித்தவர்களுடைய பசியைத் தீர்த்து, பிணியாளிகளுடைய பிணிகளை நீக்கி, பாவிகளுக்காகக் கண்ணீர் விட்டு அழுது, மன்னுயிர்பிழைக்கத் தன்னுயிர்தந்து, பிராணத்தியாகஞ்செய்து, பாவிகளை இரட்சித்தார். "பாவமில்லாத அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார்" என்று வேதம் சொல்லுகிறது.† அவர் பாவத்தைக் கண்ணால் பார்த்து, கையால் தொட்டு, சரீரத்தில் சுமந்து, நிவிர்த்திசெய்தார். "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல்செய்யவும் அனுப்பினார்" என்று ஏசாயா தீர்க்கதரிசனத்தில் கிறிஸ்துநாதரைக்குறித்துச் சொல்லியிருக்கிறது.‡

II. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடைவார்கள். "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்

* ஏசா. 53. 3. † 2 கொ. 5. 21. ‡ ஏசா. 61. 1—3.

குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" என்று தாவீது சொல்லுகிறார். "உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்ட பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில் வாசம்பண்ணுகிறேன் என்று நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்." "மனம்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்" என்றும் நம்முடைய ரட்சகரும் சொல்லியிருக்கிறார்.*

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது."

"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்."† துயரமில்லாமல் ஆறுதலில்லை, வியாகுலமில்லாமல் தேறுதலில்லை. பாவத்துக்காக உத்தம மனஸ்தாபப்பட்டுத் துயரப்படுகிறவர்களுக்கு மனோவாக்குக்கு எட்டாத ஆறுதலும் தேறுதலும் உண்டு. உருகின அவர்களுடைய உள்ளத்தில் தேவசாயல் தோன்றி, சத்தியம் விளங்க, இருளும் மருளும் நீங்கிப் பேரின்பம் உண்டாகும்.

---

* சங். 57. 15; 61. 1. லூ. 15. 7. † சங். 126. 5.

# இருபதாம் பிரசங்கம்.

---

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்." மத். 5. 5.

"சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" என்றும், "சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்" என்றும், "சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்" என்றும் சங்கீத புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது.*

I. சாந்தம் என்றால் மெத்தனவு அல்லது சாதுத்துவம்† என்னும் குணத்தைக் குறிக்கும். சாந்தகுணமுள்ளவர்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களோடும் துயரப்படுகிறவர்களோடும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் பெருமை பெத்தரிக்கத்துக்கு இடங்கொடாமலும், சண்டைசச்சரவு செய்யாமலும், அமரிக்கையும் சமாதானமுமாயிருந்து, தங்கள் குணசீலம் யாவருக்கும் விளங்கத்தக்கதாய் நடந்துகொள்ளுவார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் எவ்வுயிர்களின் மேலும் அருள்புரியும் அழகிய தன்மையுள்ளவர்களாகையால், இவர்களையே அந்தணர் என்று சொல்லலாம்.‡ இவர்கள் ஆசார உபசாரமும், நாகரீகமும், சங்கையுமுள்ளவர்கள். இவர்களையே குலமக்கள், தலைமக்கள், பெருமான்கள், மகானுபாவர்கள்§ என்றும் சொல்லலாம். சாந்தகுணமுள்ளவர்கள் அச்சமும் கூச்சமுமுடைய கோழையர்கள் அல்ல, அவர்கள் தைரிய

---

* சங். 25. 9: 37. 11: 149. 4.    † Gentleness.

‡ அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்.

§ Gentlemen.

மும் வீரியமுமுள்ள பேராண்மையுடையவர்கள். சாந்த குணத்திலும் வல்லமை விளங்கும்.

"மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" என்று வேதத்தில் வாசிக்கிறோம். மோசே சாந்தகுணமுள்ளவராயிருந்தும் அவருடைய செய்கைகளில் மகா வல்லமைகள் விளங்கினது; மோசேயின் ஒரு கோல் பார்வோனின் ஆயிரம் ஈட்டிகளை வென்றது.

சாந்தகுணமுள்ளவர்கள், அருமையைக் குலைக்கும் பெருமையை வெறுத்து, கோபத்தை அகற்றி, கடிவதை மறந்து, கனிந்த சொற்களை வழங்கி, இனிய சொற்களைக் கூறி, யாவரும் புகழ நிலைபெற்றோங்கி வாழ்வார்கள். சாந்தகுணம் தேவ பக்திக்கடுத்தகுணம். விநயபக்தியுள்ளவர்கள் தங்கள் கற்பைக்காத்து, யோக்கியதையுள்ளவர்களாயிருந்து, பரோபகாரஞ்செய்து, அந்நியரை உபசரித்து, ஐயமிட்டுண்டு, பலராலும் புகழப்படுவார்கள். "கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்களும் மேட்டிமையுள்ளதல்ல; பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை. தாயின் பால்மறந்த குழந்தையைப்போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணினேன்; என் ஆத்துமா பால்மறந்த குழந்தையைப்போல் இருக்கிறது. இது முதல் என்றென்றைக்கும் இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக"* என்று ஒரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது.

II. "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்."

சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை நாடாதிருந்தும், விண்ணும்மண்ணும் அவர்களை நாடி, அவர்களுக்குச் சுதந்தரங் கொடுக்கும். அவர்களுக்குப் பகைஞரில்லை. முடிமன்னரும், யுத்தவீரரும், கல்விமான்களும், சாஸ்திரநிபுணரும் மறைந்து ஒழிந்துபோகும்போது, சாந்தகுணமுள்ளவர்களின் கீர்த்தி

* 131. சங்கீதம்.

பூமியில் நிலைபெற்றேருங்கும். "அமரிக்கை ஆயிரம் பெறும்." "தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோசனமுள்ளது."* "உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினுல் கிடையாமல், விசுவாசத்தினுலே வருகிற நீதியினுல் கிடைத்தது" என்று வேதத்தில் சொல்லியிருக்கிறதுமல்லாமல்,† "நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்" என்றும் சொல்லியிருக்கிறது.‡

சாந்தகுணத்தில் தேறுதல் அடைய விரும்புகிறவர்கள் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். அவர் சாந்தத்தில் சிறந்தவர். அவர் மனுமக்களை நோக்கி: "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயுமிருக்கிறது" என்று திருவுளம்பற்றியிருக்கிருர்.§

சகோதரரே, "கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையுமுன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்."‖ "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அது தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது." ¶

---

* 1 தீமோ. 4. 8. † ரோ. 4. 13. ‡ ஏசா. 32. 17. § மத். 11. 28—30.
‖ 2 கொரி. 10. 1. ¶ 1 பேது. 3. 4.

# இருபத்தோராம் பிரசங்கம்.

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்." மத். 5. 6.

நீதிமான்கள் பாக்கியவான்கள் என்று சொல்லாமல், நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று ரட்சகர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஜெபத்தில் சொல்லிய முதல் மூன்று விண்ணப்பங்களும் இந்த நீதியையே குறிக்கும்.

I. பசிதாகம் எல்லாப் பிராணிகளுக்கும் பொது. பசிதாகத்தின் கொடுமையைச் சிலவேளைகளில் ஐஸ்வரியவான்கள்முதலாய் உணர்ந்திருக்கிறார்கள்.

பசிதாகம் சுகத்துக்கு லட்சணம். சரீரத்திற்குப் பசிதாகம் உண்டாயிருக்கிறதுபோல, ஆத்துமாவுக்கும் ஒருவிதமான பசிதாகம் உண்டு. "மனுஷன் அப்பத்தினால் [ஆகாரத்தினால்] மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது.* சரீரபஞ்சம் ஆத்துமபஞ்சம் என்னும் இரண்டுவிதமான பஞ்சமுண்டு. "இதோ, நான் தேசத்தின் மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."† ஆத்துமபஞ்சம் நமக்குள் இருந்தும், உலக

---

* மத். 4. 4. † ஆமோ. 8. 11.

மயக்கத்தினாலும் பாவ இச்சையினாலும் மனிதர் அதை உணராமலும் அதைப்பற்றிக் கவலைப்படாமலும் இருக்கிறார்கள். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய இம்மூன்று ஆசைகளினாலும் மனிதருடைய மனம் உழன்று, ஜீவனார்த்த விஷயங்களிலும் சிற்றின்ப உல்லாசங்களிலும் முயற்சி செய்து, இவைகளின்பேரிலுள்ள பசிதாகத்தினால், ஆத்தும பசிதாகத்தை நினையாமலும் நோக்காமலும் இருக்கிறார்கள். "காண்கிறதினால் கண்ணும், கேட்கிறதினால் காதும் திருப்தியாகிறதில்லை." இவ்வுலகவிஷயங்கள் ஒன்றிலும் ஆத்துமாவுக்குத் திருப்தியில்லை.

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்." இந்த நீதியாவதென்ன? இதை அறம் என்றும், தர்மம் என்றும், புண்ணியம் என்றும் சொல்லலாம். இது சுயநீதியல்ல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியமாகிய நீதியே; இந்த நீதி விசுவாசிகளுக்குப் பலிக்கும். விசுவாசத்தினால் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டவன் கிறிஸ்துவின் புண்ணியபலத்தினால் நீதிமான் என்று எண்ணப்படுவான். அவன் பாவம் மன்னிக்கப்படும்; அவனுக்குச் சமாதானமும் பேரின்பமும் உண்டாகும். மனிதருக்குள் விசுவாசத்தை உண்டுபண்ணி இந்த நீதியைப் பலிக்கப்பண்ணுகிறவர் பரிசுத்தஆவியானவர். "ஆவியின் கனி சகல சற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்." "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்தஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது."* "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்." இதுவே விசுவாசியினுடைய அலங்காரம்; இதனால் விசுவாசி பரிபூரணப்பட்டு மோட்சத்துக்கு வித்தாவான்.

பாவிகளான மனுஷர் குணப்பட்டு விசுவாசத்தினால் ரட்சிக்கப்படுவதற்குக் கிறிஸ்துநாதருடைய புண்ணியமே காரணம். "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்

* எபே. 5. 9. ரோ. 14. 17.

தரும் மீட்புமானார்." "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படி, பாவம் அறியாத அவரைப் பாவமாக்கினார்." "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்."* மனுஷரட்சிப்புக்கு அவசியம் தேவையானது இந்த நீதி ஒன்றே. இயேசுநாதரின் பாதத்தில் உட்கார்ந்து அவருடைய உபதேசத்தைக் கேட்ட மரியாள் தன்னைவிட்டு எடுபடாத இந்த நல்லபங்கைத் தெரிந்துகொண்டாள் என்று சொல்லியிருக்கிறது. அவளைப் போல நாமும் இதைத் தெரிந்துகொள்வோமாக.†

ஒருவர் புண்ணியத்தை மற்றொருவருக்குத் தானம்பண்ணுவதைப்பற்றி பாரதத்தில் ஒரு திருஷ்டாந்தமுண்டு:

கொடுக்குந்தன்மையில் தனக்குத்தானே நிகராகிய கர்ணனானவன் அர்ச்சுனன் பிரயோகித்த பாணங்களினால் சரீரமெல்லாம் சல்லடைக்கண்களாகத் தொளைக்கப்பட்டு, பிரக்ஞையற்றுத் தேர்மேல் சாய்ந்துகிடக்குந்தருணத்தில், அர்ச்சுனனுக்குச் சாரத்தியஞ்செய்துகொண்டிருந்த கிருஷ்ணன் ஒரு முதிர்ந்த பிராமணன் வடிவங்கொண்டு கர்ணனிடத்தில் வந்து: சூரியகுமாரனாகிய பிரபுவே, நான் மகமேருவினிடத்தில் தவஞ்செய்துகொண்டிருப்பவன். நெருங்கி வருத்துகின்ற தரித்திரத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டேன். இல்லையென்று வந்தடைந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் வேண்டியவற்றை விருப்பத்தோடு கொடுக்கின்ற தாதா நீ என்று கேள்விப்பட்டு உன்னை வந்தடைந்தேன். "ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடு" என்பதைப்போல, நான் வந்ததற்கும் நீ நொந்ததற்கும் சரியாயிருக்கிறது. எப்படியும் உன்னைவந்து கண்டுவிட்டேன். இப்போது என் சிறுமை நீங்கும்படியாக நாளைவா, பின்னைவா என்று சொல்லாமல், உன்னால் இயன்றது எதாகிலும் தந்தனுப்பக்கடவாய்; எப்படியும் கிடைக்குமென்கிற நம்பிக்கையோடு அதிக மகிழ்ச்சி கொண்டு வந்துவிட்டேன் என்று சொன்னான். அந்த வார்த்தை

---

* 1 கொரி. 1. 31. 2 கொரி. 5. 21. யோ. 1. 16. † லூக். 10. 38—42.

களை அர்ச்சுனனுடைய பாணத்தினால் அடிபட்டுப் பொறி கலங்கிப் புலனொடுங்கி மூர்ச்சித்துக்கிடக்கிற கர்ணனானவன் இருசெவியிலும் அமிர்தம் பிழிந்ததுபோல் கேட்டு, நல்லது இதுவும் சோதனைதானென்று நகைத்து, விர்த்தபிராமணனைப் பார்த்து: பிராமணோத்தமரே, மெலிவடைந்திருக்கும் இந்த தசையிலிருக்கிற நான் இப்போது தரத்தக்க பொருளைச் சொல்லும் என்று கேட்க, பிராமணன் இப்போது பொருந்தியிருக்கிற உன் புண்ணியத்தையெல்லாங்கொடு என்று கேட்டான். அப்போது கர்ணனானவன் உள்ளத்தில் ஆனந்தம் பெருகி: ஐயரே! என்னுடைய பாக்கியமே பாக்கியம். என் கையில் இல்லாத வஸ்துவைக் கேட்டு எனக்கும் லோபத்துவம் காட்டி நீரும் பிரயோஜனம் அடையாமல் எங்கே வீணாய்ப்போய் விடுகிறீரோ என்று எண்ணங்கொண்டிருந்த எனக்குச் சந்தோஷமுண்டாகும்படி என்னிடத்தில் பெரும்பொருளாயிருக்கும் தர்மத்தைக் கேட்டீரே, இதுவே போதும்; என் பிராணனோ உயிர்நிலைவிட்டு மேலெழுந்து கலங்கிப் பிரிந்துபோகிறதாயிருக்கிறது. அது உடலுக்குள்ளே இருக்கிறதோ, அல்லது வெளிப்பட்டுப் போய்விட்டதோ நான் அறியேன். ஆனால் வேண்டியவர்களுக்கு வேண்டியபொருளைக் கொடுத்துக்கொண்டிருந்த அந்தப் பக்குவகாலத்தில் வராமற்போனீரே, அப்பேர்ப்பட்ட காலத்தில் உமக்குக் கொடுத்து நன்மையைப் பெறுவதற்குப் பாக்கியம்பண்ணாதவனானேன். இப்பவும் தாமதஞ்செய்யாமல் நான் செய்த புண்ணியமனைத்தும் இதோ கொடுக்கிறேன், பெற்றுக்கொள்ளும் என்று உபசரித்துக்கூற, பிராமணசொரூபமாய் வந்திருக்கிற கிருஷ்ணன் கர்ணனைப் பார்த்து: கொடையாளனே, நீ நிதானமாயிருந்து கொடுப்பாயாகில் நான் பெற்றுக்கொள்ளலாம்; உலகம் என்னை ஒன்றும் சொல்லமாட்டாது. நீ உடல்வருந்தியிருக்கிற இந்தச் சமயத்தில் பெறுவேனேயாகில் பிரக்கினையற்றிருக்கிற காலத்தில் என்னமோ ஏமாற்றிக்கொண்டுபோய்விட்டானென்று உலகத்தார் என்னை இழிவாகப் பேசுவார்கள். ஆகையால் நீ எனக்குக் கொடுக்கப்போகிறதை நல்ல ஞாபகத்துடனே தத்

தஞ்செய்து கொடுப்பாயாகில் உனக்கும் பலனுண்டு, எனக்கும் சொந்தமுண்டு, எவர்களாலும் யாதொரு நிந்தையுமில்லை என்று சொல்ல, கர்ணராஜன் அப்படியே நல்லதென்று சம்மதித்து தாரைவார்ப்பதற்குத் தண்ணீர் சமீபத்திலில்லாமையால், அதை வருவிப்பதற்குள்ளே தன் பிராணன் பிரிந்துபோமோ அல்லது எப்படியாமோ என்கிற சந்தேகமுள்ளவனாய், உடனே சத்துருவினால் தன் மார்பில் பதிந்திருக்கிற பாணங்களில் ஒன்றைப் பிடுங்கி, அது வந்த வழியே பீரிட்டடித்த உதிரத்தைப் பிடித்து, நான் இதுவரையில் செய்துவந்த புண்ணியங்களையெல்லாம் மனப்பூர்வமாய்த் தத்தம்பண்ணுகிறேன் என்று தாரைவார்த்தான். அப்படி தாரைவார்த்தும் அவன் புண்ணியம் முன்னிலும் அதிகமானதேயொழிய குறையவில்லை. நெல்லை விதைத்தவன் நெல்லை அறுப்பதுபோல, புண்ணியத்தை விதைத்தவன் புண்ணியத்தை அறுப்பானல்லவோ?

"புண்ணியமளிப்பதும் புண்ணியமாமே."

இந்தச் சரித்திரம் கருணாலயமாகிய கிறிஸ்துநாதர் பிராணத்தியாகஞ்செய்து திருஉதிரம் சிந்தி புண்ணியதத்தம்பண்ணின சுவிசேஷசரித்திரத்தை ஒருவாறு விளக்குகின்றது. "இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லையென்றும்," "இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்" என்றும், "இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்குண்டு" என்றும் வேதம் சொல்லுகிறது.* இந்த இரத்தத்தினால் உண்டான புண்ணியம் பாவிகளுக்குப் பலிக்கும்படியே ஞானஸ்நானமும் நற்கருணையுமாகிய வேதநியமங்கள் திருச்சபையில் வழங்கிவருகிறது.

ஒருவர் புண்ணியம் மற்றொருவருக்குப் பலிப்பது எப்படி என்றும்; ஒருவன் குற்றஞ்செய்து, அந்தக் குற்றத்திற்காகத் தான் மரிக்கவேண்டியதாயிருக்க, வேறொருவன் ஏற்பட்டு மற்றவனுடைய குற்றத்திற்காக பாத்தியப்பட்டுத் தன் ஜீவனை

---

* எபி. 9. 22. 1 யோ. 1. 7: 5. 6.

அவனுடைய ஜீவனுக்குப் பதிலாய்க் கொடுத்து, அவனை ரட்சிக்கக்கூடுமோ என்றும், இது இயல்புக்கும் நியாயத்துக்கும் விரோதமாயிருக்குமே என்றும் சிலர் ஆட்சேபனை செய்வார்கள். கடன்பட்ட ஒருவன் தான் பட்ட கடனைத் தான் கொடுத்துத்தீர்க்க ஏதுவில்லாதிருக்கும்போது, அவனுடைய சிநேகிதனாவது தயாளசிந்தையுள்ள வேறொருவனாவது ஏற்பட்டு, அந்தக் கடனைத் தீர்க்கிறது மனிதருக்குள் சகசமாய் நடக்கிற காரியம். இதை நியாயாதிபதிகள் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆனால் குற்றஞ்செய்த மனுஷன் சாகவேண்டியிருக்க, அவனுக்காக வேறொரு மனுஷன் ஏற்பட்டுத் தன் உயிரைக்கொடுத்துக் குற்றவாளியைத் தண்டனைக்குத் தப்புவிக்க நியாயாதிபதிகள் சம்மதிக்கமாட்டார்கள். இது நியாயத்துக்கு விரோதமாயிருக்கும்; ஏனென்றால், நாம் சம்பாதித்த நம்முடைய சொந்தமான பொருளைக்கொடுத்து ஒருவனுடைய கடனைத் தீர்க்கலாம்; ஜீவனானது நாம் சம்பாதித்த நம்முடைய சொந்தப்பொருள் அல்லாததினால் அதை நாம் கொடுத்துவிட நமக்கு அதிகாரமில்லை. ஒரு பாவி வேறொரு பாவியின் கடனைப் பணங்கொடுத்துத் தீர்த்து, மறுபடியும் அந்தப் பணத்தைச் சம்பாதிக்கலாம்; ஒரு பாவிக்காக வேறொரு பாவி தன் ஜீவனைக்கொடுத்தால் அதை மறுபடியும் சம்பாதிக்கக்கூடாது. பணம் எப்படி நம்முடைய சொந்தமானதோ அப்படியே ஜீவனும் நம்முடைய சொந்தமானால், கொடுத்த பணத்தை மறுபடியும் எப்படி சம்பாதிக்கக்கூடுமோ, அப்படியே இழந்த ஜீவனையும் மறுபடியும் நாம் சம்பாதிக்கக்கூடுமானால், நாம் இவ்விரண்டையும் பிறருக்குக் கொடுப்பது அநியாயமல்ல; அதினால் நீதியும் இரக்கமும் விளங்கும். கிறிஸ்துநாதர் ஜீவகாரணர். நான் ஜீவன் என்று சொன்ன புண்ணியநாதராகிய இந்தத் திருஅவதாரபுருஷன்: "என் ஜீவனைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு. என் ஜீவனை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு"* என்றும், "மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படிவராமல், ஊழியஞ்

* யோ. 10. 17, 18.

செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்றும் திருவுளம்பற்றியிருக்கிறார்.* ஆகையால் ஜீவகாரணராகிய இந்தப் புண்ணியநாதர் பாவிகளை இரட்சிக்கத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கக்கூடுமே. இது பரமஞானம்; "இது உன்னத சிநேகந்தான், இது அன்பின் ஆழங்கள்."

"உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு."

II. "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்."

அவர்கள் குறைவு நீங்கும், ஆசை அடங்கும், பரிபூரணம் அடைவார்கள். "நல்ல மனுஷன் தன்னிலேதான் திருப்தியடைவான்" என்று சாலொமோன் சொல்லியிருக்கிறார்.†

"பசிதாகமாயிருக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள்" என்று சொல்லுகிற இரட்சகர், "ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்; என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்றும் திருவுளம்பற்றியிருக்கிறார்.‡

"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்று இரட்சகர் சொன்னதுபோல, நாமும் உணர்ந்து சொல்லி, நாமும் கிறிஸ்துவாகிய நம்முடைய ஜீவனை முன்னிட்டு நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாயிருப்போமானால் தாவீது சொன்னதுபோல: "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்

---

* மத். 20. 28. † இந்த விஷயத்தைப்பற்றி யோவான் சுவிசேஷம்: 6 ம் அதிகாரத்தைப் பார்க்க. ‡ நீதி. 14. 14.

தன் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது." "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆநந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." "நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" என்று சொல்லுவீர்கள்,*

---

* சங். 23: 16. 11: 17. 15.

# இருபத்திரண்டாம் பிரசங்கம்.

*"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." மத். 5. 7.*

இந்த வசனத்திலுள்ள இரக்கம் என்னும் குணம், அருள் அநுக்கிரகம், அன்பு அனுதாபம், கருணை காருணியம், உருக்கம், தயாளம், பரிதாபம் முதலான குணங்களையும் தழுவும். இரக்கம் என்னும் இலட்சணம் தேவனுக்கும் சற்குருவுக்குமுரிய லட்சணம்.* பாவமுள்ள உலகத்தில் இரக்கம் அரிது; பகையும் விரோதமும், பேதமும் கொடுமையும் அதிகம். "துன்மார்க்கருடைய இரக்கமும் கொடுமையே" என்று சாலொமோன் சொல்லியிருக்கிறார்.† ஆகையால் இரக்கம் இயற்கை வாசனையினால் உண்டாகிற குணமாயிராமல், சேர்க்கைவாசனையினால் உண்டாகிற குணமாயிருக்கிறது; இது தேவஅருளினால் பக்தருடைய மனதில் அமைந்து விளங்கும்.

I. நிர்ப்பந்தராகிய ஏழைகளுக்கு உதவுகிறது இரக்கம் என்றும், அபாத்திரராகிய கொடியவர்களுக்கு உதவுகிறது உருக்கம் என்றும் சொல்லப்படும். இவ்விருவிதமானவர்களுக்கும் தேவன் உதவிசெய்கிறபடியால், அவர் மிகுந்த இரக்கமும் உருக்கமுமுள்ளவர் என்று வேதம் சொல்லுகிறது. கள்ளர் கையில் அகப்பட்டு குற்றுயிராய் விடப்பட்டவனுக்கு உதவி செய்த சமாரியன் இரக்கமுள்ளவனாயிருந்தான். கெட்டுப்போன குமாரன் தன்னை அறிந்து, குணப்பட்டுப் பிதாவினிடத்தில் வந்தபோது, அவனை ஏற்றுக்கொண்டு அவனைத் தழுவின தகப்பன் உருக்கமுள்ளவனாயிருந்தான்.‡

---

* *ἐλεήμονος* mercy. இவ்விடத்திலும் எபிரெயர் 2. 17லும் மாத்திரம் இந்தப் பதம் வழங்குகிறது. † Pity, Compassion, Sympathy, நீதி. 12. 10. ‡ லூக். 5. 11.

பிறரிடத்தில் பாராட்டும் அநுதாபத்திலும் பரிதாபத்தி லும், இந்த வசனத்தில் கண்டிருக்கிற, நற்குணமாகிய இரக்கம் விளங்கும். பிறர் நிலைமையில் நம்மை நிறுத்தி, நம்மை அவர்களாகப் பாவித்து, மற்றவர்கள் நமக்குச் செய்ய நாம் விரும்புவதை நாமும் மற்றவர்களுக்குச் செய்யத்தக்கதாய் தயைபாராட்டுவது இந்த வசனத்தில் கண்டிருக்கிற குணத் தை விளங்கப்பண்ணும். பிறர் துக்கத்தைப்பற்றி மனது ருகி, அதைச் சுயதுக்கமாக எண்ணி, பரோபகாரம் செய்வ தும் நம்மை அடுத்தவர்களுக்குமாத்திரமல்ல, நமக்கு அடுத்தி ராத நம்முடைய விரோதிகளுக்கும் உபகாரம் செய்வதும் விசேஷமாய் இரக்கத்தை விளங்கப்பண்ணும். "உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாக மாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்கி றதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினால் வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு."*

இரக்கமுள்ளவர்கள் பிறருடைய சரீரத்துக்குமாத்திரமல்ல, ஆத்துமாவுக்கும் நன்மைசெய்வார்கள்; தரித்திரருக்கு அன்ன வஸ்திரங்கொடுத்து, வியாதியஸ்தரைக் குணப்படுத்தி, அறிவீ னருக்கு அறிவைப்புகட்டி, கெட்டோரைச் சீர்ப்படுத்தி, துக் கப்படுகிறவர்களோடு பரிதபித்து, துயரப்படுகிறவர்களைத் தேற்றி ஆறுதல்செய்வார்கள்.

இரக்கத்தைப்பற்றி லூக்கா சுவிசேஷம், 6-ம் அதிகாரம், 27-ம் வசனமுதல் 36-ம் வசனம்வரைக்கும் வாசித்து, இரக்கம் பாராட்டாதவனைப்பற்றி மத்தேயு சுவிசேஷம், 18-ம் அதிகா ரம், 21-ம் வசனமுதல் 35-ம் வசனம்வரைக்கும் ஆண்டவர் சொன்ன உவமையையும் வாசித்து, கடைசி நியாயத்தீர்ப்பின் நாளைக்குறித்து மத்தேயு சுவிசேஷம் 25-ம் அதிகாரம் 31-ம் வசனமுதல் சொல்லியிருக்கிற காரியங்களை வாசித்துப்பார்த் தால் இந்தக் குணம் இன்னதென்று நன்றாய் விளங்கும்.

* ரூ. 10. 30; 15. 11. ஓ.

II. "இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம்பெறுவார்கள்."

நெல்லை விதைக்கிறவர்கள் நெல்லை அறுப்பார்கள், இரக்கத்தை விதைக்கிறவர்கள் இரக்கத்தையே அறுப்பார்கள். "தர்மமே ஜெயம்." பரோபகாரம் செய்கிறவன் இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவானுயிருப்பான். "இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும். நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது.*

இரக்கத்தில் சிறந்தவர் கிறிஸ்துநாதர். அவரைப் பற்றினவர்களிடத்தில்தான் நீதியோடு சேர்ந்த இரக்கம் பூரணமாய் விளங்கும். இரக்கந்தான் இரட்சகரைப் பரத்திலிருந்து புவியில் இறங்கச்செய்தது. நீதியும் இரக்கமும் அவரிடத்தில் கலந்துநின்று, அன்பின் சொரூபியாய் அவரை அவதரிக்கச் செய்தது; இரக்கமே மன்னுயிர்க்காகத் தன்னுயிர்கொடுத்துப் பிராணத்தியாகஞ்செய்யும்படி காரணமாயிருந்தது. இரக்கம் இன்னதென்று அறியவேண்டுமானல், "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே நல்லதென்று சொன்ன† கிறிஸ்துநாதருடைய சிலுவைப்பாடுகளையும் மரணத்தையும் நோக்கவேண்டும். தம்மையே நமக்குக் கொடுத்தவருக்காக நாம் என்னத்தைக் கொடுப்போம்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலரிது."

---

* யாக். 2. 13. † அப். 20. 35.

"நல்லா றெனினும் கொளறீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று."

# இருபத்துமூன்றும் பிரசங்கம்.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." மத். 5. 8.

தேவன் நம்மைச் சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறார். அவர் எங்கும் இருக்கிறார். "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்." என்றாலும் அவரைக் காணக் கூடாது. அவருடைய கிரியைகளினால் அவருடைய தன்மையும் இலட்சணங்களும் விளங்குகிறது. வேதத்திலுள்ள அவருடைய நாமதேயங்களினால் அவரை அறிந்து, விசுவாசத்தினாலும் அன்பினாலும் அவரைச் சேவித்து வணங்குகிறோம். தேவனையும் மறுமையையும்பற்றி இம்மையில் "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" * என்றும், "நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதிகர்த்தாவுமானவர், ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறார்" என்றும், † "தேவனுடைய அந்தரங்கஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது; நீர் அறியக்கூடியதென்ன? அதின் அளவு பூமியைப்பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப்பார்க்கிலும் அகலமுமாயிருக்கிறது" என்றும் வேதம் சொல்லுகிறது. ‡

* 2 கொ. 5. 6. † 1 தீமோ. 6. 15, 16. ‡ யோபு. 11. 7, 9.

"அரியுமல்ல அரனுமல்ல அயனுமல்ல அப்புறம்
கருமைவெண்மை செம்மையுங் கடந்துநின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணுமாணு மல்லவே
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே"

என்று இத்தேசத்து ஞானியும் ஒருவர் சொல்லியிருக்கிறார்.

பூர்வ கிரேக்கர் அறியப்படாத தேவனுக்கு என்று ஒரு பலிபீடத்தைக் கட்டியிருந்தார்கள்.* மனம் புத்தி சித்தமுள்ளவனாய் உண்டாக்கப்பட்ட மனுஷன் தன்னை உண்டாக்கினவனைக் காண விரும்புவான். இதற்கிசைவாய்,

"விண்மீதிருப்பாய் மலைமேல்நிற்பாய் கடல்சேர்வாய்
மண்மீதுழல்வா யிவற்றுள்ளெங்கு மறைந்துறைவாய்
எண்மீதியன்ற புறவண்டத்தாய் எனதாவி
யுண்மீதாடி யுருக்காட்டாதே யொளிப்பாயோ"

என்று திருவாய்மொழியிலும் ஒரு பாட்டுண்டு.

I. திருவாக்குக்கு எதிர்வாக்கு இல்லையென்று உணர்ந்து இரண்டகமும் மாய்மாலமுமில்லாமல் தேவச்சித்தத்துக்கு இசைந்திருக்கும் நல்மனச்சாட்சியே இருதயசுத்தம் என்னப்படும்.

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

அதாவது, மனத்துக்கண் மாசிலனாதல் எல்லாவற்றிலும் சிறந்த அறம், மற்றதெல்லாம் வீண் ஆரவாரம்.

பாவத்தினால் மனிதருடைய இருதயம் அசுசிப்பட்டிருக்கிறது. ஜந்மபாவத்தினாலும் கர்மபாவத்தினாலும் உள்ளம் தீட்டுப்படும். இச்சையானது மனதில் இருளையும் மருளையும் உண்டுபண்ணும். "கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன்கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்?" என்று மனக்கண்ணைக்குறித்து இரட்சகர் சொல்லியிருக்கிறார்.†

---

* அப். 17. 23. † மத். 6. 22, 23.

மனுமக்கள் யாவரும் பாவிகளே, புண்ணியவான் ஒருவனுமில்லை. என்றாலும் "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.*

நீதி பரிசுத்தம் என்னும் தெய்வச்சாயலில் மனுஷன் உண்டாக்கப்பட்டான்.† தெய்வசொரூபம் மனுஷனுடைய உள்ளத்தில் பதிந்திருக்கிறது. தெய்வ அருளினால் உள்ளம் சுத்தமாகும்போது, பாவ இருளினால் மங்கியிருக்கிற தெய்வசாயல் விளங்கும்.

உம்முடைய மகிமையை எனக்குக் காண்பியும் என்று மோசே கேட்டபோது, என்னுடைய தயையை உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, என்னுடைய நாமத்தைக் கூறுவேன். நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது என்று திருவுளம் பிறந்தது (யாத். 34. 17—23.), பூர்வ மகாத்துமாக்களாகிய ஏசாயா (6-அதி.), எசேக்கியல் (8-அதி.), பவுல் (2 கொ.12.2.), யோவான் (வெளி. 1. 13.) முதலானவர்கள் கண்ட தேவ காட்சி அற்புதமூர்த்தியாகிய கிறிஸ்துவைக் குறிக்கும்.

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உமது வசனமே சத்தியம்" என்று இரட்சகர் சொல்லியிருக்கிறதினால்,‡ வேத சத்தியத்தினாலேயே விசுவாசமுள்ள மனது சுத்தமாகவேண்டும். சத்தியமில்லாமல் சுத்தமில்லை.

> "புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை
> வாய்மையால் காணப்படும்."

அதாவது, சரீரசுத்தம் ஜலஸ்நானத்தினால் உண்டாகும்; ஆத்துமசுத்தம் சத்தியத்தினால் உண்டாகும் என்பதே.

---

* 1 கொரி. 6. 11. † எபே. 4. 24. ‡ யோ. 17. 17.

II. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

தேவனை எப்பொழுது, எப்படித் தரிசிக்கக்கூடும்? என்னும் கேள்வியானது, தேவனை நாடித்தேடுகிற யாவரும் இயல்பாய்க் கேட்கும் கேள்வியே. மோசே கர்த்தனை நோக்கி: "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" என்றும், பிலிப்பு இரட்சகனை நோக்கி: "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்" என்றும் சொன்னார்கள்.* "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற குமாரனே அவனை வெளிப்படுத்தினார்." அவர்: "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று திருவுளம்பற்றியிருக்கிறார். †

"ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானநணிய துடைத்து."

அதாவது, இம்மை மறுமைக்குரிய சகல சந்தேகங்களும் நிவிர்த்தியாகித் தெளிந்து தேறின மனமுள்ளவர்களுக்கு இவ்வுலகத்தைப்பார்க்கிலும் மேலுலகம் சமீபமாயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறபடியே, தேவமகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிற ஏகசுதனாகிய பரமகுருவைப் பற்றிக்கொண்டு, அவனைத் தங்கள் இருதயகமலத்தில் ஏற்றுக்கொண்டு, அவருக்கு அகமும் ஆலயமுமானவர்கள் தேவனைக் காண்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

"பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சிதனை
மெய்வளரு நெஞ்சினர்கள் கண்டு களித்திடுவர்."

அவனை எப்பொழுது காண்போம்? இப்பொழுதே காண்போம். நம்மை நாம் அறியும்போது தலைவனையும் அறிவோம், தலைவனை அறியும்போது அவனைக் காண்போம். எப்படிக்

* யாத். 33. 18. யோ. 14. 8. † யோ. 1. 18; 14. 9.

காண்போம் என்றால், சரீரக்கண்ணினால் அல்ல, ஆத்துமக் கண்ணினால் காண்போம்; ஊனக்கண்ணினால் அல்ல, ஞானக்கண்ணினால் காண்போம்.* "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.†

பாவமயக்கத்தினால் உண்டாகும் இருளும் மருளும் பரமாத்துமாவுக்கும் ஜீவாத்துமாவுக்கும் இருக்கிற சம்பந்தத்தை விளங்கச்செய்யாதிருக்கிறது. இந்த இருளும் மருளும் நீங்கி, அருளும் பொருளும் உள்ளத்தில் அமைந்து, திருவிளக்கெரியும்போது, அந்தச் சம்பந்தம் விளங்கி, அதரிசனமானவரைத் தரிசிப்போம். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பார்த்து அவர்மேல் நம்பிக்கையுள்ள பாக்கியவான்கள் அவரைத் தரிசிப்பார்கள்.

"கண்காணியில்லையென்று கள்ளம் பலசெய்தேன்
கண்காணியில்லாத இடமில்லை காணுங்கால்
கண்காணியாயெங்குங் கலந்து நின்றானை
கண்காணி கண்டபின் கள்ளமறந்தேனே"

என்று காரைக்காலம்மை என்னும் ஒரு ஞானமுள்ள ஸ்திரீ பாடியிருக்கிறாள்.

சிலுவையில் பாடுபட்ட இயேசுநாதருடைய ஜீவசொரூபம் நம்முடைய உள்ளத்தில் அமைந்து, நாம் நிர்மலராகும்போது தேவனைத் தரிசிப்போம். "பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனைத் தரிசிக்கக்கூடாது." "நாம் எல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே கண்

---

* முகத்துக்கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக்கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்.

† 1 கொரி. 13. 12.

டாற்போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறு ரூபப்படுகிறோம்.* "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்." †

* 2 கொரி. 3. 18. † வெளி. 22. 3, 4.

# இருபத்துநான்காம் பிரசங்கம்.

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்." மத். 5. 9.

"பரத்திலிருந்து வருகிற ஞானம் முதலாவது சுத்த முள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமு முள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயும் இருக்கிறது. நீதியா கிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமா தானத்திலே விதைக்கப்படுகிறது" என்று அப்போஸ்தலனு கிய யாக்கோபு சொல்லியிருக்கிறார்.*

I. சமாதானம் என்பது ஒப்புரவு, இணக்கம், சாந்தி, ஐக்கி யம், அந்நியோந்நியம் என்னும் பொருளைக் கொடுக்கும். அகத்திலும் புறத்திலும், வீட்டிலும் நாட்டிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும் நமக்குள்ளே சமாதான மாயிருந்து பிறரைச் சமாதானப்படுத்துகிறது சிறந்த பாக்கிய மல்லவா?

மனுமக்களுக்குள் சமாதானம் அரிது. சண்டையும் சச்சர வும், விரோதமும் பிரிவினையும், பகையும் பழியும் ஜனங்க ளுக்குள் உண்டாவது சகசம். தன்னயமும் ஆணவமும் உள்ள இடத்தில் சமாதானமிராது. "நீங்கள் ஏகசிந்தையும் ஏக அன் புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றை யே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன் றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யா மல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன்

* யாக். 3. 17, 18.

தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்கு வாளுக" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.*

தேவவிஷயத்தில் அகத்தில் சமாதானம் உண்டாயிருக்கு மானல், மனுஷர்விஷயத்திலும் புறத்தில் சமாதானம் உண் டாயிருக்கும். சமாதானக்குறைச்சலே சகல விபரீதத்துக்குங் காரணம். "ஒருவர்பொறை இருவர்நட்பு" என்பது நிச்ச யம். "தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையி னால் வெல்லுகிறவர்களே" சமாதானம்பண்ணுகிற பாக்கிய வான்கள்.†

இவ்விஷயத்தைப்பற்றி சிலர் ஆட்சேபனை செய்யத்துணி ந்து, கிறிஸ்தவர்களுக்குள்ளே சண்டைசச்சரவு, யுத்தங்கள் போராட்டங்கள் உண்டாகிறதற்குக் கிறிஸ்துநாதருடைய வச னமே காரணம் என்பார்கள். அதாவது, மத்தேயு சுவிசேஷம் 19-ம் அதிகாரம் 34-ம் வசனத்தில்: "பூமியின்மேல் சமாதானத் தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத் தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்" என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறாரே. இதற்குச் சமாதானம் என்ன என்று கேட்பார்கள். கிறிஸ்து சமாதான கர்த்தர் என்பதற்கும், சமா தான காரணர் என்பதற்கும் யாதொரு சந்தேகமுமில்லை. அவர் உலகத்தில் பிறந்தபோது பரமசேனையாகிய தேவதூதர்: "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.‡ அவரும் மலையின் மேல் செய்த இந்தப் பிரசங்கத்திலே உனக்கடுத்தவனைச் சிநே கித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப் பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக் கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக் காகவும் ஜெபம்பண்ணுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்.§

* பிலி. 2. 2—4. † ரோ. 12. 21. ‡ லூ. 2. 14. § மத். 5. 43. மு.

ஆகையால் "சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன்" என்று சொன்னது, அவர் பூலோகத்தில் வந்த நோக்கத்தைக்குறித்துச் சொல்லாமல், அவர் பூலோகத்தில் சத்திய வாசகராயிருந்து, சத்தியத்துக்குச் சாட்சிகொடுத்து, சத்தியவான்கள் யாவரும் அவர் சத்தத்துக்குச் செவிகொடுத்து அவருக்குச் சீஷராகிப் பிரத்தியேகப்படுகிறதினால் உலகத்தாரால் உண்டாகிற விரோதத்தைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. "யதார்த்தவாதி வெகுஜனவிரோதி" என்பது யாவருக்கும் தெரிந்த பழமொழி. ஒரு பிள்ளையின் உடலிலிருக்கிற பருவை அறுத்துச் சுகப்படுத்தவருகிற இரணவைத்தியன், அந்தப் பிள்ளையை நோக்கி, "நான் கத்தியினால் அறுக்கப்போகிற உபத்திரவத்தைச் சற்றுநேரம் பொறுக்கவேண்டும்" என்று சொல்வான் அல்லவா? ஆகையினால் இயேசுநாதர் "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்; ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல, மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" என்று அவருடைய அபிப்பிராயம் யாவருக்கும் விளங்க விபரமாய்ச் சொல்லியிருக்கிறார்.* அவர் சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்க வந்தார். அவர் நாட்டுகிற மார்க்கமே மன்னுயிர் யாவருக்குமுரிய மார்க்கமென்றும், அவர் அருளிய வேதமே சத்திய வேதம் என்றும், அது நெருப்பைப்போல் கொழுந்துவிட்டு எரியும் என்றும் திருவுளம்பற்றினார். இதனால் பகையும் விரோதமும் உண்டாயிற்று. கத்தியினால் வெட்டின பேதுருவை நோக்கி: "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்

* மத். 10. 34—39.

தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள்" என்று அவர் சொன்னதுமன்றி;* ஒருவிசை சமாரியர் அவரை ஏற்றுக்கொள்ளாததினால் யாக்கோபும் யோவானும் அவரை நோக்கி: "ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப் பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" என்றார்.† உலகமக்களுக்குச் சமாதானத்தைக் கூறவே தம்முடைய சீஷர்களை அவர்களிடத்தில் அனுப்பினார். அவர்களை அனுப்பும்போது அவர்களுக்குத் துன்பமும் மரணமும் நேரிடும் என்று முன்னறிவித்தார்.‡ போராட்டமில்லாமல் ஜெயமில்லை, துன்பமில்லாமல் இன்பமில்லை. அவர் மரித்து உயிர்த்தெழுந்து பரத்துக்குப் போகுமுன்னே தம்முடைய சீஷரை நோக்கி: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்று சொல்லியிருக்கிறாரே.§ "அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும், அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை

* மத். 26. 52. † லூ. 9. 54—56. ‡ மத். 17. 21, 23. என்க. § யோ. 14. 27.

அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" என்று அப்போஸ்தலனாகிய பவுலும் சொல்லியிருக்கிறார்.*

II. "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்."

அவர்கள் சமாதானகர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் அகத்திலும் புறத்திலும் சமாதானமுள்ளவர்களாய்த் தங்கள் பரமபிதாவாகிய தேவனைப்போலவும், தங்கள் பரமகுருவாகிய சமாதான கர்த்தரைப்போலவும் இருக்கிறபடியினால், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். "அவர்கள், பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தைப் பிதாக்களிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி,† விரோதித்துப் பிரிந்து விகாரப்பட்டிருக்கிற மனுமக்களை ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவோடே ஒப்புரவாக்கி ஒருமைப்படுத்துகிறபடியால் புத்திரருக்குரிய பாக்கியம் அவர்களுடையது. "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்." ‡

"எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்வதாக." §

* எபே. 2. 14-18. † மல்கி. 4. 6. லூ. 1.17. ‡ 1 யோவா. 3. 1—3. § பிலி. 4.7.

## இருபத்தைந்தாம் பிரசங்கம்.

"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." மத். 5. 10—12.

இது இயேசுநாதர் திருவாய்மலர்ந்தருளிய எண்குணங்களில் எட்டாவது குணம், அஷ்டபாக்கியங்களில் கடைசி பாக்கியம். மற்ற ஏழு பாக்கியங்களுக்கும் இதை உபபாக்கியம் என்று சொல்லலாம். இது முதலாவது பாக்கியத்தோடே சம்பந்தப்பட்டிருக்கிறது. இது மற்ற எல்லாக் குணங்களையும் விளங்கப்பண்ணுகிற குணம். இது நம்முடைய உத்தமத்தைச் சோதித்து விளங்கப்பண்ணுகிற உரைகல். ஆகையால் இரட்சகர் இதை விவரமாய் விஸ்தரித்திருக்கிறார்: "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" என்று சொன்னார்.*

I. வீணாய்த்துன்பப்படுகிறவர்கள் நிர்ப்பாக்கியர்கள், நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களே பாக்கியவான்கள். "நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்."† கிறிஸ்துநாதர் தம்முடைய சீஷர்கள் துன்பப்படுவார்கள் என்று பலவிதமாய்ப் பலதரம் சொல்லியிருக்கிறார்: "மனுஷகுமாரனிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது

* 11, 12. வச. † ரோ. 14. 22.

நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.” “ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை [துன்பத்தை] எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்” என்று இரட்சகர் சொல்லியிருப்பதுமன்றி,* கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர்நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.”† “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” “ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்” என்று அப்போஸ்தலமாரும் சொல்லியிருக்கிறார்கள்.‡ தீக்கல்லில் நெருப்பு மறைந்திருப்பதுபோல, இருதயத்தில் பக்தி மறைந்திருக்கிறது போதாது; தீக்கல்லைத் தட்டுகிறதினால் நெருப்புப் பறக்கிறதுபோல, இருதயத்திற்கு நேரிடுகிற துன்பத்தினால் பக்தி வெளிப்பட்டு விளங்கும்; அடியில்லாமல் முடியில்லை, சிலுவையில்லாமல் சலாக்கியமில்லை.§ புடத்தில் வேகும் பொன்னுக்கு மாற்று உயர்வதுபோல, துன்பத்தில் வருந்தினவருக்கு ஞானம் மிகும்.|| “மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனைத் துன்பப்படுத்துவான்” என்று வேதம் சொல்லுகிறது.¶ கிறிஸ்துவின் புண்ணியமாகிய நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களுக்கே இந்தத் துன்பம் உண்டாகிறது. “உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்; நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும் நான் உங்களை உலகத்

* லூ. 6. 22. மத். 16. 24, 25. † பிலி. 1. 29. ‡ 2 தீமோ. 3. 12. 1 பேது. 4. 16.

§ No cross, no crown.

|| சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந்துன்பம்
சுடச்சுட நோற்கிற்பவர்க்கு.

¶ கலா. 4. 29.

திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது." "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவன் அல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்" என்று இரட்சகர் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்.* பச்சைமரமாகிய இரட்சகனையே உலகம் துன்பப்படுத்தியிருக்க, பட்டமரமாகிய அவர்களுடைய சீஷர்களை உலகம் துன்பப்படுத்தாதிருக்குமா?† என்றாலும் சந்தனம் உரைக்க உரைக்க வாசனைதரும் அல்லவா?

துன்பத்தினால் பூர்வ யூதசபை எகிப்தைவிட்டு நீங்கினது; துன்பத்தினால் பூர்வ கிறிஸ்துசபை உலகத்தில் நிலைபெற்றோங்கினது. கிறிஸ்துமார்க்கத்துக்காகத் தாங்கள் துன்பப்பட்டுத் தங்கள் உயிரைக்கொடுத்த இரத்தசாட்சிகளின் உதிரம் திருச்சபைக்கு வித்தாயிருக்கிறது,‡ எபிரேயர் நிருபம் பதினோராம் அதிகாரத்தையும் திருச்சபை சரித்திரத்தையும் வாசித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். "தங்கள் அதிபதியாகிய கிறிஸ்துநாதர் உபத்திரவங்களினாலே பூரணப்பட்டது போல, அவருடைய சீஷர்களும் உபத்திரவங்களினாலே பூரணப்படவேண்டும். "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் [பாதையில்] பொறுமையோடே ஓடக்கடவோம். அவர் தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்".§ கிறிஸ்துவின் நாமத்திற்காக பூர்வசீஷர்கள், அவமானம் அடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டதே அவர்களுக்குப் பாக்கியமாயிருந்தது.|| தங்களைப் பிறர் இகழ்ந்து

* யோவா. 15. 18—20. † லூ. 23. 31.

‡ "The blood of the martyrs is the seed of the Church.

§ எபி. 12. 1—3. || அப். 5. 41.

துன்பப்படுத்தினதைத் தாங்கள் பொறுப்பதேயன்றி, தங்களை இகழ்ந்து துன்பப்படுத்தின தீவினைப்பயனால் அப்படிச் செய்தவர்கள் மறுமையில் எரிநரகத்தில் வீழ்வார்களேயென்று வருந்தித் துயரப்படுவது சான்றோர் கடன் என்று நாலடியாரில் சொல்லியிருக்கிறது.*

II. “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது” என்னும் முதல்வாக்கியமும், “நீதியினிமித்தம்துன்பப்படுகிறவர்கள்பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது” என்னும் இந்தக் கடைசிவாக்கியமும் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆவியில் எளிமையும் அதைச் சோதித்து வெளிப்படுத்தும் துன்பமும் ஆதியும் அந்தமுமாகநிற்க, அஷ்டகுணமும் அதற்குரிய அஷ்டபாக்கியங்களும் விளங்கும். துன்பக்கடலைக்கடந்து கரையேறும் பாக்கியவான்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் யாரால் சொல்லிமுடியும். “தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.”† துன்பப்படுகிற உத்தமகிறிஸ்தவர்களுக்கு உலகமக்களுக்கிராத ஒரு சகாயம் உண்டு: “அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை ரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்தார்” என்றும், “உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்” என்றும், சீஷர்களுக்குச் செய்யப்படுகிற துன்பம்

---

* “தம்மையிகழ்ந்தமை தாம்பொறுப்பதன்றிமற்
றெம்மையிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
யெரிவாய்நிரயத்து வீழ்வர்கொலென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.”

† 1 கொ. 2. 9, 10.

குருவுக்கே செய்யப்படுகிறது என்றும் வேதத்தில் சொல்லி யிருக்கிறது.* கிறிஸ்துநாதரோடு பாடுகளைச் சகித்தவர்கள் அவ ரோடுகூட ஆளுகையும் செய்வார்கள்.

சகோதரரே, கர்த்தர் திருவாய்மலர்ந்தருளின அஷ்டகுண மும் அதற்குரிய அஷ்டபாக்கியமும் இன்னதென்று விஸ்த ரிக்கக் கேட்டீர்களே; கேட்ட நீங்கள் இந்த அருமையான குணங்களை உடையவர்களாயிருக்கிறீர்களா? இதற்குரிய பாக் கியங்களுக்கும் உரியவர்களாயிருக்கிறீர்களா? என்பதை உணர் ந்து அறியவேண்டும். நீங்கள் மெய்யாகவே குணசாலிகளா னால், பூமிக்கு உப்பும் உலகத்துக்கு வெளிச்சமுமாயிருப் பீர்கள்; உங்களால் பூமிக்குச் சாரம் ஏறும், உலகத்துக்கு ஒளி உண்டாகும். "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரணசற்குணரா யிருங்கள்." † சகோதரரே, இரட்சகனைப் பற்றிக்கொண்டு மனந்திரும்பி குணப்பட்டு மறுஜன்மம் அடையாமற்போனால் நீங்கள் பூரணசற்குணராகக்கூடாது. "விசுவாசத்தினால் நீதி மான் பிழைப்பான்" என்று சொல்லியிருக்கிறபடியினால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டியது அவசியம். "ஒன்றான மெய்த்தேவனையும் அவர் அனுப்பின வராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.‡ கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாகப் பற்றிக்கொண்டவர்கள்மாத் திரம் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் எளி தாய்ச் செய்து நிறைவேற்றுவார்கள்; தங்கள் பிதாவைப்போ லவும் தங்கள் குருவைப்போலவும் பூரணசற்குணராயிருப் பார்கள்.

"எந்த ஜனத்திலானாலும் தேவனுக்குப் பயந்து, நீதியைச் செய்கிறவன் எவனோ அவன் அவருக்கு உகந்தவன் என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்று வேதத்தில் சொல்லியி ருக்கிறபடியால்,§ எந்தச் சமயத்தானாயிருந்தாலும் பக்திவிநய

* ஏசா. 63. 9. சக. 2. 8. மத். 25. 40, 45. அப். 9. 4. † மத். 5. 13, 14, 48.
‡ யோவா. 17. 3. § அப். 10. 35.

முடைய நீதிமானனவன் இரட்சிக்கப்படுவோனுகையால், அப்படிப்பட்டவன் ஞானஸ்நானம்பெற்றுக் கிறிஸ்துமார்க்கத்தில் பிரவேசிக்கவேண்டிய அவசியம் என்னவென்று சிலர் ஆட்சேபனை சொல்லுவார்கள். விசுவாசத்தினுல் நீதிமான் இரட்சிக்கப்படுவான் என்பது நிச்சயமே; ஆனுலும் இது சுயநீதியையல்ல, புண்ணியநாதராகிய சற்குருவின் வழியாய் வரும் நீதியையே குறிக்கும்.

"ஆண்டபொருளை யறியாதான் செய்தருமம்
மாண்ட மரத்துக்கணைத்த மண்."

நீதிமான் தேவனுக்கு உகந்தவன் என்று அப்போஸ்தலனுகிய பேதுரு சொன்ன வசனத்தின் சம்பந்தத்தைக் கவனித்துப்பார்த்தால் அதன் உண்மையான பொருள் விளங்கும். கொர்நேலியு என்னும் பேர்பெற்ற ஒரு ரோமசேனுபதியிருந்தான்; அவன் தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தானதர்மங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். இவனுக்குத் தேவகடாட்சமுண்டாகி அருள் அளிக்கப்பட்டது. இவன் அப்போஸ்தலனுகிய பேதுருவை அழைப்பித்து, அவரிடத்தில் ஞானஉபதேசம் கேட்டு, தானும் தன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்களானுர்கள். ஆதலால் பக்தியுள்ள நீதிமானுகிய இந்தப் புறசமயத்தானும் சற்குரு உபதேச சம்பிரதாயத்தின்படி ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது. மனிதருக்குள்ள அறிவுக்கும் அருளுக்கும் தக்கதாய்ப் பலன் அளிக்கப்படும். தேவசித்தத்தையும் வேதகட்டளையையும் அறிந்தவன் அந்தச் சித்தத்தையும் கட்டளையையும் நிறைவேற்றக் கடனுளியாயிருக்கிறுன்.

"கடவுளொ ருருவனுண்டே வேதமொன்றே
காரணசற்குரு தீட்சை தானுமொன்றே,
அடைவுடனே அவரருளும் பதவியொன்றே
அம்புவியில் மனுப்பிறவி யானதொன்றே;
நடைவழியும் பலமனுவோர்க் கொன்றேயல்லால்
நால்வேத மறுசமய நடக்கைவேருய்த்
திடமுடைய தேவர்பல ருண்டென்போர்கள்
தீநரகுக் காளாவார் திண்ணந்தானே." (கொங்கணர்.)

இரட்சிப்பு கிரியைகளினால் அல்ல; விசுவாசத்தினால் உண்டாகிறது. "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்."*

"சகோதரரே, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்."† "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."‡



* அப். 17. 30, 31. † 2 பேது. 1. 5—7. ‡ பிலி. 4. 8.

பொதுவான விஷயங்களைக்குறித்துச்

சொல்லிய

# பிரசங்கங்கள்.

## இருபத்தாறும் பிரசங்கம்.

### வேதம்.

"உம்முடைய வேதம் சத்தியம்." சங். 119. 142.

"எதுந்தெரியா தென்னைமறைத்த வல்லிருளை
நாதநீ நீக்கவொரு ஞானவிளக்கில்லையோ?"

உண்டு, சகோதரரே! "அசரீரிவாக்கும், அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்றும்; "சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனமும் வெளிப்பட்டதென்றும்;" "மறைவானவைகள் [பரமரகசியங்கள்] நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் [வேதத்தின்] வார்த்தைகளின்படியெல்

லாம் செய்யும்படிக்கு நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" என்றும் வேதம் தன்னைக்குறித்தே தெளிவாய்ச் சாட்சியிடுகிறது.*

வேதம் என்கிற மொழி அறிவு என்றும், ஞானம் என்றும் அர்த்தங்கொள்ளும்; வேதம் பேரறிவையும் பரமஞானத்தையும் உணர்த்தும்.

வேதமானது இயல்வேதம் என்றும், அருள்வேதம் என்றும் இருவகைப்படும். இயல்வேதமானது மனம் புத்தி சித்தமுள்ள மனுஷனுடைய உள்ளத்தில் நல்வினை தீவினை இன்னதென்று உணர்த்துகிற மனச்சாட்சிக்குரிய அகத்துப்பிரமாணமாம். மனுஷன் பாவஞ்செய்யாமலும் மனச்சாட்சி விகாரப்படாமலும் இருக்குமானால் இந்தப் பூர்வ அகத்துப்பிரமாணமாகிய இயல்வேதம் மனுஷனுக்குப் போதும். மனுஷன் ஜன்மத்தின்படியும் கர்மத்தின்படியும், மனோவாக்குக்காயத்தினால் பாவஞ்செய்கிறபடியால் இயல்வேதம் மனுஷனுக்குப் போதாது. ஆதலால் இயல்வேதத்துக்கு உதவியாக அருள்வேதத்தையும் கடவுள் அநுக்கிரகித்திருக்கிறார். இயலுக்கும் அருளுக்கும் தவறாத திருவுளமே ஆதாரம்.

இப்படி இயலும் அருளும் சம்பந்தப்பட்டிருக்கிறபடியால் இயல்வேதமே போதும், அருள்வேதம் வேண்டியதில்லையென்று சொல்லலாகாது. கடியாரத்தைக்கொண்டு மணிக்கணக்கு அறிகிறோம். இரண்டுவித கடியாரங்களுண்டு, சூரியகடியாரமும் கைக்கடியாரமுமே. பகலில் சூரியன் பிரகாசிக்கிறபோதுமாத்திரம் சூரியகடியாரம் உதவும், கைக்கடியாரம் இரவிலும் பகலிலும் எப்பொழுதும் உதவும். சூரியகடியாரம் நிலையில் நிற்கும், கைக்கடியாரம் நாம் போகும் இடமெல்லாம் நம்மோடு கொண்டுபோக உதவும். சூரியகடியாரம் காலத்திட்டத்தை எப்பொழுதும் தவறாமல் காண்பிக்கும். கைக்கடியாரத்துக்கு நாடோறும் சாவிகொடுத்தாலொழிய அது ஓடாமல்

---

* 2 பேது. 1. 19—21. உபா. 29. 29. எசா. 2. 3.

நின்றுபோகும். கைக்கடியாரம் சிலவேளைகளில் பிசகிச் சரியாய்ப்போகாமல் ஏறவும் குறையவும் ஓடிச் சரியான மணிக்கணக்கைக் காண்பியாது; இப்படி அது சரியாய்ப் போகாமலிருக்கும்போது, தன்னைத்தான் திருத்திக்கொள்ள அதற்குச் சக்தியில்லை. ஆனாலும் சூரியகடியாரத்தைப்பார்த்து கைக்கடியாரத்தைத் திருத்திக்கொள்ளலாம். அப்படியே மனச்சாட்சியாகிய இயல்வேதம் என்னும் கைக்கடியாரத்தை அடிக்கடி சாவிகொடுத்து, அருள்வேதமாகிய சூரியகடியாரத்தைப் பார்த்துத் திருத்திக் கையாள்வேண்டும். இப்படிச் செய்தால் மனச்சாட்சியானது சரியான மணிக்கணக்காகிய நாம் செய்யவேண்டிய கடமையை நமக்குக் காண்பித்து நம்மை உணர்த்துவிக்கும்.

நேர்வழியில் கிரமமாய்ச் செல்லாத பாரபட்சமான மனச்சாட்சி பழுதுபட்ட கைக்கடியாரம்போலிருக்கிறது. காமாலைக்கண்ணுக்கு வெள்ளையானது மஞ்சளாய்த் தோன்றுவது போலவும், காய்ச்சலடித்தவனுடைய வாய்க்கு சுவையுள்ள பதார்த்தம் கசப்பாய் ருசிப்பதுபோலவும், பாவத்தால் விகாரப்பட்ட மனச்சாட்சிக்குத் தீமை நன்மையாகவும், நன்மை தீமையாகவும் தோன்றுவதுண்டு. ஆத்துமாவுக்குரிய இயலும் அருளுமாகிய இந்த இரண்டு கண்களும் இருந்தால்தான் அதற்குச் சீரும் சுகமுமுண்டு. இயலுக்கும் அருளுக்கும் காரணர் ஒருவரேயாகையால், இயலுக்கும் அருளுக்கும் விகற்பமிராது.

ஆகையால் மன்னுயிர் யாவுக்கும் இயல்வேதம் எப்படிப் பொதுவாயிருக்கிறதோ, அப்படியே அருள்வேதமும் யாவருக்கும் பொதுவாயிருக்கிறது.

என்றாலும், மெய்த்தேவன் ஒருவர் இருக்கிறபடியால், பொய்த்தேவர்கள் பலருண்டென்கிற கொள்கை உலகத்தில் உண்டாயிருக்கிறதுபோல, மெய்வேதம் ஒன்றிருக்கிறபடியால், பொய்வேதங்களும் பலவுண்டென்கிற கொள்கையும் உண்டாயிருக்கிறது. இவ்விஷயங்களில் ஊடாடின ஞானிகள்,

"இன்னஞ்சிறியோர்கள் செய்தமணற் சோற்றையொக்கும்
மன்னுங்கலைஞான மார்க்கம் பராபரமே" என்றும்,

"சாத்திரத்தைச்சுட்டுச் சதுமறையைப்பொய்யாக்கிச்
சூத்திரத்தைக்கண்டு சுகம்பெறுவதெக்காலம்" என்றும்

சொல்லியிருக்கிறார்கள்.

"தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்," இந்த அறிவு இயலால் அல்ல, அருளால் உண்டாகவேண்டும். எல்லாவற்றையும் காண்கிற கண் தன்னைக் காணாது; எல்லாவற்றையும் அறிகிற மனம் தன்னை அறியாது. ஆதலால், கண்ணைக்காண ஒரு கண்ணாடி வேண்டும்; தன்னை அறிய ஒரு வேதம் வேண்டும். சூரியன் அளிக்கும் வெளிச்சத்தினாலே சூரியனை நாம் காண்கிறதுபோல, தேவன் அருளும் வேதத்தினாலே தேவனை நாம் அறியவேண்டும். நச்சுக்குழலாகிய பூதக்கண்ணாடி தூரத்திலுள்ளவைகளைச் சமீபத்தில் திருஷ்டிக்கச்செய்கிறதுபோல, வேதக்கண்ணாடியும் சரீரக்கண்ணுக்கு விஷயமாகாதவைகளை மனக்கண்ணுக்கு விஷயமாகும்படி செய்யும்.

வேதத்தைப்பற்றி அதின் தன்மை, பொருள், பயன் ஆகிய இம்மூன்று காரியங்களையும் விசாரித்து அறியவேண்டும்.

I. தன்மை.

திருவுளமே வேதத்துக்கு ஆதாரமாகையால், திருவுளத்தின் தன்மையே வேதத்துக்குமுரியது. அது வானமண்டலத்தில் வீசும் ஆகாயத்தைப்போலவும், கல்மலையிலிருந்து பிறக்கும் ஜலத்தைப்போலவும், பொன்னைப் புடமிட்டு உருக்கும் அக்கினியைப்போலவும், தெகிட்டாத அமிர்த போஜனத்தைப்போலவும் இருக்கிறது. அது மங்காத் திருவிளக்கு, குன்றாப் பொற்கேணி, வாசனையுள்ள வாடாப்பொன்மலர், தவறாத திருவாய்மொழி, அழியாத திருவாசகம், ஜீவாமிர்தசாகரம், பாவவிமோசன புண்ணியதீர்த்தம்.

சராசரம் அனைத்துக்கும் காரணகர்த்தராகிய கடவுள் ஒருவரே; உலகத்திற்கெல்லாம் சூரியனும் ஒன்றே; அவ்விதமே சத்தியமாகிய புண்ணிய ஒளியை வீசி, உலகத்தின் இருளையும் மருளையும் நீக்கும் நீதியின் சூரியனாகிய வேதமும் ஒன்றே.

"கடவுளோன் ஒருவனுண்டே,
வேதம் ஒன்றே."

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

சத்தியவேதம் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்று இரு வகைப்பட்டிருந்தாலும், இரண்டும் சம்பந்தப்பட்டு ஒன்றாகவே இருக்கிறது. உடலும் உயிரும் வெவ்வேறாயினும் இரண்டும் ஏகமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கிறதுபோலவும், பதமும் பொருளும் வெவ்வேறாயினும் இரண்டும் சம்பந்தப்பட்டிருக்கிறதுபோலவும், உலகரட்சகராகிய கிறிஸ்துநாதர் அவதரித்ததற்குமுன் உண்டான பழைய ஏற்பாடும், அவர் அவதரித்ததற்குப்பின் உண்டான புதிய ஏற்பாடும் கிறிஸ்துநாதரையே தழுவி அவருக்கே சாட்சியிடுகிறபடியால், இரண்டும் ஒன்றாகச் சம்பந்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டைப் பூட்டென்றும், புதிய ஏற்பாட்டைத் திறவுகோல் என்றும்; பழைய ஏற்பாட்டைக் கர்மகாண்டம் என்றும், புதிய ஏற்பாட்டை ஞானகாண்டம் என்றும் சொல்லலாம்.

## II. பொருள்.

சத்தியமே வேதத்தின் விசேஷித்தபொருள். "உம்முடைய வேதம் சத்தியம்" என்று தாவீதுராஜா சொல்லுகிறதுமல்லாமல், "உம்முடைய வசனமே சத்தியம்" என்று சத்தியவாசகராகிய கிறிஸ்துநாதரும் திருவுளம்பற்றியிருக்கிறார்.

மன்னுயிர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற திருவுளமே வேதத்தின் பொருள். இது மனுஷனை, தான் உள்ளபடி தனக்குக் காட்டுகிற கண்ணாடி. இதனால் தன்னை அறியும் அறிவும், தலைவனை அறியும் அறிவும் உண்டாகும். இதனால் உலக உற்பத்தியும், மன்னுயிர் தோற்றமும், பாவம் வந்தவழியும், பாவம் நிவிர்த்தியாகும் வகையும், இம்மை மறுமைக்குரிய காரியங்களும், ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் இருக்கிற சம்பந்தமும், புண்ணியநாதராகிய சற்குருவின் அன்பும் அருளும், அவரை விசுவாசத்தினால் பற்றிக்கொள்ளுகிறவர்களுக்குரிய நித்திய பேரின்பவாழ்வும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் 39 ஆகமங்களும், புதிய ஏற்பாட்டில் 27 ஆகமங்களும், ஆக வேதத்தில் 66 ஆகமங்களுண்டு. மோசே முதலான மகாத்துமாக்களால் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு பூர்வத்தில் யூதஜனங்களுக்கு அளிக்கப்பட்டது; அவர்கள் அதை நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம், சங்கீதம் என்னும் மூன்று பங்காக வகுத்திருந்தார்கள். கிறிஸ்துநாதரின் ஆதிசீஷர்களாகிய அப்போஸ்தலரால் எழுதப்பட்ட புதிய ஏற்பாடு, சரித்திரம் உபதேசம் ஒழுக்கம் என்னும் மூன்று பங்காக வகுக்கப்படும். நான்கு சுவிசேஷங்களிலும் இயேசுகிறிஸ்துவின் சரித்திரமும், அப்போஸ்தலர் நடபடியில் திருச்சபை சரித்திரமும், நிருபங்களில் உபதேசங்களும் நல்லொழுக்கத்திற்குரிய படிப்பினைகளும் அடங்கியிருக்கிறது. இந்த ஞானக்கடலில் யானை முழுகிப்போகும், ஆட்டுக்குட்டி விளையாடும். கரும்பு அடிமுதல் நுனிவரைக்கும் மதுரமாயிருப்பதுபோல, சத்தியவேதமும் ஆதியோடந்தம் மதுரமே.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்."

### III. பயன்.

சத்தியம் வேதத்தின் பொருளானால், சத்தியம் என்னசெய்யும்? இருதயத்தைச் சுத்திசெய்யும். "உம்முடைய சத்தியத்தினால் அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்றும், "சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்கவந்தேன், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்றும், கிறிஸ்துநாதர் உத்தம விசுவாசிகளுக்கு ஜலத்தினால்மாத்திரமல்ல, ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானதீக்ஷைகொடுக்கிறார் என்றும் சொல்லியிருக்கிறது.* அடுப்புக்கரியைத் தண்ணீரில் கழுவினால் அதின் அழுக்குப் போகும், அதின் குணமும் நிறமும் மாறாது; அதை அக்கினியில் போட்டால் அதின் குணமும் நிறமும் மாறிப் பொன்மயமாகும்; அதுபோல, வேதாக்கினியாகிய சத்தியத்தினால் ஆத்துமா சுத்தமா

* யோவா. 17. 17: 18. 37.

கும். மன்னுயிர்க்கு அருள் அளிப்பதே சத்தியவேதத்தின் பயன். அருள்பெற்றோர் சத்தியத்தை அநுசரித்து, பாவத்தை வெறுத்து, புண்ணியத்தை நாடி, உறுதியான விசுவாசத்தைக் கைக்கொண்டு, ஆத்துமசுத்தி அடைவார்கள். "பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது."* உலகரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைப் பாவிகள் பற்றிக்கொண்டு அவருக்கு உத்தமசீஷர்களாகி இரட்சிக்கப்படும்படிக்கே அருள்வேதம் அநுக்கிரகிக்கப்பட்டிருக்கிறது. இதனால் "உன்னதங்களிலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியில் சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாகிறது."†

உலகத்தார் நம்மை வேதக்காரர் என்றும், வரிவேதத்தைக் கும்பிடுகிறவர்கள் என்றும் நிந்தையாய்ச் சொல்லுவார்கள். உங்கள் நடக்கையினால் நீங்கள் கைக்கொள்ளும் வேதமானது ஜீவவசனமென்று விளங்கவேண்டும். ஆயிரம் ரூபாய் பெறுமான பாங்கி நோட்டு ஒரு காசுபெறாத காகிதத்தில் அடங்கியிருக்கிறது. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" என்று இரட்சகர் சொல்லியிருப்பதை உறுதியாய் நம்புங்கள். வேதம் நமக்கு ஞானஜீவன், திருவிளக்கு, ஆத்தும ஆகாரம். "பரத்திலிருந்து வருகிற ஞானம் முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது."‡

தெய்வசித்தத்தைச்செய்ய மனதுள்ளவனுக்கு இந்த வேதம் சத்தியம் என்று விளங்கும்.§ "நம்முடைய வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தோம். அவைகள் அந்நியகாரியமாக எண்ணப்பட்டன"‖ என்று உங்களைக் குறித்துச் சொல்லப்படாதிருப்பதாக.

---

* 1 தீமோ. 1. 15. † லூ. 2. 14. ‡ யாக். 3. 17. § யோ. 7. 17.
‖ ஓசி. 8. 12.

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுமாயிருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியான் எச்சரிக்கப்படுகிறான்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு."*

சகோதரரே! "சத்தியத்தை வாங்குங்கள், அதை விற்காதேயுங்கள்." கரும்பு தின்னக் கூலிகொடுப்பார் உண்டோ? இந்த வேதம் உலகத்தின் இருநூறு பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சத்தியவேதம் இத்தேசத்தாருக்குள் பரம்பும்படி முயற்சிசெய்கிற சங்கத்துக்கு உதவிசெய்யுங்கள். நீங்கள் வேதத்தை வாசித்துக் கற்றறிந்து உட்கொண்டு, நீங்கள் பெற்றுக்கொண்ட இந்த மகா முக்கியமான நன்மையை மற்றவர்களும் பெறும்படி முயற்சிசெய்யுங்கள்.

---

* சங். 19. 7–11.

# இருபத்தேழாம் பிரசங்கம்.

## சத்தியம்.

*"சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே." நீதி. 23. 23.*

"சத்தியமாவது என்ன?" என்று பூர்வத்தில் பிலாத்து என்னும் ரோமதேசாதிபதி கிறிஸ்துவாகிய சத்தியத்தையே நோக்கிக்கேட்டான். இந்தக் கேள்வியைத் துணிந்து கேட்கிறவர்கள் அநேகர் உண்டு, இதை உணர்ந்துகொள்ளுகிறவர்களோ சிலர்.

உள்ளதை உள்ளபடி அறிந்துகொண்டு, உள்ளதை உள்ளபடி சொல்வதே சத்தியம். விஷயத்தைக் கண்ணால் கண்டறியும் பிரத்தியட்சப் பிரமாணத்தினாலும், காரியத்தால் காரணத்தை யூகித்தறியும் அநுமானப்பிரமாணத்தினாலும், காணாத பொருளைக் காதால் கேட்டறியும் சப்தப்பிரமாணத்தினாலும், மனம் புத்தி சித்தமுள்ள மனுமக்கள் அறியவேண்டியதை அறிந்துகொள்ளுகிறார்கள். அநுபவக்காட்சியினாலும், அநுமான யுக்தியினாலும், ஆகமப் பயிற்சியினாலும் இகபரவிஷயங்களை அறிந்துகொள்ள ஏதுவுண்டு. கண்டது காட்சி, கேட்டது சாட்சி; இவ்விரண்டையும் மனோகரணத்தினால் பகுத்தறிவது மானிடர்க்குரிய லட்சணம். பொய்யும் மெய்யும் உலகத்தில் கலந்திருக்கிறதினால், உள்ளதை உள்ளபடி அறிந்துகொள்வது அரிது. இரும்பு காந்தத்தைப் பற்றிக்கொள்ளுகிறதைக் கண்ணால்கண்டு அதின் உண்மையை அறிந்துகொள்ளுகிறோம்; இரண்டும் இரண்டும் நான்கு என்பதைக் கணிதத்தினாலும், புகையுள்ள இடத்தில் நெருப்பிருக்கும் என்பதை அநுமானத்தினாலும் அறிந்து, அதின் உண்மையை ஒத்துக்

கொள்ளுகிறோம். கற்றறிந்த பெரியோராகிய உத்தமர்வாக்கை உண்மையென்று நாம் அங்கிகாரம்பண்ணுகிறபடியால், அருள்பெற்று வேதத்தை எழுதின நிறைமொழிமாந்தர் வாக்கைத் தவறாத சத்தியமாக அங்கிகாரம் பண்ணவேண்டியது நியாயமே. "சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று ஜகத்குருவாகிய கிறிஸ்துநாதர் திருவுளம்பற்றியிருக்கிறார்.* இதை அறிந்து உணர்ந்துகொள்ளுகிறவர்கள் சத்தியம் இன்னதென்று அறிவார்கள்.

சத்தியமே ஜெயம். உலகத்தை ஆளுகிறது சத்தியம். சூரியனுக்கும் சூரியகடியாரத்துக்கும் சம்பந்தமிருக்கிறதுபோல, சத்தியத்துக்கும் மனதுக்கும் சம்பந்தமிருக்கிறது. சத்தியம் மனதைச் சுத்தமாக்கும்; சத்தியம் பரிமளிக்கும்; தேறித் துணிந்தோருக்கே சத்தியம் பலிக்கும். இரண்டு சிறுவர்கள் இருட்டில் ஒரு உருவத்தைக்கண்டு மருண்டு மயங்கி, ஒருவன் அது பேய் என்று பயந்து ஓடிப்போகிறான், மற்றொருவன் துணிந்து போய்த் தொட்டுப்பார்த்து அது ஒரு கட்டையென்று அறிந்து பயந்தெளிந்து தேறினவனாகிறான். ஆகையால் "நியாயம் இன்னதென்று நீங்கள் தீர்மானியாமல் இருக்கிறதென்ன?" என்றும், "எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்றும் வேதம் சொல்லுகிறது.†

சத்தியமாவது என்ன? நாம் உலககாரியங்களைப்பற்றி உள்ளதை உள்ளபடி அறிய விரும்புகிறதுபோலவே, பரமகாரியங்களைப்பற்றியும் உள்ளதை உள்ளபடி அறிய விரும்பவேண்டும். "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே அந்தச் சாட்சி."‡ இந்தச் சத்தியத்தையே நாம் வாங்கவேண்டும், இதை விற்கக்கூடாது.

---

* யோவா. 18. 37. † லூ. 12. 57. 1 தெச. 5. 21. ‡ 1 யோ. 5. 11.

I. "சத்தியத்தை வாங்கு." சத்தியத்தை எப்படி வாங்குகிறது? அதை வாங்கக்கூடுமோ? அது பணத்தினால் கொள்ளத்தக்க பொருளா? சத்தியத்தையாவது ஞானத்தையாவது ஆத்தும ரட்சிப்பையாவது பணத்தினால் வாங்கக்கூடாதே. "ஓ! தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பம் அல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்" என்று ஆத்துமஞான நன்மைகளைப்பற்றி வேதம் சொல்லுகிறதுமல்லாமல், "தேவனுடைய கிருபை வரம் [அருள், அநுக்கிரகம்] நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" என்றும், "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என்றும் வேதம் சொல்லுகிறது.*

நம்மைச் சுத்தம்பண்ணும் சத்தியம் கைமாறில்லாத ஈவாயிருக்கும்போது, அதை வாங்குகிறது எப்படி? "சத்தியத்தை வாங்கு" என்று சொல்லியிருக்கிறபடியால், அதை வாங்குகிறதற்கு வழிவகை உண்டு. "நான் ஐஸ்வரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் நீ சொல்லுகிறபடியால்; நான், நீ ஐஸ்வரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை என்னிடத்தில் வாங்கிக்கொள்" என்று கர்த்தர் லவோதிக்கேயா சபையாருக்குச் சொல்லுகிறதுமன்றி, "பரலோகராஜ்யம் நிலத்தில் [வயலில்] புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது, அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து,

---

* ஏசா. 55. 1, 2. ரோ. 6. 23. எபே. 2. 8.

அதைப்பற்றிய சந்தோஷத்தினாலேபோய்த் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தை [வயலை] கொள்ளு கிறான்" என்றும், "மேலும் பரலோகராஜ்யம் நல்ல முத்துக் களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய்த் தனக்கு உண் டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" என்றும் சொல்லியிருக்கிறார்.* இந்தப் புதையலும் இந்த முத் தும் சுவிசேஷ சத்தியத்தையே குறிக்கிறது. இதையே வாங்க வேண்டும்.

இந்தச் சத்தியப்பொருளை நாம் வாங்கவேண்டுமானால், அதன்மேல் மனதை வைத்து, வேண்டிய முயற்சிகளையெல் லாம் கையாடி, அதை நாடித்தேடி, அதை அறிந்து உணர்ந்து, அதற்காக மற்றெல்லாவற்றையும் சேதம் என்று எண்ணி, படாதபாடுகள் எல்லாம் பட்டு, அதை முழுமனதோடு பற்றிக் கொள்வதே சத்தியத்தை வாங்கவேண்டும்.

யூதருக்குள் அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் இந்தச் சத்தியத்தை வாங்கவேண்டுமென்றே இரட் சகரிடத்தில் இராக்காலத்தில் வந்தான். அவன் யூதருக்குப் பயந்ததினாலே இராத்திரியில் கர்த்தரிடத்தில் உபதேசங் கேட்கவந்து, தன் ஆத்தும ரட்சிப்புக்கடுத்த சத்தியத்தை அவரிடத்தில் வாங்கினான்.

அப்படியே லாசருவின் சகோதரியாகிய மரியாளும் இயே சுவின் பாதத்தருகே வந்து உட்கார்ந்து, அவருடைய வசனத் தைக் கேட்டு, தன்னைவிட்டு எடுபடாத ஒன்றான நல்லபங்கை [பாக்கியத்தை] தெரிந்துகொண்டாள். †

II. "சத்தியத்தை வாங்கு" என்றுமாத்திரமல்ல, அதை "விற்காதே" என்றும் சாலொமோன் சொல்லுகிறார். புதைய லையும் ஆணிமுத்தையும் கண்டுபிடித்தவன் அவைகளை விற்றுப் போடுவானா? சத்தியத்தை விற்றுப்போடுகிறவர்களுமுண்டு.

---

* வெளி. 3. 17, 18. மத். 13. 44—46. † லூ. 10. 39, 42.

ஏசா பசியாயிருந்தபோது தன் ஜேஷ்டபுத்திர சுதந்திரத்தைக் கூழுக்காகத் தன் சகோதரனாகிய யாக்கோபுக்கு விற்றுப்போட்டான் அல்லவா? அவன் விற்றுப்போட்ட சுதந்திரமானது பின்பு அழுது கேட்டபோதிலும் அவனுக்குக் கிடைத்ததா? இல்லையே.* பவுல் அப்போஸ்தலனோடே உடன்வேலையாளாயிருந்த தேமாவும் இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்துப் பின்வாங்கிச் சத்தியத்தை விற்றுப்போட்டான் அல்லவா? யூதாஸ்காரியோத் என்னும் பாதகனும் சத்தியமாகிய தன் எஜமானையே முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டான் அல்லவா? சத்தியத்தை விற்ற கிரயம் அவனுக்கு உதவினதா? "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்" என்று சொல்லி, அந்தப் பணத்தைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்று கொண்டு செத்தான் அல்லவா? †

இப்படியே இப்பொழுதும் அநேகர் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையினால் மதிமயங்கி, உலகத்தாருக்கு அஞ்சி, உலகப்பொருளைநாடி, சிற்றின்பத்தைப் பற்றிக்கொண்டு, தாங்கள் வாங்கின சத்தியத்தை விற்றுப்போடுகிறார்களே. தான் கக்கினதையே மறுபடியும் தின்கிற நாயைப்போலவும், கழுவப்பட்ட பன்றி மறுபடியும் சேற்றில் புரளுவது போலவும், அநேகர் வெறுத்துவிட்டதை மறுபடியும் நாடித் தேடுகிறார்கள். விசுவாசம் அற்று, அன்பு குளிர்ந்து, பொய் மேற்கொண்டு, பாவமும் பழியும் மனதில் வந்து அணுகும் போது, மதிமயங்கி உள்ளம் இருண்டு, அநேகர் கெட்டழிந்து போகிறார்கள். ஒருவனிலிருந்த அசுத்தஆவி அவனைவிட்டு நீங்கி அங்கும் இங்கும் அலைந்து, இளைப்பாறுதலில்லாமல், தான் விட்டுவந்த இடத்தையே மறுபடியும் நாடிப்போய், அது வெறுமையாகவும், பெருக்கிச் சோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு கூட்டிக்கொண்டுவந்து குடிகொள்ளும்போது, அந்த

---

* ஆதி. 25. 31. மு. † மத். 27. 1. மு.

மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும்" என்று சத்தியத்தை விற்றுப் போடுகிறவர்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. சத்தியத்தை விற்றுப்போடுகிறவன் தன் ஆத்துமாவையும் விற்றுப்போடுகிறான்.*

இப்படியிருக்கிறபடியால், "சகோதரரே, ஒருவனும் உங்களுக்குரிய நன்மையாகிய கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உங்களுக்குள்ளே சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருங்கள், அதை விற்காதேயுங்கள்."†

இந்த வசனத்தை நன்றாய் விளக்கும் ஒரு கதையுண்டு, அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:

மகா பிரபலமான ஒரு குருவானவர் ஒரு ஊரில் வந்து, அங்குள்ளவர்களிடத்தில் தட்சணைபெற்றுக்கொண்டு, அவர்களுக்கு உபதேசம் செய்துகொண்டுவந்தார். அநேகர் அவரிடத்தில் வந்து உபதேசங்கேட்டு தீட்சைபெற்றுக்கொள்ளுகிறதை ஒரு சோம்பேறிப்பயல் பார்த்துக்கொண்டிருந்து, இவர்கள் ஏதோ பிரயோஜனத்தை நாடித்தான் இந்தக் குருக்கள் இடத்தில் வருகிறார்களென்று நினைத்து, ஒருநாள் ஒருவரும் இல்லாதவேளையில், தானும் போய்க் குருவின் பாதத்தில் விழுந்து, அடியேனுக்கு உபதேசம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அதற்குக் குருவானவர்: மெய்தான், குரு தட்சணை எங்கே என்று கேட்டார். அதற்கு அவன்: நான் ஏதுமற்ற பாவி, என் கையில் ஒன்றுமில்லையென்றான்.

நீ என்ன தொழில் செய்கிறது என்று கேட்டபோது, எனக்கு ஒரு தொழிலும் தெரியாது என்றான். அப்படியானால் நீ பிழைக்கும்படி என்னசெய்கிறாய், என்னதான் செய்யக் கூடும்? உனக்கு என்னதெரியும்? என்று கேட்டார். எனக்கு மூன்று காரியந்தான் கொஞ்சநஞ்சந்தெரியும்; நான் திருடுவேன், சூதாடுவேன், பொய்சொல்லுவேன் என்றான். அப்

* மத். 12. 43—45. † வெளி. 3. 11.

பொழுது குருவானவர் அவனைப் பார்த்து: நல்லது, நீ தட்சணைகொடாமல் நான் உனக்கு உபதேசஞ்சொல்லக்கூடாது; ஆகையால் நான் சொல்லுகிறதைக் கேளு. திருட்டு, சூது, பொய் இம்மூன்றும் உன்னிடத்திலிருக்கிறதே; இந்த மூன்றில் ஒன்றாகிய பொய்யை எனக்குக் கொடுத்துவிடு, நான் உனக்கு உபதேசம்பண்ணுகிறேன் என்றார். அதற்கு அவன், காரியத்தைக் கவனியாமல், அப்படியே கொடுத்துவிடுகிறேன் சுவாமி என்றான். அப்பொழுது குருவானவர் அவனைக் கிட்டவந்து கைகட்டி நிற்கச்சொல்லி, நான் சொல்லுகிறபடி சொல் என்றார்: சத்தியமே ஜெயம், எங்கே இருந்தாலும் என்னசெய்தாலும் எவ்விதமான நஷ்டம் வந்தாலும் எவ்வளவும் பொய்சொல்லாமல் உள்ளதை உள்ளபடி சத்தியமே சொல்லவேண்டியது, ததஸ்து; என்று சொல்லி, சிஷனை நோக்கி, இதுதான் உனக்கு உபதேசம்; இப்பொழுது செய்த பிரதிக்கினையைக் கைக்கொள் என்றார். அவன் வெளியே வந்து இவ்வளவுதானு என்று சொல்லிக்கொண்டு, நல்லது, இன்றுமுதல் பொய்சொல்லமாட்டேன் என்று தீர்மானித்துக் கொண்டு, அன்று ராத்திரியே ராஜஅரமனைக்குத் திருடப் போனான். அந்நேரத்தில் ராஜா உப்பரிகையின்மேல் உலாவிக் கொண்டிருந்து இவனைக் கண்டு, நீ யார் என்று கேட்டார். அதற்கு அவன் அவரை ராஜாவென்று அறியாததினாலும், பொய்சொல்லக்கூடாதாகையாலும்: நான் கள்ளன், திருடவந்தேன் என்றான். ராஜா ஆச்சரியப்பட்டு, நல்லது, நானும் உன்கூடவருகிறேன் என்று சொல்லி, உளவறிந்தவரானபடியால், அவனைப் பொக்கிஷசாலைக்குக் கொண்டுபோய், பொக்கிஷப்பெட்டியைத் திறந்து அவனுக்குக் காண்பித்தார். அவன் ஒரு பைப்பணத்தை எடுத்து ராஜாவின் கையில் கொடுத்து, ஒரு பைப்பணத்தைத் தான் எடுத்துக்கொண்டான். ராஜா அங்கிருந்த மூன்று முத்திரை மோதிரங்களை அவனுக்குக் காண்பித்தபோது, அவன் ஒரு மோதிரத்தை எடுத்து ராஜாவின் விரலில் போட்டு, ஒரு மோதிரத்தைத் தன் விரலில் போட்டுக்கொண்டான். அப்பொழுது ராஜா: மற்றொரு மோதி

ரத்தையும் எடுத்துக்கொள் என்று சொன்னார். அதற்கு அவன்: அப்படியல்ல; அது ராஜாவுக்கு இருக்கட்டும் என்றான். அவன் வீட்டுக்குப்போகுமுன் ராஜா அவன் பேரையும் இருக்கிற இடத்தையும் கேட்டுக்கொண்டு அவனை அனுப்பிவிட்டார். பொழுது விடிந்தபிறகு ராஜா மந்திரியை அழைப்பித்து அரமனையில் களவுபோயிருக்கிறதாகத் தோன்றுகிறது, என்னென்ன போயிருக்கிறதோ சோதித்துப் பார்த்துவந்துசொல் என்றார். மந்திரி பொக்கிஷப்பெட்டியைத் திறந்துபார்த்து, சாக்கிலே போக்கு, இதுதான் தருணம் என்று களவுபோகாமலிருந்த மோதிரத்தையும் தான் இடுக்கிக்கொண்டு களவுபோன இரண்டு பைப்பணங்களோடு மூன்று மோதிரங்களும் போய்விட்டது என்று ராஜாவுக்குச் சொன்னான். பின்பு திருடனைக் கண்டு பிடிக்கும்படி மந்திரி விசாரணைசெய்து கண்டவர்கள்பேரில் பழிபோட்டு அடித்து சுக்கிராக்கினை செய்துகொண்டிருக்கும் போது, ராஜாவானவர் கொலுவில் வந்து உட்கார்ந்து, அமளியை அமர்த்தி, இன்ன இடத்தில் இன்னான் இருக்கிறான், அவனை அழைத்துக்கொண்டுவாருங்கள் என்று சேவகருக்குக் கட்டளைகொடுத்தார். அப்படியே திருடனைப் பிடித்துக் கட்டிக் கொலுவில் கொண்டுவந்து நிறுத்தினபோது, ராஜா அவனைப் பார்த்து, நீ யார் என்று கேட்டார்; அவன் மெய் பேசுகிறதையே விரதமாகக்கொண்டிருக்கிறவனானபடியால், நான் திருடன் என்று உண்மையைச் சொன்னான். இராத்திரி நீ அரமனையில் வந்ததுண்டா என்றார். ஆம், வந்ததுண்டு என்றான். அங்கே என்னென்ன திருடினாய் என்று கேட்டார். நடந்ததை உள்ளபடி சொன்னான். அங்கே எத்தனை மோதிரம் இருந்ததென்று ராஜா கேட்டதற்கு: மூன்று மோதிரம் இருந்தது என்றான். அவைகளில் நீ எத்தனை திருடினாய் என்று கேட்டார். இரண்டை எடுத்து, ஒன்றைக் கூடவந்தவனுக்குக் கொடுத்தேன், ஒன்றை என் விரலில் போட்டுக்கொண்டேன் என்றான். மற்றொரு மோதிரத்தை என்னசெய்தாய் என்று கேட்டபோது, அதை ராஜாவுக்கு வைத்துவிட்டேன் என்றான். அதற்கு ராஜா: மூன்று மோதிரமும் இல்லையாமே

என்றார். கள்ளன் நான் இரண்டு மோதிரம்தான் எடுத்தேன் என்றான். அப்பொழுது ராஜா மந்திரியைச் சோதிக்கச்சொன்னார்; உடனே மந்திரியின் இடுப்பிலிருந்து மோதிரம் விழுந்தது; மந்திரி வெட்கிப்போனான். ராஜா கள்ளன்பேரில் அதிக சந்தோஷப்பட்டு, நீ சத்தியவானானபடியால் உனக்கு மந்திரி உத்தியோகம் கொடுக்கிறேன் என்று சொல்லி, பொய்யும் திருட்டுத்தனமுமுள்ள மந்திரியை உத்தியோகத்திலிருந்து தள்ளி விட்டான்.

"பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
யெல்லா வறமுந் தரும்."

கிறிஸ்துநாதரே நமக்குக் குரு. அவரிடத்தில் உபதேசம் கேட்டுத் தீட்சைபெற விரும்புகிறவர்கள் தங்கள் பாவங்களை யெல்லாம் அவருடைய திருவடியில் வைத்துவிட்டு, இருதயத்தையே அவருக்குப் பாதகாணிக்கையாகச் செலுத்தவேண்டும். அவர் அளிக்கும் சத்தியத்தினால் உள்ளம் சுத்தமாகும்படி அவர் விதித்த கட்டளைகளை உறுதியாய்க் கைக்கொண்டு, அவருடைய சத்தியத்தில் வழுவாமல் நிற்கவேண்டும்.

"கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்" என்று வேதம் சொல்லுகிறது.

"சகோதரரே! நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" என்று வேதம் கட்டளையிடுகிற படியே நடந்துகொள்ளுங்கள்.

"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று திருவுளம்பற்றியிருக்கிறார்.

"சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே, அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு."

# இருபத்தெட்டாம் பிரசங்கம்.

## சுவிசேஷம்.

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் நீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." ரோம. 1. 16, 17.

இதைச் சொன்னவர் சாமானிய மனுஷன் அல்ல, அறிவீனன் அல்ல, மருள்கொண்டவன் அல்ல; எபிரேயரில் பிறந்த எபிரேயன், கல்வியில் நிபுணன், அருள்பெற்ற மன்னன்.

I. அவர்: "நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படேன்" என்கிறார்.

(1) சுவிசேஷமாவது என்ன? அது நற்செய்தி, மங்கள வாக்கு, கலியாண சமாசாரம், சத்திய வசனம், திருவாசகம், திருவாய்மொழி, ஞானஉபதேசம், ஆநந்தக்களிப்பு, சத்திய வேதம் என்பவற்றைக் குறிக்கும். இங்கே சுவிசேஷம் என்பது கிறிஸ்துமார்க்கத்தைக் குறிக்கும்.

இயேசுநாதர் உலகத்தில் பிறந்தபோது தேவதூதன் மேய்ப்பர்களை நோக்கி: "பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று சொன்னதினாலும், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமுமுண்டாவதாக"* என்று

---

* லூ. 2. 10, 14.

தேவதூதர்கள் பாடினதினாலும் சுவிசேஷம் இன்னதென்று விளங்கும்.

(2) இந்தச் சுவிசேஷத்தைப்பற்றியே அப்போஸ்தலனாகிய பவுல் நான் வெட்கப்படேன் என்கிறார். சுவிசேஷத்தில் காணப்பட்டிருக்கிற பரம ரகசியங்களைப்பற்றியும், அதில் விளங்கிய உபதேசங்களைப்பற்றியும், அதில் விதித்திருக்கிற நியமங்களைப்பற்றியும், அதில் விளம்பிய கட்டளைகளைப்பற்றியும் நான் வெட்கப்படேன் என்கிறார். சுவிசேஷக்கொள்கைகள் நூதனமான கொள்கைகள் என்றும், அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் பல சங்கடங்கள் நேரிடுகிறதென்றும், சொல்லி, மதாபிமானத்தினாலும் தேசாபிமானத்தினாலும் மதிமயங்கி, போதுமான விசாரணைசெய்து தேர்ச்சியடையாத பகுத்தறிவு இல்லாதவர்கள் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படுகிறார்கள். எல்லாவற்றையும் சீர்தூக்கி ஆராய்ந்து அறிந்த அப்போஸ்தலனாகிய பவுலோ: "சிலுவையைப்பற்றின உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபலனாயிருக்கிறது. தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று. யூதர்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்;—நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயுமிருக்கிறார். ஆகிலும், யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபலமும் தேவஞானமுமாயிருக்கிறார்" என்றும்; "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றைக்குறித்தும் மேன்மைபாராட்டாதிருப்பேனாக" என்றும்; "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்

றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்; நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் வருகிற நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவன் என்று காணப்படும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன்" என்றும் சொல்லுகிறார்.*

வெட்கம் இருவகைப்படும், தகுந்த வெட்கமுமுண்டு, தகாத வெட்கமுமுண்டு; தகுந்த வெட்கம் நாணம் என்னப் படும்.

"ஊணுடையெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு."

அதாவது, உண்பதும், உடுப்பதும், பிரவர்த்தியும் எல்லா உயிர்களுக்கும் பொது, நாணுடைமையானது [தகுந்த வெட்கமானது] மாந்தர்க்கே சிறப்பானது; அது மிருகமுதலான மற்றப் பிராணிகளுக்கு இல்லை. தகாதவெட்கமும் வெட்கக் கேடும் பாவத்தின் பயன். யாதொரு நல்லவிஷயத்தைப்பற்றி மற்ற மனுஷருடைய தகாத அபிப்பிராயத்தையும் அபிமானத்தையும் நாடி அவர்களுக்கு அஞ்சி வெட்கப்படுகிறது உத்தம புருஷர்களுடைய லட்சணமல்ல. விசுவாசமும் அன்பும் உண்டானால் இந்த வெட்கம் அகன்றுபோம். "அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" என்று அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார்.†

II. நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படேன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறதற்குக் காரணம் என்ன? "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் [அதாவது மற்றப் புறமதஸ்தர்கள் யாவரிலும்] விசுவா

---

* 1 கொ. 1. 18—25. கலா. 6. 14. பிலி. 3. 7, 8. † 1 யோ. 4. 18.

சிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்கு அது [அந்தச் சுவிசேஷமானது] தேவபெலனாயிருக்கிறது" என்று தாமே இந்த வசனத்தில் சொல்லுகிறார். இதுதான் அவர் தேறுதலுக்கும் உறுதிக்கும் துணிவுக்கும் வைராக்கியத்துக்கும் காரணம்.

சுவிசேஷத்தில் தேவபெலன்* [தேவசக்தி] விளங்குகிறது. மற்ற மார்க்கங்கள் எல்லாம் மனுஷசக்தியுள்ளது, சுவிசேஷமோ தேவசக்தியுள்ளது. சுவிசேஷம் தேவனையும் அவர் திருவுளத்தையும் வெளிப்படுத்தி, பாவியையும் அவன் நிர்ப்பந்தத்தையும் எடுத்துக் காண்பித்து, குருவையும் அவருடைய புண்ணியத்தையும் தெரிவிக்கிறது. "பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது" என்பது சுவிசேஷசாரமாயிருக்கிறது.†

தேவபெலன் என்றாலும் தேவசக்தி என்றாலும் ஞானஜீவனைக் குறிக்கும். அவர் அசையாமல் அணுவும் அசையாது; ஜீவனில்லாமல் அசைவில்லை. இந்த ஜீவன் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; அது விசுவாசத்தினால் உண்டாகிறது, அந்த விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான். இரட்சிப்பை அளிக்கும் இந்தச் சுவிசேஷம் யாவருக்கும் பொது. யூதர் கிரேக்கர் யாவரும் பாவிகளாகையால், பாவத்தை வெறுக்கும் விசுவாசமுள்ள யாவருக்கும் சுவிசேஷமானது பொதுவான உண்மையாயிருக்கிறதுமல்லாமல், போதுமான நன்மையாயும் இருக்கிறது.

இந்தச் சுவிசேஷம் தேவநீதியை வெளிப்படுத்துகிறது என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். பாவிகள் சுயசக்தி

---

* தேவபெலன் δυναμις—power. தேவனுடைய வல்லமையைக் குறிப்பாய்க் காண்பிக்கும்படி பூர்வத்தில் இருந்த திரேசியர் (Thracians) என்னும் ஜனங்கள் ஒரு படம் எழுதிவைத்தார்கள். அதில் சூரியனானது மூன்று கிரணங்களுடன் பிரகாசிக்கிறதாயிருந்தது; ஒரு கிரணம் பனிக்குளிரினால் கல்லைப்போல் கட்டிப்போன ஒரு கடலின்மேல் பிரகாசித்து அதை நீராய்க் கரைந்துபோகப்பண்ணுகிறது. இன்னொரு கிரணம் ஒரு கல்மலையின்மேல் பிரகாசித்து அதை உருகப்பண்ணுகிறது. மற்றொரு கிரணம் செத்துக்கிடக்கிற ஒரு பிரேதத்தின்மேல் பிரகாசித்து அதை உயிர்ப்பிக்கப்பண்ணுகிறது. இது சுவிசேஷத்தில் விளங்குகிற திரியேக தேவனுடைய செயலைக் குறிக்கும்.

† 1 தீமோ. 1, 15.

யினல் புண்ணியவான்களாக ஏதுவில்லை, தேவசக்தியினல் புண்ணியவான்களாகவேண்டியிருக்கிறது. கிறிஸ்துவே சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலி யாயிருக்கிறர். புண்ணியநாதராகிய கிறிஸ்துவின் வழியாய் விசுவாசிகள் புண்ணியவான்களாகிறர்கள்.*

சகோதரரே, நீங்கள் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப் படவேண்டியதில்லை. சுவிசேஷம் எந்தப் பூமிக்கும் எந்த நிலத்துக்குமுரிய ஜீவவித்தும் கற்பகவிருட்சமுமாயிருக்கிறது. அது சர்வலோகத்தையும் பிரகாசிப்பிக்கிற சூரியனுயிருக் கிறது; மனுமக்கள் யாவருக்கும் ஏற்ற ஞான ஆகாரமாயிருக் கிறது; யாவருடைய ஆத்தும வியாதிகளையும் நீக்கும் பரம அவுஷதமாயிருக்கிறது. அதைக்குறித்து நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. நாம் உடல் உயிர் ஆவியுள்ள மனம் புத்தி சித்தமுடைய மனுஷர்களாகையால் நம்முடைய இயல்புக் கேற்ற சத்தியம் நீதி அன்பு என்னும் லட்சணங்களுள்ள திரியேகதேவனைச் சுவிசேஷம் வெளிப்படுத்துகிறது. நாம் குறைவுள்ளவர்களாகையால் சர்வவல்லமையுள்ள பிதா நமக் குண்டென்றும், நாம் பாவிகளாகையால் நம்மை இரட்சிக்கிற அன்புள்ள இரட்சகர் நமக்குண்டென்றும், நாம் பலவீனரா கையால் நம்மைப் பலப்படுத்துகிற பரிசுத்தஆவியானவர் நமக்குண்டென்றும் சுவிசேஷம் வெளிப்படுத்துகிறது. மனு மக்கள் யாவரையும் சகோதரராக ஒருமைப்படுத்தி, சகல ஜனங்களையும் ஒரே மேய்ப்பருக்குள் ஒரே மந்தையாகச் சுவி சேஷம் சேர்க்கிறபடியால் இதைப்பற்றி நாம் வெட்கப்படா மல் மேன்மைபாராட்டவேண்டும். சுவிசேஷம் நியமிக்கும் ஆராதனைகள் சடங்குகள் ஆசாரங்கள் எல்லாம் இயல்புக்கும் புத்திக்கும் இசைந்திருக்கிறபடியால் சுவிசேஷத்தைப்பற்றி நாம் வெட்கப்படவேண்டியதில்லை.

நீசபாவிகளும் பெரும்பாதகருமாகிய நம்மைக்குறித்து அன் புள்ள விமலநாதராகிய கிறிஸ்து வெட்கப்படாதிருக்க நாம்

---

* 1 Cor. 2. 2.

அவனைக்குறித்து வெட்கப்படலாமோ? இது குருத்துரோக மல்லவா? இந்தத் துரோகத்துக்கு விமோசனமுண்டா?

"விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படு வானே, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்" என்றும்,* "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்றும், † "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? ஆகையால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் இரட்சகர்தாமே சொல்லியிருக்கிறாரே. ‡

---

* மாற். 8. 38.   † மத். 11. 6.   ‡ மத். 21. 42—44.

# இருபத்தொன்பதாம் பிரசங்கம்.

## குரு.

"கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" மத். 22. 42.

இது கிறிஸ்துநாதர் பரிசேயரை நோக்கிக் கேட்ட கேள்வி. இதன் நோக்கத்தையும் பொருளையும் அறியும்பொருட்டு இந்த அதிகாரத்தின் 41-ம் வசனமுதல் கடைசிவரைக்கும் வாசிக்கக்கேளுங்கள்.

இந்தக் கேள்வி பிசாசுகளைக் கேட்கவேண்டிய கேள்வியல்ல. இந்தக் கேள்விக்கு உத்தரவு அவர்களுக்குத் தெரியும். "இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ" என்றும், "எங்களைக் கெடுக்கவா வந்தீர் என்றும், உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.*

இந்தக் கேள்வி தேவதூதர்களைக் கேட்கவேண்டிய கேள்வியல்ல. அவர்கள் சொல்லும் உத்தரவு இன்னதென்று நமக்குத் தெரிந்திருக்கிறது. அவர்கள்: "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐஸ்வரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று பரலோகத்தில் மகா சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள்." †

இந்தக் கேள்வி மனிதரைக் கேட்கவேண்டிய கேள்வியே.

---

* மத். 8. 29. மார். 1. 24. † வெளி. 5. 12.

கிறிஸ்து யாருடைய குமாரன் என்று யூதர்களைக் கேட்டால், அவர்கள் அவர் தாவீதின் குமாரன் என்று சொல்லுவார்கள். அவரோ தம்மை தாவீதின் குமாரன் என்றுமாத்திரமல்ல, தாவீதின் கர்த்தர் என்றும் அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறார். "நான் தாவீதின் வேரும் சந்ததியுமாயிருக்கிறேன்" என்று வேதத்தின் கடைசி ஆகமத்தின் கடைசி அதிகாரத்தில் அவர் தம்மைக்குறித்துத் திருவுளம்பற்றியிருக்கிறார்.* இந்த வாக்கியம் அவர் கேட்ட கேள்விக்குச் சரியான உத்தரவு; இந்த வாக்கியத்தினால் இந்தக் கேள்வியின் பொருள் விளங்கும். கிறிஸ்து தமது தேவதன்மையின்படி தாவீதின் வேரும், தமது மனுஷதன்மையின்படி தாவீதின் சந்ததியுமாய் இருக்கிறார். பரிசேயரோ இந்தப் பரமரகசியத்தை அறியவும் உணரவுமில்லை. "அவர் தமது சொந்தமானவர்களிடத்தில் வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை."†

இந்தக் கேள்வி நம்மெல்லாரையும் கேட்கத்தகும் கேள்வியே.

I. சகோதரரே, கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் தாவீதின் வேர் அல்லவா? அவர் தாவீதின் கர்த்தனும் தேவனுமாயிருக்கிற குருபரன் அல்லவா? யூத ஜனங்கள் அவர் யோவான்ஸ்நானன் என்றும், எலியா என்றும், எரேமியா என்றும், தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லிப் பலவிதமான எண்ணங்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்று கேட்டபொழுது, சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று தகுந்த உத்தரவு சொன்னார். பேதுரு சத்தியத்தைச் சொல்லி அவருடைய தெய்வீகத்தை அறிக்கையிட்டபடியால், இரட்சகர் அந்த அப்போஸ்தலனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோ

---

* வெளி. 22. 16. † யோ. 1. 11.

னே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்று சொல்லி; நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டு வேன்; பாதாளத்தின் வாசல்கள் [அதிகாரங்கள்] அதை மேற் கொள்வதில்லை" என்று பொய்யுரையா சத்தியவாசகர் திரு வுளம்பற்றியிருக்கிறார்.* கிறிஸ்து தேவனாயிராமற்போனால் அவர் குருபரன் அல்ல, புண்ணியநாதர் அல்ல; நம்முடைய விசுவாசம் வீண், நமக்குப் பாவநிவாரணம் இல்லை.

II. கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் தாவீதின் சந்ததியல்லவா? அவர் மனுஷ அவதாரஞ் செய்த குருமூர்த்தியாயிருக்கிறார். அவர் மனுஷனானபடியால் மன்னுயிர்க்காகத் தன்னுயிர் தந்து பிராணத்தியாகஞ்செய்து, புண்ணிய தத்தம்பண்ணினார். அவர் தேவனும் மனுஷனுமா யிருக்கிறபடியால் நம்மேல் தம்முடைய கிருபாகடாட்சம் வைத்து நமக்குத் தம்முடைய அருளை அநுக்கிரகித்ததுமல்லா மல், தம்முடைய திருமேனியையும் அளித்துப் பிராணதானம் பண்ணினார்.

கிறிஸ்துவைக்குறித்து நாம் நினைக்கும்போதும், விசுவாச பக்தியினால் அவரைப் பற்றிக்கொள்ளும்போதும், தேவனும் மனுஷனுமான இம்மானுவேலாகவே அவரை நாம் நினைத்துப் பற்றிக்கொள்ளவேண்டும். மனுஷசுபாவமும் தேவசுபாவ மும் அவருக்குள் ஏகோபித்து நின்று விளங்குகிறபடியால், அவருக்கு அற்புதம் என்னும் பெயரும் இரகசியம் என்னும் பெயருமுண்டு. அவர் மனுஷனாயிருக்கிறபடியால் அவருக் குப் பசி உண்டாயிற்று, அவர் தேவனாயிருக்கிறபடியால் ஐந்து அப்பத்தால் ஐயாயிரம்பெயருடைய பசியை ஆற்றி னார். அவர் மனுஷனாயிருக்கிறபடியால் அவருக்குத் தாகம் உண்டாயிற்று, அவர் தேவனாயிருக்கிறபடியால் ஜலத்தை ரசமாக மாற்றினார். அவர் மனுஷனாயிருக்கிறபடியால் கப்ப

* மத். 16. 17, 18.

லில் கன நித்திரை செய்தார், அவர் தேவனாயிருக்கிறபடி யால் சமுத்திரத்தின் அலைகள்மேல் நடந்து கொந்தளிக்குங் கடலை அமர்த்தினார். அவர் மனுஷனாயிருக்கிறபடியால் பாவிகளை இரட்சிக்க மரணமடைந்தார், அவர் தேவனாயி ருக்கிறபடியால் தம்மைப் பற்றினவர்களைக் கரையேற்ற வெற் றிவேந்தராய் மரணத்தினின்று எழுந்தருளினார். அவர் மனு ஷனாயிருக்கிறபடியால் துரோகிகளாகிய நீசப்பாவிகளால் நிந் திக்கப்பட்டார், அவர் தேவனாயிருக்கிறபடியால், அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணிப் போற்றும் உத்தமராகிய மகா த்துமாக்கள் யாவரும் அவரை வணங்குகிறார்கள். "தேவபக் திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடி யே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப் பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்."*

"வணங்குவாய் ஜெகஜோதி யொருவனாகி
மாநிலத்தை யொருநொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதனையும் படைத்தபின்பு
குவலயத்தில் தானுதித்துக் குருவாய் வந்து
ஜனமான சமுசார மொன்றில்லாமல்
சந்நியாசிபோலிருந்து தவத்தைக்காட்டி
அன்பான சித்தர்களை யிருத்திப்பின்பு
அகண்டதலஞ் சென்றவனை யண்டுவாயே."

III. கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர் கள்! "நீதிபரர்," "புண்ணியநாதர்" என்னும் நாமதேயங்கள் கிறிஸ்துவுக்கே உரியது."† அவருடைய நீதியினால் [புண்ணி யத்தினால்] நாம் நீதிமான்களாகிறோம், குணமாற்றுங்குருவே குரு, அவர் கிறிஸ்துவே.

IV. கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்! அவர் நமக்குக் கருணாலயமாயிருக்கிறதுமன்றி, அவர் நமக் குள் ஜீவசொரூபமாய் உருவாகி, நம்முடைய இருதயகமலத்

* 1 தீமோ. 3. 16. † எரே. 23. 6.

தில் வாசம்பண்ணி, பரிசுத்தஆவியின் ஏவுதலினால் சிந்தையைப் பரவசமாக்கி, நம்மைத் தமக்கு அகமும் ஆலயமுமாக்குகிறார்.* பூவொடு சேர்ந்த நாரும் மணம்பெறுமே.

V. கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அவர் உங்களுக்காக மத்தியஸ்தர் உத்தியோகத்திற்குரிய முத்தொழிலையும் நடத்துகிறவராயிருக்கிறார். நம்மைப் போதிக்கும் சற்குரு அவரே. நமக்காகப் பிராணத்தியாகஞ்செய்த ஆசாரியர் அவரே. நம்மை ஆதரித்துக்காக்க வல்லவரான மகிமையின் ராஜா அவரே; நமது அடைக்கலம் அவரே, நமது பிராண சிநேகிதர் அவரே, நமது ஜீவன் அவரே, யாவும் அவரே.

அவரைக்குறித்துத் தகுந்தபடி நினையுங்கள். அவரை நினைக்க நினைக்க அவருடைய மகத்துவம் விளங்கும், அவருடைய தற்சொரூபம் உங்களுக்குள் அமையும், அவரைப்போலாவீர்கள். "நாம் எல்லாரும் திறந்தமுகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே கண்டாற்போல் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." †

---

* எபே. 2. 20. † 2 கொரி. 3. 18.

# முப்பதாம் பிரசங்கம்.

## குரு.

"கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" மத். 22. 42.

"கேள்விமுயல்." கேள்விகளிலெல்லாம் சிறந்த கேள்வி இந்த வாக்கியத்தில் அடங்கியிருக்கிற கேள்வியே. "உங்களி லிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித் துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.* ஆகையால் சகோதரரே, கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?

கிறிஸ்து இன்னாரென்று நாம் அறிந்துகொள்ளும்படிப் போதுமான அத்தாட்சிகளுண்டு. "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட் டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறி விக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்தி லிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமா யிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக்குறித்துச் சாட் சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று யோவான் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.†

I. நான்கு சுவிசேஷங்களிலும் கிறிஸ்துவின் சரித்திரம் ஆதியோடந்தமாய் எழுதியிருக்கிறது. நாலு பக்கங்களிலுமு ள்ள நாலுநிலைக்கண்ணாடிகளின் மத்தியிலிருக்கிற உருவத்தை

* 1 பே. 3. 15. † 1 யோ. 1. 1, 2.

யாதொரு குறைவுமின்றி முற்றிலும்பார்த்து அறிந்துகொள்ளலாம். கிறிஸ்துநாதருடைய பெயரும் ஊரும், பிறந்த காலமும் செய்த கிரியைகளும், போதித்த உபதேசங்களும், அவர் மன்னுயிர்க்காகத் தன்னுயிர் தந்து பிராணத்தியாகஞ்செய்து புண்ணியதத்தம்பண்ணினதும், அவர் பாவம்போக்கும் பலியாக மரித்து மரித்தோரைவிட்டெழுந்து, அப்போஸ்தலர்களை ஏற்படுத்தித் திருச்சபையை நாட்டி, அவருடைய அருளும் பரிசுத்தஆவியின் வரப்பிரசாதங்களும் அதில் விளங்கும்படி அநுக்கிரகித்து, பரத்துக்கு எழுந்தருளி, வெற்றிவேந்தராய்ப் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதை நான்கு சுவிசேஷங்களிலும் அறிந்துகொள்ளலாம். இந்தச் சரித்திரத்தை வாசித்து அறிய விண்ணவர் யாவரும் ஆவல்கொண்டிருக்கும்போது, மண்ணவராகிய நாம் நமக்கேஉரிய இந்தச் சரித்திரத்தை வாசியாதிருக்கலாமா?

II. அவருடைய தேவசுபாவமும் மனுஷசுபாவமும், அவருடைய குணதிசயமும், அற்புதச்செயலும், அவருடைய அமிர்தவாக்கும், ஒப்பில்லாத அன்பும் நம்முடைய மனோவாக்குக்கெட்டாதவைகள். சற்குணம், மெய்ஞ்ஞானம் எல்லாம் அவருக்குள் அடக்கம். உலகத்தில் வித்துவான்கள் எழும்பி, ஞானிகள் தோன்றி அடங்கிப்போனார்கள். முடிமன்னர் எழும்பி, வீரர் தோன்றி மறைந்துபோனார்கள். இவரோ நேற்றும் இன்றும் என்றும் இருக்கிறார். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் இவரும் இவருடைய திருவாக்கும் ஒழிந்துபோவதில்லை; இவருடைய ராஜ்யத்துக்கு முடிவு இல்லை. இவர் மனுக்குலம் அனைத்தையும் இரட்சிக்க மனுஷனாகப் பிறந்தாலும், மனுமக்களுக்குரிய ஜன்மசுபாவமும், பற்பல ஜனங்களுக்குரிய இயற்கையான பேதாபேதங்களும் இவரிடத்தில் காணோம். இவர் யூதகுலத்தில் பிறந்தவராயிருந்தாலும் யூதர்களுக்கு இயல்பாயுள்ள மதாபிமானமும் தேசாசாரமும் இவரிடத்தில் காணோம்; கிரேக்கருக்குள்ளிருந்த லௌகீகஞானமும் கல்விப்பெருமையும் இவரிடத்தில் காணோம் ரோமருக்குள்ளிருந்த தேசாபிமானமும் ராஜ்ய அகங்காரமும்

இவரிடத்தில் காணேம்; இந்துக்களுக்குள்ள ஜாதிவைராக்கியமும் செல்வப்பெருமையும் இவரிடத்தில் காணேம். இவர் மனுஷனுயிருந்தும் மனுஷர்களுக்குரிய சாதாரண குணங்களைப் பாராட்டாதிருந்தது என்ன? இவரிடத்தில் இரக்கமும் கண்டிப்பும் இருந்தது; பட்சபாதமும் முகஸ்துதியும் இவரிடத்தில் காணப்படவில்லை. மனிதருடைய புகழையும் பொருளையும் தேடாமல், அவர்களுடைய இகபரசுகத்தையே தேடினர், ஏழைகளுக்கு இரங்கி யாவருக்கும் உபதேசித்தார், இது அதிசயந்தானே!

இவர் யார்? இவரைக்குறித்து என்ன சொல்லியிருக்கிறது? இவர் பரத்திலிருந்து வந்தவர், உயரத்திலிருந்து உண்டானவர். நினிவே பட்டணத்தாருக்குப் பிரசங்கித்து அவர்களைக் குணப்படுத்தி ரட்சித்த யோனு தீர்க்கதரிசியிலும் இவர் பெரியவர். பிரபலமான ஞானியாகிய சாலொமோனிலும் இவர் சிறந்தவர். தாவீது ராஜாவின் குமாரனும் கர்த்தனும் என்று அர்த்தங்கொள்ளும் சந்ததியும் வேருமானவர், ஆபிரகாம் பிறவாததற்குமுன் இருந்தவர், உலகத்தை உண்டாக்கினவர், தேவாதிதேவனுகிய பிதாவின் ஏகசுதனுகிய அன்பின் சொரூபியானவர், வழியும் சத்தியமும் ஜீவனுமானவர், ஆதியும் அந்தமுமானவர், மனுஷருக்குள் புருஷோத்தமர், ஆகையால் மனுஷகுமாரன் என்று தாமே தமக்குத் தரித்துக்கொண்ட பெயர் இவருக்கே தகும். "இவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமான நமக்கேற்ற பிரதான ஆசாரியர்" என்று இவரைக்குறித்து வேதம் சொல்லுகிறது. *

மனுஷர் பேசாதவண்ணமாய் இவர் பேசியிருக்கிறார். மற்ற ஞானிகள் வெளிப்படுத்தாத உபதேசங்களை இவர் வெளிப்படுத்தினதுமன்றி, மற்றொருவரும் செய்யாதவண்ணமாய்த் தம்மையே மனுமக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். "நான் ஒளி, என் ஒளியில் நடவுங்கள்; நான் ஜீவன், பாவமுள்ள உலகத்துக்காக என் ஜீவனைக் கொடுக்கிறேன்; என்னை விசுவாசித்துப் பற்றிக்கொள்ளுகிறவர்களுக்கு நித்திய ஜீவனுண்டு;

* எபி. 7. 26.

என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; பரத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குண்டு; என் புண்ணியமல்லாமல் பாவிகள் இரட்சிக்கப்பட வேறுவழியில்லை. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்று திருவுளம் பற்றியிருக்கிறார்.*

இப்படி யார் சொல்லத்தகும்? பாவமுள்ள மனுஷன் இப்படிச் சொல்வது பெருந்துணிவாயிருக்கும் அல்லவா? இவர் பொய்யுரையாத சத்தியவாசகராயிருக்கிறபடியால், வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், இவருடைய வார்த்தைகள் ஒழிந்துபோவதில்லை.

III. இவர் யார்? இவரைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

இவர் சொன்ன பரம உபதேசங்களுக்கும், இவர் செய்த சிறந்த அற்புதங்களுக்கும், இவருடைய மாசற்ற உத்தம குணங்களுக்கும் யாதொரு விகற்பமுமில்லை, சம்பந்தமே உண்டு. இவர் சுயநலத்தை நாடாமல் பிறர் நலத்தையே நாடி, தம்மைத்தாம் வெறுமையாக்கி, இவ்வுலகத்தில் தலைசாய்க்க இடமில்லாதிருந்து, நிந்தையான சிலுவையைச் சுமந்து, பாதகருக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார்.

IV. இவர் யார்? இவரைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; எல்லாவற்றையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே." †

இந்தச் சீலமும் ஞானமும், இந்த அதிகாரமும் வல்லமையும் இவருக்கு எங்கே இருந்து வந்தது? "தேவத்துவத்தின்

* மத். 11. 28—30. † 1 தீமோ. 2. 5, 6.

சகல பரிபூரணமும் இவருக்குள் வாசமாயிருக்கிறதே."* வேதநாயகர் இவரே, புண்ணியநாதர் இவரே. சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்கவந்த சத்தியம் இவரே, சத்தியவான் எவனும் இவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறான். இவர் பற்றொழிய நமக்கு வேறொரு பற்றுமில்லை, நம்மை உடையவர் இவரே, ஜகத்குரு இவரே. பரகதி அடைய இவர் உதவி அல்லாமல் வேறு உதவியில்லை.

> "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்ற லரிது."

"யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபலமும் தேவஞானமுமாயிருக்கிறார்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.† குருவும் ஆசாரியரும் ராஜாவுமானவருக்குரிய முத்தொழிலையும் நடத்த ஆநந்ததைலத்தால் அபிஷேகம்பண்ணப்பட்ட முத்தொழிற் பகாப்பொருள் இவரே.

இவருடைய சரித்திரத்தை வாசிக்கிறவர்களே! கிறிஸ்துநாதர் அவிசுவாசமுள்ள தோமாவை நோக்கி: "நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு"‡ என்று சொன்னவரே, உங்களை நோக்கி: "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது ரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை" என்று திருவுளம்பற்றியிருக்கிறார்.§ இதை நம்புங்கள். விண்ணும்மண்ணும் வையகமும் வானகமும் அவருக்குச் சாட்சியிடுகிறது. அவர் நம்மில் அன்புகூர்ந்தபடியால் அவரே நம்முடைய அன்புக்குரியவர். அவரை அண்டிப்பற்றி நாடி நம்பினவர்கள் யாவரும் பாக்கியவான்கள்.

---

* கொலோ. 2. 9. † 1 கொரி. 1. 22—24. ‡ யோ. 20. 27. § ஏசா. 45. 22.

# முப்பத்தோராம் பிரசங்கம்.

## சீஷன்.

"அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்: நீர்மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிறயாவரும், கொஞ்சங்குறைய அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்." அப். 26. 28, 29.

I. கிறிஸ்தவனாயிருப்பது என்ன?

II. கொஞ்சங்குறையக் கிறிஸ்தவனாயிருப்பது என்ன?

III. முற்றிலும் கிறிஸ்தவனாயிருப்பது என்ன?

இம்மூன்று காரியங்களையும் கவனிப்போமாக:

I. கிறிஸ்தவனாயிருப்பது என்ன?

கிறிஸ்துவின் திருநாமத்தில் ஞானஸ்நானம்பெற்றவன் கிறிஸ்தவன். "முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கிற்று" என்று வேதத்தில் கண்டிருக்கிறது.* கிறிஸ்து என்னும் கிரேக்கமொழி மேசியா என்னும் எபிரேய மொழிபோல் அபிஷேகம்பெற்றவர் என்று அர்த்தங்கொள்ளும். கிறிஸ்துவைப்பற்றின சீஷர்கள் ஞானஸ்நானத் தீட்சையாகிய அபிஷேகம் பெறுகிறபடியால் கிறிஸ்தவர்கள் என்னப்படுகிறார்கள். விரோதிகளாயிருந்த பூர்வ யூதர்கள் ஆதிசீஷர்களுக்கு நசரேனர் என்றும் கலிலேயர் என்றும் நிந்தையான பேர்கள் இட்டார்கள். கிறிஸ்தவர்கள் என்னும் பெயர் பூர்வத்தில் கிரேக்கர் ரோமர்முத

* சிரியாதேசத்து ராஜனாகிய அந்தியோகுப் பிரகாசன் (Antiochus Epiphanes) என்னும் மகா கொடியன் யூதர்களைத் துன்பப்படுத்தி எருசலேம் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி, விக்கிரகாராதனைசெய்ய பலவந்தம்பண்ணினான். அவனுடைய ராஜதானி நகரமாகிய அந்தியோகியாவிலே சீஷர்கள் முதல்முதல் கிறிஸ்தவர்கள் என்னப்பட்டார்கள். அப். 11. 26.

வான புறமதஸ்தரால் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு நிந்தையாய் இடப்பட்டிருக்கலாம். ஆதிக்கிறிஸ்தவர்களுக்குள்ளே சீஷர்களுக்கு "விசுவாசிகள், சகோதரர், மார்க்கத்தார், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், பரிசுத்தவான்கள்" என்னும் பெயர்கள் வழங்கினது. அந்நியமதஸ்தர் கிறிஸ்தவன் என்னும் பதத்துக்குரிய அர்த்தத்தை அறியாமல் ஆதிசீஷர்களுக்கு நிந்தையாய் இட்டிருந்த இந்தச் சிறந்த பெயர் இப்பொழுது விந்தையாய் வழங்கிவருகிறது. "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் [துன்பப்பட்டால்] வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிறார்.* "ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள்; கர்த்தருடைய வாய் சொல்லும் புதுநாமத்தால் நீ அழைக்கப்படுவாய்" என்று ஏசாயா தீர்க்கதரிசியும் இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.† இந்தப் பேரைப்பற்றியாவது இந்தப் பேருக்கு ஆதாரமாயிருக்கிற சுவிசேஷத்தைப்பற்றியாவது கிறிஸ்தவர்கள் வெட்கப்படவேண்டியதில்லை. இது ஜாதிப்பேர் அல்ல, ஊர்ப்பேர் அல்ல, தொழிற்பேர் அல்ல, பயனற்ற இடுகுறிப்பேர் அல்ல, நம்முடைய அருமை ரட்சகர்வழியாய் நமக்குக் கிடைத்த காருணிய காரணப்பேர். இது வாயில் மதுரமும், காதில் இன்பமும், அகத்தில் மகிழ்ச்சியும் உண்டாக்குகிற பேராயிருக்கிறதுமல்லாமல்,‡ இந்தப் பேர் உங்களைத் தேவதூதர்களுடைய அணிவகுப்பில் சேர்த்து, தேவகுலத்தாராக்கும்.§

II. கொஞ்சங்குறையக் கிறிஸ்தவனாயிருப்பது என்ன?

அகிரிப்பா ராஜாவைப்போல் மெய்யை அறிந்து மதித்தும் பொய்யை நாடிநடக்கிற இருமனமுள்ளவர்கள் குறைவுள்ள கிறிஸ்தவர்கள். இவர்கள் இரு நினைவுகளினால் குந்திக்குந்தி

* 1 பே. 4. 16. † ஏசா. 62. 2.
‡ Mel in ore, melos in aure, jubilum in corde.
§ A Christian is the highest style of man.

நடந்து, நிலையில் நில்லாமல் தத்தளித்து, பாவம் புண்ணியம் இரண்டையும் தழுவிநடக்கத் துணிகிறவர்கள்; கலப்பையின் மேல் கையை வைத்தும், ஆசாபாசங்களினால் சிக்குண்டு பின்னிட்டுப்பார்த்து மனஞ்சோர்ந்து இரண்டகஞ்செய்கிற வர்கள். இவர்கள் பூரணராகமாட்டார்கள். இவர்களே கொஞ்சங்குறைய கிறிஸ்தவர்களானவர்கள். இவர்களில் விதைத்த சத்தியவித்து வேரூன்றி வளர்ந்து கனிகொடுக்கிறதற்கு ஏது விராது. இவர்கள் வேதத்தைக் கக்கத்தில்வைத்தும் கருத்தில் வையார். இவர்களுக்கு அறிவிருந்தும் உணர்விராது. இவர்கள் கரும்புதின்னக் கூலி கேட்பார்கள். துன்பம் வரும் போது சத்தியத்தை மறுதலித்து, குருவுக்கும் சத்தியத்துக்கும் துரோகஞ்செய்வார்கள். கழுவப்பட்ட பன்றி மறுபடியும் சேற்றில் புரளுவதுபோலும், நாய் தான் கக்கினதை மறுபடியும் தின்பதுபோலும் இவர்கள் அருவருத்துத் தள்ளினதையே மறுபடியும் நாடித் தேடுவார்கள். யூதேயாதேசத்துக்கு அதிபதியாயிருந்த பேலிக்ஸ் என்பவனைப்போல் பாவத்தைக் கண்டிக்கும் உபதேசத்தைக் கேட்கும்போது நடுங்கிப் பயந்து இணங்கினாலும், இளகின நெஞ்சம் மறுபடியும் வைரங்கொண்டு, உபதேசத்தை மறந்து இகழ்ந்துவிடுவார்கள். இவர்கள் இருநாக்குள்ள உடும்பைப்போலவும், பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுகிற விலாங்கைப்போலவும், இருநாக்கும் இருவினையுமுள்ளவர்கள். இப்படிப்பட்டவர்களைப்பற்றி எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: "மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனைசெய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறவர்களே, உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை" என்று சொல்லியிருக்கிறது.* இவர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை [பொருளையும் பயனையும்] மறுதலிக்கிறவர்கள்.† இவர்கள் எப்பிரா

* எசே. 20. 32. † 2 தீமோ. 3. 5.

யீனைப்போல அந்நிய மதஸ்தரோடு கூடிப் பழகித் திருப்பிப்போடப்படாத அப்பம்போல் வெந்ததும் வேகாததுமான பக்குவப்படாத ஆத்துமாக்களாயிருக்கிறார்கள்.* இவர்கள் குளிராயாவது அனலாயாவது இராமல், வெதுவெதுப்பாயிருந்து, ஒன்றுக்கும் உதவாமல் கழிக்கப்பட்டுப்போகிறவர்கள்.† இவர்கள் புத்தியற்ற கன்னிகைகளைப்போல் கலியாணத்திற்குப் போனாலும் கலியாணவீட்டிற்கும் விருந்துக்கும் பாத்திரராயிரார்கள்.‡ இப்படிப்பட்டவர்கள் நியாயத்தீர்ப்புநாளில் ஆண்டவரை நோக்கி: "கர்த்தாவே, கர்த்தாவே, நாங்கள் உம்முடைய சீஷர்கள் அல்லவா? உம்முடைய நாமத்தினாலே அநேக காரியங்களைச் செய்தோம் அல்லவா என்று சொன்னாலும், கர்த்தர் அவர்களை நோக்கி: நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார்.§

III. முற்றிலும் கிறிஸ்தவனாயிருப்பது என்ன?

கிறிஸ்துவை உறுதியாய் விசுவாசித்துப் பற்றிக்கொண்டு, அவரில் அன்புகூர்ந்து, ஆண்டபொருளாகிய அவருக்குத் தன்னைக் கையளித்து, அவருக்காக லௌகீகப்பொருளெல்லாம் சேதம் என்று எண்ணி, தன்னைத்தான் வெறுத்துப் பாவத்தைப் பகைத்துத் தள்ளி, அவருடைய சிலுவையை [மார்க்கத்தை, அதினால் வரும் துன்பத்தை] ஏற்றுக்கொண்டு, அந்தச் சிலுவையிலே மேன்மைபாராட்டி, கிறிஸ்துவினுடைய புண்ணியபலனை நாடி, பிறரில் அன்புகூர்ந்து அவர்களுக்கு நன்மைசெய்து, இம்மையில் தேவகிருபையையும் மறுமையில் பேரின்ப மகிமையையும் அடைவதே முற்றிலும் கிறிஸ்தவனாயிருப்பதாம்.

நாம் முற்றிலும் கிறிஸ்தவர்களாயிருப்பதற்கு நம்முடைய பாவமே தடை. பாவத்தை வெறுத்துப் பாவநாசராகிய கிறிஸ்துவின் ஜீவசொரூபத்தை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்

---

* ஓசி. 7. 8. † வெளி. 3. 15. மு. ‡ மத். 25. அதி. § மத். 7. 22, 23.

கொள்வோமானால் நாம் தேறுதலடைந்து பக்குவப்பட்டுப் பூரணப்படுவோம்.

சகோதரரே! "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என்று சொன்ன அகிரிப்பா ராஜா உலகக்கவலைகளினாலும் பாவமயக்கத்தினாலும் கிறிஸ்தவனாகவில்லையே.

கிறிஸ்தவன் கிரகஸ்தனாயிருக்கவேண்டும்.* உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தைப் புறமதஸ்தர் தூஷித்து, "குலம்புகுந்தும் குறைதீரவில்லை" என்று பழித்தாலும்† இந்தப் பேருக்குப் பாத்திரவான்களாயிருக்க நாடுங்கள்.

கிரேக்குதேசத்துச் சக்கரவர்த்தியாகிய அலெக்சாந்தர் என்னும் மகா வீரனுடைய சேனையில் அலெக்சாந்தர் என்னும் பேர்கொண்ட ஒரு சேனாதிபதியிருந்தான். அவன் போர்முகத்தில் நில்லாமல் கோழைத்தனமாய்ச் சத்துருக்களுக்குப் புறங்காட்டி ஓடிப்போனான். இதை அவனுடைய எஜமான் அறிந்து சமஸ்த சேனைக்கு முன்பாக அவனை நிறுத்தி: அலெக்சாந்தர் என்னும் என் பேர் உனக்குத் தகாது, என் பேரைத் தரித்தால் என் வீரத்தையும் தரித்துக்கொள்ளவேண்டும் என்று கண்டித்து, அவனுடைய உத்தியோகத்தினின்று அவனை அகற்றிவிட்டான். ஏகச்சக்கராதிபதியாகிய சேனைகளின் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பாவம் உலகம் மாம்சமாகிய சத்துருக்களை ஜெயிக்க ஞான ஆயுதங்களைக் கைக்கொண்டு போர்செய்யவேண்டும். கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற [உச்சரிக்கிற] எவனும் அநியாயத்தை [பாவத்தை] விட்டு விலகியிருப்பது அவன் கடமை. இதுவே அவனுக்கு முத்திரை.‡

* பூர்வத்திலிருந்த கிறிஸ்துமார்க்கத்தின் விரோதிகள் கிறிஸ்தவன் (χριστιανος) என்னும் பதத்தையும் அர்த்தத்தையும் அறியாமல்; கிரேஸ்தவன் (χρηστιανος) என்று எழுதினார்கள், இதற்கு இனிமை காருணியம் என்னும் நல்ல அர்த்தங்களுண்டு.

† யாக். 2. 7. ‡ 2 தீமோ. 2. 19.

சகோதரரே, "தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.* சகோதரரே! நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு, உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை."

---

*Cor. 2. 24: 12. 1.

# முப்பத்திரண்டாம் பிரசங்கம்.

---

## பக்தி.*

"சரீரமுயற்சி அற்பப் பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது [ஆத்துமமுயற்சியானது] இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் [இம்மைக்கும் மறுமைக்கும்] வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது." 1 தீமோ. 4. 8.

I. பக்தியாவது என்ன? மனதில் தேவனை அறிகிற அறிவும், ஆத்துமாவில் தேவனால் உண்டாகிய அருளும், இருதயத்தில் தேவனைப்பற்றிய அன்பும், நடக்கையில் தேவனுக்கேற்ற ஒழுக்கவணக்கமுமே பக்தியாம். அருள் இதற்கு ஆதாரம், விசுவாசம் இதற்கு முயற்சி, அன்பு இதற்கு லட்சணம். தேவசித்தத்துக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிந்து, வேதத்தை வாசித்து, ஜெபஞ்செய்து தியானம்பண்ணி, திருச்சபையில் வழங்கும் ஞானநன்மைகளை அநுசரித்து, செய்யும் தானதர்மங்களையெல்லாம் தேவமகிமைக்கென்று செய்து, ஆவியாயிருக்கிற தேவனை ஆவியோடும் உண்மையோடும் சேவித்து, பரிசுத்தமான ஜீவபலியாகத் தங்களைச் சமர்ப்பித்து, புத்தியுள்ள ஆராதனைசெய்து, உத்தமமாய் நடந்துகொள்வதே மெய்த்தேவபக்தி. பக்தியுள்ள ஜீவாத்துமா பரமாத்துமாவை நோக்கி: "உம்முடைய ஆலோசனையின்படி என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையிலே ஏற்றுக்கொள்வீர். பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமா

---

* εὐσέβεια, piety, devotion, godliness, religion.

யிருக்கிறார்." "நான் நீதியில் உம்முடைய சமுகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்"* என்று சொல்லும்.† விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றும் பக்தியில் அடங்கி, ஜெபத்தியானத்திலும் தானதர்மத்திலும் விளங்கும். வீண்பக்தியானது மெய்ப்பக்தியின் வேஷத்தைத்தரித்து அதன் பெலனை மறுதலிக்கும்; மெய்ப்பக்தியோ மனோவாக்குக்காயத்தில் விளங்கி, நாளுக்குநாள் அதிகரித்து வளர்ந்தோங்கிப் பிரகாசிக்கும்.

II. பக்தியின் பிரயோஜனம் என்ன? அது இம்மைக்கும் மறுமைக்கும் பிரயோஜனமுள்ளது.

I. பக்தி இம்மைக்குப் பிரயோஜனமுள்ளது; எப்படியெனில், அது தேவனுடைய வாக்குத்தத்தத்துக்கேற்றபடி சரீரத்துக்குச் சுகத்தையும் மனதுக்கு ஆறுதலையும் கொடுக்கிறதும் அல்லாமல், மன்னுயிர்வாழ்வுக்குரிய போதுமான செல்வத்தையும் இன்பத்தையும் கொடுக்கும். அதன்மூலமாய்க் குடி, களவு, காமம், பொய், சோம்பல் முதலிய துர்க்குணங்களுக்கு இடமில்லாமல், அருளும் பொருளும் உள்ளத்தில் அமைவதினால், குற்றமற்ற நல்மனச்சாட்சியும் நற்கீர்த்தியும் சிரஞ்சீவியும் உண்டாகும். பக்தருக்குத் தெய்வமே துணை; அவர்கள் கைவிடப்படுவதில்லை.

சரீரமுயற்சி அற்பப்பிரயோஜனமுள்ளது. "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?"‡ வியர்த்தமான சடங்காசாரங்கள், நியமநிஷ்டைகள் எல்லாம் வீண்பக்தி, அவைகள் ஒன்றுக்கும் உதவாது.

---

* சங். 73. 24—26; 17. 15.

† "என்பெற்ற தாயரு மென்னைப்பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்றசொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்வந்து குடமுடைத்தார்
உன்பற்றொழிய வொருபற்றுமில்லை புடையவனே." (பட்டணத்துப்பிள்ளை.)

‡ மத். 16. 26.

"பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களோ? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.*

மன்னுயிர் நாள் சில பிணிபல, இளமை நீரிற்குமிழி, யாக்கை நீரில் எழுத்து, செல்வம் கடல் அலை, மின்னல் தோன்றி மறைவதுபோல் செல்வம் தோன்றி மறையும், பிணியொடு மூப்புவரும். "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே." உடன்பிறந்தே கொல்லும் வியாதி; மாயை மனதைமயக்கும். சென்றநாளெல்லாம் சிறுவிரல் வைத்து எண்ணலாம், நின்ற நாள் யார்க்கும் தெரியாது. பாவத்தின் சம்பளம் [பயன்] மரணம். நின்றது நின்றது என்று நினைக்கும்போதே, சென்றது சென்றது வாழ்நாள், வந்தது வந்தது கூற்று என்று சொல்லவேண்டியதாகும்; செத்தாரைச் சாவார் சுமப்பார்.

"பேதைமையென்னும் வித்தில் பிறந்துபின் வினைகளென்னும்
வேதனை மரங்கள் நாறி, வேட்கைவேர் வீழ்த்துமுற்றி
காதலுங் களிப்புமென்னும் கவடுவிட் டவலம்பூத்து
மாதுய ரிடும்பைகாய்த்து, மரணமே கனிந்துநிற்கும்."

அவபக்தியானது: மோட்சத்தைக் கண்டது யார்? நரகத்தைக் கண்டது யார் என்று சொல்லி, இகபரநன்மைகளை இகழ்ந்துபேசி அதை இழந்துபோம்.

---

* 1 கொ. 9. 24-27.

"இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்."* தேவபக்தி இம்மைக்குப் பிரயோஜனமுள்ளது என்பதற்குச் சந்தேகமில்லை. "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவுங் கூடாதென்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐஸ்வரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்குமுன்பாக நல்ல அறிக்கைபண்ணினவனுமாயிருக்கிறாய்." "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார். "இவ்வுலகத்தை அநுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அநுபவியாதவர்கள்போலவும் இருக்கவேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே."†

தேவபக்தியுள்ளவர்கள் இம்மையில் குறைவுள்ளவர்களாயிருப்பார்களானால் மறுமையில் நிறைவுள்ளவர்களாயிருப்பார்

---

* 1 கொ. 15. 19. † 1 தீமோ. 6. 6—12. யோ. 6. 27. 1 கொ. 7. 31.

கள். "நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே."*

2. பக்தி மறுமைக்கும் பிரயோஜனமுள்ளது; எப்படியெனில், பக்தி மனுஷனைப் பேரின்பவீட்டிற்கு உரியவனாக்கி, அவனுக்குப் பேரின்பவாழ்வை அளிக்கும்.

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை
இருள்சேர்ந்த இன்னா உலகம்புகல்."

இந்தப் பிரயோஜனம் சூனியமல்ல, நாசமல்ல, நிர்வாணமல்ல; இது சாலோக, சாமீப, சாரூபபதவி. நாம் சுவாசத்தோடே வருகிறோம் விசுவாசத்தோடே போகிறோம். "காணப்படுகிறவைகள் [இம்மைக்குரியவைகள்] அநித்தியம், காணப்படாதவைகள் [மறுமைக்குரியவைகள்] நித்தியம்."† இம்மைக்குரிய ஜீவன் பூப்போல உதிரும்போது, மறுமைக்குரிய ஜீவன் கனிபோல் தோன்றும். "தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.‡ அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா வெளியரங்கமாய்ப் பலன் அளிப்பார்."

மனுஷனானவன் சரீரம் ஜீவன் [உயிர்] ஆத்துமாவாகிய திருத்துவம் உடையவனாயிருக்கிறான்.§

இகபரமாகிய இம்மை மறுமையைப்பற்றி வேதத்தினால் மாத்திரம் நிச்சயம் அறியக்கூடும். கிறிஸ்துநாதரே ஜீவனும் அழியாமையுமாகிய மறுமையை வெளிப்படுத்தினார்.‖ பரத்திலிருந்து வந்தவரே பரத்துக்கு வழிகாட்டக்கூடும். அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். தேவசாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிற ஆத்துமா சாகாது. ஜீவன் அவரு

---

* எபி. 13. 5. † 2 கொ. 4. 18. ‡ சங். 84. 11.

§ "ஒற்றுமை பத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை பத்தின் வேறே உடலுயிர்." (சன்னூல்.)

‖ 2 தீமோ. 1. 10.

டைய் சுவாசம். மனச்சாட்சியானது நன்மைதீமைக்குப் பல னுண்டென்று உணர்த்தும். ஆத்துமா இம்மையில் பரதேசி யாய் வாசம்பண்ணும்போது தன் வீடாகிய மோட்சத்தையே நாடும். ஏனோக்கு எலியா என்பவர்கள் கூட்டோடே பரக தியடைந்தார்கள்.

காலைமாலை மாறிமாறி வருவதுபோலவும், மாரியும் கோ டையும் மாறிமாறி வருவதுபோலவும், அழிந்து மறைந்து போன புல்பூண்டுகள் மழைபெய்யும்போது உயிர்ப்பிப்பது போலவும், வித்து பூமியில் செத்து முளைப்பதுபோலவும், முட்டையிலிருந்து பறவைகள் தோன்றுவதுபோலவும், மண் ணில் ஊரும் புழுக்கள் முட்டையாகிப் பொரித்துப் பட்டுப் பூச்சியாய் விண்ணில் பறப்பதுபோலவும், மனுஷனுடைய சரீரமும் மரித்து விகாரப்பட்டு மறுபடியும் உயிரோடே எழுந்திருக்கும். சற்பாத் ஊரிலிருந்த விதவையின் குமாரன் மரித்தபின்பு எலியா தீர்க்கதரிசியினால் எழுப்பப்பட்டான். சூனேமிலிருந்த ஸ்திரீயின் பிள்ளை மரித்தபின்பு எலிசா தீர்க் கதரிசியினால் எழுப்பப்பட்டது. மரித்து அடக்கம்பண்ணப் பட்ட ஒரு மனுஷன் எலிசாவின் எலும்புகள் பட்டு உயிர டைந்தான். அப்படியே கிறிஸ்துநாதரும், மரித்து வீட்டி லிருந்த யவீரு என்பவனுடைய மகளின் பிரேதத்தையும், நாயீன் ஊர் விதவையின் மகன் மரித்து அடக்கம்பண்ணப்பட வெளியே கொண்டுபோகப்பட்டபோது அந்தப் பிரேதத்தை யும், மரித்து நாலுநாள் அடக்கம்பண்ணப்பட்டு சரீரம் நொந் துபோன லாசருவின் பிரேதத்தையும் உயிரோடே எழுப்பி னார். "தேவன் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோ ரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்கென்று பிழைத் திருக்கிறார்கள்."* "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவி யாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்குச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம்,

* லூ. 20. 38.

இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்."* என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது.

கிறிஸ்துவினால் நமக்கு இம்மையில் மறுஜந்மமும் மறுமையில் நித்தியஜீவனுமுண்டு. "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்."† கிறிஸ்துவுக்குள் ஜீவனிருக்கிறது; ஆகையால் அவர், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்று திருவுளம்பற்றியிருக்கிறார். "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்குச் ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்."‡ "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்று ரட்சகர் சொல்லியிருக்கிறார்.§

"நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால்

---

* அப். 17. 27, 28. † யோ. 17. 3. ‡ 1 கொ. 15.54—57.
§ யோ. 14. 1—3.

பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்."*

"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம்."†

"இந்த உபதேசத்தை உறுதியாய் நம்புங்கள். இதை நம்பினால் மரணநேரத்தில் கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று நீங்கள் ஒவ்வொருவரும் சொல்லிப் பரகதியடைவீர்கள்.

---

* Cm. 14. 8.  † 1 Cur. 3. 2, 3.

# முப்பத்து மூன்றாம் பிரசங்கம்.

---

## தானம்.

'வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.' அப். 10.35.

இயேசுநாதர் சொன்ன இந்த அருமையான வாக்கியம் எபேசு சபையின் மூப்பருக்குப் பவுல் அப்போஸ்தலன் சொன்ன அருமையான பிரசங்கத்தில் உதாரணமாக எடுத்துரைத்திருக்கிறது. இயேசுநாதர் சொன்ன அநேக வாக்கியங்கள் சுவிசேஷங்களில் கண்டிராமற்போனாலும், அவருடைய சீஷர்கள் எழுதிவைத்த அப்போஸ்தலர் நடபடிகளிலும் நிருபங்களிலும் கண்டிருக்குமென்று இந்த வாக்கியத்தினால் விளங்குகிறது. தன்னைத்தான் வெறுமையாக்கி, மனுஷஜந்மம் எடுத்து மன்னுயிர்க்காகத் தன்னுயிர்தந்த புண்ணியநாதரே இந்த வாக்கியத்தைச் சொல்லத்தகும். இது அவருடைய உபதேசம் நடக்கை ஆகிய இரண்டையும் விளங்கப் பண்ணுகிறது. பூர்வத்திலிருந்த எழு கிரேக்கஞானிகள் சொன்ன எழு வாக்கியங்களைக் கிரேக்கர் பொன்னைப்போல் போற்றி வழங்கினார்கள். அவையாவன: (1) "உன்னை நீ அறி. (2) "சீராய் வாழ்வதே சிரஞ்சீவியாய் வாழ்வது" (3) "சமயமறிந்து செய்." (4) "பிணிபல (வாழ்நாள் சில.)" (5) "முயற்சி விதியை வெல்லும்." (6) "பிரமாணமே பிரதானம்." (7) "நிர்வாகமறிந்து பிரதிக்கினைசெய்" என்பவைகளே.* நம்முடைய ஔவையும் "ஈதலறம்" என்று

---

* 1. *γνωθι σεαυτον*. Know thyself. *Solon.*
2. *τελος οραν μακρου βιου*, To live well is to live long. *Chilo.*
3. *καιρον γνωθι*. Know the occasion. *Pittacus.*
4. *οι πλειονες κακοι*. Evils are many. *Bias.*
5. *μελετη το παν*. Nothing is impossible to industry. *Periander.*
6. *αριστον μετρον*. Rule is greatest. *Cleobulus.*
7. *εγγυα παρεστι δ' ατη*. Promise according to means. *Thales.*

சுருங்கச்சொல்லி விளங்கவைத்திருக்கிறான். அவனுடைய சகோதரராகிய திருவள்ளுவரும் இரட்சகர் சொன்ன வாக்குக்கு இசைவாக,

"நல்லாறெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்று குறளில் சொல்லியிருக்கிறார்.

தானம் என்பது இரக்கம், தத்தம், ஈகை, கொடை, உதவி, உபகாரம், கண்ணோட்டம், சகாயம் என்பவைகளைக் குறிக்கும். அன்பும் தர்மமுமே இந்தக் குணங்களுக்குத் தாயுந் தகப்பனுமாம்.*

தானம் பலவிதம், நியாயமாய்ச் சம்பாதித்த பொருளை உற்சாகத்தோடு சற்பாத்திரமான விஷயத்தில் தயாளமாய்க் கொடுத்தல் தலைப்படுதானம் என்னப்படும். கூன் குருடுமுதலான எளியவர்களுக்கு ஜீவிரக்கத்துடன் அன்னவஸ்திரமுதலானவைகளைக் கொடுத்தல் இடைப்படுதானம் என்னப்படும். சுயநயத்தையும் தற்புகழையும் நாடிக்கொடுத்தல் கடைப்படுதானம் என்னப்படும். அன்னதானம், சுவர்ணதானம், வஸ்திரதானம்முதலான தானங்களில் பிராணதானம் முக்கியமானது. "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக்கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." இந்தத் தானம் ஜீவனுக்கு அதிகாரியான பிராணநாயகர் ஒருவரே இயல்பாய்ச் செய்யத்தகும் தானம். "நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."†

* ἐλεημοσύνη. Donation, Mercy, Alms, Liberality, Benevolence, Beneficence, Charity.

† யோ. 15. 12, 13. ரோ. 5. 7, 8.

பசித்தவர்களுக்கு அன்னமும், தாகமுள்ளவர்களுக்குப் பானமும், நிர்வாணிகளுக்கு வஸ்திரமும், வியாதிஸ்தருக்கு அவிழ்தமும், வீடில்லாதவர்களுக்கு வீடும் கொடுத்து, காவலில் அடைப்பட்டவர்களை விடுதலைபண்ணி, ஏழைகளுடைய வழக்கைத்தீர்த்து, பரதேசிகளை உபசரித்து, திக்கற்றவர்களைக் காப்பாற்றி, அறிவீனரைப் படிப்பித்து, கலியாணமில்லாதவர்களுக்குக் கலியாணம் பண்ணுவித்து, அநாத பிரேதங்களை அடக்கம்பண்ணி, வழிப்போக்கருக்குச் சத்திரம் சாவடி கட்டி, தண்ணீர்ப்பந்தல்கள் வைத்து, வைத்தியசாலைகளையும் பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்து, கோவில்களைக் கட்டி தேவாராதனை நடத்தி, பொருள்சகாயம் செய்யக்கூடாத பட்சத்தில் வாக்குசகாயம் செய்து, இவ்விதமாய் சமயத்துக்கும் நிர்வாகத்துக்கும் தக்கதாய் தானதர்மம்பண்ணலாம்.

தானத்தைப்பற்றி வேதக்கட்டளைகள் என்னவென்றால்: "தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்."* "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே."† "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ்செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு,

---

* உபா. 15. 11. † மத். 5. 42.

உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்."* "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்."† "நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்பதே. ‡

தானம்பண்ணும் தயாளருக்கு உண்டாகும் பலன் என்னவென்றால்: "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக்கொடுப்பார்." § "என்னைக் கேட்ட காது என்னைப் பாக்கியவான் என்றது; என்னைக் கண்ட கண் எனக்குச் சாட்சியிட்டது. முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன். கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன். நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாயிருந்தது. நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன். நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து, நான் அறியாத வழக்கை ஆராய்ந்து பார்த்தேன்." || "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." ¶ நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களு

---

* மத். 6. 1—4. † ரோ. 12. 13. ‡ 1 கொ. 16. 2. § நீதி. 19. 17.
|| யோபு. 29. 11—16. ¶ 2 கொ. 9. 6, 7.

மாயிருக்கவும், நித்தியஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங் காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" என்று எழுதியிருக்கிறது.*

தானம்பண்ணாத லோபிகளுக்கு உண்டாகும் தண்டனை என்னவென்றால்: "ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்." "தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்."†

நம்மை ஐஸ்வரியவான்களாக்கும்பொருட்டுத் தலைசாய்க்க இடமில்லாத தரித்திரராய்ப் பிறந்த இரட்சகர்தாமே ஏழைகளுக்கு உதவிசெய்து,‡ பசித்தவர்களுடைய பசியை ஆற்றி, அவர்களுடைய பிணிகளைத் தீர்த்து, இரக்கம் பாராட்டி, தயிரக்கமுள்ளவர்களாயிருக்கத் தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தார். தேவாலயத்திலிருந்த தர்மப்பெட்டியில் இரண்டு காசுபோட்ட ஏழை விதவையின் தர்மசிந்தையைப் புகழ்ந்தார். அவரே வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று சொல்லியிருக்கிறார்.

யூதர்களுக்குள்ளே தங்கள் சம்பாத்தியத்தில் பத்தில் ஒரு பங்காகிய தசமபாகம் கொடுக்கவேண்டுமென்கிற கட்டளையிருந்ததுமல்லாமல், ஏழாம் வருஷத்தில் கடன்பட்டவர்களுடைய கடன் நிவிர்த்தியாகவேண்டுமென்றும், பயிரை அறுக்கும்போது வயலின் ஓரத்தில் இருக்கிறதைத் தீர அறுக்காமலும் சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும் ஏழைகளுக்கு விட்டுவிடவேண்டுமென்றும், ஓய்வுவருஷத்தில் விளைவது ஏழைகளுக்கு உரியதென்றும் ஒரு கட்டுப்பாடு இருந்தது.

பூர்வ கிறிஸ்தசபையாருக்குள்ளிருந்த ஏழைகளுக்குத் தர்மசேகரம்பண்ணி வாரத்துக்கு ஒருவிசைக் காணிக்கை கொடுக்கும் கட்டுப்பாடும் இருந்தது.§

---

* 1 தீமோ. 6. 18, 19. † நீதி. 21. 13; 28. 27. ‡ மத்.13.29.
§ 1கொ. 16. 2.

"வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்." லோபிகள் இதை அறியாமலும் உணராமலும், பணப்பித்து கொண்டு, படாதபாடுபட்டுத் திரைகடலோடித் திரவியம் தேடி, கூசாமல் கைநீட்டி வாங்கி, பொருளைப் போற்றிக் காப்பாற்றிப் பத்திரப்படுத்தி வைப்பார்கள். அவர்கள் சுடு காட்டில் நிற்கும் ஆண்பனைக்கு ஒப்பானவர்கள், தர்மத்தால் வரும் இன்பத்தை அறியாதவர்கள், அதனால் வரும் புகழை உணராதவர்கள். பிறப்பின்படி அவர்கள் மக்களாயினும் சிறப்பின்படி மேன்மக்களல்ல, கீழ்மக்களே.

"சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ள படி"

என்று ஔவை சொல்லியிருக்கிறாள்.

I. கல்விப்பொருள் விஷயத்தில் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

கல்விகற்று அறிவுபெறுவது இன்பமாயினும், கல்வியோதி அறிவைப் பிறப்பிப்பது அதிக இன்பமாம். செல்வப்பொருள் கொடுக்கக் கொடுக்கக் குறையும், கல்விப்பொருள் கொடுக்கக் கொடுக்க அதிகரிக்கும்.

II. செல்வப்பொருள் விஷயத்திலும் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

பொருளைக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக் காப்பாற்றி நல் விஷயத்தில் செலவழியாமலிருப்பதினால் பிரயோஜனம் என்ன? பணம் பணம் என்று அலைந்து தேடி, தானும் அநுபவியாமல் பிறர்க்கும் உதவாமல், வீணாய்ச் சேர்த்துவைப்பதினால் பயன் என்ன? "எட்டிபழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன?" கொடுத்துக்கெட்டார் ஒருவருமில்லை. கொடுத்தவர்களுக்கு எல்லாமுண்டு, கொடாதவர்களுக்கு ஒன்றுமில்லை. பிணியொடு மூப்புவந்து வாரிக்கொண்டு போம்போது

அந்தப் பணம் கூடப்போகுமோ? பிறக்கும்பொழுது கொண்டுவந்ததில்லை, இறக்கும்பொழுது கொண்டுபோவதுமில்லை. "ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்." பணப்பேய் பிடித்தாட்டும்போது எல்லாத் தீமைக்கும் இடமாகும்.

> "எனதெனதென்றிருக்கும் ஏழைபொருளை
> எனதெனதென்றிருப்பன் யானும்—தனதாயில்
> தானும் அதனை வழங்கான் பயன்றுய்வான்
> யானும் அதனை அது"

என்று (நாலடியாரில்) சொல்லியிருக்கிறது.

III. ஞானப்பொருள் விஷயத்திலும் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

நாம் இலவசமாய்ப் பெற்றதை மற்றவர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கவேண்டும். புண்ணியத்தை விதைக்கிறவர்கள் புண்ணியத்தை அறுப்பார்கள். "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்." சகோதரரே! கைம்மாறு நாடாத தானமே தானம். மழையைக் கொடுக்கிற வானத்துக்குப் பூமி என்னத்தைக் கொடுக்கும். வானமும் பூமியும் நாடோறும் நமக்கு உதவிசெய்துகொண்டு வருகிறதே, அதற்கு நாம் என்னத்தைக் கொடுக்கிறோம். அதற்கு என்ன குறைவுண்டு. இறைக்கிற கிணறு சுரக்கும்.

"பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்." "திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி

நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன்கொடுக்கிறார்களே; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.” கடைசிநாளில்: “ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். *

உங்கள் பொருள் யாருடையது. உங்கள் கர்த்தரிடத்தில் நீங்கள் பட்ட கடன் எவ்வளவு? அந்தக் கடனை நீங்கள் இம்மையிலாவது மறுமையிலாவது கொடுத்துத் தீர்க்கக்கூடுமா? தேவாலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டை செய்தபோது தாவீது ராஜா சொன்னதைக் கவனியுங்கள்: “இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்; பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது; நிலைத்திருப்போம் என்கிற நம்பிக்கையில்லை.

---

* ஏசா. 58. 10, 11. லூ. 6. 34, 36. மத். 25. 34—36.

எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு, நாங்கள் சவதரித்திருக்கிற இந்தப் பொருள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது; எல்லாம் உம்முடையது" என்று சொன்னாரே.* உங்கள் பரமபிதா உங்களுக்குச் செய்த நன்மைக்காக நீங்கள் என்னசெய்வீர்கள். அவர் தம்முடைய குமாரனை உங்களுக்குக் கொடுத்திருக்கிறாரே. தம்மையே நமக்குக் கொடுத்துப் பிராணதானம்பண்ணின இரட்சகருக்கு நீங்கள் என்னத்தைக் கொடுக்கக்கூடும்?

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலரிது."

சகோதரரே! நாம் நம்முடையவர்கள் அல்ல. நம்மை விலைக்கிரயமாய்க் கொண்டவரே நம்மை உடையவர். நீங்களே அவருடையவர்களாகும்போது, உங்களுடையது அவருடையது அல்லவா? கிறிஸ்தவர்களே, உதாரத்துவமுள்ளவர்களாயிருங்கள். கர்த்தர் உங்களுக்குச் செய்திருக்கிற நன்மைகளுக்கு நன்றியறிந்தவர்களாயிருந்து, அவர் உங்களுக்கு இரங்கினதுபோல நீங்களும் மற்றவர்களுக்கு இரங்கி, உங்களால் இயன்றமட்டும் தானதர்மஞ்செய்யுங்கள். ஊருக்குள் யாவருக்கும் உதவும் நீர்நிறைந்த ஊருணியைப்போலிருங்கள். கர்த்தர் சொன்ன நல்ல சமாரியுத்தானின் உவமையை நினைத்து, அவன் செய்தபடியே நீங்களும் செய்யுங்கள். (லூ. 10. 30. ம்.)

"வறியார்க் கொன்றீவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து."

இதைப்பற்றி யூதர்களுக்குள் வழங்குகிற ஒரு கதையுண்டு, கேளுங்கள்:

ஒருநாள் ஆபிரகாம் தன் கூடாரத்தின் வாசலில் உட்கார்ந்து வழிப்போக்கர் யாராவது வந்தால் அவர்களை உபசரிக்கும்படி காத்துக்கொண்டிருக்கும்போது, நூறுவயது விர்த்தாப்பிய

---

* 1 நாளா. 29. 14—16.

மான ஒரு கிழவன் கோலே ஊன்றிக்கொண்டு வருத்தத்தோ டே அந்த வழியாய் நடந்துவரக்கண்டு, அவனைத் தயவாய்த் தன் கூடாரத்தில் ஏற்றுக்கொண்டு, அவனுக்குக் காலலம்பி போஜனமிட்டு உபசரித்தான். அவன் சாப்பிடுகிறதற்கு முன் னும்பின்னும் ஆதிகாரணக் கர்த்தாவாகிய தேவனைத் தொழுது கொள்ளாமல் இருந்ததைக் கவனித்து: நீ தேவனுக்கு ஸ்தோத் திரம் செலுத்தாமல் சாப்பிட்டது என்னவென்று கேட்டான். அதற்கு அவன்: நான் அக்கினி நமஸ்காரம்பண்ணுகிறதே ஒழிய, வேறொரு தேவனைப் பூஜிக்கிறதில்லையென்றான். ஆபிரகாம் அதைக் கேட்டவுடனே மதவைராக்கியத்தோடே கோபங்கொண்டு, அந்த ராக்காலத்தில் அவனைத் தன் கூடா ரத்தைவிட்டு வெளியே தள்ளிவிட்டான். அப்பொழுது தேவன் ஆபிரகாமுக்குக் காட்சியாகி: இங்கே வந்திருந்த மனுஷன் எங்கே என்று கேட்டார். அதற்கு ஆபிரகாம்: அவன் உம்மைத் தொழுதுகொள்ளாததினால் அவனைத் துரத்தி விட்டேன் என்றான். அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி: இந்த நூறுவருஷகாலமாய் அவன் எனக்குச் செய் துவருகிற அவமானத்தை நான் பொறுத்துக்கொண்டிருக்கி றேன்; உனக்கு ஒரு தீமையுஞ்செய்யாத அவனை ஒரு ராத்திரி பொறுத்திருக்கக் கூடாமல்போயிற்றா என்றார். ஆபிரகாம் வெட்கப்பட்டு விசனமடைந்து உடனே போய் அந்தக் கிழவனை அழைத்துக்கொண்டுவந்து, அவனை உபசரித்து, நலம்பேசி, அவனுக்கு உபதேசஞ்சொன்னான். அப்படியே நீங்களும் செய்யுங்கள். ஆபிரகாமின் தேவன் உங்களை ஆசீர் வதித்து உங்களுக்கு நூறுமடங்குப் பலன் அளிப்பார்.

# முப்பத்தினான்காம் பிரசங்கம்.

## இரட்சிப்பு.

"அவராலே [இயேசுகிறிஸ்துவினாலே] அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின்கீழெங்கும் மனிதருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." அப். 4. 12.

இந்த வாக்கியத்தில் இரட்சிப்பு என்பது பாவநிவாரணம், புண்ணிய நிலைமை, பரகதி, பேரின்பம், நித்திய ஜீவன், ஆத்தும ஈடேற்றம் என்பவற்றைக் குறிக்கும். இந்த இரட்சிப்பு மன்னுயிர்க்குரிய எல்லா இகபரநன்மைகளிலும் சிறந்த நன்மை. இந்த இரட்சிப்பை அடையத்தான் சத்தியத்தை அறியாத மனுமக்கள் யாத்திரைசெய்து தீர்த்தமாடித் தபசுபண்ணித் தானதர்மம் செய்து படாதபாடுகளையெல்லாம் படுகிறார்கள். இந்த இரட்சிப்பு புண்ணியநாதராகிய இயேசுகிறிஸ்துவின் திருநாமத்தினால்மாத்திரம் கிடைக்கும். இந்த இரட்சிப்பு ஆத்துமாவுக்குப் பலிக்கும்படி தேவநீதி நிறைவேறி தேவ இரக்கம் விளங்கவேண்டும். இந்த இரட்சிப்புக்கு தேவ அன்பினால் விளங்கும் அருளே மூலகாரணம்; கிறிஸ்துவின் புண்ணியம் இதற்கு நிமித்தகாரணம்; பரிசுத்தஆவியின் ஏவுதலினால் உண்டாகும் விசுவாசமும் மறுஜன்மமும் பரிசுத்தமும் இதற்குத் துணைக்காரணங்கள். இந்த இரட்சணிய நிலைமைக்குட்பட ஞானஸ்நானமும் அதில் நிலைக்க நற்கருணைமுதலிய ஞானநன்மைகளும் ஏதுக்கள்.

"அவராலே [இயேசுகிறிஸ்துவினாலே] அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனிதருக்குள்ளே அவருடைய நாமமே

யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை:" இந்த வாக்கியம் இயேசுநாதரைக் கொலைசெய்த பாதகராகிய யூதர்களுக்கு முன்பாக அப்போஸ்தலனாகிய பேதுருவினால் சொல்லப்பட்டது. இந்த வாக்கியம் சொல்லப்பட்ட முகாந்தரத்தை அதன் சம்பந்தத்தினால் சற்றே கவனித்துப் பார்ப்போம். எருசலேம் தேவாலயவாசலில் பிச்சைகேட்டுக்கொண்டிருந்த ஒரு பிறவிச்சப்பாணி பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சை கேட்டான். பேதுரு அவனை நோக்கி: வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நடவென்று சொல்லி, அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவன் நடந்து ஆலயத்துக்குள் பிரவேசித்து தேவனைத் தொழுதுகொண்டான். இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, இந்தச் சங்கதியை யூதத்தலைவர்களுக்கு அறிவித்தார்கள். அவர்கள் கூட்டங்கூடி, பேதுருவையும் யோவானையும் அழைப்பித்து: நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள். அப்பொழுது பரிசுத்தஆவியின் அருளினால் நிறைந்திருந்த பேதுரு அவர்களை நோக்கி: "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்"* என்று சொன்னார். அதற்கு யூதத்தலைவர்கள் எதிர்பேசக்கூடாமல், "இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டு அவர்களை அனுப்பிவிட்டார்கள்.

* அப். 4. 10—12.

எந்த நாமத்தினாலே இந்த அற்புதத்தைச் செய்தீர்களென்று யூதத்தலைவர்கள் அப்போஸ்தலரைக் கேட்டதற்கும், அவர்கள் இயேசுவின் நாமத்தினாலே இதைச் செய்தோம்; பாவிகள் இரட்சிக்கப்படும்படி அந்த நாமமே ஒழிய வேறொரு நாமமும் அருளப்படவில்லையென்று சொன்னதற்கும் முகாந்தர மென்ன? மோசே எழுதின உபாகமம், 13. அதிகாரம். 1–3ல் உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும் சொப்பனக்கார னாகிலும் எழும்பி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லை யோவென்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" என்று சொல்லியிருக்கிறபடியினால் அப்போஸ்தலர்கள் இந்த அற்புதத்தை யூதர்களுடைய குல தெய்வமாகிய யேகோவாவின் நாமத்தினாலே செய்யாமல், இயேசுவின் நாமத்தினாலே செய்தால், அது வேதப்பிரமாணத் துக்கு விரோதம் என்றும், அதை நம்பினால் தங்கள் தேவனுக் குத் துரோகமென்றும் பாவித்து, இயேசுவின் நாமத்தினாலே யா, யேகோவாவின் நாமத்தினாலேயா, யாருடைய நாமத்தினா லே இந்த அற்புதத்தைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஒன்றுக்கும் அஞ்சாமல் தைரியமாய் இயே சுவின் நாமத்தினாலேயே செய்தோம் என்று சொல்லி, இயேசு வே யேகோவா என்னும் சத்தியத்தை நாட்டினார்கள். இதைக் கேட்டவர்கள் தங்களுக்குள்ளே கோபித்து முறுமுறுத்து, அவர்கள் யேகோவாவின் நாமத்தினால் இந்த அற்புதத்தைச் செய்யாதபடியால், இயேசு என்கிற நாமத்தைக்குறித்துப் பே

சக்கூடாது என்று பயமுறுத்திக் கட்டளையிட்டு அவர்களை அனுப்பிவிட்டார்கள்.

சகோதரரே, இதனால் என்ன விளங்குகிறது? மனிதர் இரட்சிக்கப்படும்படி இயேசுவின் நாமமேயல்லாமல் வேறொரு நாமம் இல்லையென்றும், பாவிகள் ஈடேற அவருடைய மார்க்கமேயல்லாமல் வேறொரு மார்க்கமும் இல்லையென்றும் விளங்குகிறது. இந்த உபதேசத்தை உலகத்தார் ஏற்றுக்கொள்வது அரிது. பொன் ஒன்று பணிபல என்றும், பசுவானது வெள்ளையானாலும் கறுப்பானாலும் பால் ஒன்றே, அது வெள்ளையாயிருக்குமென்றும், ஒரு ஊருக்குப்போக வழி ஒன்று அல்ல பல வழிகள் உண்டென்றும், சந்திரசூரியர் ஒவ்வொன்றேயாகிலும் ஜலமுள்ள பத்துப்பாத்திரங்களிலும் பலவாய்ப் பிரதிபிம்பிக்கும் என்றும், தேவன் ஒருவரேயாயினும் அவருக்கு நாமங்களும் ஆராதனைகளும் பலவென்றும் சொல்லுவார்கள். இந்த விஷயத்தில் இவ்வித திருஷ்டாந்தங்கள் ஒவ்வாது. பணிபலவானாலும் பணியெல்லாம் பொன்னாகுமா? பொன் இல்லாதவர்கள் பித்தளையினால் ஆபரணங்களைப் பண்ணிப்போட்டுக்கொள்ளலாமே? எல்லாப் பசுவின்பாலும் வெள்ளையானாலும் கழுதைப்பாலும் எருக்கம்பாலும் ஒன்றாகுமா? ஊருக்குப் பல வழிகளிருந்தாலும் வழிகளெல்லாம் ஊரிருக்கும் திசையே நோக்கியிருக்கும்; மேற்கே போனால் தெற்கே இருக்கிற ஊர்போய்ச் சேரக்கூடுமோ? சூரியசந்திர பிரதிபிம்பங்கள் பலவாயினும் ஒவ்வொரு பிம்பமும் சூரியசந்திரராகுமோ? சாயல் பொருளாகுமா? தேவன் ஒருவர், அவருக்கு நாமதேயங்கள் பலவாயினும், அந்நாமங்கள் அவருடைய தத்துவத்துக்கும் லட்சணங்களுக்கும் ஏற்றிருக்கவேண்டியதல்லவா? சங்கிலிக்கறுப்பனும் பிடாரியும் ஆதிகாரணக் கடவுளாகுமோ? கழுதைகட்டி ஓமஞ்செய்தால் கழுதை அன்னமாகுமோ?

மனுஷர்களுக்குள் நிறமும் சாயலும் பாஷையும் நடையும் வெவ்வேறாயிருக்கிறதுபோலவும், மதமும் மார்க்கமும் கொள்

கையும் வழக்கமும் வெவ்வேருயிருக்கிறதுபோலவும் வேதங்களும் பலவிதமாயிருக்கலாம் என்று சொல்வாருமுண்டு. மனுஷஜாதி ஒன்றே, மனுஷர் எல்லாருக்கும் உற்பத்தித் தோற்றம் ஒன்றே, அவர்களுக்குப் பிறப்பும் இறப்பும் குணுகுணங்களும் ஒன்றே; ஒரே இரத்தத்தினுலே எல்லாரும் உண்டாக்கப்பட்டிருக்கிருர்கள்; எல்லாரும் நல்வினை தீவினை இன்னதென்றும், பாவம் புண்ணியம் இன்னதென்றும் அறியத்தக்க அறிவுடையவர்களாயிருக்கிருர்கள்; எல்லாரையும் படைப்பித்த கடவுள் ஒருவரே, எல்லாரும் அவர் சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிருர்கள். எல்லாருக்கும் பிதா அவர் ஒருவரே, அவருடைய திருவுளம் ஒன்றே. ஆகையால் விகற்பமான கட்டளைகளும் நடக்கைகளும் அவரால் பிறக்குமா? புத்திசாலிகள் நியாயமும் சத்தியமும் இன்னதென்று நிதானித்து அறிந்துகொள்ளவேண்டியதாயிருக்கிறதே.

வேறு சிலர் தேவன் நரஜீவதயாபரராகையால் மனுஷர் யாவருக்கும் அவரவர்களுக்கேற்ற சமயங்களை நியமித்திருக்கிருர்; வெள்ளைக்காரருக்குக் கிறிஸ்துமார்க்கம் ஏற்றது, இந்துக்களுக்குப் பூர்வமுதல் தொன்றுதொட்டு வழங்கிவருகிற இந்துமார்க்கமே ஏற்றது; ஏகோவா அல்லது இயேசு அவர்களுக்குத் தெய்வமானுல், சிவன், விஷ்ணு, காளி, பிடாரி இந்துக்களுக்குத் தெய்வம் என்று சொல்லுவார்கள். "கடவுளோஒருவனுண்டே வேதமொன்றே, காரணசற்குரு தீட்சை தானுமொன்றே."

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

என்று ஞானிகள் சொல்லியிருக்கிருர்கள்.

மனிதர் தாங்கள் செய்த பாவத்தை உணர்ந்து மனஸ்தாபத்துடன் குணப்பட்டு சீராய் நடந்துகொள்வார்களானுல் இரட்சிக்கப்படக்கூடாதா என்று சிலர் கேட்பார்கள். பாவத்தை உணர்வதும் மனஸ்தாபப்பட்டு குணப்படுவதும் யாவருக்குமுரிய கடமையே. கடமையைச்செய்து கடனைத்தீர்ப்பது

புண்ணியத்துக்கேதுவாகும்? முழுமனதோடே தேவகட்டளைகளைக் கைக்கொண்டு பூரணமாய் அவரில் அன்புகூருவது ஒருவராலுங்கூடாது. பாவத்தையும் அபாத்திரத்தையும் உணர்ந்து பக்தியாகிய விசுவாசத்தோடு புண்ணியநாதனைப் பற்றிக்கொள்வதே பாவிகளுக்கு இரட்சணியவழி. "ஆண்டபொருளை யறியாதான் செய்தர்மம், மாண்டமரத்துக்கு அணைத்த மண்."

இந்த உபதேசத்தை விளக்கும்படி இதைப்பற்றி ஒரு திருஷ்டாந்தத்தைச் சொல்லக்கேளுங்கள்: சில ஜனங்கள் ஒரு கப்பலில் ஏறி, தூரதேசத்திற்கு யாத்திரை செய்கையில், அந்தக் கப்பல் கரைதட்டி ஜனங்கள் எல்லாரும் ஒரு பாழுந் தீவாந்தரத்தில் இறங்கிப் பல திக்குகளாகச் சிதறி, உண்பதற்கு ஏற்ற ஆகாரம் இல்லாமலும், அவர்களுக்குக் கண்டிருக்கிற வியாதிகளுக்குத் தகுந்த அவிழ்தம் இல்லாமலும், மரணமே கதியென்று வருத்தப்பட்டு இருக்கும்போது, ஒரு கப்பல் அந்தத் தீவில் கரைசேர்ந்து, கப்பல்காரன் தீவிலிருக்கிற ஜனங்களை நோக்கி: கப்பலில் போதுமான ஆகாரமும் அவிழ்தமும் தகுந்த ஒரு வைத்தியருமுண்டு, வேண்டியவர்கள் கப்பலில் வந்து ஆகாரமும் அவிழ்தமும் பெற்றுக்கொண்டால் அவர்கள் பசிநீங்கிப் பிணிதீருவதும் அல்லாமல், பசியும் பிணியும் துன்பமும் மரணமுமில்லாத தேசத்துக்கு அந்தக் கப்பல் அவர்களைக் கொண்டுபோகும் என்று சொன்னால், அந்தத் தீவிலிருக்கிறவர்கள் ஒருவருக்கொருவர் விரோதப்பட்டுப் பிரிந்திருந்தபடியால், சிலர் அந்தக் கப்பலில் ஏறி அவர்களுக்கு வேண்டியதைப் பெற்றுக்கொண்டதைக் கண்ட மற்றவர்கள்: அவர்கள் வந்தாலும் வரட்டும் நாங்கள் வரமாட்டோம், அவர்கள் ஏறின கப்பலில் நாங்கள் ஏறமாட்டோம். ஒரே கப்பல்தானா உண்டு, பல திக்குகளில் இருக்கிறவர்களுக்குப் பல கப்பல்கள் வேண்டியிருக்கிறது; எங்களுக்கு வேறே கப்பல் வேண்டும், எங்களுக்கு வேறேவிதமான ஆகாரமும் அவிழ்தமும் வைத்தியரும் வேண்டும்; நாங்கள் இங்கே செத்தாலும் சாவோம் என்று வீண் வைராக்கியங்கொண்டு விபரீத

மாய்ப் பேசுவார்களானால், அவர்கள் புத்தியில்லாத நன்றி கெட்ட ஆத்தும துரோகிகள் அல்லவா? உலகத்திலுள்ள மனுஷர்கள் கிறிஸ்துமார்க்கத்தைக்குறித்து கொண்டிருக்கிற எண்ணம் இந்தத் திஷ்டாந்தத்துக்கு ஒத்திருக்கிறது. ஆதாமின் மக்களாகிய மனுஷர்கள் யாவரும் இந்தப் பூமியாகிய தீவாந்தரத்தில் கப்பல் சேதமாகி ஒதுக்கப்பட்டவர்கள்போலிருந்து, பசியினாலும் பிணியினாலும் வாதிக்கப்படுகிறார்கள். சுவிசேஷமாகிய கப்பல் பரத்திலிருந்து புவிக்குவந்து மனுஷர் யாவருக்கும் போதுமான ஜீவ ஆகாரத்தையும் பரம அவிழ்தத்தையும் உத்தம வைத்தியனையும் உடையதாயிருந்து, யாவரும் வந்து சுகம்பெற்றுக் கரையேறக் கட்டளையும் பிறந்திருக்கிறது. சிலர்மாத்திரம் கப்பலில் வந்து அதற்குரிய நன்மைகளை அநுபவித்துப் பரமயாத்திரை செய்கிறார்கள். மற்றவர்கள் பிடிவாதமாய் நாங்கள் செத்தாலும் சாவோம் வரமாட்டோம், எங்களுக்கு வேறே கப்பல் உண்டு, வேறே ஆகாரம் உண்டு என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வது நியாயமா, தகுதியா? இப்படிச் சொல்லுகிறவர்கள் கெட்டழிந்து போனால் அது யாருடைய குற்றம்? நோவாவின் காலத்தில் பேழைக்குட்பட்டவர்கள்மாத்திரம் இரட்சிக்கப்பட்டார்கள் அல்லவா?* "மனுஷர் இரட்சிக்கப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமமாத்திரமே பரிசுத்த வேதவாக்கியங்களில் காட்டியிருக்கிறபடியால், எந்த சாஸ்திரத்தையாவது, எந்தச் சமயத்தையாவது பற்றிக்கொண்டிருக்கிறவன், அந்தச் சமயசாஸ்திரத்தின்படியும் இயற்கை அறிவின்படியும் கிரமமாய் நடப்பானுகில், அதினால் இரட்சிக்கப்படுவான் என்று சொல்லத் துணிகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று எண்ணப்பட வேண்டும்" என்று இங்கிலாந்து திருச்சபையின் வேதசித்தாந்தப் பிரமாணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

சகோதரரே! இயேசுவின் நாமத்தினால்மாத்திரம் இரட்சிப்பு உண்டு; அதாவது அவருக்குள்ளும் அவராலேயுமே இரட்

---

* பதினெட்டாம் பிரமாணம்.

சிப்பு உண்டு. இதைப்பற்றி வேதம் சொல்லுகிறதைக் கேளுங்கள்: "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று தேவதூதன் சொன்னான்." "அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே." "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான் என்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்." "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இரட்சகர் தாமே சொல்லியிருக்கிறார்.* "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.† இரட்சிக்கப்படும்படி என்னசெய்யவேண்டும் என்று ஜனங்கள் அப்போஸ்தலரைக் கேட்டபோது, தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்துஇயேசு அவரே என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்து தேவனாயிருக்கிறபடியால் நம்மை இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். அவர் மனுஷ அவதாரஞ்செய்து சற்குருவாய் வெளிப்பட்டிருக்கிறபடியால் அவர் பிராணத்தியாகஞ்செய்து நம்மை இரட்சிக்கக்கூடியவராயிருக்கிறார். "நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களைமாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்." "தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன்

* அப். 2. 37. † மத். 1. 21. எரே. 23. 6. அப். 10. 43. 1 தீமோ. 2. 5, 6.

அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்று யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.* "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது."

சகல சம்பூரணமும் கிறிஸ்துவுக்குள் அடக்கம். "ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும்" என்னும் வேதத்தின் மூலவாக்கியம் கிறிஸ்துவில் நிறைவேறிற்று. அவருக்குள் சகல ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவரே சமாதானப் பிரபு, மேசியா, மீட்பர், ஜகத்குரு. அவர் பிறந்தபோது தேவதூதர்கள் உன்னதத்தில் பாடினார்கள்; நட்சத்திரம் அவர் பிறந்த இடத்தைச் சாஸ்திரிகளுக்குக் காண்பித்தது; அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, ஆவியானவர் அவர்மேல் இறங்கினார். அசரீரி வாக்குப் பிறந்தது, சாட்சி விளங்கினது. உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி அவரே. சிமியோன் தன் கையில் ஏந்தின இரட்சண்ணியம் அவரே. மலையின்மேல் மறுரூபமாகிப் பேதுரு யாக்கோபு யோவான் என்பவர்களுக்குக் காட்சி அருளினவர் அவரே. உலகத்துக்கு ஒளியும் ஜீவனும் அவரே.

"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்று எழுதியிருக்கிறது." "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படும்படிக்கு நான் என்னசெய்யவேண்டும் என்று பவுல் அப்போஸ்தலனை ஒரு காவற்காரன் கேட்டபோது, அவர், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் ரட்சிக்கப்படுவீர்கள்" என்றார்.†

வேதவாக்கியத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறபடியினால் புறமதஸ்தருடைய கதியென்ன? அவர்கள் இரட்சிக்கப்பட

* 1 யோ. 5. 11, 12. 1 கொ. 3. 11. † யோ. 3. 36. அப். 16. 30, 31.

மாட்டார்களா என்று சிலர் கேட்பார்கள். "தேவனிடத்தில் பட்சபாதமில்லை. எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள்; எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட் பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள். நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்குமுன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள். அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியுங்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்." "எந்த ஜனத்திலானாலும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்." "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே." "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது.* இதனால் வேதத்தைக்கேட்டு அறியாத புறமதஸ்தர் தங்கள் மனச்சாட்சிக்கு ஏற்றபடி நடந்து தங்கள் பாவத்தையும் பல

* ரோ. 2. 11—16. அப். 10. 35, 17. 26, 27. யோ. 1. 9.

வீனத்தையும் உணர்ந்து புண்ணியநாதராகிய குரு ஒருவர் வேண்டுமென்று நாடி, தேவவிஷயத்தில் பக்தியும் மனுஷவிஷயத்தில் அன்புமுடையவர்களாயிருக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்; என்றாலும் தங்கள் சுயபுண்ணியத்தினாலல்ல, சகலருக்கும் ஜகத்குருவாகிய இயேசுநாதருடைய புண்ணியத்தினாலேயே இரட்சிக்கப்படுவார்கள் என்று விளங்குகிறது.

“நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால்; பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்.” “முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும், தேவன்தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்.”*

“எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.”

இயேசுகிறிஸ்து இரட்சிப்பின் வழியையும் வகையையும் நமக்குத் தெரிவித்து, தாம் தெரிவித்த அந்த இரட்சிப்பைத் தம்முடைய உத்தரவாத புண்ணியத்தினால் நமக்காகச் சம்பாதித்து, தாம் சம்பாதித்த அந்த ரட்சிப்பை நமக்குப் பலிக்கும்படி செய்கிறார்.

கிறிஸ்துவினால் அருளப்பட்ட இரட்சிப்பு எல்லாருக்கும் பொது, சகலருக்கும் அடுத்தது. இப்படியிருக்கிறபடியினால், “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

* 1பே. 4. 18. எபி. 2. 3, 4.

நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று இரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார்.*

சகோதரரே! உங்கள் இரட்சகரை அண்டிக்கொள்ளுங்கள், அவர் செய்த நன்மைக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள்; அவரில் அன்புகூருங்கள்; அவருடைய மாதிரியைப் பின்பற்றி, நீங்கள் அவருடைய சீஷர்கள் என்று விளங்கும்படி நடந்துகொள்ளுங்கள். தாமரைப்புஷ்பம் சூரியனைக் கண்டால் மலருவதுபோலவும், சூரியகாந்திப்புஷ்பம் சூரியன் பக்கமாய்ச் சாய்வதுபோலவும், காந்தம்பட்ட ஊசி வடக்கை நோக்குவதுபோலவும், உங்களில் ஒவ்வொருவரும் இரட்சகரைநோக்கி, அவரை உங்கள் இருதயகமலத்தில் ஏற்றுக்கொண்டு, பூர்வத்தில் சிமியோன் சொன்னதுபோல என் கண்கள் உம்முடைய இரட்சணியத்தைக் கண்டது என்று சொல்லத் தக்க பாக்கியமுடையவர்களாகுங்கள். ஆண்டவர் கிருபை செய்வாராக.

---

* மத். 28. 19, 20.

# முப்பத்தைந்தாம் பிரசங்கம்.

## ஞானவைத்தியம்.

*"பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை." மத். 9. 12.*

பாவிகளை இரட்சிக்கவந்த ஆத்துமவைத்தியராகிய இயேசுநாதரே இந்த வசனத்தைத் திருவுளம்பற்றியிருக்கிறார்.

மனுமக்கள் யாவரும் கர்மவியாதியால் வேதனைப்படுகிறார்கள், இதற்கு ஆதி வியாதியென்று பேர். இதனால் மன்னுயிர் யாவருக்கும் துன்பமும் மரணமுமுண்டு. இது யாவரும் உணர்ந்தறியும் காரியம். மனோவாக்குக்காயம் யாவும் இந்த வியாதிக்குட்பட்டிருக்கிறது.

"எல்லாப் படியாலும் எண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை"

என்று ஔவையும் சொல்லியிருக்கிறாள்.

"இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்படவேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர்களே; தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாயிருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும் நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது." என்று வேதமும் சொல்லுகிறது.* பாதகத்தினால் வந்த இந்தக் கொடிய வியாதி மனம் புத்தி சித்தம் யாவையும் பற்றியிருக்கிறது.

---

* ஏசா. 1—5, 6.

"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?"*

பெருமையாவதென்ன? மனப்பிளவையல்லவா?
காமமாவதென்ன? மனக்காச்சலல்லவா?
இச்சையாவதென்ன? மனமகோதரமல்லவா?
மாயமாவதென்ன? மனச்சொரியல்லவா?
பகையாவதென்ன? மனக்காசமல்லவா?
அவிசுவாசமாவதென்ன? மனமேகமல்லவா?
தூஷணமாவதென்ன? மனக்குஷ்டமல்லவா?

இந்த ஆத்துமவியாதி தீராதா? வைத்தியம் இல்லையா? வாகடம் இல்லையா? ஔஷதம் இல்லையா? உண்டு.

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—யுடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு."

"கிலேயாத்திலே பிசின் தைலமில்லையோ? அங்கே இரண வைத்தியனும் இல்லையோ? பின்னை என் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?" "அவர்கள்: உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி; உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." "இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்" என்று திருவுளம்பற்றியிருக்கிறார்.†

இந்த வைத்தியர் யார்? அகஸ்தியர், தன்மந்திரி, திருமூலர், தேரையர் முதலானவர்களா? அல்ல; அவர்களால் ஆத்தும வியாதியைத் தீர்க்கமுடியாது. யோபு என்பவர் சொல்லுகிறபடி, "இவர்கள் எல்லாரும் காரியமில்லாத வைத்தியர்." முப்பத்துமுக்கோடி தேவர்களும் பிணிதீர்க்க வல்லவர்களா?

* எரே. 17. 9. † எரே. 8. 22; 30. 17; 33. 6.

அல்ல. வைத்தீஸ்வரன் கோவிலிலுள்ள விக்கிரகத்தை நோக்கி ஒரு வித்துவான் பாடினதாவது:

> "வாதக்காலாந்தமக்கு மைத்துனற்கு நீரிழிவாம்,
> போதப் பெருவயிறும் புத்திரற்கு—மாதரையில்
> வந்தவினைதீர்க்க மருந்தறியான் வேளூரான்
> எந்தவினை தீர்ப்பான் இவன்."*

திருவள்ளுவர் குறளில் மருந்தைப்பற்றி ஒரு அதிகாரமுண்டு. அதில் ஒரு பாட்டையெடுத்து ஞானவைத்தியத்தைத் திருஷ்டாந்தப்படுத்துவோம்:

> "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
> றப்பானாற் கூற்றே மருந்து."

அதாவது: பிணியாளி, வைத்தியன், மருந்து, மருந்தைப் பிரயோகிக்கிறவன் ஆகிய இந்நான்கும் தனித்தனி நான்கு வகையையுடைத்தாயிருப்பதே மருந்தென்னப்படும்.

I. உற்றவன் = பிணியாளி.

பிணியாளியிடத்தில் நாலு காரியம் இருக்கவேண்டும்.

1. பொருளுடைமை.

பணம்பறிக்கும் வைத்தியர் நாடும் பொன்னும் வெள்ளியுமல்ல; பொன்னிலும் உயர்ந்த பொருளாகிய ஆத்துமப்பொருளுடைமையே ஞானவைத்தியத்திற்கு வேண்டியது. உலகத்தில் மன்னுயிரைப்பார்க்கிலும் சிறந்ததொன்றுமில்லை, அதுவே அழியாத நித்திய பொருளுடைமை. பரமவைத்தியர் நம்முடையதையல்ல நம்மையே விரும்புகிறார். ஆத்துமப் பிரதிஷ்டையே அவருக்குப் பிரீதி.

சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: "தோலுக்கு [உடலுக்கு] பதிலாகத் தோலையும் [உடலையும்], தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மனுஷன் கொடுத்துவிடுவான்" என்று சொன்னான். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை

---

* தில்லையில் காளியோடு வாதிட்டு நடனஞ்செய்த பாதமாதலால் வாதக்கால் என்றும், சிவனுடைய மைத்துனனாகிய திருமாலின் பாதத்தில் கங்கை உற்பத்தியாகையால் மைத்துனற்கு நீரிழிவென்றும், கணபதி பூதகணை சம்பந்தமாகிய பருத்ததொந்தியையுடைத்தாயிருத்தலால் போதப்பெருவயிறென்றுங் கூறியதாகவும் சிலர் சொல்லுகிறார்கள்.

நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று இரட்சகர் சொல்லியிருக்கிறார்.*

2. நோய் நிலைசொல்லுதல்.

பிணியாளி உள்ளதை அறிவித்து வெளிப்படுத்தவேண்டும். ஜந்மபாவம் கர்மபாவம் இரண்டையும், மனோவாக்குக்காயத்தால் செய்த பாவம் யாவையும், பரமவைத்தியருக்கு மறைக்காமல் சொல்லவேண்டும்.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான்." "நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது."†

3. மருத்துவன் சொல்வழி நிற்றல்.

என் கட்டளையைக் கைக்கொள் என்பதே பரமகுருவின் உபதேசம். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாங் கூடும் என்று அவர் சொல்லியிருக்கிறார். (மாற். 9. 23.) மருந்து பலிக்கப் பத்தியம் பிடிக்கவேண்டும்.

[குஷ்டரோகியாகிய நாகமான் குணப்பட்டதை ராஜாக்களின் இரண்டாம் புஸ்தகம் 5-ம் அதிகாரத்திலும், முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்தவன் குணப்பட்டதை யோவான் சுவிசேஷம் 5-ம் அதிகாரத்திலும் காண்க.]

4. மருந்துத் துன்பம் பொறுத்தல்.

"யதார்த்தம் உலக விரோதம்" ஆகையால் ஆத்தும வைத்தியனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு நிந்தையும் துன்பமும் உண்டாகும். மருந்து கசப்பாயினும், அதினால் உண்டாகும் சுகம் மதுரமாயிருக்கும். துன்பம் பொறுக்காமல் இன்பம் பிறக்காது. "நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும்,

---

* பேது. 2. 4. லூக். 16. 26. † நீதி. 28. 13. 1 யோ. 1. 8.

ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும்" என்றான்.* "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணுதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினை உண்டாக்கவந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்."†

II. தீர்ப்பான் = வைத்தியன்.

வைத்தியனிடத்தில் நாலு காரியம் இருக்கவேண்டும்.

1. நோய்பார்த்தற்கஞ்சாமை.

தைரியமாகிய துணிவு வைத்தியனுக்குரிய சிறந்த லட்சணம். "நானே உன்னைச் சொஸ்தப்படுத்துங் கர்த்தர்" என்று தேவன் சொல்லியிருக்கிறார். (யாத். 15. 26.) அவரே புவியில் அவதரித்து மனுவேஷங்கொள்ள அன்புபுரிந்து, உலகத்தாருடைய பகைக்கும் விரோதத்துக்கும் அஞ்சாமல், மன்னுயிர்க்காகத் தன்னுயிர் தந்து வினைதீர்க்கும் நாதனுயிருக்கிறார்.

"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான்: இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்." "ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம்பண்ணுகிறவன் இல்லை

---

* வெளி. 10. 9, 10. † மத். 10. 34—39.

யென்று ஆச்சரியப்பட்டார்; ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது." "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும் [அளிக்கவும்], நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" என்று எழுதியிருக்கிறது.*

2. கல்வியும் நுண்ணறிவுமுடைமை.

வைத்திய வாகடங்களில் தேர்ந்து, பல பரீட்சைகளை அறிந்து,

> நோய் நாடி, நோய் முதனாடி, யதுதணிக்கும்
> வாய் நாடி, வாய்ப்பச் செய்தல்,

வைத்தியனுடைய திறமையை விளக்குவிக்கும். நமது ஆத்துமவைத்தியர் கைநாடி பரீட்சையில்மாத்திரமல்ல, மனநாடி பரீட்சையிலும் தேர்ந்து, மனிதர் உள்ளத்தை ஆராய்ந்து அவர்களுடைய மனதின் தோற்றங்களையும் அறிந்திருக்கிறார். "மனுஷர் உள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக்குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சிகொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை." "இவரைப்போல பேசினவர் ஒருவருமில்லை."†

3. பலகாலும் பிணிதீர்த்துவருதல்.

நமது ஆத்துமவைத்தியர் ஆதிபூர்வமாய் எப்பொழுதும் ஞானவைத்தியஞ்செய்துவருகிறார். இது அவருக்கு நூதனமான தொழிலல்ல. பிணிதீர்ந்த யாவரும் அவரால் தீர்க்கப்பட்டார்கள். அவரையல்லாமல் வேறே ஆத்துமவைத்தியன் இல்லை. அவரைப்போல அநுபவசாலி ஒருவருமில்லை. மன்னுயிர்க்குரிய பலவீனங்களையும் துன்பங்களையும் வியாகுலங்களையும், மரணவேதனைகளையும் அறிந்தவர் அவரே.

---

* சங். 40. 6—8. லூ. 4. 18, 19. † யோ. 2. 25; 7. 46.

"அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப் பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை ரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதா பத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார்." "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங் களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக் கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்." "நம்மு டைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதானஆசா ரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெற வும், ஏற்றசமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடை யவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கட வோம்."*

4. மனம் மொழி மெய்கள் பரிசுத்தமாகுதல்.

"பரிசுத்தரும் தீமைசெய்யாதவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவரே" (எபி. 7. 26.) நம்மு டைய ஆத்துமவைத்தியர். இவரிடத்தில் பரிசுத்தமில்லாவி டில் இவர் நம்மைக் குணப்படுத்தக்கூடாது.

இரக்கமும் அன்பும் இவரிடத்தில் பூரணமாய் விளங்கு கின்றது. ஒரு வார்த்தையினால் இவர் பிணியாளிகளைக் குண மாக்கினதுண்டு.

III. மருந்து = பிணிதீர்க்கும் ஔஷதம்.

அது நாலு குணங்களை உடைத்தாயிருக்கவேண்டும்.

1. பல வியாதிக்கும் ஏற்றல்.

சரீர பிணிபல, மனநோயும் பல, — இவற்றிற்கெல்லாம் ஏற்ற மருந்துண்டு. "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோ. 1. 7.)

---

*ஏசா. 63. 9; 53. 4. எபி. 4. 15, 16.

"அக்காளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப் பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்."*

2. சுவை வீரியம் விளைவாற்றல்களால் மேம்படுதல்.

ஞானவைத்தியருடைய மருந்தை உட்கொண்டவர்களுக்கு அதின் சுவையும் வீரியமும் தெரியும். உலகத்தார் அதை அறியார்கள். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமா யிருந்தது."†

3. எளிதில் சம்பாதிக்கப்படுதல்.

ஆகாசத்தாமரை, புலிப்பால், முயல்கொம்பு இவைமுத லான கிடையாத பதார்த்தங்களல்ல; கருகலான வாகடநூல்க ளில் அடங்கிய இரகசியங்களுமல்ல. ஞான அவிழ்தம் அரி தான பொருளாயினும், நமக்கு எளிதாய்க் கிடைக்கிறதாயிருக் கிறது. அது வாஞ்சித்துக் கேட்பவர்களுக்குக் கிடைக்கும். அது பணமும் கிரயமுமின்றிக் கொடுக்கப்படும்.

4. பகுதியோடு பொருந்தல்.

எல்லாம் சாஸ்திரப்படியும் விதிப்படியும் திருவுளத்தினி ன்று தோன்றி, மகாத்துமாக்கள் வாக்கில் விளங்கி, வேதநூ லில் அமைந்து, வித்துவான்கள் பிரயோகித்து, மனுமக்கள் பரீட்சித்து, தொன்றுதொட்டு வழங்கிவந்த அவிழ்தமே பா வப்பிணிதீர்க்கும் அவிழ்தமாம். "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள்மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய்த் திருவுளம்பற்றினார். இவ ரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்."‡

IV. உழைச்செல்வான் = அம்மருந்தைப் பிழைபடாமல் செய்பவன்.

---

* சகரி. 13. 1. † எரே. 15. 16. ‡ எபி. 1. 1, 2.

இப்படிச் செய்கிறவர்கள் யார்? பரிசுத்தஆவியானவரும், அவர் உதவியைக்கொண்ட தேவ ஊழியக்காரருமாகிய உத்தம குருக்கள்மார் உபதேசிமார் உபாத்திமார் முதலானவர்களே. தேவஊழியக்காரரிடத்தில் நாலுகுணங்கள் இருக்கவேண்டும்.

1. நோயாளிமேல் அன்புடைமை.

"அன்பிலாரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்புமுரியர் பிறர்க்கு."

அன்புதான் பிணிதீர்க்கும் மருந்துக்குக் காரணம். அன்பே அதைப் பிரயோகப்படுத்தும்.

"இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை [ஆடுகளை, மந்தையை] மேய்ப்பாயாக என்றார்."*

2. பரிசுத்தமாகிய மனோவாக்கு காயங்களுடைமை.

பரிசுத்தமில்லாதவர்கள் மற்றவர்களைப் பரிசுத்தத்துக்கேவக் கூடாது. சத்தியத்தினால் சுத்திகரிக்கப்பட்டவர்களிடத்தில் சத்தியம் விளங்கிப் பயன்படும். "பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை."†

3. சொன்னவண்ணஞ் செயல்.

வீண்துணிவும் அதிகப்பிரசங்கமும் தேவ ஊழியக்காரருக்குத் தகாது. வாகடத்தில் சொல்லியிருக்கிறபடி செய்யவேண்டும். அதனோடு கூட்டவும் குறைக்கவும்கூடாது, அப்படிச் செய்வது துரோகம். "அவருடைய வசனங்களோடு ஒன்றையுங் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்." "வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்

---

* யோ. 21. 15—17. † எபி. 12. 14.

களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதா வது: ஒருவன் இவைகளோடே ஏதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார்."*

4. அறிவுடைமை.

அறிவில்லார் இந்த வேலையில் துணியலாகாது, துணிந் தால் தனக்கும் மற்றவர்களுக்கும் மோசம்வரும். "உங்க ளுக்கு என் இருதயத்துக்கேற்ற மேய்ப்பரைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார் கள்." "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண் டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சே னைகளுடைய கர்த்தரின் தூதன்."† "உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் ஜாக்கிரதையாயிரு. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கை களை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப் பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவ ருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண் டிரு; இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத் தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்."‡

அறிவும் அன்பும், பரிசுத்தமும் உண்மையும், வைத்தியனா கிய லூக்காவினிடத்திலும் அப்போஸ்தலனாகிய பவுலினிடத் திலும் பூரணமாய் விளங்கினதினால் பரம ஔஷதத்தைப் பிரயோகிக்க வல்லவர்களானார்கள்.

பாவ வியாதியால் தொய்ந்துபோகிறவர்களே! ஆத்தும வைத்தியராகிய இயேசுநாதர் உங்களில் ஒவ்வொருவரையும் நோக்கி: "சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா"

---

* நீதி. 30. 6. பிர. 8. 20. வெளி. 22. 18. † எரே. 3. 15. மல். 2. 7.
‡ 1 தீமோ. 4. 12—16.

என்று கேட்கிறார். (யோ. 5.6.) இந்த விருப்பமுடையவர்களாய் நீங்கள் அவரிடத்தில் வந்து, "உமக்குச் சித்தமானால் நான் சுத்தமாவேன்" என்று, உங்கள் நோய்நிலை சொல்லி, அவர் அளிக்கும் மருந்தை உட்கொண்டு, அவர் சொல்வழியில் நின்று, துன்பத்தைப் பொறுத்து இன்பத்தை அடைந்து, இகபர சுகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்று இரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார்.*

மருந்து என்பது அமிர்தத்தையுங் குறிக்குமாகையால், "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்னும் பழமொழி இந்த ஞானவைத்தியத்தையும் ஆத்தும ஔஷதத்தையும் குறிக்குமென்று குணசாலிகள் நினைவுகூர்ந்து குணமடையாத பிறரும் இந்த ஞானநன்மையை அடையும்படி முயற்சிசெய்வார்கள்.

"உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறு முயல்க; இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்க றீதன்றால், அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில." (நீதிநெறிவிளக்கம்.)

சாகப்போகிறவர்களுக்கும் ஜீவன்தரு மருந்தை வாயில் விடுதல் தீதாகமாட்டாது. ஆகாதனபோலத்தோன்றிப் பின்பு ஆவனவுஞ் சிலவுண்டு. ஆதலால் நன்மைபயப்பவைகள் முற்றுப்பெறாவிடினும் அவற்றை முடிவுவரைக்கும் முயலவேண்டும்.

முற்றிற்று.

* மத். 11. 28—30.